# கடவுளைத் தேடி

**சுவாமி ராம்தாஸ்**

**ஆனந்தாஸ்ரமம்**
*போஸ்ட் ஆனந்தாஸ்ரமம் - 671 531*
*காஞ்சங்காடு, கேரளா*

© ஆனந்தாஸ்ரமம் டிரஸ்ட்

கடவுளைத் தேடி

ஸ்வாமி ராம்தாஸ்

நான்காம் பதிப்பு - 1994

ஐந்தாம் பதிப்பு - 2012

ஆறாம் பதிப்பு - 2017

விலை : ரூ. 80/-

அச்சிட்டோர்
ஜெய் கணேஷ் பிரிண்டர்ஸ்
எண். 19, வெங்கடசாமி லேன்,
சாந்தோம், சென்னை - 600 004
செல்: 9840111457.

# பொருளடக்கம்

பதிப்புரை.......................................................7
அறிமுகம்-நூலாசிரியரைப் பற்றி.......................................9
முன்னுரை, பிரார்த்தனை விளக்கம்.................................16
1.போராட்டமும் தீட்சையும்..........................................19
2.துறவு.......................................................22
3.சந்நியாசம் பூணுதல்..................................................26
4.ஸ்ரீரங்கம்....................................................29
5.ராமேஸ்வரம்..................................................32
6.மதுரை.......................................................35
7.சிதம்பரம்....................................................38
8.திருப்பாப்புலியூர் பயணம்..........................................42
9.பாண்டிச்சேரியும், திருவண்ணாமலையும்.......................46
10.குகையில்...................................................52
11.திருப்பதி...................................................55
12.இறைவன் எங்கும் இருக்கின்றான்................................59
13.பரிவு மிக்க காவலர்..................................................62
14.ஜகந்நாத் பூரி...................................................67
15.ஏசுகிறிஸ்து - ஒரு இறைதூதன்....................................70
16.கல்கத்தாவும், தட்சிணேஸ்வரமும்................................75
17.தாரக்நாத் கோயில்.....................................................82
18.காசி.......................................................88
19.அன்புவெறுப்பை வெல்லும்.........................................92
20.ஜான்சி.......................................................95

21.தியானம் - ஒரே வழி................................................101
22.ராம் ஏழைப்பங்காளன்.............................................104
23.இறைவன் ஒருபோதும் தண்டிப்பதில்லை....................108
24.இமயமலைப் பயணம் - பகுதி 1.................................117
25.இமயமலைப் பயணம் - பகுதி 2.................................122
26.இமயமலைப் பயணம் - பகுதி 3.................................130
27.மதுரா, கோகுலம் மற்றும் பிருந்தாவனம்.......................136
28.ராய்ப்பூர்..................................................................142
29.அஜ்மீர்....................................................................146
30.பணம் தீமையின் ஆணிவேர்........................................152
31.ஜுனகாட்..................................................................155
32.முசுகுந்த ரிஷி ஆஸ்ரமமும் துவாரகையும்.....................165
33.மும்பை....................................................................171
34.பஞ்சவடியும், தபோவனமும்.......................................180
35.திரயம்பகேஸ்வர்.......................................................185
36.பண்டரிபுரம் - பீஜப்பூர்..............................................190
37.ஸ்ரீ சித்தாரூட சுவாமி.................................................198

**அனுபந்தம்**

அ 1 குகையில்..............................................................202
அ 2 தனிப்பாக்கள்.......................................................229
அ 3 ஸ்ரீமதி ருக்மாபாய்க்கு எழுதிய கடிதம்.........................232
அ 4 குருதேவருக்கு எழுதிய கடிதம்..................................233
அ 5 பயணம் செய்த பாதையின் வரைபடம்.......................240

*அனன்யாச்-சிந்தயந்தோ மாம்யே ஜனா: பர்யுபாஸதே ந*

*தேஷாம் நித்யாபியுக்தானாம் யோகக்ஷேமம் வஹாம் யஹம் ந*

*-பகவத் கீதை, 9 - 22*

**வேறு எதிலும் நாட்டமில்லாது**
**எவர் என்னையே நினைத்து, எங்கும் என்னையே**
**வழிபடுகிறார்களோ, மாறாத உறுதிகொண்ட அந்த**
**பக்தர்களின் யோக க்ஷேமத்தை நான் தாங்குகிறேன்.**

**-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

ஓம் ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

# பதிப்புரை

தான் பெற்ற அரும்பேற்றை யாவரும் பகிர்ந்து கொள்ள ஆனந்தாஸ்ரமத்தை நிறுவி அதன் வாயிலாக ராம நாமத்தின் மேன்மையையும், சரணாகதி தத்துவத்தையும், ஆனந்தானுபவத்தின் சுவையையும் பக்தர்களுக்குப் பல்லாண்டுகள் பேரன்புடன் புகட்டி 1963-ல் ஸ்ரீராம்தாஸ் சுவாமியும், 1989-ல் அவரது பிரதான சீடரும் மகாயோகினியுமான அன்னை கிருஷ்ணாபாயும் மகாசமாதி எய்தினர். ஸ்ரீ ராம்தாஸ் சுவாமியின் அரிய நூற்கள் பாரெங்கும் ஆன்மிக ஒளியை அமைதியாக வீசிவருவது யாவரும் அறிந்ததே.

தமிழ்நாட்டிலுள்ள அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்த நூலின் ஆறாம் பதிப்பை இவ்வாண்டு வெளியிட்டுள்ளோம். அன்பர்களும், சாதகர்களும், ஆன்மிகப் பெருமக்களும் இந்நூலைப் படித்து ஆன்மிக விழிப்புணர்ச்சி பெற்று நிரந்தர ஆனந்தமும் அமைதியும் எய்தி பெருவாழ்வு வாழ்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

குறிப்பு : இந்நூல் முழுவதிலும் ராம் என்று சுவாமி ராம்தாஸ் குறிப்பிடுவது எல்லாம் வல்ல, எங்கும் நிறைந்த, எல்லோர் இதயங்களிலும் ஆதாரமாக, ஆத்மா ராமனாகத் திகழும் இறை நிலை உணர்வு ஆகும்.

**ஆனந்தாஸ்ரமம்**

காஞ்சங்காடு,
ஆகஸ்ட் 2017.

ஓம் ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

# அறிமுகம்

## நூலாசிரியரைப் பற்றி...

தனது சந்நியாசத்திற்கு முந்தைய வாழ்க்கையில் விட்டல் ராவ் என அழைக்கப்பட்ட ஸ்வாமி ராம்தாஸ் வடக்கு கேரளாவின் காஞ்சங்காடு என்ற கிராமத்தில் ஹோஸ்துர்க் என்னும் இடத்தில் 1884 - ம் வருடம் ஏப்ரல் மாதம் 10-ம் நாள் வியாழக்கிழமை அன்று திரு. பாலகிருஷ்ணராவுக்கும், திருமதி. லலிதாபாய்க்கும் மகனாகப் பிறந்தார். அவர் ஜனனம் பௌர்ணமி நாளாகவும், ஸ்ரீ ராமனின் மிக சிறந்த பக்தரான அனுமன் ஜயந்தி நாளாகவும் அமைந்தது. இந்த அதிசயமான ஒத்திசைவு அவர் பிற்காலத்தில் அடையப்போகும் உயர்ந்த இறை வாழ்வினை முன்கூட்டியே அறிவிப்பதைப் போன்று அமைந்தது. பிறந்த அந்தக் குழந்தையை பார்த்தவரெல்லாம் அக் குழந்தையின் கண்களில் ஒர் அசாதாரணமான ஒளி பிரகாசிப்பதைக் கவனித்தனர்.

விட்டல்ராவ் தன் பாடப் புத்தகங்களிலோ அல்லது பள்ளி செல்வதிலோ அதிக ஆர்வம் காட்டவில்லை. இதன் விளைவாக ஆசிரியர்களின் கோபத்திற்கு ஆளானார். அவர் அவ்வப்போது பள்ளிக்கு செல்லாமல் குளியல் அறையிலோ அல்லது மாட்டுத் தொழுவ பரணையின் மேலோ ஒளிந்து கொள்வார். அதனால் எந்த பயனும் இல்லை. இவரின் குறும்புத்தனத்தை நன்கு அறிந்திருந்த, சாமர்த்தியம் மிக்க அவருடைய ஆசிரியரிடமிருந்து தப்புவது அவருக்கு மிகக் கடினமாகவே இருந்தது.

மேல்நிலைப்பள்ளியில், பாடங்களின் மேல் ஈடுபாடின்மையால் அதில் ஆர்வமின்றி இருந்தார். பாட புத்தகங்களை ஏற்க மறுத்தாலும், பல விஷயங்களை அறிந்து கொள்ளும் ஆர்வத்தால் இடைவிடாமல் அனைத்து விதமான பொது நூல்களையும் அவர் படித்து வந்தார். இலக்கியத்தின் மேல் உள்ள ஆர்வத்தால் சிறு வயதிலேயே ஆங்கிலத்தில் பிறர் வியக்கும் வண்ணம் புலமை பெற்றிருந்தார். மாணவனாக இருந்த போதிலும் அவர் அறிவாற்றல் மிக உயர்ந்த நிலையில் இருந்தது. எதையும் ஒரு முறை படித்தாலே தனக்குள் கிரகித்துக் கொள்வார். அந்த வயதிலேயே பேச்சாற்றல் மிக்கவராய் இருந்தார். மேலும், அவர் தந்தையிடமிருந்து பிறவிக் கலையாகப் பெற்ற நகைச்சுவை ததும்பப் பேசும் திறமையில் அவருக்கு நிகர் அவரே! தான் பார்த்த சம்பவங்களையோ அல்லது தன் சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றையோ பிறருக்கு கூறும்போது கேட்பவரை குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைப்பார். அவர் ஒரு நிகழ்ச்சியைப் பற்றி விளக்கும்போது அச்சம்பவத்தைக் காட்டிலும் அதைக் கூறும் விதத்தில் நகைச்சுவை மிகுந்து காணப்படும், அதை அவர் உணர்ந்தே இருந்தார். வாழ்க்கையில் எந்த சூழ்நிலையில் அவர் இருந்தபோதிலும், அதன் கடினமான இயல்பில் மனதைச் செலுத்தாமல், அந்த சூழ்நிலை அல்லது நிகழ்ச்சியின் மென்மையான, நகைச்சுவையான கோணத்தை மட்டுமே ரசிப்பார்.

எதிர்பார்த்ததுபோலவே கல்வியில் பின்தங்கியதின் விளைவாக அரசு மெட்ரிகுலேஷன் கல்வியில் விட்டல் தேர்ச்சி பெறவில்லை. எனவே அவர் கலை, கைத்திறன் சார்ந்த பள்ளியில் சேர்ந்து சித்திரம் வரைதல், செதுக்குதல் முதலியவற்றைப் பயின்றார். இதில் அவரின் முன்னேற்றம்

குறிப்பிடும்படியாக இருந்தபோதிலும், எதிர்கால வாழ்க்கைக்குப் அவை பிராகசமாக இல்லாததால், அவற்றை விட்டு மும்பாயில் உள்ள விக்டோரியா ஜூப்லி தொழிற்கல்வி நிறுவனத்தில் சேர்ந்து, ஆடைகள் வடிவமைக்கும் (design) பாடக் கல்வியில் மூன்றாண்டுகள் பயின்று ஆடைகள் உற்பத்தி செய்யும் பாடத்தில் சான்றிதழ் பெற்றார்.

குல்பர்காவிலுள்ள ஒரு நூற்புத் தொழிற்சாலையில் நூல் நூற்கும் பிரிவின் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருக்கையில் 1908-ல் ருக்குமாபாய் அம்மையை மணந்தார். 1913-ல் ரமாபாய் என்னும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தது.

அவர் வேலை செய்யும் காலகட்டத்தில், வாழ்க்கையில் சிறிது காலமே பணியிலும், பெரும் பகுதி வேலையின்றியும் இருந்தார். அவர் ஒரு வேலையில் வாய்ப்புக்கிடைத்து அந்த வேலையில் நிலைத்திருக்கும் முன்பே அவர்மீது எந்த குற்றமுமின்றியே ஏதாவது நிகழ்ந்து அந்த வேலையை அவர் இழக்க நேரிடும். கிடைத்த வேலையை இழந்து மீண்டும், மீண்டும் வருமானத்திற்காக வழி தேட வேண்டிய சூழ்நிலை உருவானது. எனவே குடும்ப வாழ்வின் பெரும் பகுதி இன்பங்களை அனுபவிக்க இயலாமல் மகிழ்ச்சியின்றியே கழிந்தது.

இப்படி பல வேலைகளில் சேர்வதும், விடுவதுமாக பல ஆண்டுகள் கழித்து முடிவில் 1917 ஆம் ஆண்டு தன் மாமனார் ஊரான மங்களூருக்குச் சென்று மாமனாருடன் வியாபாரத்தில் ஈடுபட்டார். அந்த வியாபாரத்திலும் வியாபார தந்திரங்களுக்கு வளைந்து கொடுக்க முடியாமல் போகவே மாமனாருடன் மனவருத்தம் ஏற்பட்டு, வேறுவழியில்லாமல் அங்கிருந்துத் தம்மை விடுவித்துக்கொண்டு சொந்தமாகத் தொழில்

துவங்கினார். துணிகளுக்கு சாயம் போடுதல், மற்றும் சேலைகளுக்கு அச்சிடுதல் போன்றத் தொழில்களில் ஈடுபட்டார். அவர் ஒரு வியாபாரியாக இருக்க முடியாத அளவிற்கு நல்லவராக இருந்ததால், வியாபாரம் வீழ்ச்சி அடைந்து நிதி நிலைமை மோசமாகியது; குடும்ப வாழ்க்கையிலும் மகிழ்ச்சி குன்றியது.

படிப்படியாக, வெளி சூழ்நிலைகள் விட்டல்ராவை இறைபக்தியில் ஆழ்ந்து ஈடுபடுவதற்கும், பற்றற்ற மன நிலைக்கு துரிதப்படுத்தவும் உதவி புரிந்தன. தினமும் மாலை நேரங்களில் அவருடைய சகோதரரான சீதாராம்ராவ் வீட்டில் அவர்தம் குழந்தைகள் ஸ்ரீகிருஷ்ண விக்கிரகத்தின் முன் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபடுவர். விட்டல்ராவ் அவர்களுடன் பஜனையில் தானும் ஒரு மணி நேரம் ஈடுபடலானார். அது போன்ற நேரங்களில் அவர் தன்னை மறந்து பேரானந்த நிலையில் சுய உணர்வற்று அமர்ந்துவிடுவார்.

இந்த காலகட்டத்தில்தான் அவர் ராம நாமத்தைத் திரும்ப, திரும்ப ஜபிக்கத் துவங்கி, அதன் மூலம் அவருடைய மனதில் அமைதியும் மகிழ்ச்சியும் தோன்றலாயிற்று. அவர் தொடர்ந்து அந்த புனித நாமத்தை இடைவிடாமல் சொல்லியதால் அந்த நாமத்தினால் ஈர்க்கப்பட்டு அவரையும் அறியாமல் எந்த நேரமும் எந்தப் பணியில் ஈடுபட்டிருக்கும் போதும், தெருவில் நடக்கும்போதும் அந்த நாமத்தை உச்சரிப்பதும் அல்லது அது மெல்லிய ஒலியாக எழும்புவதும் தானாக நடந்து வந்தது.

இரவு நேர உணவை தவிர்த்தார்; உடலுக்கான சுகங்களையும், தேவைகளையும் குறைத்துக்கொண்டார். வேகமாக மாறிக்கொண்டு வந்த அவருடைய இந்தப் புதிய வாழ்க்கை அவர் மனைவியை மிகுந்த பயத்திற்கும், கவலைக்கும் உள்ளாக்கியது. எவ்வளவோ மன்றாடியும், எதிர்ப்பு தெரிவித்தும்

அவர் மனைவியாலோ அல்லது மகளாலோ அவர் போக்கிலிருந்து அவரைத் திருப்ப முடியவில்லை. காரணம், எதை அவர் அறிந்து அடைய மிகவும் முயற்சி செய்தாரோ, அந்த எல்லாம் வல்ல மகா சக்தியே தற்பொழுது தன்னை இந்த பாதைக்கு திருப்பியதென்று அவர் உறுதியாக நம்பினார். **தம் வாழ்க்கையில் இந்த நெருக்கடியான திருப்புமுனையில் அவர் எதிர் கொண்ட இன்னல்கள், மனப் போராட்டங்கள், மன மாற்றங்கள் அனைத்தையும் அவர் அழகாக படம் வரைந்தாற்போல் இந்நூலில் விவரித்துள்ளார்.**

சுவாமி ராம்தாஸ் இறைவன் திருவருளால், குறிப்பாக 1920-ம் ஆண்டு ஆட்கொள்ளப்படும்வரை சாதாரணமான வாழ்க்கையையே வாழ்ந்து வந்தார். அதன்பிறகு, இம்மானிடப் பிறவியின் குறிக்கோள், சாரமற்ற உலக விவகாரங்களில் இருந்து விடுபட்டு ஆன்மிகப் பாதையின் முக்கியத்துவத்தை உணர்ந்து தன்னை பரிபூரணமான இறைவனுடன் ஒன்றினைத்து, முடிவிலாப் பேரானந்தத்தையும், அமைதியையும் அடைவதே வழியாகும் என்பதை ராம் அவனை ஆழ்ந்து சிந்திக்க வைத்தார். கடவுளின் ஆளுமைக்குத் தன்னை முழுமையாக உட்படுத்திக் கொண்டார். அச்சமயம் அவருடைய தந்தை அவருக்குப் புனிதமான மற்றும் மகிமை பொருந்திய ‘ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்‘ என்னும் ராம மந்திரத்தை உபதேசம் செய்தார். அவர் அந்த தூய ராம நாமத்தை இடைவிடாது ஜெபித்து வந்தார். உள்ளுணர்வால் உந்தப்பட்டு இவ்வுலக வாழ்வைத் துறந்து, சுதந்திரமாக சுற்றித் திரியும் சாதுவின் கோலம் பூண்டார். தீவிரமான பயிற்சியுடன் ஆழ்ந்த இறை நாட்டமும் இணைந்து குறுகிய காலத்தில் தன் அன்புக்குரியவனாகிய இறைவனை எல்லா இடத்திலும், உள்ளும் புறமும், எந்நேரத்திலும் உணர்ந்தார்.

இறைவனை இடையறாது நினைவு கூற அவன் நாம ஜெபம் மட்டுமே போதுமானது என்றும், இத்தகையப் பயிற்சியால் பூரண சமர்ப்பண நிலையை அடைய முடியும் என்றும், அதுவே வெகுவிரைவில் இறை அனுபூதியை அளித்து, முடிவற்ற நித்திய ஆனந்தத்தில் திளைக்க உதவும் என்றும் காண்பித்தார். இவ்வாறு இறை அனுபூதியும், இறைக் காட்சியும் அடையப் பெற்ற சுவாமி ராம்தாஸ் தனக்கு இறைவனால் இடப்பட்டப் பணியாக மனித சமுதாயத்தில் தெய்வீக விழிப்புணர்வை உண்டாக்கும் பணியில் ஈடுபட்டார்.

சுவாமி ராம்தாஸ் மற்றும் அவருடைய பிரதான சீடரும் இறை அனுபூதி பெற்றவருமான அன்னை கிருஷ்ணாபாயும் 1931-ம் ஆண்டு ஆனந்தாஸ்ரமத்தை நிறுவி, அதன் கொள்கைகளான விஸ்வ பிரேமையும் சேவையும் ஆஸ்ரமத்தின் வாயிலாகப் பரப்பினார்கள். இன்று, இந்த ஆன்மிக மையம் ஒவ்வொரு ஜீவனும் தன் புனித இறைத் தன்மையில் ஒன்றுவதற்காக ஆன்மிக வளர்ச்சிக்குத் தேவையான வாய்ப்புகளையும், வசதிகளையும் தருகிறது.

சுவாமி ராம்தாஸ் 1963 ஜுலை மாதத்திலும், அன்னை கிருஷ்ணாபாய் 1989 பிப்ரவரி மாதமும் மகா சமாதி அடைந்தார்கள்.

சுவாமி ராம்தாஸ் அவர்களால் எழுதப்பட்ட புத்தகங்கள் அவருடைய ஆழ்ந்த உண்மையின் அனுபவத்தில் இருந்து எழுந்தவை. ஆதலால் அவை தொடர்ந்து இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் உள்ள பல அன்பர்களுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளன .

**வாழ்க ஸ்ரீ ராம்தாஸ் என்னும் ஸ்ரீ ராமனின் ஒளிப்பிழம்பு!**

ஓம் ஸ்ரீ பிரம்மார்ப்பணமஸ்து

ஓம் தத் ஸத்

## பிரார்த்தனை

*ஓ! ராம்! நீயே உண்மை (சத்தியம்)! நீயே பேரன்பு! நீயே மனித இனம் சென்றடைய வேண்டிய இறுதி முழுமை நிலை! போற்றிகள் அனைத்தும் உனக்கே உரித்தாகுக!*

*- ஸ்ரீ சுவாமி ராம்தாஸ்*

*பிரார்த்தனை விளக்கம்*

*(16,17, 18-ம் பக்கங்களில் காண்க)*

ஓம் ஸ்ரீராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

# முன்னுரை

## பிரார்த்தனை விளக்கம்

## ஸ்ரீ சுவாமி ராம்தாஸ்

*சுமார் 2 வருடங்களுக்கு முன்பு (1920-ம் ஆண்டு) இறைவன் ஸ்ரீ ராம் தன் அடிமை ராம்தாஸனின் உள்ளத்தில் அவரது எல்லையற்றப் பேரன்பை உணர்ந்து கொள்வதற்கெனத் தீவிர விருப்பத்தை முதன்முதலில் தூண்டினான்!*

*சத்தியமாம் உண்மை ஸ்ரீ ராம் ஒருவனே! ஆகவே அவனை அணுகி, அறிவதென்பது உண்மை இருப்பற்ற, பொய் மாய உலகினை விட்டு விலகுவதேயாகும்!*

*அகில உலகையும் வியாபித்து, எங்கும் பரவி, எதிலும் நிறைந்து, எல்லாமாய் விளங்கி, அனைத்தையும் காத்து ரக்ஷிக்கும் நுட்பமான நுண்ணியதோர் மாபெரும் ரகசிய சக்தியே ராம்! அவன் பிறப்பு - இறப்பு இல்லாதவன்! அண்டாண்ட கோடி சராசரங்கள் அனைத்தும், ஓயாது மாறுபட்டுக் கொண்டிருக்கும் தத்தம் நாம, ரூபங்களால், என்றும் மாறாது, அனைத்திலும் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் ஸ்ரீ ராம பரப்பிரம்ம வஸ்துவினின்று வேறுபட்டுள்ளதைப்போல் தோன்றுவது தோற்றமாத்திரமே! இந்த நாம, ரூப பொய் தோற்றங்களிலிருந்து விழித்தெழுதலாவது ஸ்ரீ ராமனுடன் நாம் ஒன்றுபட்டிருப் பதையோ அல்லது அவனது பேரன்பையோ உணர்வதாகும்.*

அவனது பேரன்பை உணர்வது அல்லது அவ்வாறு உணர்வதினால் அவனிடம் அன்பு செலுத்துவதென்பது அனைத்து உயிருள்ள, உயிரற்ற (அசையும் - அசையாப்) பொருள்களிடமும் அன்பு செலுத்தலாகும். **ஏனெனில் அனைத்தும் ராமனிடம் உள்ளன; ராமனோ அனைத்திலும் உள்ளான்; உண்மையில் அனைத்தும் ராமனே!** இந்தப் பேருண்மையை உணர்வதற்கு, அறியாமையினால் தனித்துவப்பட்ட நாம், ராமனின் பெரும் விருப்பத்திற்கும், அவனுடைய அளவற்றை செயல்திறனுக்கும் நம்மை முழுமையாகச் சமர்ப்பிக்க வேண்டும்.

அவன் இரண்டற்றதாகிய ஏக பரமாத்ம வஸ்துவாகப் பிரகாசிக்கின்றான். தேகாபிமானமே நம்மை ராமனிடமிருந்துப் பிரிக்கின்றது. அந்த தேகாபிமானத்தைத் துறப்பதன் மூலம் நம் தனித்துவம் அழிந்து, நம்முள்ளே **அகத்திலும்**, நம்மைச் சுற்றி **வெளியிலும்** பரந்து, நிறைந்து, விரிந்திருக்கும் ராமனுள் ஒன்று கலந்து, **அவனொடு நமக்குள்ள ஐக்கியத்தை உணர இயலும்!**

இந்த உயர்ந்த நிலையில் எல்லாவற்றையும் நம்மிடமிருந்து பேதப்படுத்தும் அன்னிய உணர்ச்சி மறைந்து விடுவதனால், பகைமை உணர்ச்சி அழிந்து விடுகின்றது; ஒற்றுமை உணர்வும், அதன் காரணமாக அன்பும் நம் உள்ளத்தில் ஆவிர்ப்பவிக்கின்றது; நான் என்று இறுமாக்கும் அகந்தை எழுச்சி அறவே அழிந்து, தன்கென்றுரியத் தனித்துவப்பட்ட ஜீவாத்ம இருப்பு கரைந்தொழியவும், தன்னிச்சையாகவே பணிவும், அடக்கமும் நம்மைப் பற்றிக் கொள்ளவும், நாம் ராமனுடையத் தெய்விக அன்பைப் பெறுகிறோம்!

இந்த தெய்விக நிலை அடையப்படும்போது, ராமனுடையப் பேரின்ப அருள் நிலையும், அவனொடு அனுபவிக்கப்படும் ஐக்கியமும் நம்முள்ளே விழித்தெழவும், நாம் தேகாபிமானத்தால் விளையும் அனைத்துப் பற்றுக்களும் களையப் பெற்று, ராமனுடைய வடிவங்களாகிய அனைத்து உயிரினங்களின் நன்மையையே நாடுவோம்! இதுவே புத்தர், ஏசுகிறிஸ்து, நம் காலத்தில் வாழ்ந்த காந்திஅடிகள் ஆகிய மூன்று மஹான்களும் செய்து காட்டிய மாபெரும் தியாகம் ஆகும்! ஏனெனில் அவர்கள் அனைவரும் ராமபிரானின் எல்லையற்ற மெய்ம்மை உணர்வும், அன்பும் கூடிய பரிபூரண இறைவடிவினரேயாவர்!

## அத்தியாயம் - 1

## போராட்டமும் மந்திர தீட்சையும்

துன்பங்களும், துயரங்களும், கவலைகளும் நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில் ராம்தாஸ் ஓராண்டு காலம் போராடினான். அக்காலகட்டம் பெரும் குழப்பமும், கலக்கமும் கூடிய அமைதியற்ற நிலையாய் இருந்தது, இவை அனைத்தும் அவன் தானே உருவாக்கிக் கொண்டவையே. துன்பம் நிறைந்து நிற்கதியான இந்நிலையில் அமைதி எங்கே, விடுதலை எங்கே என்று ராம்தாஸின் இதயம் கூக்குரலிட்டது. ராம்தாஸின் இக்கதறல்கள் கேட்கப்பட்டு, 'கலங்காதே, நம்பிக்கை இழக்காதே, என்னை நம்பு. நீ தளைகளில் இருந்து விடுதலை அடைவாய்' என அவரது உள்ளத்தில் இருந்து ஒரு குரல் ஒலித்தது. அது மகத்தான சுத்த வெளியாம் சிதாகாசமாக அவரது உள்ளத்தில் இருப்புணர்வாய் திகழும் ராமனின் குரலாகும். ஆ! இது ராமனின் குரல்! ராமனின் இந்த உற்சாகமூட்டும் தேற்றுதல், புயலினால் கொந்தளிக்கும் கடல் அலைகளில் சிக்கி உயிர் பிழைக்க போராடும் ஒருவனுக்கு மரக்கலம் ஒன்று வீசி எறியப்பட்டது போன்றது; உதவியற்று இதய வலியால் துடித்த ராம்தாஸுக்கு மழைக்காக ஏங்கும் வறண்ட நிலத்தில் பொழிந்த மழையைப் போன்று வருடிக் கொடுத்து இதமளித்தது. இதன் பின்னர், உலக விவகாரங்களுக்காக முன்பு செலவிடப்பட்ட நேரத்தின் ஒரு பகுதியை ராமனின் தியானத்தில் கழித்ததால் உண்மையான அமைதியும் நிறைவும் கிடைத்தது. அமைதியை

அளிக்கும் ராமனின் மேல் மெல்ல மெல்ல அன்பு வளர்ந்தது. ராமனை தியானிப்பதும் அவன் நாமத்தை உச்சரிப்பதும் அதிகரிக்க, அதிகரிக்க ராம்தாஸின் மனதில் மகிழ்ச்சி பொங்குவதையும், துயரம் நீங்குவதையும் உணர முடிந்தது. நாளடைவில், உலக விவகார பொறுப்புகள் முடிந்தவுடன் இரவில் ஒன்றிரண்டு மணி நேர ஓய்வைத் தவிர மற்ற நேரமெல்லாம் ராம பஜனைக்குப் பயன்படுத்தப்பட்டது. அவன் ராமனிடம் கொண்ட பக்தி வெகு வேகமாக வளர்ந்தது.

பகல் நேரங்களில் குடும்பத்தில் எதிர்ப்படும் பொருளாதார தேக்கம் மற்றும் வேதனைகளை எதிர்கொள்ள, பல வழிகளில் ராமனின் உதவி ராம்தாஸுக்குக் கிடைத்து வந்தது. ஆகையால், உலக கடமைகளாற்றும்பொழுது கிடைக்கக் கூடிய சிறிய இடைவெளி நேரத்தில் கூட, ராம தியானத்திலும் ராமநாம ஜெபத்திலும் ஈடுபடலானான். தெருக்களில் நடக்கும்பொழுது 'ராம், ராம்' என்று உச்சரித்து வந்தான். ராம்தாஸுக்கு உலக விஷயங்களில் உள்ள ஈர்ப்பு குறைந்து, பற்றொழிந்தது.

இரவு ஒன்றிரண்டு மணி நேர தூக்கத்தைத் தவிர மற்ற நேரமெல்லாம் ராமனுக்காக ஒதுக்கப்பட்டது. ஆடம்பர உடைகளுக்கு பதிலாக முரடான கதராடையை அணியலானான். மென்மையான படுக்கையை நீக்கி வெறும் பாயை பயன்படுத்தினான். இருவேளை உணவு ஒரு வேளையாகி, அதுவும் சிறிது காலத்தில் தவிர்க்கப்பட்டு வாழைப்பழமும் வேகவைத்த உருளைக் கிழங்குமாக குறைந்தது. உப்பும், காரமும் அறவே ஒழிந்தன. ராமனை அன்றி வேறு சுவை இல்லை. இவ்வாறு ராமத் தியானம் வேகமாக தொடர்ந்து வளர்ந்து பகல் நேரமான உலக கடமைகளாற்றும் நேரத்தையும் ஆட்கொண்டது.

இந்த நிலையில் ஒரு நாள், ராம்தாஸின் தந்தை ராமனால் அனுப்பி வைக்கப்பட்டவராய், ராம்தாஸிடம் வந்து அவனைத் தனியே அழைத்து 'ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்' என்னும் ராம மந்திரத்தை உபதேசித்து அதை இடைவிடாமல் ஜெபித்து வந்தால் அழியா ஆனந்தத்தை ராம் அருள்வான் என்று உறுதியளித்தார். அது முதற்கொண்டு ராம மந்திரத்தை உபதேசித்த தன் தந்தையையே குருவாக ஏற்றுக்கொண்டான். மந்திர தீட்சைக்குப் பிறகு ஆன்மிகப் பாதையில் அவன் வேகமாக முன்னேறினான். ராமனால் அவ்வப்பொழுது தூண்டப் பட்டவனாய் ஸ்ரீ கிருஷ்ணனின் உபதேசமாகிய 'ஸ்ரீமத் பகவத் கீதை' யையும், புத்தரின் 'ஆசிய ஒளி' என்னும் நூலையும், ஏசு கிறிஸ்துவின் 'புதிய ஏற்பாடு', மகாத்மா காந்தியின் 'யங் இந்தியா' மற்றும் 'ஒழுங்கு நெறி சார்ந்த மதக்கோட்பாடு' (Ethical Religion) ஆகிய நூல்களையும் படித்து வந்தான்.

ராமபக்தியென்னும் இளஞ்செடி இப்பெரியோர்களின் அருள்வாக்கு என்னும் வசீகரமான காந்த சக்தியாலும், அரவணைப்பாலும் வளர்ச்சியுற்று, எளியவனான ராம்தாஸின் ஆழ்மனதில் பெரிய மாற்றத்தை உண்டாக்கியது. இதன் விளைவாக, இறைவன் ஒருவனே மெய் எனவும், மற்றவை எல்லாம் பொய் என்றும் அவனுடைய உள் உணர்விலே ஒரு எண்ணம் உதயமாயிற்று. இந்நிலையில் உலகப் பொருட்களின் மேல் இருந்த மோகம் வேகமாக நீங்கி, 'நான்', 'எனது' என்பதும் மறையலாயிற்று. எல்லாம் என்னுடையது என்ற எண்ணமும், எனது உறவுகள் என்ற எண்ணமும் மறையத் தொடங்கின. எண்ணம், மனம், உள்ளம், உயிர் அனைத்தும் ராமனில் ஒன்றியது. ராம்தாஸின் உலகை ராம் முழுமையாக சூழ்ந்து தன்னுள் ஒடுக்கிக்கொண்டான்.

## அத்தியாயம் - 2

## துறவு

குறுகிய குட்டை போன்ற குடும்ப வாழ்க்கையிலிருந்து ராம் தனது அடிமையை (ராம்தாஸை) பரந்து விரிந்த பிரபஞ்ச வாழ்வெனும் கடலில் போடுவதற்காக உயர்த்தினான். ஆனால் விரிந்த கடலில் நீந்துவதற்கு ராம்தாஸுக்கு மன வலிமையும் துணிவும் வேண்டுமென்று, அவற்றை அளிப்பதற்காக, இந்த ஆன்மிகப் பாதையில் அறியாமை மிக்க, பக்குவப்படாத இவ்வடிமைக்குத் தீவிரமான பயிற்சி வழங்கும் பொருட்டு அவனை மிகக் கடினமான வழிகளில் அழைத்துச் செல்ல தீர்மானித்த ராம் தனது நேரடி மேற்பார்வையில் ராம்தாஸை இருத்தி தானே வழி காட்டினான். இதன் பொருட்டு, ஓரிரவு ராமநாம அமுதத்தைப் பருகிக் கொண்டிருக்கும் ராம்தாஸை பின்வருமாறு சிந்திக்கத் தூண்டினான்:

***‘ஓ ராம்! நீ எல்லாம் வல்லவனென்றும், அன்பு மயமானவனென்றும், உன்னை நம்புவோர் உண்மை அமைதியையும், ஆனந்தத்தையும் பெறுதல் உறுதி என்றும் உணர்ந்த உனதடிமை, ’நான்’, ’எனது’ எனக் கருதும் அனைத்தையும் துறந்து உன் கருணையில் தன்னை ஏன் முற்றிலும் ஒப்புவித்து விடலாகாது? நீயே உன் அடிமைக்கு அனைத்துமாவாய், நீ ஒருவனே அகிலத்தையும் காப்பவன். ’இதனை நான் செய்கிறேன், அதனை நான் செய்கிறேன், இது எனது, அது எனது’ என்று எண்ணி மனிதன் ஏமாற்றம்***

***அடைகிறான். ஓ ராம்! அனைத்தும் உனது, எல்லாவற்றையும் நீயே தான் செய்கிறாய். உனதடிமையின் ஒரே பிரார்த்தனை, அவனை நீ உனது முழுப்பொறுப்பில் ஏற்று, வழிகாட்டியாக இருந்து 'நான்' என்ற அவன் அகந்தையை அகற்ற வேண்டும்'.***

இந்தப்பிரார்த்தனை செவி சாய்க்கப்பட்டது. ராம்தாஸின் இதயம் பெரும் உவகை கொண்டது. எல்லாவற்றையும் துறந்து சந்நியாசியாகி ராமனைத் தேடி செல்ல வேண்டுமென்னும் உறுதியான ஆசையொன்று உள்ளத்தில் பரவியது. அப்போது தன் முன்பு இருந்த 'ஆசிய ஒளி' என்னும் புத்தகத்தை தற்செயலாக திறக்குமாறு ராம்தாஸை ராம் தூண்டினான். அவ்வாறு திறக்கப்பட்ட பக்கங்களில் புத்தரது சீரிய துறவு வருணிக்கப்பட்டிருந்தது. அங்கே புத்தர்:

***'எனதுள்ளம் அடைபட்டிருக்கும் இப் பொன்***
***சிறையைவிட்டு வெளிஃயறி மெய்உணர்வை,அனைவருக்காகவும்***
***அது கிடைக்கும் வரை தேடியே தீருவேன்.***
***அது வெளிப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது,'***
***என்ற குறிப்பைக் கண்டான்.***

அதன்பின், ராம்தாஸ் ஏசு கிறிஸ்துவின் 'புதிய ஏற்பாடு' என்ற நூலைத் திறந்து பார்த்தபோது பின்வரும் தெள்ளிய போதனைகள் தென்பட்டது:

***'எவர் ஒருவர் வீட்டையோ, செல்வத்தையோ, தந்தை, தாய், மனைவி, மக்களையோ, சகோதர சகோதரிகளையோ, என் பெயரால், எனது நாமத்தின் பொருட்டு துறக்கிறார்களோ அவர்கள் அனைவரும் நூறுமடங்கு பயனுற்று நித்ய வாழ்வைப் பெறுவர்.'***

மீண்டும் அவ்வாறே பகவத் கீதையை எடுத்துப் பார்க்கத் தூண்டப் பெற்ற ராம்தாஸ், பின்வரும் சுலோகத்தை அதனில் கண்டான்:

***'ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ***
***அஹம் த்வா ஸர்வ பாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா சுச:'***
***ப.கீ. (13:66)***

**'தர்மங்கள் அனைத்தையும் துறந்து**
**என் ஒருவனையே அடைக்கலமாகக் கொள்.**
**நான் உன்னை அனைத்து பாவங்களிலிருந்தும் விடுவிப்பேன்'.**

இவ்வாறு புத்தர், கிறிஸ்து, கிருஷ்ணன் ஆகிய இம்மூன்று அவதார புருஷர்களின் வாயிலாக ராம் பேசினான். அம்மூன்று போதனைகளுமே துறவென்னும் ஒரே நெறியை காட்டின. உடனே ராம்தாஸ் அதுவரை தனதென்று உறுதியாக நம்பி அனுபவித்து வந்தவைகள் அனைத்தையும் ராமனுக்காக துறக்கவும், குடும்ப வாழ்க்கையிலிருந்து விடுபடவும் உறுதி பூண்டான். இந்த காலகட்டத்தில் ராம்தாஸ் உடலின் மேல்பகுதிக்கு ஒரு துண்டு துணியும், கீழ்ப் பகுதியை மறைக்க மற்றொன்றுமாக இரு துண்டுகளை மட்டுமே உபயோகப்படுத்தி வந்தான். மறுநாள், ராம்தாஸ் புதிதாக இரு துண்டுகளுக்கு காவிச் சாயம் போட்டுக்கொண்டு, அன்றிரவே தன் மனைவிக்கும் - அவரை ராம் கடந்த சிலகாலமாகவே தன் சகோதரியாகக் காணுமாறு செய்திருந்தான், மற்றொரு நண்பருக்கும் - ராம்தாஸை கடன்களிலிருந்து விடுவிப்பதற்காக ராமனால் அனுப்பப்பட்டவர் - என இரண்டு கடிதங்கள் எழுதினான். துறவறத்திற்கு உறுதி பூண்டாயிற்று, தனதென்று சொல்லக்கூடிய எதுவும் இல்லாத இவ்வுலக வாழ்க்கையின் கவர்ச்சிகளில்

இருந்து முற்றிலும் விடுபட்டு காலை ஐந்து மணிக்கு ராம்தாஸ் இவ்வுலகிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான். எல்லையில்லா கருணை நிரம்பிய ராமனின் திருவடிகளில் உடல், மனம், ஆன்மா அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டன.

## அத்தியாயம் - 3
## சந்நியாஸம் பூணுதல்

காலையில் மங்களூரில் இரயில் ஏறிய ராம்தாஸ் மாலை ஈரோடு இரயில் சந்திப்பை அடைந்தான். அவனிடம் 25 ரூபாயும், கீதை, புதிய ஏற்பாடு ஆகிய சில புத்தகங்கள் மட்டுமே இருந்தன. எதிர்காலத்தைப் பற்றிய எவ்வித திட்டமும், சிந்தனையுமின்றி ராம்தாஸ் நிர்க்கதியாக ஈரோடு சந்திப்பில் நின்றான். ராம் தன்னை எங்கே அழைத்துச் செல்லப் போகிறான் என்பதும் அவனுக்குத் தெரியவில்லை. சிறிது நேரம் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தான். இருள் சூழ ஆரம்பித்ததும், சாலையோரத்தில் ஒரு சிறு குடிலின் வாயிலில் நடுத்தர வயது மாது ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்ட ராம்தாஸ் அங்கே சென்று உணவு வேண்டினான். அன்புள்ளம் கொண்ட அவ்வன்னை அவனை வரவேற்றுக் குடிசையினுள் அழைத்துச் சென்று பரிவுடன் சிறிது அன்னமும் தயிரும் அளித்தாள். அன்பின் உருவான அவ்வன்னையை, உணவுக்காக சிறிது பணத்தைப் பெற்றுக் கொள்ளச் செய்வது, மிகக் கடினமாயிருந்தது.

அக்குடிசையிலிருந்து ராம்தாஸ் விடைபெற்றுக் கொண்டு இரயில் நிலையத்திற்குச் சென்றான். அங்கு ஓர் மூலையில் சிறிது நேரம் களைப்பாறினான். எங்கு போவது என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை. நள்ளிரவில் ஒரு இரயில் வரவை அறிவிக்கும் மணியடிக்கப்பட்டது. அதைக் கேட்டு அவன்

எழுந்த பொழுது அருகிலிருந்த தமிழர் ஒருவர், 'எங்கே போகிறீர்கள்?' என்று அவனை கேட்டார். ஆனால் ராம்தாஸுக்கோ என்ன விடை அளிப்பதென்று தெரியவில்லை. நடக்கப் போவதை நிர்ணயிக்க வல்லவன் ராம் ஒருவனே.

அந்த தமிழ் அன்பர் தான் திருச்சிராப்பள்ளிக்கு செல்வதாகவும், ராம்தாஸை அது வரை கூட்டிப் போவதாகவும் வாக்களித்தார். தனக்கு பயணச் சீட்டு வாங்க ராம்தாஸ் அவரிடம் பணம் கொடுத்தான். இருவரும் வண்டி ஏறினர். இரயில் வண்டி மறுநாள் மாலை திருச்சிராப்பள்ளி இரயில் நிலையத்தை அடைந்தது. இரயிலிலிருந்து இறங்கி நகரத்தினுள் சென்றான். மங்களூரிலிருந்து புறப்பட்டது முதல், வழி முழுவதும் ராமனின் தெய்வீக நாமத்தை அவனது உதடு உச்சரித்தவண்ணம் இருந்தது; அது மறக்க இயலாதது; அதுவொன்றே அவனைக் காத்து மகிழ்வித்தது. சாலை ஓரமாக இருந்த ஒரு வீட்டின் திண்ணையில் அன்றிரவு களைப்பாறிய ராம்தாஸ் மறுநாள் காலை புறப்பட்டு நடந்தே அங்கிருந்து சுமார் 7 மைல் தொலைவிலிருந்த ஸ்ரீரங்கத்தை 8 மணியளவில் அடைந்தான்.

முந்தைய வாழ்க்கையின் சூழலிலிருந்து ராம்தாஸை ராம் விடுவித்தது, புனித தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் அவனை அழைத்து செல்வதற்காகவே என்னும் இரகசியம் இங்கேதான் வெளிப்பட்டது. ஸ்ரீரங்கத்தில் கம்பீரமாக ஓடிக் கொண்டிருந்த அழகிய காவேரியாற்றின் தெளிந்த நீரில் நீராடி அதன் கரையில் ராமனின் ஆணையினால் ராம்தாஸ் துறவு ஆடை அணிந்தான். அவனது புதிய வாழ்வில் அது ராமனால் அளிக்கப்பட்ட மறக்கவொண்ணாத தருணமாக அமைந்தது. இதற்கு முன் அணிந்திருந்த வெண்ணிற ஆடைகளை காவேரியில்

அர்ப்பணிக்க நதியின் பிரவாகம் அவைகளை தன்னுடன் அடித்துச் சென்றது. காவி உடை அணிந்ததும் எல்லாம் வல்ல ராம் திருவடியை நாடி, பிரார்த்தனை ஒன்று எழுந்தது.

***'ஓ, எல்லையற்ற அன்பான ராம்! அகில உலகையும் காப்பவனே! உன் இச்சையால் உனதடிமை துறவு பூணத் தூண்டப்பட்டு, உன் பெயரால் சம்சார வாழ்விலிருந்தும், அனைத்து தளைகளிலிருந்தும் விடுபட்டுள்ளான்.***

***ஓ ராம், இவ்வேழை பக்தனை உன் கிருபையால் ஆசீர்வதிக்கவும். ராம்தாஸ் உன் பெயரால் கீழ்க்கண்ட விரதங்களை நிறைவேற்றுவதற்கும், மிகக் கடினமான, சோதனை நிறைந்த சந்நியாச வாழ்க்கையில் குறுக்கிடும் துன்பங்களை பொறுத்துக் கொள்வதற்கும் தேவையான மன வலிமை, துணிவு மற்றும் முழு நம்பிக்கையையும் அளித்து அருள்புரிவாய்:***

***1. இவ்வாழ்க்கை, இப்பொழுது முதல் ஸ்ரீராம தியானத்திற்கும் சேவைக்கும் முற்றிலும் அர்ப்பணித்தல்.***

***2. பெண்கள் அனைவரையும் தாயாகக் கருதி தூய பிரம்மச்சர்யத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்.***

***3. பிட்சை எடுத்தோ, தானமாக கிடைக்கும் உணவு அல்லது பொருள்களாலோ இவ்வுடல் பேணப்படட்டும்.'***

# அத்தியாயம் - 4
# ஸ்ரீரங்கம்

புது பிறப்பால் ஏற்பட்ட சிலிர்ப்பும், புது வாழ்வுடன் கூடிய ராமனின் இனிய அன்பும் உணரப்பட்டது. தத்தளித்துக் கொண்டிருந்த அவன் உள்ளத்திற்கு அமைதியும் சாந்தியும் கிடைத்தது; குழப்பம் ஓய்ந்தது. ராமனின் அருட்கரங்கள் ராம்தாஸின் சிரத்தைத் தொடுவதுபோல இருந்தது. இவ்விடுதலை விளைவித்த ஆனந்தத்தால் ஓ! கண்ணீரே! வழிந்தோடுக! வருத்தமும், துன்பமும், ஏக்கமும் கவலையும் போன திசை தெரியாது மறைந்தே போயின. ஓ ராம்! அனைத்து புகழும் உனக்கே!. ‘உனது வழிகாட்டியாகவும், பாதுகாவலனாகவும் நானிருக்கிறேன். எனது அன்பனாக இரு. உன் பெயர் ராம்தாஸ் என நிலவுக‘ என்று ராமனின் அருள் ஆசி கிடைத்தது. ஆம்! ஆம்! அன்பும் அருளும் கருணையும் மன்னிக்கும் தன்மையுமே வடிவான ராமனின் அடிமையாய் இருத்தல் எத்தகைய உயர்ந்த சிறப்பு!

இதன் பிறகு ராம்தாஸ் ஆற்றின் அருகேயிருந்த ஒரு சத்திரம் பக்கம் வந்தான். பிரதான சாலைக்குச் செல்லும் வழியில் சாதுக்கள் சிலர் தாளத்துடனும், தம்பூராவுடனும் உற்சாகமாய் ராமபஜனை செய்து கொண்டிருந்தனர். ராமனின் பெருமை வாய்ந்த நாமத்தைப் பாடிக் கொண்டிருந்த இளம் துறவிகள் இருவர் நடுவே ராம்தாஸ் அமர்ந்து திருச்சிராப்பள்ளியில் வாங்கப்பட்ட தனது சொம்பை நீராடச் செல்லும்

யாத்திரிகர்களிடம் யாசகம் பெறுவதற்காக தன் முன்னே வைத்துக் கொண்டான். அவ்விரு பக்தர்களின் பஜனை மிகவும் இனிமையாயிருந்தது. மிகவும் ஆனந்தமாகப் பொழுது போயிற்று. ஏறக்குறைய பகல் பன்னிரண்டு மணிக்கு பஜனை முடிவுக்கு வந்தது. தங்கள் முன் விரித்திருந்த துணிமீது, அன்றைய தினம் முழுதிற்குமாக மூன்று காலணாக்களே (ஒரு அணா என்பது ஒரு ரூபாயின் 16-ல் ஒரு பங்காகும்). விழுந்திருப்பதை அவ்விரு இளம் சாதுக்களும் கவனித்தனர்.

அந்த இருவரில் ஒருவர் சற்று ஏமாற்றத்துடன் கூறினார், 'காலை முதல் இறைவனின் திருப்புகழை பாடிக்கொண்டிருந்த எங்களுக்கு அவர் இவ்வளவே கொடுத்திருக்கிறார். பசி குடலைப் பிடுங்குகிறது. அட கடவுளே! உணவிற்கு எங்கே போவது? காலை முதல் இதுவரை நடைப்பெற்ற உன் பஜனையின் மதிப்பு ஒன்பது பைசாக்கள் தானா?' (ஒரு பைசா என்பது ஒரு அணாவின் 12-ல் ஒரு பங்காகும்) என்று நொந்து கொண்டார்.உடனே ராம்தாஸ் அவர்களை நோக்கி, 'அப்படி அல்ல இளம் சகோதரர்களே! உங்கள் பஜனை விலை மதிப்பற்றது. இறைவன் என்றும் அன்பும் அருளுமாகவே இருப்பவர். அவரை சார்ந்திருப்போரை அவர் என்றுமே கை விடுவதில்லை. ராம் தனது பணிவான அடிமை மூலம் உங்களின் இன்றைய உணவிற்குப் பணம் அனுப்பியுள்ளான்' என்று கூறிக் கொண்டே அப்பொழுது தன்னிடமிருந்த தொகையிலிருந்து ஒரு ரூபாய் எடுத்து அச்சாதுக்களிடம் கொடுத்தான்.

அந்த ஏழை சாதுக்கள் ஆச்சார்யத்தில் திளைத்து கண்களில் நீர் பெருக அவரை நோக்கியவண்ணமே இருந்தனர். அவர்கள், 'பகவானே! உன் மகிமை விசித்திரமானது. உன்னையும் உனதன்பையும் சந்தேகித்த இத்தகுதியற்ற அடிமைகளை

மன்னித்தருள வேண்டும். இனிமேல் என்றும் உன்னை நிந்திக்காமல் இருக்கவும், அனைத்து இன்னல்களையும் உனது நாமத்தின் அருளால் சகித்துக்கொள்ளவும் வரமருள்' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்றனர்.

ராம்தாஸ் தனது பாத்திரத்தைப் பார்த்தபோது அதனுள் இரண்டு பைசாக்களைக் கண்டான். தனது முதல் பிட்சை வருமானமாகிய அச்சிறு நாணயங்கள் இரண்டையும் கண்டு அவன் மனம் துள்ளிக் குதித்தது. ராம்தாஸ் அவற்றைக் கொண்டு இரண்டு சிறு வாழைப்பழங்கள் வாங்கி உவகையுடன் உண்டான். அச்சமயம் அதே வரிசையில் மற்றோர் சாது அவனது வலப்புறத்திலும், மேற் கூறிய இளம் சாதுக்கள் இடப்புறத்திலும் இருந்தனர். வலதுபுறம் அமர்ந்திருந்த சாது அவனை அணுகி ராம்தாஸ் போவதெங்கே என்று வினவினார். அவ்வினாவிற்கு விடை அவனுக்குத் தெரியவில்லை, அது ராமிற்கே தெரியும். விடை வராதது கண்ட அந்த சாது, தான் ராமேஸ்வரம் போவதாகவும் ராம்தாஸையும் அழைத்துச் செல்வதாகவும் கூறினார்.

ஓ ராம்! உன் அன்பு எல்லையில்லாதது! அளவற்றது! திக்கற்ற அடிமைக்கு வழிகாட்ட, இந்த சாதுவை நீயே அனுப்பி உள்ளாய் - ஏன்? நீயே தான் இந்த வடிவில் வந்துள்ளாய்!

அவ்வப்போது ராம்தாஸ் சாதுக்களைச் சந்திக்க நேர்வதும், அவர்கள் அவனை புனித யாத்திரைக்கு அழைத்துப் போவதோடு நில்லாது, எல்லாவிதத்திலும் அவனை கவனித்துக் கொள்வதும் இயல்பாகவே நடைபெறலாயின. இச்சாதுக்கள் அனைவரும் ராமனின் திருவுள்ளப்படி 'சாதுராம்' என்ற ஒரே பெயரால் இனி குறிப்பிடப்படுவர்.

# அத்தியாயம் -5

## ராமேஸ்வரம்

அந்த சாதுவை வழிகாட்டியாய் ஏற்றுக்கொண்டு தன்னிடம் அச்சமயம் மீதமிருந்த ஒன்பது ரூபாய்களையும் அவரிடம் கொடுத்து சுமை நீங்கியதென ராம்தாஸ் மகிழ்ச்சி அடைந்தான். பணத்தைக் கொண்டு செல்வது என்பது கூடவே கவலையையும் அழைத்துச் செல்வதாகும். ஏனென்றால் அதைப் பற்றிய சிந்தனை அடிக்கடி இருந்து கொண்டே இருக்கும். பணத்தை ஒரணா நாணையங்களாக மாற்றி கோயில் வாசலில் பிச்சை எடுத்துக் கொண்டிருக்கும் ஏழைகளுக்குக் கொடுக்கலாமென ராம்தாஸ் கூறிய ஆலோசனையை சாதுராம் ஏற்றுக்கொண்டு அவ்வாறே செய்தார். இப்போது ராம்தாஸ் முன்னிலும் அதிகமாக ராமனின் ஆதரவிலேயே முற்றிலும் தன்னை அர்ப்பணித்தான். இவ்வுலகில் இரண்டு ஆடைகளும் சில புத்தகங்களுமே அவனுடைய உடைமைகளாக இருந்தன.

ராம் வழிகாட்டியாக அனுப்பிய சாதுராமுடன் ராம்தாஸ் புறப்பட்டான். ராம்தாஸை அவர் இரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். இருவரும் ராமேஸ்வரம் செல்லும் இரயிலில் ஏறிக்கொண்டனர். டிக்கெட் வாங்கவில்லை. ராமனே டிக்கெட், அனைத்துமே ராம். இரயில் வண்டியில் ராமதியானம் தொடர்ந்து நடந்தது. ராமேஸ்வரத்திற்கு 6 மைல்களுக்கு முன்னால் ஒரு இரயில் நிலையத்தில் இரயில் நின்றது. ராம்தாஸும் அவரது அன்பான வழிகாட்டியும் அமர்ந்திருந்த

பெட்டிக்குள் டிக்கெட் பரிசோதகர் ஒருவர் நுழைந்தார். மற்ற பயணிகளின் டிக்கெட்டுகளை பரிசோதித்தபின், இவர்களை அணுகி 'டிக்கெட், டிக்கெட்' என உரக்கக் கேட்டார்.

'டிக்கெட் இல்லை சகோதரரே, நாங்கள் சாதுக்கள்,' என்று அவருக்குப் பதில் கிடைத்தது. 'டிக்கெட் இல்லாமல் மேற்கொண்டு பயணம் செய்யக் கூடாது. இங்கேயே இறங்க வேண்டும்' என்றார் டிக்கெட் பரிசோதகர்.

ராம்தாஸ் உடனே எழுந்து சாதுராமிடம் நாம் இங்கே இறங்க வேண்டுமென ராம் கருதுகிறான் போலும் என்று சொன்னான். இருவரும் ரயில் நிலையத்திலிருந்து வெளியேறி சாலைக்கு வந்தனர். டிக்கெட் பரிசோதகரின் செயலுக்கு சாதுராம் முணு முணுத்ததைக் கேட்ட ராம்தாஸ்: 'சகோதரா! ராமேஸ்வரம் வரை முழுவதும் இரயிலிலேயே பயணம் செய்யகூடாது. பொதுவாக யாத்திரையை நடந்தே மேற்கொள்ள வேண்டும், இவ்வளவு தூரம் நம்மை இரயிலில் பயணிக்க வைத்தது ராமனின் கருணையே. ராமேஸ்வரம் போய்ச் சேர இன்னமும் 6 மைல் தொலைவுதான் நாம் நடக்க வேண்டும். இதுவும் ராமனின் விருப்பமே, ஆதலால் மகிழ்ச்சியோடு இருங்கள், சகோதரரே' என்று கூறினான் ராம்தாஸ்.

இருவரும் நடக்கத் தொடங்கினர், இரண்டு மைல் தொலைவு போவதற்குள் ராம் நாவிதர் ஒருவருடன் ராம்தாஸை தொடர்புக் கொள்ளச் செய்தான். மங்களூரைவிட்டு புறப்பட்டப்பின் இதுவரை முகச்சவரம் செய்து கொள்ளவில்லை. இங்கே முதன் முதலாகத் தாடி, மீசை, தலைமுடி அனைத்தும் சந்நியாச முறையில் சவரம் செய்து கொள்ளப்பட்டது. ராமேஸ்வரத்தை நெருங்கும்போது சாலையின் பக்கமுள்ள இலட்சுமண

குண்டத்தில் இருவரும் நீராடினர். பின் பல்வேறு தீர்த்தங்களைக் கடந்து சென்றனர்.

முடிவில் புகழ்மிக்க ராமேஸ்வரம் கோயிலுக்கு ராம் பாதையைக் காட்டினான். இக்கோயில் பிரம்மாண்டமானது, மலைக்க வைக்கும் இதன் பிரகாரங்கள், இடை வழிகள், தூண்களுக்கு நடுவே இருக்கும் பாதைகள், இவற்றைக் கண்டு ஒருவர் திகைப்பில் மெய்மறந்து விடுவர். சாதுக்கள் இருவரும் புனிதமான அக்கருவறையை நெருங்கியபோது கதவு திறந்திருந்தது. ராமநாதரின் பூஜை முறைப்படி சகல வைபவங்களுடன் நடந்து கொண்டிருந்தது. ராம்! எல்லாம் உன் மகிமையே! அவ்விடத்து காட்சிகளால் ராம்தாஸின் உள்ளதில் ஆனந்த சிலிர்ப்பு ஏற்பட்டது. அங்கு யாத்திரையாக வந்திருந்த சில மகாத்மாக்களுடன் ராம்தாஸ் தொடர்பு கொள்ள நேர்ந்தது. அவர்களுள் ஒருவரான ஸ்வாமி கோவிந்தானந்தர், ராம்தாஸிடம் மிக்க அன்பு கொண்டார். தான் ஹூப்ளியிலுள்ள ஸ்ரீ சித்தரூடா ஸ்வாமிகளின் மடத்தை சேர்ந்தவரென்று கூறியதோடு, சில நாட்களில் அங்கு நடைப்பெறவிருக்கும் சிவராத்திரி உற்சவத்தில் ராம்தாஸ் கலந்துகொள்ள வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

## அத்தியாயம் - 6

### மதுரை

ராம்தாஸ் ராமேஸ்வரத்தில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தான். சாதுராம் அங்கிருந்து புறப்படலாம் எனக் கூறி ராம்தாஸை இரயில் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து தெற்கே செல்லும் இரயிலைப் பிடித்து அவர்கள் தனுஷ்கோடி என்ற இடத்தை அடைந்தனர். அங்கே இறங்கியதும் ராமனால் அன்புடன் அனுப்பப்பட்ட சாதுராமை ராம்தாஸ் பின் தொடர கடலை நோக்கி நடந்தார். ராம் ஒருவனைத் தேடுவதையே தனது ஆத்ம வேட்கை, ஆத்ம சிந்தனை மற்றும் ஆத்ம இலட்சியமாகக் கொண்டு, அவனை சதாகாலமும் தியானித்துக் கொண்டிருந்த ராம்தாஸுக்கு தான் கனவில் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருப்பது போலிருந்தது. ஸ்ரீராமபிரான் இலங்கைக்குப் போவதற்கு கட்டியதாகப் புராணம் கூறுகின்ற புகழ் பெற்ற பாலமாகிய ‘சேது‘ இருக்கும் கடற்கரை அங்கிருந்து இரண்டு மைல் தொலைவிலிருந்தது. மணல் வெளியில் பாதி வழி செல்லும்போது மழைத் தூறல் தொடங்கியது. குளிர் அதிகமாக இருந்தது, ஆடைகள் போதிய அளவு இல்லை, ஆனால் ராமனின் கருணையும் அருளும் மிகுந்து இருந்தது. தெற்குக் கோடியில் நீண்டு விரிந்திருக்கும் மணல் வெளியின் முனைக்குச் சென்று இருவரும் கடலில் குளித்தனர்.

அதன்பின் சாதுராமும், ராம்தாஸும் அருகேயிருந்த ஓர் சிறு கோயிலுக்குச் சென்று, அங்கேயே வசித்து வந்த சாதுக்கள்

இருவரை தரிசித்தனர். பின், அங்கிருந்து விரைந்து அவர்கள் தனுஷ்கோடிக்குத் திரும்பினர். அங்கு ஒரு சத்திரத்தில் சாதுராம் அவர்களுக்குத் தேவையான உணவை தனக்கும் ராமதாசுக்கும் பெற்று வந்தார். ராம்தாஸ் அச்சமயம் பழங்கள் அல்லது உப்பு, காரம் இல்லாத உணவை மட்டுமே உட்கொண்டு வந்தான்.

இருவரும் தனுஷ்கோடியில் ஒரு நாள் தங்கியிருந்த பிறகு இரயிலில் மதுரைக்குப் புறப்பட்டுச் சரியான நேரத்திற்கு அங்கு போய்ச் சேர்ந்து மதுரை கோயிலைத் தரிசித்தனர். மீனாட்சி அம்மன் கோயில் மிகப் பெரியதும், அழகானதும் ஆகும். சிற்பி தனது அற்புத கலைத்திறனை எல்லாம் அங்கே இருந்த தூண்களில் காண்பித்திருந்தான். கோயிலின் மேல் மட்டத்தை தாங்கும் பெரிய கற்றூண்களில் சீராகச் செதுக்கப்பட்டுள்ள வடிவங்கள் உயிருள்ளவைகள் போன்றும், தூண்களிலிருந்து வெளியே வருவன போன்றும் தோன்றின. வழிபாட்டுத் தலத்தின் கட்டிட அமைப்பு பிரமாண்டமாக காலங்களைக் கடந்து தாங்கி நிற்கக் கூடியதாக இருந்தது. சுருங்கக் கூறின், அக்கோயில் பார்ப்பதற்கு மிகக் கம்பீரமாக இருந்தது.

இராமேஸ்வரத்தில் தன்னிடம் பேரன்புகொண்ட ஸ்வாமி கோவிந்தானந்தரை ராம்தாஸ் மீண்டும் இங்கு சந்தித்தான். கோயில் நுழைவாயிலின் ஒரு பக்கத்தில் ராம்தாஸ் அமர்ந்திருந்ததை அவரும் அவருடனிருந்த மற்றும் இரு சாதுக்களும் கண்டனர். களைத்துப் போயிருந்த ராம்தாஸின் வழிகாட்டியான சாதுராம் உறங்கிக்கொண்டிருக்க அவரது காலருகே ராம்தாஸ் உட்கார்ந்திருந்தான். தூக்கத்தில் சாதுராமனின் கால்கள் ராம்தாஸின் மேல் பட நேரிட்டது. சுவாமி கோவிந்தானந்தர் அதைக் கண்டித்து சாதுராமை தொட்டு எழுப்பப் போனார். அப்போது ராம்தாஸ் அந்த சுவாமியை நோக்கி:

‘மகராஜ்! அச்சாதுவை எழுப்பாதீர்கள், அவர் அயர்ந்து தூங்குகிறார்‘ என்று கூறினான். அதற்கு அவர் ‘இதென்ன அநியாயம்? உங்களைக் காலால் உதைத்துக் கொண்டிருக்கும் இந்த காட்சியை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. புனிதத்தை மதிக்காத அவச்செயலாகவே நான் இதை கருதுகிறேன்‘ என்று இரைந்தார்.

ராம்தாஸ், ‘சுவாமி! பரவாயில்லை இந்த சாது ராம்தாஸின் குரு; ராமே ஆவார், ஆதலின் அவரது பாதங்கள் புனிதமானவையே, பிழையொன்றுமில்லை‘ என விடையளித்தான். ஆயினும் ராம்தாஸிடம் பெருமதிப்பும் மரியாதையும் கொண்டிருந்த சுவாமிக்கு ராம்தாஸை புரிந்து கொள்ள முடியவில்லை.

மறுநாள், சாதுராம் அங்கிருந்து புறப்பட வேண்டுமென்றார். புறப்படுமுன், ராம்தாஸை இராமேஸ்வரம் வரை கூட்டிச் சென்றதுடன் தன் கடமை முடிந்து விட்டதென்றும், ராஜமன்னார்குடியில் உள்ள தனது குருஸ்தானம் செல்வதன் பொருட்டு தான் பிரிந்து போக அனுமதி அளிக்க வேண்டுமென்றும் சாதுராம் ராம்தாஸிடம் கேட்டுக் கொண்டார். பயணம் முழுவதும், ஒவ்வோர் கட்டத்திலும் சாதுராம் மிகவும் அன்புடனும் பரிவுடனும் அனைத்து வழிகளிலும் ராம்தாஸை கவனித்து வந்தார். இடையே ஒரு இரயில் சந்திப்பில் அவர் ராம்தாஸை விட்டுப் பிரிந்தார். அவர் இறங்குவதற்கு முன், அந்த இரயில் பிரசித்திப் பெற்ற புண்ணிய தலமான சிதம்பரத்திற்கு ராம்தாஸை அழைத்துச் செல்லுமென்று தெரிவித்தார்.

# அத்தியாயம் – 7

## சிதம்பரம்

நண்பகலில் இரயில் புகை விட்டுக் கொண்டே சிதம்பரம் இரயில் நிலையத்தை அடைந்தது. ராம்தாஸ் இரயிலை விட்டு கீழே நடைமேடையில் இறங்கினான். இப்போது அவனுக்கு வழிகாட்டி யாருமில்லை. ராம் அவனை அடுத்த கணத்தைப் பற்றிய சிந்தனையும், திட்டமும் இல்லாத ஒரு குழந்தையாக ஆக்கியிருந்தான். மனம் 'ராம், ராம்' என்று எப்போதும் ஒரே சிந்தையில் லயித்திருந்தது. யாத்திரிகர் சிலர் ஊரை நோக்கிச் செல்வதைக் கண்டு அவனும் அவர்களைத் தொடர்ந்துச் சென்றான். உச்சி வேளைக்கு சிதம்பரம் கோயிலின் எல்லையை அடைந்தான்; நேரே கோயிலின் நுழைவு வாயிலுக்குச் சென்றான்; ஆனால் உள்ளே அனுமதிக்கப்படவில்லை; ஏனெனில் நுழைவு கட்டணமான நாலணா செலுத்தாமல் எவரும் உள்ளே போக முடியாது. அவனிடம் ஒரு பைசா கூட இல்லை, ஆனால் அது குறித்து அவன் சிறிதும் வருத்தம் அடையவில்லை. கோயிலை சுற்றியுள்ள பாழடைந்த பகுதியில் சற்று நேரம் சுற்றியபின், ராம்தாஸ் ஒரு குளத்தில் குளித்து விட்டுத் தனித்ததோர் இடத்தில் நீண்ட கல்லொன்றின் மீது வெய்யிலில் உட்கார்ந்தான். அப்போது சுமார் பகல் ஒரு மணி இருக்கும். அந்நேரம் வரை ராமநாம ஜெபத்திலேயே திளைத்திருந்த ராம்தாஸ் தன் சிறு புத்தக மூட்டையை அவிழ்த்து ஸ்ரீமத் பகவத் கீதையை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். அவன் ஐந்தாறு சுலோகங்கள் கூட படித்து முடிக்கவில்லை, அதற்குள் பருத்த

உடல் படைத்த தமிழர் ஒருவர் அவனை நோக்கி பக்கத்தில் வந்து அமர்ந்து:

'மகராஜ்! இன்று காலை ஏதாவது சாப்பிட்டீர்களா?' என்று வினவினார்.

'இல்லை, ஆனால் ராம் அளிப்பான், அதனால் அதைக் குறித்து பயமொன்றுமில்லை, சிந்தனையுமில்லை, இப்பொழுது நீங்கள்தான் நினைவு படுத்தினீர்கள் நண்பரே' என்றான் ராம்தாஸ்.

'தாங்கள் என்ன சாப்பிடுவீர்களென்றுத் தெரிவிக்க முடியுமா?' என்று அந்த நண்பர் அடுத்து வினவினார்.

'உங்கள் விருப்பம் அவ்வாறாயின் - வாழைப்பழம்' என்றான் ராம்தாஸ்.

உடனே அவர் அங்கிருந்து அகன்றார். சிறிது நேரத்தில் கையில் ஒரு டஜன் வாழைப்பழங்களோடு திரும்பி வந்து அவைகளை ராம்தாஸ் முன் வைத்து சாப்பிடச் சொல்லி வேண்டினார். 'ராம்! உன் விளையாட்டு அற்புதமானது'. இந்த எளிய பக்தனின் தேவைகளைக் கவனிப்பதற்காகவே ராம் அனுப்பிய அத்தமிழன்பர், ராம்தாஸ் உண்டு முடித்ததும், தன்னை பின்தொடருமாறு ராம்தாஸை கேட்டுக்கொண்டார். கோயில் வாயிலில் இருவருக்கும் அவர் நுழைவு கட்டணமாக எட்டணா (50 பைசா) செலுத்தி ராம்தாஸை உள்ளே அழைத்துச் சென்றார். மூர்த்திகளைத் தரிசித்தப் பின்பு கோயிலின் உட்பக்கம் முழுவதையும் அவர் ராம்தாஸுக்குக் காண்பித்தார். இங்கே பார்ப்பதற்கு அரிய விஷயம் என்னவெனில், கோயிலின் மூலஸ்தானக் கூரை தங்கத் தகடுகளால் வேயப்பட்டிருந்தது. ராம்

அனுப்பிய வழிகாட்டி ராம்தாஸிடம் மிக அன்புடனிருந்தார். அன்றைய இரவு பூஜை மிக விமரிசையாக நடைபெற்றது. ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்ட சுவாமி புறப்பாடு அங்கு நடைபெற்றது. இது அனைத்தும் முடிய நள்ளிரவுக்கு மேல் ஆகிவிட்டது. அன்றிரவை ராம்தாஸ் கழிப்பதற்கு அந்த தமிழன்பர் ஓரிடத்தை ஏற்பாடு செய்தார். இங்கு, அந்த தமிழன்பர் தான் பக்கத்து ஊரிலிருந்து அன்றிரவு பூஜை மற்றும் சுவாமி புறப்பாட்டைக் காண வந்ததாகத் தெரிவித்தார். மேலும் அதிகாலை இரயிலில் தன் சொந்த ஊருக்குத் திரும்ப இருப்பதாகக் கூறினார். ராம்தாஸுடன் தொடர்பு சொற்ப காலமே கிடைத்த போதிலும், அது தன்னுடைய பெரும் பாக்கியம் என்று ராம்தாஸிடம் தெரிவித்தார். அவர் கூறியதைக் கேட்ட ராம்தாஸுக்கு பேசுவதற்கு வார்த்தைகளே இல்லாமல் உள்ளம் நிறைந்திருந்தது. ராமனின் கருணையை விவரிக்க இயலாது!

அடுத்த நாள் காலையில், மற்ற யாத்திரிகர்களுடன் ராம்தாஸ் இரயில் நிலையத்திற்கு வந்தான். ஆனால் எந்த இரயிலில் போவது, எங்கே போவது என்பதை முற்றிலும் அவன் அறியாமலிருந்தான். திட்டமிடுவதற்கும், தகவல்கள் சேகரிப்பதற்கும் தேவையானச் சிந்தனைத்திறன் அவனிடம் இப்போது இல்லை. வழிகாட்டி இல்லாததால் உதவியற்ற நிலையில் இருப்பதை உணர்ந்தான். தான் வாழும் ஒவ்வொரு கணமும் அவன் ராம் ஒருவனையே சார்ந்திருந்தான். இரயில் நிலையத்தை அடைந்தபோது இரயில் ஒன்று நின்று கொண்டிருந்ததைக் கண்டான்; ஆனால் அது எங்கிருந்து வந்தது, எங்கே செல்கிறது என்பதை அவன் அறியவில்லை. ராம்தாஸ் நேரே கேட் வரை சென்று பிளாட்பாரத்தினுள் நுழையும்போது டிக்கெட் பரிசோதகர் தடுத்து பயண சீட்டு இல்லாமல் உள்ளே

போகக்கூடாதென்று அவனை தடை செய்தார். எல்லாம் ராமனின் இச்சை; அந்த இரயிலில் ராம்தாஸ் போகக்கூடாது என்று ராம் கருதினான் போலும். ஒருகால் அந்த இரயில் செல்லும் திசையில் ராம்தாஸ் காண வேண்டிய புனித ஸ்தலங்கள் எதுவும் இல்லை என்பதை ராம் நன்கு அறிவான் போலும்.

# அத்தியாயம் - 8

## திருப்பாப்புலியூர் பயணம்

சிதம்பரம் இரயில்வே நிலையத்திற்குச் சற்று தொலைவில் ஒரு மரத்தின் கீழ்க் கற்கள் சில குவிக்கப்பட்டிருந்தன. ராம்தாஸ் அங்கே சென்று கற்குவியல் மேல் உட்கார்ந்து ராம தியானத்தைத் தொடர்ந்தான். நடுப்பகல் தாண்டியபின் மற்றொரு இரயில் வந்தது, ராம்தாஸ் அமர்ந்திருந்த இடத்தைவிட்டு பிளாட்பாரத்தில் நுழைந்தான், இப்பொழுது கேட்டில் எவரும் தடை செய்யவில்லை. ஏனென்றால், இதுதான் அவன் பயணம் செய்ய வேண்டிய சரியான இரயில் போலும்! ராம்தாஸ் இங்கே ஒரு சாதுவுடன் தொடர்பு கொள்ள நேர்ந்தது. ராம்தாஸை அவர் உடனே தனது துணையாக்கிக் கொண்டார். புதிய வழிகாட்டி ஒருவரை ராம் கொடுத்துவிட்டான். இருவரும் இரயில் பெட்டிக்குள் நுழைந்தனர். புதிய சாதுராம் பரிவு மிக்கவர். ‘எங்கே போகிறீர்கள்?‘ என்று அவர் கேட்டதற்கு ராம்தாஸ் விடையறியாது விழித்தான், உண்மையில் ராம்தாஸுக்குத் தெரியாது. ராம்தாஸ் சாதுராமிடம்:

‘ராம் ஒருவனுக்கே தெரியும், நீங்கள் ராமனால் எனக்கு வழி காட்ட அனுப்பப்பட்டவர். எனவே இவன் அடுத்து எங்கே செல்ல வேண்டுமென்பதை நீங்கள் மட்டுமே தான் அறிவீர்கள்.‘

அதற்கு சாதுராம் ‘நன்று, நான் உங்களைத் திருப்பாப்புலியூர் அழைத்துச் செல்கிறேன். அங்கிருந்து திருவண்ணாமலைக்குப் போவோம்‘ என்றார்.

ராம்தாஸ், 'உங்கள் விருப்பப்படியே ஆகட்டும், நீங்கள் கூட்டிச் செல்லும் இடமெல்லாம் ராம்தாஸ் தங்களைப் பின் தொடர்வான்' என்றுக் கூறினான்.

வண்டி சென்று கொண்டிருந்தது. ராம்தாஸ் அமர்ந்த இடத்திற்கு எதிரே ஆங்கிலம் கற்றறிந்த இந்து இளைஞர்கள் இருவர் அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் தங்கள் முன் அமர்ந்திருக்கும் வினோதமான, கவலையற்ற, விசித்திரமான சந்நியாசியை (ராம்தாஸை) சற்று உற்று நோக்கினர். பின்னர் அவனுக்கு ஆங்கிலம் தெரியாதென்று எண்ணித் தங்களுக்குள்ளே ஆங்கிலத்தில் உரையாடலாயினர். அவர்களுள் ஒருவன், மற்றவனிடம்:

'எதிரே உட்கார்ந்திருக்கும் சாதுவைப் பார்த்தாயா? மோசடி செய்யும் போலிச் சாமியார் கூட்டத்தைச் சேர்ந்தவன் இவனென்று நான் உறுதியாகக் கூறுவேன். வயிற்றுப் பிழைப்பிற்காகவே இவன் இந்த வாழ்க்கையை மேற்கொண்டுள்ளான். நிச்சயமாக இவன் ஏமாற்றி மோசம் செய்துத் திரிபவன்' என்றான்.

ராம்தாஸைப் பற்றி அவ்வாறே எண்ணி மற்றவனும் அவ்வபிப்பிராயத்தை முழுவதும் ஆமோதித்தான். அவர்கள் இன்னமும் என்னென்னவோ பேசிக் கொண்டேயிருந்தனர். ஓடிக்கொண்டிருந்த வண்டி இரைச்சலில் அது தெளிவாகக் கேட்கவில்லை. ராம்! தன்னைப் பற்றி பிறர் இவ்வாறு பேசுவதைத் தானே கேட்கும் இது போன்ற அரிய வாய்ப்பை ஏற்படுத்திய உன் கருணையை என்னென்பது! இதனால், ராம்தாஸ் மனம் கோபமடையாமல் வெளிப்படையாய் பேசும் அவ்விளைஞர்களை ராம் காத்தருள வேண்டுமென்று

பிரார்த்தித்தான். மேலும் அந்த நண்பர்களுக்குத் தனது நன்றி உணர்வை தெரிவிக்க விரும்பிய ராம்தாஸ் அதைக் கட்டுப்படுத்த முடியாமல் அவர்களை நோக்கி கைகூப்பி:

'அன்பார்ந்த நண்பர்களே! இந்த ராம்தாஸைப் பற்றி நீங்கள் வெளிப்படையாக கூறிய இந்த கருத்தினை இவன் முழுமையாக ஆமோதிக்கிறான். அவை முற்றிலும் உண்மை, இவன் ஒரு மோசக்காரன். வயிற்றுப் பிழைப்பிற்காகவே இந்த சந்நியாசி உடையை அணிந்து கொண்டான். ஆனால் இன்னொன்றையும் நீங்கள் குறிப்பாகத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது. அது என்னவெனில், இவன் இறைவன்பால் பித்துப்பிடித்து ஒவ்வொரு நொடியும் தன்னைத் தூயவனாக்கும்படியும், ராம் ஒருவனுக்காக மட்டுமே வாழ வேண்டுமென்றும் அவனிடம் அழுது புலம்பிக்கொண்டும் இருக்கிறான். மேலும் ராம்தாஸை தூய்மைப்படுத்தவே ராம் இப்படி ஒரு புனித யாத்திரைக்கு அழைத்துச் செல்வதாக இந்த எளியவன் எண்ணுகிறான்.'

ராம்தாஸின் இந்தப் பேச்சைக் கேட்ட இரு நண்பர்களும் ஆச்சர்யம் அடைந்தனர். காரணம், அவர் அறியக்கூடாது என்பதற்காகவே (இந்த நாடோடி சந்நியாசிக்கு ஆங்கிலம் எங்கே தெரிந்திருக்கப் போகிறது என்று) ஆங்கிலத்தில் தாங்கள் பேசியவற்றைப் புரிந்து கொண்டுவிட்டாரே என்பதுதான். அவர்களுக்குள் ஒரு திடீர் மாற்றம் ஏற்பட்டு இருவரும் அவன் கால்களில் விழுந்து தங்களுடைய 'முன்யோசனையற்றப் பேச்சுக்களுக்காக' மன்னிப்புக் கேட்டனர். இதற்கு பிறகு அவர்கள் ராம்தாஸ் மேல் மிகவும் அக்கறையுள்ளவர்களாக கனிவுடன் நடந்து கொண்டனர். 'ஏதாவது சாப்பிடவேண்டுமா' எனக் கேட்டனர். அவர்கள் அப்படி கேட்டபிறகுதான் தான்

அதுவரை எதுவும் சாப்பிடவில்லை என்பதையும், அதைப்பற்றி முழுவதும் மறந்துவிட்டதையும் உணர்ந்தான். பின்பு தான் பழங்கள் மட்டுமே உட்கொள்ளுவதாகவும் அவர்கள் கொடுக்கும் யாசகத்தை தான் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொள்ளுவதாகவும் கூறினான். இரு நண்பர்களும் தமக்குள் பேசி, வழிகாட்டியான சாதுராமிடம் ராம்தாஸுக்கு பழங்கள் வாங்குவதற்கு என்றுக் கூறிச் சிறிது பணத்தைக் கொடுத்தனர்.

***ராமனின் செயல்கள் யாவும் ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவை; அவர் அன்பும், கருணையும் நிறைந்தவர்.***

ப்

## அத்தியாயம் – 9

## பாண்டிச்சேரியும் திருவண்ணாமலையும்

குறித்த நேரத்தில் இரயில் திருப்பாப்புலியூர் வந்தடைந்தது. சாதுராம் ராம்தாஸை தனது பழைய உறவினர் ஒருவர் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். அந்த வீட்டுத் தாழ்வாரத்தில் அன்றைய இரவு கழிந்தது. மறுநாள் காலை சாதுராம் ராம்தாஸுக்கு சில வீடுகளை சுட்டிக் காண்பித்து அங்கு சென்று பிச்சை எடுத்துவர அறிவுரை கூறினார்.

அன்புள்ளம் கொண்ட சாதுராம் ராம்தாஸை நோக்கி ‘மகராஜ்! இதோ பாருங்கள், சாதாரண உணவை எளிதில் பெற்றுவிடலாம், ஆனால் தங்கள் உணவாகிய பால், வாழைப்பழத்திற்கு பணம் தேவைப்படுகிறது‘ என்று கூறினார். சாலையின் இரு பக்கங்களிலும் வழக்கறிஞர்கள் நிறைந்த ஒரு தெருவிற்கு அழைத்துச் சென்றார்.

‘வீடு வீடாகச் செல்லுங்கள், அவர்கள் உங்களுக்கு ஏதாகிலும் கொடுப்பார்கள், தெருவின் மறு கோடியில் நான் காத்திருப்பேன்‘ என்று ஆலோசனை கூறினார்.

தனது வழிகாட்டியின் சொற்படியே எப்போழுதும் நடந்து கொள்ளும் ராம்தாஸ் அன்றும் அவ்வாறே செய்தான். ஐந்தாறு வீட்டு வாசல்களில் யாசகம் கேட்டு கை நிறையச் செப்பும்,

மற்றும் பிற நாணயங்களும் கிடைக்கப் பெற்றான். அவை அனைத்தையும் அப்படியே சாதுராமிடம் கொடுத்தான். அவர் அவைகளை எண்ணிப் பார்த்ததில் பத்து அணாக்கள் இருப்பதைக் கண்டார்.

சாதுராம் சிரித்துக் கொண்டே, 'தங்கள் ராம் உண்மையாகவே அன்பு மிக்கவன்தான். இந்தத் தொகை இரண்டு நாட்களுக்குப் போதுமானதாக இருக்கும்' என்றுக் கூறினார்.

அன்று பாண்டிச்சேரியைப் பற்றிப் பேச்சு வந்தபொழுது, அது திருப்பாப்புலியூரிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் இருப்பதாக ராம்தாஸ் அறிந்திருந்தான். வங்கதேசத்து பெரு முனிவரான ஸ்ரீ அரவிந்தரை தரிசிப்பதற்காக அங்கே செல்ல வேண்டுமென்ற விருப்பம் அவன் மனதில் எழுந்தது, சாதுராமிடம் அதைத் தெரிவித்ததும் அவரும் உடனே அதற்கு இசைந்தார். மறுநாள் காலைப் பொழுது விடிவதற்கு முன்பே இருவரும் கால் நடையாக புறப்பட்டு பாண்டிச்சேரியை நோக்கிச் சென்றனர். சுமார் பகல் 2 மணி அளவில் பாண்டிச்சேரியின் புறநகர்ப் பகுதியை அடைந்தனர். இங்கு ஓர் விந்தை என்னவெனில், நகரின் நுழைவாயிலில் இரு புறங்களிலும் கள்ளுக்கடைகள் அணி செய்தன. அவர்கள் ஊரினுள் நுழைந்ததும் மகான் ஸ்ரீ அரவிந்தர் வசிக்குமிடத்தைப் (ஆசிரமத்தை) பற்றி விசாரித்தனர். சிறிது நேரம் அலைந்தபின் ஒரு நண்பர் ஸ்ரீ அரவிந்தர் வசிக்குமிடம் என்று அரண்மனை போன்றதோர் பெரிய கட்டிடத்தைக் காண்பித்தார். ராம்தாஸ் அதனுள் நுழைந்து, அதன் முன் அறை ஒன்றில் இருந்த இரு வங்காளி இளைஞர்களைப் பார்த்து ஸ்ரீ அரவிந்தரது தரிசனம் இப்போழுது கிடைக்குமாவென்று விசாரித்தான். அவர்களுள்

ஒருவர், 'ஐயா! மன்னிக்கவும், ஸ்ரீ அரவிந்தர் தனிமையில் இருப்பதால் இன்னும் ஓராண்டுக்கு எவருக்கும் தரிசனம் அளிக்கமாட்டார்' என்று விடையளித்தார்.

அம்மகானை ஒருமுறை கண்ணால் காணக் கிடைத்தால்கூடப் போதுமென்று ராம்தாஸ் மன்றாடி பார்த்தும் பலிக்கவில்லை. எல்லாம் ராமனின் திருவுளம்! எனவே ராம்தாஸ் வெளியே வந்து அங்கு காத்துக்கொண்டிருக்கும் சாதுராமிடம் நடந்தவற்றை விவரித்தான். இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அவர்களை ஒரு காவலர் அணுகி: 'நண்பர்களே! காவல் நிலையத்தில் நீங்கள் தேவைப்படுகிறீர்கள். என்னை தொடர்ந்து வாருங்கள்' என்றார்.

அதை கேட்ட சாதுராம் மிகவும் பயந்து ராம்தாஸை தனியாக அழைத்துச் சென்று, நமக்கு கசையடி கிடைக்கும் போலிருக்கிறதென்று முணுமுணுத்தார். அதற்கு ராம்தாஸ், 'காவலருடன் நாம் செல்வோம். மேற்கொண்டு நடக்க வேண்டியதை ராமனிடம் ஒப்புவித்து விடுவோம்' என்று சமாதானம் செய்தான். அவர்கள், அரை மைல் தூரம் நடந்து, காவல் நிலையத்தை அடைந்தனர்; பயங்கரப் பார்வையுடன் நன்கு சுருண்டு முறுக்கிவிடப்பட்ட மீசையுடன் நடுத்தர வயதுடைய உயரமான மனிதர் ஒருவர்முன் தாங்கள் நிறுத்தப்பட்டுள்ளதை உணர்ந்தனர். அவர் ஏதோ கடுமையாகப் பேசினாரென்பதைத் தவிர வேறொன்றும் விளங்கவில்லை. ஏனென்றால் அவர் பிரெஞ்சு மொழியில் பேசியது போன்று தோன்றியது. ராம்தாஸ் ஆங்கிலத்தில் விடையளித்தான். காவல்துறை மேலாளர் போலிருந்த அவருக்கு அது விளங்கவில்லை என்பது பதிலுக்கு அவரது விழிகளின் முறைப்பிலிருந்துத் தெரிந்தது. பிறகு அந்த அதிகாரிக்கும் சாதுராமுக்கும் இடையில் தமிழில் உரையாடல் நிகழ்ந்தது.

காவல் அதிகாரி கூறியதின் சாராம்சம்: சாதுக்களிருவரும் நகரைவிட்டு வெளியேறுவதற்கு இரண்டு மணி நேர அவகாசம் தான் தரப்பட்டுள்ளது என்பதாகும். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த சாதுராம், தொடர்ந்து இருபது மைல் நடந்து களைத்துப்போயிருப்பாதால் தங்களுக்கு ஓய்வெடுக்க வேண்டியது அவசியமென்றும், ஊருக்குள்ளே அன்று இரவு தங்கி மறுநாள் காலை வெளியேறிவிடுவதாகவும் கூறினார். சாதுராமனின் இந்த விடை, காவல் அதிகாரிக்கு திருப்தியளிக்கவில்லை என்பதோடல்லாமல், மேலும் அவரது கோபத்தைக் கிளறிவிட்டது. இப்போது அவர் கண்களில் கனல் பறக்க மீசையை முறுக்கி கோபத்துடன் விரைவாக பேசினார்.

இரண்டு மணிநேர அவகாசம் ஒரே ஒரு மணிநேரமாகக் குறைக்கப்பட்டது. ஆணைக்கு உடனே கீழ்ப்படியாவிட்டால் அதன் விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று அவர் எச்சரித்தார். இந்தமுறை அவர் பேசும் பொழுது அதில் மிக மோசமான கெட்ட வார்த்தைகளும், பரிகாசச் சொற்களும் சரளமாக பயன்படுத்தப்பட்டது. சாதுராம் உடனே ராம்தாஸின் கையைப் பிடித்துக் கொண்டு உயிர் தப்பினால் போதும் என்பது போல் வேகமாக அந்த இடத்தைவிட்டு அகன்றார். காவல் அதிகாரியின் கடும் சொற்களைக் கேட்டுப் பரிதாபகரமான சாதுராம் பயந்தும், வெருண்டும் போனார். காவல் நிலையத்தை விட்டு சில அடிகள் தூரம் சென்றதும் சாதுராம், காவல் அதிகாரி மீது வசைமாரிப் பொழியத் தொடங்கிவிட்டார். அமைதியாக இருக்குமாறு ராம்தாஸ் எவ்வளவோ கேட்டுக்கொண்டும் அவரது நாவின் ஓட்டத்தை நிறுத்த முடியவில்லை. எல்லாம் ராமனின் திருவுளம் என்றும், புலம்புவதற்கு எந்தக் காரணமும் இல்லையென்றும் தேறுதல் கூறியும், அவர் மேன்மேலும்

தேர்ந்தெடுத்த வசை மொழிகளைக் கையாண்டு கொண்டே இருந்தார். அவர் அக்கலையில் நிபுணர்போலும். மேலும் தேவையான வசைமொழிகள் கிடைக்காததாலோ அல்லது வயிறு காலியானதாலோ போகப்போக அவர் மௌனமாகிவிட்டார். இது இவ்விளையாட்டில் ராம்தாஸ் கலந்து கொள்கிறானா என்று சோதிப்பதற்காகவே ராம் புரிந்த ஒரு தந்திரமாகவும் இருக்கலாம். ராம் ஒருவனே அனைத்தும் அறிவான், அவனே எதையும் மானிக்க வல்லவன்.

பாண்டிச்சேரி நகரத்தை விட்டு நான்கு மைல் தூரம் கடந்த பின்பு சாதுராம் மூடியிருந்த ஓர் கடையின் தாழ்வாரத்தை இரவு ஓய்வெடுக்கத் தேர்ந்தெடுத்தார். மறுநாள் காலையில் அவர்கள் திருப்பாப்புலியூருக்கு பயணம் மேற்கொண்டனர். பிற்பகல் இரண்டு மணிக்கு அங்கே போய்ச் சேர்ந்தனர். சாதுராம் ராம்தாஸை பெற்ற தாயைப்போல் மிகுந்த அன்புடனும், கனிவுடனும் கவனித்து வந்தார் என்பதை இங்கே குறிப்பிட வேண்டும். எல்லாம் ராமனின் செயல், அவன் போக்கு புரியாத புதிராகவும் அதே சமயத்தில் அன்பு மிக்கதும் ஆகும். மறுநாள் ஒரு இரயில் இரு சாதுக்களையும் திருவண்ணாமலைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது. அங்கே சாதுராம் தனக்கு பழக்கமான ஓர் பொற்கொல்லர் வீட்டுக்கு ராம்தாஸை அழைத்துச் சென்றார். பக்திமானாகிய அந்த பொற்கொல்லர், சாதுக்கள் இருவரையும் தன் வீட்டிலேயே விருந்தினராக தங்குமாறு மிகவும் வற்புறுத்தினார். இந்த நண்பரது வீட்டு வாயிலில் இருந்த மூடிய தாழ்வாரத்தை ராம்தாஸ் தியானத்திற்கும், ஓய்விற்கும் பயன்படுத்திக் கொண்டான். காலையும் மாலையும் சாதுராமுடன் பெரிய சிவன் கோயிலுக்குச் சென்று வந்தான்.

அன்பு மிக்க சாதுராம் ராம்தாஸை ஒரு நாள் அந்த இடத்தின் புகழ் பெற்ற மகானாகிய ரமண மகரிஷியைத் தரிசிப்பதற்காகக் கூட்டிச் சென்றார். அவரது ஆஸ்ரமம் ஒரு கூரை வேய்ந்த கொட்டகையில் மலையின் அடிவாரத்தில் இருந்தது. பார்வையாளர்கள் இருவரும் ஆஸிரமத்திற்குள் சென்று மகானைக் கண்டு அவரது தூய திருவடிகளில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினர். அம்மகான் வசித்த இடம் உண்மையிலேயே அருள் நிறைந்து இருந்தது. இளைஞரான அந்த மகானின் முகத்தில் ஆழ்ந்த அமைதியும், அவரது அகன்ற விழிகளில் பற்றற்றதோர் மென்மையானக் கனிவும் மிளிர்ந்தது. அவர் சன்னிதானம், அவரை அணுகினோர் அனைவரையும் ஈர்த்து அமைதியும், பரமானந்தமும் நிறைந்த தன்மையில் மூழ்குவித்தது. அவருக்கு ஆங்கிலம் தெரியுமென்று தெரிவிக்கப்பட்டதால் ராம்தாஸ் அவரை நோக்கி:

**'மகராஜ்! இதோ உங்கள் முன் நிற்கும் இந்த அடிமையின் மேல் இரக்கம் கொண்டு தங்கள் ஆசியை இவனுக்கு அளிக்க வேண்டுமென்பதே தங்களிடம் இவன் செய்து கொள்ளும் ஒரே பிரார்த்தனை' என்று தெரிவித்துக் கொண்டான்.**

**மகான் தமது அழகிய கண்களை ராம்தாஸை நோக்கித் திருப்பி அவனது கண்களைச் சிறிது நேரம் ஆழ்ந்து உற்று நோக்கினார். அவ்விழிகள் வாயிலாய் மகரிஷியின் அருள் ராம்தாஸுக்குள் பாய்ந்தது. அருள்மழை பொழிந்தாயிற்று என்பதுபோல் அவர் தலையை அசைத்தார். விவரிக்க முடியாததோர் ஆனந்த வெள்ளம் ராம்தாஸின் உடலை ஊடுருவியது. அவன் உடல் முழுவதும் தென்றலில் அசைகின்ற இலையைப்போல் மெய்சிலிர்த்தது.** ஓ ராம்! உன்னருளை என்னென்பது! மகானிடம் விடைபெற்றுக் கொண்டு இருவரும் தாங்கள் தங்கியிருந்தப் பொற்கொல்லர் வீட்டிற்குத் திரும்பினர்.

## அத்தியாயம் - 10
## குகையில்

இப்போது ராமனின் தூண்டுதலால் சிறிது காலம் தனிமையிலிருக்க விரும்பிய ராம்தாஸ் அதை சாதுராமிடம் தெரிவித்தான். சாதுராம் அவரது விருப்பங்களை நிறைவேற்றுவதில் எப்போதும் சித்தமாயிருப்பவராதலால், காலதாமதமின்றி ராம்தாஸை பிரசித்திப்பெற்ற கோயிலின் பின்னாலிருந்த மலைக்கு அழைத்து சென்றார். அங்கு பல குகைகளை ராம்தாஸுக்குக் காண்பித்தார். அவற்றினுள் சிறியதோர் குகையை ராம்தாஸ் தேர்ந்தெடுத்து, மறுநாளே அதனைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டான். இந்த குகையில் அவன் சுமார் ஒரு மாத காலம் ஆழ்ந்த தியானத்தில் இருந்தான். ராம், தன்னை பஜனை செய்ய ராம்தாஸை ஏகாந்தத்திற்கு அழைத்துச் சென்றது இதுவே முதன்முறை. இங்கே, அவன் உயர்ந்த பேரின்ப நிலையை உணர்ந்தான். ஏனென்றால், இங்குதான் அவன் எந்த ஒரு இடையூறுமின்றி ராமுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. விவரிக்க இயலாத உவகைக் கடலில் அவன் திளைத்துக் கொண்டிருந்தான். பேரின்ப ஊற்றாகிய ராமனிடம் மனதை ஒரு நிலைப்படுத்துதல் என்பது தூய்மையான ஆனந்தத்தைத் தொடர்ந்து அனுபவிப்பதாகும்.

ஒரு சமயம், பகற்பொழுதில் தீவிர தியானத்தில் ஆழ்ந்திருந்த ராம்தாஸ் குகையிலிருந்து வெளியே வந்தபொழுது, சிறிது

தூரத்தில் நின்று கொண்டிருந்த ஒருவரைக் கண்டான். உடனே அவன் தன் சுய நினைவின்றி, ஓடிசென்று அவரை இறுகத் தழுவிக் கொண்டான். ராம்தாஸின் இச்செயலால் அவர் முற்றிலும் மிரண்டுபோய், இந்த பித்தன் தனக்கு ஏதாவது தீங்கு இழைத்து விடுவானோவென்று நடுங்கிப் போனார். ராம்தாஸ் பித்தனென்பது உண்மையே, ஆயினும் அவனது ராம் மீது ஏற்பட்ட மோகப் பித்தால் எவருக்கும் ஒரு தீங்குமில்லை என்பதை அந்த நண்பர் பின்னர் உணர்ந்தார். இவ்வாறு அவன் நடந்து கொண்டது, அவரிடம் ராமைக் கண்டு கொண்ட அடக்க முடியாத ஈர்ப்பே காரணமாகும். ‘ஓ ராம், நீ வந்துவிட்டாய், நீ வந்துவிட்டாய்!‘ என்ற எண்ணத்தால் ராம்தாஸ் அவரிடம் ஓடினான். இதுபோன்றப் பேருணர்வு ஏற்படும் போதெல்லாம் குகையின் அருகில் கண்களில் பட்ட செடி கொடிகளையும் தழுவிக்கொள்வான். இறைவன் அவனை எல்லா பக்கங்களில் இருந்தும் ஈர்த்துக் கொண்டிருந்தான். இப்படி ராமனின் அன்பினால் கவரப்பட்டு ராமனின் பைத்தியமாக தன் நாட்களை அந்த குகையில் கழித்தான்.

உணவுக்காக காலையில் அவன் கீழேயிறங்கி ஊரினுள் வீடு வீடாகச் சென்று, அங்குள்ள இரக்கமுள்ள அன்னையரிடமிருந்து தனது சிறு செம்பில் கைப்பிடி அரிசியை யாசகம் பெறுவான். செம்பில் பாதிக்குமேல் அரிசி நிரம்பியதும், குகைக்குத் திரும்பி உலர்ந்த சுள்ளிகளை சேகரித்து தீ மூட்டி அச்செம்பிலேயே அரிசியை வேகவைப்பான். அருகாமையிலேயே குகைக்கு நேரெதிரே மலையிலிருந்துத் தெளிந்த தூய்மையானச் சிற்றோடையொன்று ஓடிக்கொண்டிருந்தது. தினமும் அதில் நீராடுதல் மிகவும் புத்துணர்ச்சியைக் கொடுத்தது. இந்த வேக வைத்த சாதத்தை உப்போ அல்லது வேறு எதுவுமின்றி தினமும்

ஒருமுறைதான் உட்கொள்ளப்பட்டது. இந்த எளிய உணவை அவனுடன் பகிர்ந்து கொள்ள அணில்கள் பல குகைக்கு வருவது வழக்கம். சில சமயங்களில் அவை அச்சமின்றி அவனது கைகளிலிருந்தே உண்ணுவதும் உண்டு. அவற்றின் நட்பு, ராம்தாஸுக்கு பெருமகிழ்ச்சியை அளித்தது. எவ்வித கவலையும், நினைப்பும் இல்லாத ராமனின் இந்த குழந்தை நாள்தோறும் குன்றுகள் மீதும், புதர்கள், மரங்கள், பாறைகள் நடுவேயும் திரிந்தது. மொத்தத்தில், அவன் குகையில் ஏகாந்தத்தில் மகிழ்ச்சி நிறைந்த எளிய வாழ்க்கை வாழ்ந்தான். இரக்கமும் பரிவும் நிறைந்த சாதுராம் ராம்தாஸை தினந்தோறும் மலை மீதோ அல்லது யாசகத்திற்காக கீழே ஊருக்குள் வரும் போதோ சந்திப்பார். ஒரு நாள் அவ்விடத்தை விட்டு அகல ராமனிடமிருந்து உத்தரவு வந்தது. எங்கே என்பதை ராம் ஒருவனே அறிவான்!

## அத்தியாயம் - 11
## திருப்பதி

ஒரு நாள் காலை நான்கு மணிக்கு மலையை விட்டு இறங்கிய ராம்தாஸ் நேரே இரயில் நிலையத்திற்கு நடந்தான். அங்கு இரயில் ஒன்று காத்துக் கொண்டிருந்தது. தடை ஏதுமின்றி ராம்தாஸ் உள்ளே சென்று ஒரு பெட்டியிலேறிக் கொண்டான். சில நிமிடங்களில் இரயில் புறப்பட்டது. இரயில் எங்கே போகிறதென்று அறிவது அவனுடைய வேலையன்று. ராம் என்றும் தவறிழைக்க மாட்டான். அவனை முற்றிலும் நம்பினோருக்கு என்றைக்கும் அவன் முழு பாதுகாவலனாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் இருப்பான். இரயில் காட்பாடி வரை சென்றது. இங்கே அவருக்கு வழிகாட்டுவதற்காக, ராம் சாதுராம் ஒருவரை தொடர்பு கொள்ள வைத்தான். இரயில் திருப்பதி நோக்கி செல்வதாகவும், ராம்தாஸை அங்குக் கூட்டிப் போவதாகவும் சாதுராம் உறுதியளித்தார். ஓ ராம்! உனது திட்டங்கள் அனைத்தும் அதிசயமாக நிறைவேற்றப்படுகின்றன.

இருவரும் சேர்ந்து பயணம் செய்து திருப்பதி இரயில் நிலையத்தில் இறங்கினர். பரிவுடன் சாதுராம் தயார் செய்த உணவை உட்கொண்ட பிறகு திருப்பதி மலையை நோக்கி நடந்தனர். இருவரும் அம்மலையின் கற்படிகள் மீதேறத் தொடங்கினர். புகழ்மிக்க அந்த மலை ஏற, ஏற மேன்மேலும் வளர்ந்து கொண்டே போவது போல் தோன்றியது. சுமார் எழுநூறு படிகள் ஏறி இரவு 8 மணிக்கு சாதுக்கள் மலை உச்சியை அடைந்தனர். மேலும் சமவெளியில் சுமார் மூன்று மைல் தூரம்

நடந்தனர். நிலவொளி மிக்க இரவாகவும், மிகக் குளிராகவும் இருந்தது. ஆயினும் ராமனின் கருணையும் அதேபோல் மிகச் சிறந்திருந்தது.

நள்ளிரவுக்கு சற்றுமுன் அவர்கள் பாலாஜியின் கோயிலை அடைந்தனர். கோயில் வாயிலில் தீயை மூட்டி சுற்றி மக்கள் பலர் உட்கார்ந்துக் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர். குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த இரு சாதுக்களும் அவ்விடத்திற்கு விரைந்து சென்று, அக்கூட்டத்திற்குள் புகுந்து நெருக்கமாக அமர்ந்து தங்கள் கைகால்களைச் சூடாக்கிக் கொண்டனர். ராம் மிகவும் பரிவுள்ளவனாக இருந்தான். சிறிது நேரத்தில் கோயில் வாயிற்காப்போன் கோயிலின் வெளிக்கதவை மூட வேண்டிய நேரமாகிவிட்டபடியால் தீயின் முன் குளிர் காய்ந்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டான். எனவே அனைவரும் கிளம்ப மனமின்றி அவ்விடத்தை விட்டு அகன்றனர். தன்னையும், ராம்தாஸையும் கோயிலுக்குள்ளேயே அவ்விரவைக் கழிக்க அனுமதிக்குமாறு வாயிற்காப்போனிடம் சாதுராம் தாழ்மையுடன் கேட்டுப் பார்த்தார். ஆனால் அவ்வேண்டுதல் ஏற்கப்படவில்லை; எல்லாம் ராமனின் திருவுள்ளம்!

கோயிலுக்கு வெளியே வருவது என்பது மலைமீது வீசும் பலத்தக் குளிர் காற்றில் அகப்பட்டுக்கொண்டுத் தவிக்க வேண்டிய நிலையாகும். ஆகையால் இரவு தங்குவதற்கு ஓர் இடத்தைத் தேட வேண்டியிருந்தது. மிகப் பெரிய கட்டிடங்கள் - சத்திரங்கள் சில திறந்திருந்தன. சாதுக்கள் இருவரும் வேகமாக ஒரு சத்திரத்திற்குள் சென்று படுத்துக் கொண்டனர். சாதுராம் குளிரால் நடுங்கி முணுமுணுத்துக் கொண்டு:

'சுவாமி! இரவு தூங்குவதைப் பற்றி நினைக்கவே முடியாது போலுள்ளதே! இக்குளிர் நம்மை சிறிதும் தூங்கவிடாது' என்றார்.

அதற்கு ராம்தாஸ், 'அது நல்லது தானே! எல்லாம் வல்ல அன்புமயமான ராமனை இரவெல்லாம் பஜனை செய்து வழிபடலாமே' என்று விடையளித்தான்.

சாதுராமோ, 'அது உங்களுக்குப் பொருந்தும். நான் கூறும் யோசனை என்னவெனில், பொழுது புலர்ந்ததும் இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட வேண்டும். இந்நிலையில் இன்னும் ஓரிரவு இருந்தோமானால் நாம் மரக்கட்டைகளாய் விறைத்துப் போவோம்' என்று குறிப்பிட்டார்.

இந்நிலையில் ராமத்தியானத்தில் ஆழ்ந்துவிட்ட ராம்தாஸிடமிருந்து விடையேதும் வராதது கண்ட சாதுராம், படுத்துக்கொண்டு 8 வடிவத்தில் உடலை வளைத்துக் கொண்டு, தன்னிடமிருந்த மெல்லிய துணி ஒன்றால் உடலை மூடிக்கொண்டார். வளைக்கப்பட்ட முழங்கால்கள் மூக்கைத் தொடுமாறு உடலைச் சுருக்கிப்படுத்தும் அச்சிறிய துணியால் அவர் உடலை முழுவதும் போர்த்திக்கொள்ள முடியவில்லை.

மீண்டும் ஒருமுறை, 'தூக்கம் என்ற நினைப்பையே விட்டுவிட வேண்டியது தான்' என்று முனகினார் சாதுராம்.

பாவம்! இந்த நண்பரை ராம் அதிகப்படியாக சோதித்தாலும், ராம் செய்வது அவருடைய நன்மைக்காகவே! இரவு கழிந்தது, அதிகாலையில், நடுங்கிக் கொண்டிருந்த சாதுராம் கீழே இறங்கலாமென கூறினார். ஆனால், ராம்தாஸ் அங்கிருந்து இன்னும் மூன்று மைல் தூரத்திலுள்ள 'பாபநாசினி' என்னும் நீர்வீழ்ச்சிக்கு போகலாமென ஆலோசனை கூறினான். அதில்

நீராடுவோர் தங்கள் பாவங்கள் நீங்கப் பெறுவர் என்பது பொதுவாய் நிலவி வரும் நம்பிக்கை! சாதுராம் இசைந்ததும் இருவரும் அங்கு சென்றனர். ஒரு பாறையின் மேல் வெகுவேகத்துடன் விழும் அந்த நீர்வீழ்ச்சியில் குளித்தனர். இதற்குள்ளே நன்கு விடிந்துவிட்டபடியால் அனைத்து திசைகளும் தெளிவாகக் காணப்பட்டன. பார்க்கும் இடமெல்லாம் காணப்பட்ட அழகிய இயற்கை காட்சிகளும், பள்ளத்தாக்குகளும் உள்ளத்தை பரவசப்படுத்தின. குளியல் முடிந்ததும், ராம்தாஸ் பின்தொடர, சாதுராம் மலையினின்று கீழே விரைந்தார். பொழுது சாய்வதற்குள் அவர்கள் கீழே ஊர் போய் சேர்ந்தனர். அன்று மாலையே இருவரும் வடக்கு நோக்கிப் போய்க் கொண்டிருக்கும் ஒரு இரயிலில் ஏறினர்.

# அத்தியாயம் - 12
# இறைவன் எங்கும் இருக்கின்றான்

இருவரும் ஏறிய இரயில் காளஹஸ்தி என்னும் புண்ணிய ஸ்தலம் சென்றதும், அங்கே இறங்கி ஒரு நாள் தங்கியபின் வேறொரு இரயிலில் ஏறி ஜகந்நாத் பூரிக்குப் புறப்பட்டனர். இருவரும் வண்டியில் இருந்தனர், அது உச்சி நேரம். மேல் நாட்டு உடை அணிந்த கிறிஸ்துவ டிக்கெட் பரிசோதகர் ஒருவர் சிறிய இரயில் நிலையத்தில் வண்டி நின்றதும் இவர்கள் இருக்கும் பெட்டியில் நுழைந்து, சாதுக்களை அணுகி 'டிக்கெட் எங்கே?' என்று வினவினார்.

ராம்தாஸ் ஆங்கிலத்தில், 'சகோதரா! சாதுக்கள் பணம் வைத்து கொள்வதும் இல்லை, பணம் வைத்துக் கொள்ள நினைப்பதும் இல்லை' என்று கூறினான்.

'ஆங்கிலம் பேசுகிறீர்கள், நீங்கள் படித்தவர்களாக இருக்கிறீர்கள் , டிக்கெட் இன்றி பயணம் செய்யகூடாது. நீங்கள் இருவரும் கீழே இறங்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்' என பரிசோதகர் கூறினார்.

பரிசோதகர் கேட்டுக் கொண்டபடியே இருவரும் கீழே இறங்கி விட்டனர். ராம்தாஸ் தன் வழிகாட்டியிடம் 'எல்லாம் ராமனின் இச்சை' என்று கூறினான்.

அவர்கள் பிளாட்பாரத்தில் நின்று கொண்டிருந்தனர். இரயில்

புறப்பட இன்னும் சிறிது நேரமிருந்தது. அதற்குள் ராம்தாஸுடன் பேச வேண்டுமென்று அந்த டிக்கெட் பரிசோதகருக்கு விருப்பமுண்டாயிற்று.

'ராம்தாசை நோக்கி, நன்று! தாங்கள் இவ்வாறு பயணம் செய்வது எந்த நோக்கத்துடன் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?' என்று பரிசோதகர் கேட்டார்.

'கடவுளைத் தேடி' என்று பதில் கூறினார் ராம்தாஸ்.

'கடவுள் எங்கும் இருக்கிறார் என்று சொல்லப்படுகிறதே, என்று மேலே தொடர்ந்த பரிசோதகர், தாங்கள் புறப்பட்ட இடத்திலேயும் அவன் இருக்கவேண்டும். அப்படி இருக்க, அவனைத் தேடி இப்படி அலைவதென்பது மிக விந்தையாக உள்ளது!' என்றார்..

'ஆம், சகோதரா! இறைவன் எங்கும் இருக்கின்றான். அனைத்து இடங்களுக்கும் சென்று அவன் சர்வ வியாபியாக உள்ளான் என்பதை தெளிவாக உணர்ந்து, அவன் எங்கும் இருக்கிறான் என்னும் உண்மையை நிலை நாட்ட வேண்டுமென்று ராம் விரும்புகிறான்,' என்று ராம்தாஸ் விடையளித்தான்.

'நல்லது, அப்படியானால், தாங்கள் நிற்கும் இவ்விடத்திலேயே கடவுளைக் காணவேண்டுமே' என்றார் பரிசோதகர்.

'ஆம், நாம் நிற்கும் இவ்விடத்திலேயே அவன் இருக்கிறான், சகோதரா!' என்று கூறினான் ராம்தாஸ்.

'அவர் எங்கே இருக்கிறார்? சொல்லுங்கள்' என்று மீண்டும் பரிசோதகர் கேட்டார்.

'இதோ என் முன் இங்கே நிற்கின்றாரே' என்று ராம்தாஸ் உற்சாகத்துடன் கூறினான்.

'எங்கே, எங்கே?' என்று பரிசோதகர் பரபரப்புடன் கேட்டார்.

ராம்தாஸ் புன்னகையுடன், 'இங்கே!, இங்கே!' என்று கூறியவாறு டிக்கெட் பரிசோதகரைக் குறிப்பிட்டுக் காண்பித்தான். 'என் முன்னே நிற்கும் இந்த நெடிய வடிவில், அதாவது தங்கள் வடிவத்தில் எங்கும் நிறைந்திருக்கும் கடவுளை ராம்தாஸ் நன்கு காண்கிறான்' என்று அவரது அகன்ற மார்பைத் தட்டிக் கொடுத்தான்.

சிறிது நேரம் டிக்கெட் பரிசோதகருக்கு ஒன்றும் புரியாமல் குழப்பமடைந்தவராய்க் காணப்பட்டார். பின்னர் மகிழ்ச்சியோடு இதயம் குலுங்கச் சிரிப்பில் வெடித்தார்.

எந்த இரயில் பெட்டியிலிருந்து அவர்களைக் கீழே இறங்கச் சொன்னாரோ, அதே பெட்டியின் கதவைத் திறந்துச் சாதுக்களை மீண்டும் உள்ளே ஏறும்படி வேண்டினார். அவர்களும் அவ்வாறே அப்பெட்டியில் ஏறிக் கொள்ள அவர்களைப் பின் தொடர்ந்து டிக்கெட் பரிசோதகரும் ஏறிக் கொண்டு சாதுக்களோடுச் சிறிது நேரம் உட்கார்ந்து இருந்தார்.

'நண்பர்களே, நான் உங்களைத் தொந்தரவு செய்யலாகாது, கடவுளைத் தேடிச் செல்லும் உங்களின் இப்பயணம் முழுவதுமாக வெற்றியடையட்டும்' என்றுக் கூறி அப்பெட்டியை விட்டு அகன்றார். இரயிலும் தன் பயணத்தை தொடர்ந்தது.

ஓ ராம்! உன் நாமம் போற்றப்படட்டும்!

## அத்தியாயம் – 13

## பரிவு மிக்க காவலர்

அனைவருக்கும் அன்புமிகு தாயும் தந்தையுமான இறைவன், இரு சாதுக்களும் உணவின்றிப் பயணம் செய்வதைக் கண்டு, அவர்களை விஜயவாடாவிற்கும் ஜகந்நாத் பூரிக்கும் இடையேயுள்ள ஒரு இரயில் நிலையத்தில் டிக்கெட் வழங்குபவரைக் (குமாஸ்தா) கருவியாகக் கொண்டு இறக்குவித்தான். அவ்வூரின் பெயர் ராம்தாஸுக்கு நினைவில்லை. இருவரும் இரயில் நிலையத்திலிருந்து வெளியேறி, ஊரினுள் சென்று உணவருந்திய பின், மீண்டும் இரயில் நிலையத்திற்கே அன்று மாலை வந்தனர்; இரவினை அங்கு கழித்தனர். முந்திய நாள் அவர்கள் எந்த வண்டியை விட்டு இறக்கப்பட்டனரோ அதே நேரத்தில் மறுநாள் வரும் இரயில் வண்டியை பிடிக்க வேண்டியிருந்தது. அதன் பொருட்டு, அவர்கள் சில துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது, எல்லாம், வெளித் தோற்றம் மட்டுமே; உண்மை அல்ல. எப்பொழுதும் ராமனின் வழிகள் புதிராகவே இருந்தன. இவர்களை முந்திய தினம் இறக்கிவிட்ட டிக்கெட் வழங்குபவரும், அந்நிலைய அதிகாரியும் இந்த சாதுக்களை இரயிலில் ஏற விடுவதில்லை எனத் தீர்மானித்திருந்தனர். எனவே, இரயில் வந்ததும் பெட்டிக்குள் ஏற முயன்ற சாதுக்களை, கடமையாற்றுவதில் கருத்தாய் இருந்த அந்த அதிகாரிகள் சாதுராம் மிக மிக கெஞ்சியும் அந்த வண்டியில்

ஏறுவதைத் தடுத்தனர். பிளாட்பாரத்தில் இருந்த பயணிகள் அனைவரும் இரயில் பெட்டிகளில் ஏறிவிட்டனர். பிளாட்பாரத்தில் அந்த அதிகாரிகளும் மற்றும் இவ்விரண்டு சாதுக்களும் மட்டுமே இருந்தனர். சாதுக்கள் நழுவி இரயில் பெட்டியில் எங்கே நுழைந்து விடுவார்களோ என்று அந்த அலுவலரும், நிலைய அதிகாரியும் சாதுக்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஓ ராம்! என்ன அற்புதமானவனய்யா நீ! இரயில் புறப்பட இன்னமும் சிறிது நேரம் இருந்தது. இந்த சமயத்தில், ஒரு இரயில்வே காவலர் (போலீஸ்) சாதுக்களிடம் வந்து ஏதாவது ஒரு பெட்டிக்குள் ஏறிக்கொள்ளச் சொன்னார். அதற்கு சாதுராம், பயணச் சீட்டு வழங்குபவரும், மற்றும் அந்நிலைய அதிகாரியும் தங்களை ஏறவிடமாட்டார்கள் என்று தெரிவித்தார். அந்தக் காவலர், பயணச்சீட்டு வழங்குபவர் மற்றும் அதிகாரி நின்று கொண்டிருக்கும் இடத்திற்கு சென்று சாதுக்களின் சார்பாகக் கீழ் வருமாறுக் கூறினார்:

‘பாருங்கள், இந்த சாதுக்கள் இரயிலில் பயணம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டியவர்கள். பயணச் சீட்டை பொருத்தவரை அவர்களிடம் பணம் இருக்கும் என்று எதிர்பார்க்கலாகாது. ஏனெனில், உலக மக்களைப் போல பணம் தேடுதலோ, சேமிப்பதோ அவர்கள் குறிக்கோள் அல்ல.‘

இந்த வார்த்தைகள் இரயில் அதிகாரிகளை சமாதானப்படுத்தவில்லை. அதற்கு அவர்கள் சரியான பதில் கொடுத்தனர்:

‘பயணச்சீட்டு இல்லாமல் எவரையும் பயணம் செய்ய அனுமதிப்பது விதிகளுக்கு புறம்பானது. அவர்களுக்காக நீ

வேண்டுவது பயனற்ற செயலாகும். மேலும் எந்த இரயில் நிறுவனத்தின் காவல் பணி செய்ய நீ நியமிக்கப் பட்டிருக்கின்றாயோ, அந்த குறிக்கோளுக்கு எதிராக உள்ளது உன்னுடைய ஆலோசனை என்பதை மறந்து விட்டாய்‘.

இந்த பதில் காவலரை வெகுவாக எரிச்சல் கொள்ளச் செய்தது. ஆனால், எப்படியாவது சாதுக்களை அந்த இரயிலில் பயணம் செய்விக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

இரயில் புறப்படும் நேரம் நெருங்கியது, பரிவுமிக்க அந்தக் காவலர் மிகவும் தவிப்புக்குள்ளானார். அவர் கண்களில் எவ்வித பயமுமற்ற துணிச்சலான ஒளி மிளிர்ந்தது. விரைவாக இரயிலை நோக்கிச் சென்று பெட்டியின் கதவைத் திறந்து சாதுக்களை உள்ளே செல்லும்படி செய்கை காட்டினார். அவர்களும் அவ்வாறே செய்தனர். இவையெல்லாம் ஒரு நொடியில் நடந்தேறிய செயல்களாகும். இச்செயலை சிறிது தொலைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்த குமாஸ்தா அந்த இடத்திற்கு ஓடி வந்தார்.

‘எந்த அதிகாரத்தில் சாதுக்களை இரயில் ஏற அனுமதித்தாய்?‘ என்று கோபமான குரலில் கேட்டார் குமாஸ்தா. உயரமாகவும், திடகாத்திரமாகவும் இருந்த அந்தக் காவலர், தன் முதுகு, மூடியிருந்த இரயில் பெட்டியின் கதவின்மேல் படும்படி சாய்ந்து, கதவின் முன்னால் நின்று கொண்டார்.

‘இங்கு பாருங்கள் சகோதரரே, இது போன்ற விவகாரங்களில் அவரவாரின் மனசாட்சியின் ஆணையைக் காட்டிலும் மேலும் ஓர் அதிகாரி இல்லை. இவைகளே இறைவனின் தூண்டுதல்கள் என கருதப்படுகின்றன. இதைத்

தவிர வேறு எந்த மேல் உத்தரவும் இதற்கு வேண்டியதில்லை.' என்று உறுதியுடன், அமைதியான குரலில் காவலர் பதிலளித்தார்.

'உன்னுடைய இந்தச் செயல் மேல் அதிகாரிக்கு தெரிவிக்கப்படும், அதற்கு நீ பதில் கூறவேண்டியக் கட்டாயம் வரும்' என்று எச்சரித்தார் குமாஸ்தா.

'நிச்சயமாக நண்பரே! நீங்கள் செய்யும் புகார் காரணமாக நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டாலும், அதன் முழு விளைவுகளைச் சந்திக்க நான் தயாராக உள்ளேன். ஆனால் நீங்களோ அல்லது இப் பூமியில் வாழ்பவர் எவராக இருந்தாலும், இந்த சாதுக்களை இவ்வண்டியில் பயணிப்பதைத் தடுக்க முடியாது' என அந்தக் காவலர் பதிலளித்தார்.

அந்தக் காவலரின் நடத்தையைக் கண்ட குமாஸ்தாவுக்கு என்ன செய்வதென்றுத் தெரியவில்லை. அவர் குழப்பத்துடன் நிலைய அதிகாரியை நோக்கினார். இந்நிலையில், அவர் இரயில் நிலைய அதிகாரியின் உதவி கிடைக்குமா என்று பார்க்க, இரயில் புறப்படும் நேரம் ஆகிவிட்டதால் நிலைய அதிகாரி அதற்கான சிக்னலைக் காட்டுவதற்கானப் பணியில் ஈடுபட்டிருந்தார். புறப்படுவதற்கான விசில் ஒலியைக் கேட்டவுடன் இரயில் சக்கரங்கள் உருளத் துவங்கின. அந்த குமாஸ்தா எதுவும் செய்ய முடியாமல், சாதுக்கள் ஏறியிருந்த இரயில் பெட்டியை உற்று நோக்கிய வண்ணம் இருந்தார். 'ஓ ராம்! எளியவனான தங்கள் அடிமை ராம்தாஸ் இந்நிகழ்ச்சியால் என்ன புரிந்து கொள்ளமுடியும்? சர்வ வல்லமை படைத்த உனது கரங்களின் செயல்களை எதுவும் தடுக்கவோ, தடை செய்யவோ, இடையூறு விளைவிக்கவோ முடியாது. கருணையுடனும், அன்புடனும்

இவ்வுலகத்தைக் காப்பவனே, உன்னுடைய ஒரு ஸ்பர்சம், ஒரு கணத்தில் இந்த உலகத்தின் முழுத் தோற்றத்தையும் மாற்றிவிடுமே. எந்தக் காவலர், நிறுவனத்தின் விதிமுறைகள் மீறப்படுவதைத் தடுக்க வேண்டுமோ, அவர் சாதுக்களிடம் டிக்கெட் இல்லையென்பதை அறிந்திருந்தும், அவர்களைத் தடுத்த மேல் அதிகாரியையும் கடுமையாக எதிர்த்து, அதனால் அவருக்கு வேலை நீக்கம் ஏற்படலாம் என்பதை அறிந்தும், அதனைப் பொருட்படுத்தாமல் விதிமுறைகள் அனைத்தையும் தானே தகர்த்தெறிந்து, சாதுக்களை இரயிலில் பயணம் செய்ய அனுமதித்தார். இறைவா! இச்செயல், சந்தேகத்திற்கு இடமில்லாமல் நீ எல்லோர் இதயத்திலும் வீற்றிருந்து, பிரபஞ்சம் முழுவதையும் உன் விருப்பம்போல் தூண்டிச் செயல்படுத்துகிறாயென்பதைத் தெளிவாக்குகிறது. ராம்! நீ உனது பக்தர்களை உண்மையாக நேசிப்பவன். உன் மகிமையையும் அன்பையும் வார்த்தைகளால் விவரிக்க உன் அடிமையால் முடியாது. ஆனந்தக் கண்ணீரே! நீ பெருகுக! பெருகுக! உன்னுடைய ராம்தாஸ் அவனது உணர்ச்சிகளை இவ்வாறு தான் வெளிப்படுத்த முடியும்.'

## அத்தியாயம் - 14
## ஜகந்நாத் பூரி

இரயில் சென்று கொண்டிருந்தது. மாலையில் அது ஜகந்நாத் பூரியை அடைந்தது. ஒரு தர்மசாலையின்(சத்திரம்) தாழ்வாரத்தில் அன்றிரவை கழித்தனர். இங்கேயும் குளிர் மிக அதிகம். மறுநாள் காலை, சாதுக்கள் இருவரும் ஊருக்கு வெளியே இருந்த ஒரு பெரிய குளத்தில் காலைக் கடன்களையும், குளியலையும் முடித்துக் கொண்டு புகழ்மிக்க ஜகந்நாதரின் கோயிலை நோக்கி நடந்தனர். அந்த புண்ணிய நகரத்தில் எந்தப்பக்கத்திலிருந்து பார்த்தாலும் அழகிய வெண்மையான விமானம் வானில் உயர்ந்து நிற்பதைக் காணமுடியும். இப்போது சாதுராமும் ராம்தாஸும் கோயிலின் பிரம்மாண்டமான நுழைவு வாயிலின் கதவருகே நின்றனர். ஆனால் உள்ளே நுழைவது எவ்வாறு? பக்தர்களின் கூட்ட நெரிசலால் கோயில் வாயில் நிரம்பி வழிந்தது. உள்ளே நுழைவதற்கு தத்தளித்துக் கொண்டிருந்த அந்த மனித வெள்ளத்தில் இடித்தலும், தள்ளுதலும், உதைத்தலும் மிகுந்திருந்தன. இந்நிலையைக் கண்ட ராம்தாஸ் இருகைகளையும் கூப்பி 'ராம்! உனது எளிய அடிமை இந்த நெரிசலில் எப்படி உள்ளே வந்து உன்னை தரிசிக்க இயலும்? ஆதரவற்ற, மெலிந்த இந்த ஏழை பரதேசிக்கு இயலாதுபோல் இருக்கிறது!' என்று கூறினான்.

இவ்வாறு கூறி வாய் மூடுமுன், கோயில் நுழைவு வாயிலின்

கூட்டத்தினின்று உயரமான அந்தணர் ஒருவர் வெளியே வந்து, ராம்தாஸை அணுகி அவன் கையைப்பற்றி வாயில் கதவருகே கூட்டிச் சென்று, தன் முழுபலத்தையும் பயன்படுத்தி, கூட்ட நெரிசலில் நுழைந்து, வழி உண்டாக்கி, திகைத்து நின்ற ராம்தாஸை தன்னுடன் உள்ளே அழைத்துச் சென்றார். நடந்த அனைத்தும் ஒரு கனவு போலிருந்தது. ராம்தாஸ் உடலுணர்வு நீங்கி, பரம்பொருளாகிய ராமுடன் ஒருங்கிணைந்துவிட்டான். அவன் சுமார் ஐந்து நிமிடங்களில் பெரிய மூர்த்தி உருவம் கொண்ட ஜகந்நாத்தரின் முன்பு நின்று கொண்டிருந்தான். அந்தணர் இன்னும் அவனது கையைப் பிடித்துக் கொண்டேயிருக்க, ராம்தாஸ் மூர்த்தியின் திருவடிகளில் தனது சிரத்தைப் பதித்து வணங்கினான்.

இது முடிந்தபின், அந்தணர் அவனை கோயிலைச் சுற்றி வலம் வர அழைத்துச் சென்றார். ஓ ராம்! இந்த அடிமையின்பால் கொண்டுள்ள உனது அன்பை என்னவென்பது! எல்லாம் உன் மகிமை! பிரகாரத்தை வலம் வரும் வழியெல்லாம் தன்னை மறந்து பெரு மகிழ்ச்சியில் மூழ்க, கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகியது. விவரிக்க இயலாத இந்த பரவச நிலையின் ஒரு வினாடி அனுபவத்திற்கு அகில உலகின் இன்பகளனைத்தும் ஒன்றாக வைத்தாலும் ஈடாகாது. சில நிமிடங்களுக்குப் பிறகு அந்த அந்தண வழிகாட்டியும், ராம்தாஸும் முதலில் சந்தித்த இடத்திற்கே மீண்டும் வந்து சேர்ந்தனர். அங்கே அவர், ஜகந்நாதரின் கோயிலின் பிரசாதமாகிய அன்னத்தைப் பெற்று ராம்தாஸின் வாயில் ஊட்டினார்.

‘இப்போது என் வேலை முடிந்து விட்டது‘ எனக் கூறி ராம்தாஸை விட்டு அந்தணர் கோயிலினுள் செல்ல முயற்சித்த

சமயத்தில் ராம்தாஸ் அவரை நிறுத்தி 'சகோதரா, ஒரு நாடோடி சாதுவிடம் இத்தகைய அன்பு காட்டி அவனை கோயிலுக்குள் அழைத்துச் சென்றது எவ்வாறு?' என்று வினவினான்.

'தங்கள் கேள்விக்கு ஜகந்நாதர்தான் விடை அளிக்க முடியும். தங்களைக் கண்டதும் உடனே உள்ளே அழைத்துச் சென்று தரிசனம் செய்விக்க வேண்டுமென்னும் விசித்திரமான ஆவல் என்னைப் பற்றிக் கொண்டது. இதையெல்லாம் ஏன் செய்தேனென்று என்று எனக்கே விவரிக்க இயலாது. எல்லாம் இறைவன் செயல்', என்று அவர் விடையளித்தார். ஆம்! இது ராமனின் லீலையே!

## அத்தியாயம் – 15

## ஏசு கிறிஸ்து – ஒரு இறைதூதன்

அன்று மாலை, சாதுராம் இரயில் நிலையத்திற்கு வழிகாட்ட, இருவரும் இரயிலில் ஏறினர். இரண்டு சாதுக்களுடன் இரயில் வடக்கு நோக்கிப் பயணித்துப் புகழ் பெற்ற ஹௌராவுக்கு முந்தைய நிலையத்தை அடைந்தது. பிரயாணிகளிடமிருந்து டிக்கெட்டுகளை இந்த நிலையத்திலேயே வாங்கிவிடுவது என்பது இரயில்வே நிறுவனத்தின் உத்தரவு; அதன்படி டிக்கெட்டுகளைச் சேகரிக்க டிக்கெட் கலெக்டர் - ஓர் ஆங்கிலோ-இந்திய நண்பர் இரயில் பெட்டிக்குள் நுழைந்துச் சாதுக்களிடம் டிக்கெட்டுகளைக் கேட்டார். அவர்கள் தங்களிடம் டிக்கெட்டுகள் இல்லையென்பதை ஒப்புக்கொண்டனர். இரயில்வே நிறுவன விதிகளின்படி டிக்கெட் இல்லாமல் இரயிலில் பயணம் செய்யக்கூடாது. ஆகையால், கண்டிப்பு மிகுந்த அந்த டிக்கெட் கலெக்டர் சாதுக்கள் இருவரையும் கீழே இறங்கச் சொன்னார். சாதுக்களும் உடனே அவ்வுத்தரவிற்குக் கீழ்ப்படிந்தனர். எல்லாம் ராமனின் இச்சை. அப்போது இரவு சுமார் 8 மணி இருக்கும். இரயில் நிலையம் சிறியது. இரயில் கிளம்பும் வரை அவர்கள் நிலைய வாசற்கதவு அருகே நிறுத்தப்பட்டனர். இரயில் சென்றதும் ஆங்கிலோ-இந்தியரின் கவனம் மீண்டும் சாதுக்களின் பக்கம் திரும்பியது.

சாதுக்கள் அருகே சென்று அவர்களை உட்கார

உத்தரவிட்டார். உடனே சாதுக்கள் உட்கார்ந்தனர். ‘இல்லை, அங்கே அல்ல‘ என்று கூறிக்கொண்டே, அவர் தனது இடது பக்கத்தில் சிறிது தூரத்திற்கப்பால் ஓர் இடத்தை காண்பித்தார். சாதுக்கள் உடனே எழுந்து சுட்டிக் காட்டப்பட்ட இடத்திற்குச் சென்று அமர்ந்தனர். ‘அங்கே அல்ல, அங்கே அல்ல‘ என்றுக் மீண்டும் கத்தினார் நகைச்சுவை உணர்வு மிக்க அந்த கிறிஸ்துவ நண்பர். தனது வலதுபுறத்தில் ஒரு இடத்தைக் காண்பித்து, ‘சீக்கிரமாக எழுந்து அங்கே சென்று உட்காருங்கள்‘ என்றார். அவர் கட்டளைக்கு இணங்கி சாதுக்களும் தங்களுக்குச் சுட்டிக் காண்பிக்கப்பட்ட இடத்தில் உட்கார்ந்தனர். மூன்றாம் முறையாக அந்த நண்பரிடமிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்ந்து செல்லச் வேண்டுமென உத்தரவு வர, அதற்கும் அடிபணிந்தனர். இரு சாதுக்களும் அவர் கூறியபடி ஒரு மனதாக இடம் மாறிக்கொண்டிருந்தனர். கடைசியாக அந்த ஆங்கிலோ-இந்திய நண்பர் சுட்டிக் காட்டிய இடத்தில் உட்காரும்போது சாதுராம் ராம்தாஸிடம் இவ்வாறு முணுமுணுத்தார்: ‘நம்மை ஆட்டி வைத்துக் கொண்டிருக்கும் இவர் ஒரு விசித்திர மனிதராக இருக்கிறார்! நமக்கு தொல்லைகள் கொடுத்து வெறுப்பூட்டுவதே அவருடைய நோக்கம் போலும்‘ என்றார்.

‘இல்லை நண்பரே, அவரின் நல்ல உள்ளத்தைத் தவறாக புரிந்து கொண்டீர்கள். நாம் வெகு நேரம் இரயிலில் உட்கார்ந்திருந்ததால் நம் கால்கள் மரத்துப் போய்விட்டன, அந்த விரைப்புத் தன்மையை அகற்றுவதற்காகவும், நம் கால்களில் இரத்த ஓட்டத்தை சீர் செய்யவும் அந்த நல்ல நண்பர் நம்மை, இங்குமங்கும், நடக்கச் செய்கிறார். பலமுறை ’உட்காரு’ ’எழுந்திரு’ என்று கேட்டுக்கொள்கிறார். எல்லாம் நம் நன்மைக்காகத்தான். ராமனின் நல்லெண்ணத்தையும்,

அன்பையும் போற்றுவோமாக' என்று ராம்தாஸ் பதிலளித்தான்.

இந்த பதில் சாதுராமை திருப்திப்படுத்தியதாகத் தெரியவில்லை. 'உங்களுடைய மனப்பாங்கு என்னைப் போன்ற எளிய சாதுவிற்கு புரிந்து கொள்வது கடினமாக உள்ளது' என்று சாதுராம் கூறினார்.

இந்த உரையாடலுக்கிடையில், அந்த கிறிஸ்துவ நண்பர் எங்கோ மறைந்துவிட்டார். மீண்டும் கையில் ஒரு லாந்தர் விளக்குடன் சாதுக்களை நோக்கித் திரும்பி வந்தவர், அந்த விளக்கின் ஒளியை இருவர் முகத்திலும், அவர்களைச் சுற்றியும் விழும்படி செய்தார். பின் அந்த விளக்கு ஒளியின் உதவியால், சாதுராமிடம் இருந்த பை, பித்தளை குவளை மற்றும் ராம்தாஸின் சிறிய புத்தகக்கட்டு, சிறிய அலுமினியக் குவளை ஆகியவற்றின்மீது பார்வையைச் செலுத்தினார்.

'இதை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்றுக் கூறியவாறு சாதுராமனின் பித்தளைப் பாத்திரத்தை எடுத்து தன் பக்கத்தில் வைத்துக் கொண்டார் அந்த நண்பர். அவரின் இச்செயலால் சாதுராமனின் முகம் வெளுத்துவிட்டது.

அடுத்து, அவருடைய பையைத் தன் பக்கம் இழுத்து அதைத் திறந்துச் சோதனையிட்டதில் அதில் எடுத்துக் கொள்வதற்குத் தகுந்த பொருள்கள் ஒன்றும் தென்படாமையால் திரும்பக் கொடுத்துவிட்டார்.

'அடுத்து உன்னிடம் என்ன உள்ளது?' என்று கேட்டுக் கொண்டே, அவர் தன் கவனத்தை ராம்தாஸ் பக்கம் திருப்பினார்.

இதற்கிடையில், ராம்தாஸ் தன் புத்தக மூட்டையையும், தகரக் குவளையையும் அந்த கிறிஸ்துவ நண்பர் முன்

வைத்துவிட்டிருந்தான். ராம்தாஸ் அவரைப் பார்த்து, ‘சகோதரா, இந்தப் பொருட்கள் இரண்டும் உங்களுடையது. நீங்கள் தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். ராம்தாஸ் என்றுமே தனக்கென்று எதையும், எப்பொழுதும் வைத்துக் கொண்டதில்லை. இவைகளை எவர் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்‘ என்றான்.

‘இந்தச் சிறிய குவளை எனக்குத் தேவையில்லை. பித்தளைப் பாத்திரம் மிகவும் பொருத்தமானது. இந்த சின்ன மூட்டையில் என்ன உள்ளது?‘ என்றார்.

அதை அவிழ்த்தபோது அவருடைய பார்வை கையடக்கமாக இருந்த ‘புதிய ஏற்பாடு‘ (New Testament) என்ற புத்தகத்தின் மேல் சென்றது. அதை வெளியே எடுத்து அதில் ‘புதிய ஏற்பாடு‘ என்று மின்னிக் கொண்டிருந்த தலைப்பைக் கவனித்தார். ‘இந்தப் புத்தகத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யப் போகிறீர்?‘ என்று ராம்தாஸிடம் கேள்வி கேட்டார்.

‘எல்லாம், சகோதரா‘ என்று பதில் அளித்தான் ராம்தாஸ்.

‘ஏசு கிறிஸ்துவை நீங்கள் நம்புகிறீரா?‘ என்று கேட்டார்.

‘ஏன் கூடாது? ஏசு கிறிஸ்துவும் ஒரு இறைத்தூதரே, மனித குலத்தை இரட்சிக்க வந்தவர்.‘

இந்தப் பதில், அந்த நண்பரின் இதயத்தைத் தொட்டது. ராம்தாஸின் அருகில் வந்து, ‘ஐயா, உங்களைப் பற்றி அறியாமல் உங்களுக்குப் பல தொல்லைகளைத் தந்த உங்கள் சேவகனை மன்னியுங்கள்‘ என்றார் அந்த நண்பர்.

இப்படி கூறிக்கொண்டே, அவர் அவர்களை நிலையத்தினுள்ளே அழைத்துச் சென்று, இரு நாற்காலிகளைக் கொடுத்து உட்காரச் சொன்னார். வருத்தமுற்ற

முகத்தோற்றத்துடன் இருந்த சாதுராமிடம் பித்தளைப் பாத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தார்; சாதுராமனின் முகத்தில் ஒளி திரும்பியது. ஆங்கிலோ-இந்திய நண்பர் அன்பு மிக்கவராய் அவர்களுக்குத் தேநீர் போன்றவைகளைப் பெற்றுதர முன் வந்தார். ஆனால் ராம்தாஸ் வேண்டாம் என மறுத்து அனைத்திற்கும் நன்றி தெரிவித்தார். ஏசுவை புகழ்வோமாக!

'ஐயா, மற்றொரு இரயில் இன்னும் அரைமணி நேரத்தில் வர உள்ளது. அது வந்ததும் நான் உங்களை அதில் சௌகர்யமாக உட்காரச் செய்கிறேன். தங்களுக்கு இழைத்த தொல்லைகளுக்காக, இந்த பணியாளன் வருத்தமடைகிறேன், மன்னிப்புக் கோருகிறேன்' எனக் கூறினார்.

'ஓ ராம்! ஓ ஏசுகிறிஸ்துவே! இந்த எளிய அடிமையை சோதிக்க விநோதமான வழியை வகுத்திருக்கிறீர். ஓ ராம்! நீ புரிந்து கொள்ளமுடியாதப் புதிராக இருந்தாலும், அன்பும் கருணையும் நிறைந்தவன், எவர் உன்னை நம்புகிறாரோ, ஓ ராம்! அவர் உன்னுடைய முழு ஆதரவையும் நிச்சயமாகப் பெறுவார். உன்னைப்பற்றி ஒருவர் அறியக் கூடியதெல்லாம் இதுதான், இதுவே போதுமானது, உன் வழிகளைப் புரிந்துக் கொள்வது இயலாது. இத்தகைய முயற்சி எளிய பக்தர்களுக்குத் தேவையற்றதும் ஆகும். உன் எல்லையில்லா அன்பென்னும் சூரிய ஒளியின் இதமான வெப்பத்தில் குளிர் காய்வதே பேரின்ப அனுபவமாகும். குழந்தை தாயிடம் அன்பை எதிர்பார்க்கிறது; அதைப் பெற்றுத் திருப்தி அடைகிறது. இதைவிட மேலாகக் கேட்பதற்கு வேறு என்ன இருக்கிறது?'

குறித்த நேரத்தில் இரயில் வந்தது, கிறிஸ்துவ நண்பர் வாக்களித்தபடி அவர்களுக்குச் சௌகர்யமான இருக்கைகளை கிடைக்கச் செய்தார். இரயில் கிளம்பி, இரவு சுமார் 10 மணிக்கு ஹௌராவை அடைந்தது.

## அத்தியாயம் – 16

## கல்கத்தாவும், தட்சிணேஸ்வரமும்

சாதுக்கள் இருவரும் இருளில் கிளம்பி, கங்கைக்கரையை அடைந்து, அங்குள்ள பெரும் பாலத்தைக் கடந்தனர். குளிர் மிகவும் அதிகமாக இருந்தது. பாலத்தின் மறுபக்கத்தை அடைந்ததும், இடதுபுறம் திரும்பிப் படிகளில் இறங்கி கங்கையை ஒட்டியிருந்த கோயிலின் ஒரு பகுதிக்கு வந்தனர். அந்தப் பகுதி புனித நதியில் நீராடிவிட்டு வரும் யாத்திரிகர்களுக்கு வைதீகச் சடங்குகளைச் செய்விக்கும் இடமாகும். அங்கே ஒரு மரப்பலகை இருப்பதைக் கண்டு, அதன்மீது சாதுக்கள் அன்றிரவு இளைப்பாறினர்.

மறுநாள் அதிகாலையில் அவர்கள் கல்கத்தாவை நோக்கிச் சென்றனர். காளி கோயிலைப் பற்றி விசாரித்துக்கொண்டு, அவர்கள் 7 மைல்களுக்கு அப்பால் உள்ள காளிகாட்டை நோக்கி கால்நடையாக விரைந்து சென்று, நேராகக் கோயிலுக்குள் கருங்கல்லால் வடிவமைக்கப்பட்டப் பெரிய விக்கிரகம் முன் நின்றனர். காளியின் அகன்ற வாயிலிருந்துச் சிவப்பு நிற நீண்ட நாக்கு தொங்கிக் கொண்டிருந்தது.

‘ஓ! அகிலத்தின் அன்னையே! ஆதரவற்ற, வலிமையற்ற எளிய உன் குழந்தைக்கு அருள்புரிவாயாக. பெண் குலம் அனைத்தையும் தாயாகவும், உனது தெய்வீக வடிவின் பிரதிநிதியாகவும் உன் அடிமை காணட்டும்!‘ என்று ராம்தாஸ் பிரார்த்தனை செய்தான். இங்கேயும் ராம்தாஸ் வருணிக்க

முடியாத உவகையும், இறைவனின் திருவுளத்திற்குத் தான் அர்ப்பணிக்கப்பட்டிருப்பதையும் உணர்ந்தான். கண்களிலிருந்துக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அனைத்தும் அன்னையின் அருள்! இவ்விடத்து தர்மசாலையில் அவர்களிருவரும் இரண்டு நாள் தங்கினர்.

அதன்பின் அவர்கள் கல்கத்தாவுக்கு வந்த வழியே திரும்பிக் கங்கைக்கரையை அடைந்தனர். ராமனின் தூண்டுதலால் ராம்தாஸ் தட்சிணேஸ்வரம் செல்ல முடிவு செய்தான். அதன்படி அவர்கள் நீராவிப் படகில் ஏறினர். அன்பர் ஒருவர் அவர்களுக்கு பயணச் சீட்டைப் பெற்றுக் கொடுத்தார். அவர்கள் அகண்ட கங்கையில் பயணம் செய்து கல்கத்தாவிலிருந்து வெகு தூரத்தில் கங்கைக்கரையில் இறங்கினர்.

அப்போது இரவு பத்து மணி, நல்ல இருளாக இருந்தது. சாலையில் நின்று கொண்டிருந்த சில அன்பர்களிடம் தட்சிணேஸ்வரத்திற்குப் போகும் வழியை விசாரித்துக் கொண்டனர். அவர்கள் காட்டிய வழியே, சாதுக்களிருவரும் சந்து சந்தாகவும், வயல்கள் வழியாகவும், சில இடங்களில் வழிகாட்டியில்லாததால், வழி தவறியும் நடந்தனர். அனைத்தும் பக்தர்களைச் சோதிப்பதற்கு ராம் செய்யும் செயலாகும். ஆயினும், அவர்கள் அவனருளால் புகழ்பெற்ற அக்கோயிலின் நுழைவாயிலை நள்ளிரவுக்குமுன் அடைந்தனர்.

பிரம்மாண்டமான வெளிக்கதவு மூடியிருந்ததைக் கண்டு, அதை அவர்கள் தட்டினர்; கதவு திறந்தது, உரத்த குரலொன்று ‘யார் அங்கே?‘ என்று அதிகாரத்துடன் கேட்டது. ‘காளியைத் தரிசிக்க வந்திருக்கும் நாடோடி சாதுக்கள்‘ என்று ராம்தாஸ் விடையளித்தான்.

‘அது சரி, நீங்கள் இப்பொழுது உள்ளே வரமுடியாது, நாளைக் காலை வரலாம்‘ என்று கூறிக் கொண்டே உள்ளே இருந்த இரவு காவலர் கதவை மூட முயன்றார். ஆனால், அதற்குள் சாதுக்கள் இருவரும் அவர் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது, மெதுவாக உள்ளே நுழைந்து விட்டனர். காளியைத் தரிசிக்காமல் திரும்புவதில்லையென்ற மன உறுதியோடு கோயிலின் பெரிய சதுரமானத் தாழ்வாரத்திற்குள் சென்றனர். முதலில் கோபமுற்ற காவல்காரர் அவர்கள்மீது இரக்கம் கொண்டு, நீங்கள் சென்றுக் காளியை தரிசிக்கலாம், ஆனால், கோயில் நியமப்படி யாத்திரிகர்கள் அங்கு இரவு தங்குவதற்கு அனுமதியில்லை என்று கூறினார்.

‘அது காளியின் பொறுப்பு. இப்போது அதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியதில்லை‘ என்று கூறினான் ராம்தாஸ்.

இருவரும் விளக்கொளி வந்த திசை நோக்கிச் சென்று, காளியின் விக்கிரகத்தின் முன் நின்றனர். தட்சிணேஸ்வர மகானாகிய புகழ்பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் வழிபட்ட அற்புத உபாசனைத் தெய்வமான காளியைக் கண்டு ராம்தாஸின் மேனியில் ஆனந்தச் சிலிர்ப்பு ஏற்பட்டது. மூர்த்தியின் முன் கூப்பிய கைகளுடன் அவர்கள் நின்று கொண்டிருந்தபோது, கோயிலின் உட்புறத்திலிருந்து அன்பரொருவர் வெளியே வந்தார். சாதுக்கள் இருவரையும் கண்டு அவர்கள் உண்பதற்காக காளிக்கு நிவேதனமான பிரசாதம் சிறிது அளித்தார். இருவரும் அன்று இரவு கோயிலினுள் தங்குவதற்கு அனுமதி வேண்டி ‘அன்னை காளியின் சித்தம் எவ்வாறோ‘ என்று ராம்தாஸ் அவரை வினவினார். அதற்கு அந்த கனிவான பூசாரி தயங்கியவாறு, கோயில் விதிகளின்படி வெளியாட்கள் இரவில்

கோயில் பிராகாரத்தினுள் அனுமதிக்கப்படுவதில்லை, ஆயினும் இப்போது நள்ளிரவாக இருப்பதால் உங்களை எப்படி இருளிலும், குளிரிலும் வெளியே போகச் சொல்வது?' என்றார். ராம்! உனது பக்தர்களை எந்தவித சட்டத்திட்டங்களும் கட்டுப்படுத்தாது. உனது அற்புத நாமத்தை உச்சரிப்பதென்பது அனைத்துக் கட்டுகளில் இருந்தும், அனைத்து பந்தங்களிலிருந்தும், அனைத்து சட்டவிதிகளில் இருந்தும், அனைத்து தடைகளில் இருந்தும் விடுபடுதலாகும். அந்த அன்பு மிகுந்த பூசாரி கங்கைக் கரையில் திறந்திருந்த தர்மசாலைக்குச் சாதுக்களை அழைத்துச் சென்றார். மீண்டும் சற்று உணவு அளித்து அவர்களைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினார். ராமனுடைய கருணை எல்லையற்றது.

சாதுக்கள் தங்கியிருந்த இடத்தில் தூக்கம் என்ற சொல்லுக்கு இடமேயில்லை. ஏனெனில் நதியினின்று சில்லென்று வீசிய காற்றினால் குளிர் மிகக் கடுமையாயிருந்தது. மேலும் எண்ணில் அடங்காதக் கொசுக்களின் கூட்டம் சாதுக்களை அதிதீவிரமாகத் தாக்கியது. 'ஐயோ! இங்கு நிலைமை மிகவும் மோசமாக உள்ளதே' என்று சாதுராம் கதறினார். 'திருப்பதியில் கடுமையான குளிர் மட்டுமே இருந்தது, அதை எப்படியோ பொறுத்துக் கொள்ள முடிந்தது. இங்கே கொசுக்களின் தொல்லையும் சேர்ந்துக் கொண்டது' என்றார் சாதுராம். 'பரவாயில்லை நண்பா, ராமனின் கருணையை என்னவென்றுக் கூறுவது! தூக்கத்தின் தொந்தரவு இல்லாமல் விழிப்புடன் இறைதியானம் செய்வதற்கு, எத்தகைய சாமர்த்தியமான வழியை அவன் வகுத்துள்ளான்!' என்று ராம்தாஸ் விடையளித்தான். 'சரி, சரி' என்று கூறியவாறு சாதுராம் தன் மேலே போர்த்திக் கொண்டிருந்த துணியால் இங்குமங்கும் வேகமாய் விசிறிக்கொண்டே, சிறகுகள் உடைய

அந்த விருந்தாளிகளை விரட்டுவதில் தீவிரமாக ஈடுபட்டார். இரவெல்லாம் சாதுராம் குறை கூறிக் கொண்டும், புலம்பிக் கொண்டும், எரிச்சலுடன் முணுமுணுத்துக் கொண்டும் தொல்லை மிகுந்த இரவை அமைதியின்றிக் கழித்தார். அதே நேரத்தில் இவையனைத்தையும் பொறுத்துக்கொண்டுத் தன் மனதை ராமதியானத்தில் முழுவதும் ஈடுபடுத்துவதற்கு முயன்றான் ராம்தாஸ். சிறிது நேரத்தில், ராம் தன் தியானத்தில் ராம்தாஸை ஆழ்த்தி உடலுணர்வை மறக்கச் செய்தான். இரவின் பெரும்பாலான பகுதி அந்நிலையிலேயே கழிந்தது.

சாதுராம் எழுந்தபோதுக் காலைப்பொழுது விடிந்து கொண்டிருந்தது. அந்த இடத்தைவிட்டு உடனே அகல நினைத்த சாதுராம், ராம்தாஸைப் பின்தொடர்ந்து வரும்படிக் கூறினார். எங்கு போவதென்று அவருக்குத் தெரியவில்லை, ஆனால், கூடிய விரைவில் அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்பது அவரது ஒரே தீர்மானமாக இருந்தது. அவர்கள் அரை பர்லாங்கு தூரம் செல்வதற்குள், எந்த பூசாரி முந்தைய இரவு அவர்களைப் பரிவுடன் உபசாரித்து உணவு அளித்தாரோ, அவரை சந்தித்தனர். ‘இந்த அதிகாலையில் எங்கே செல்கிறீர்கள்? காளியின் நடுப்பகல் பிரசாதத்தை உட்கொள்ளாமல் நீங்கள் போகக்கூடாது. தயவு செய்து கோயிலுக்கு திரும்புங்கள்‘ என்று அன்புடன் அந்த பூசாரி கேட்டுக் கொண்டார். அவ்வழைப்பை ஏற்றுக் கொண்டு இருவரும் கோயிலுக்குத் திரும்பினர். ராமனின் செயல்கள் புரிந்து கொள்ள முடியாதவை.

‘கங்கையில் குளித்துத் துணிகளை துவைத்துவிட்டு வாருங்கள். உரிய நேரத்தில் மதிய உணவிற்கான அழைப்பு வரும்‘ என்று அவர் தெரிவித்தார்.

அவர் கூறியபடி இருவரும் புனித கங்கைக்குச் சென்று பலபடிகள் இறங்கிக் குளித்துவிட்டு துணிகளைத் துவைத்தனர். கோயில் முற்றத்திற்கு வந்து ஈரத்துணிகளை வெயிலில் உலரப் போட்டு அங்கேயே உட்கார்ந்து, அதே வெயிலில் தங்களையும் சூடேற்றிக் கொண்டனர். அப்போது ராம்தாஸின் மனதில் கீழ்க்கண்ட எண்ணங்கள் ஓடின:

'ஓ ராம்! இந்த தகுதியற்ற உன் அடிமையை இந்தக் கோயிலுக்கு அழைத்து வந்துள்ளாய், இதற்கெல்லாம் காரணம், எவர் ஒரு காலத்தில் மேன்மையுடன் வாழ்ந்தாரோ, எவரது உபதேசங்கள் உலகெங்கும் பரவியதோ அந்த பெருமைக்குரிய மகான், ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இருந்த இடமன்றோ இது. எப்படியோ உன் அடிமையை இன்று காலை இங்கிருந்துப் புறப்படுவதைத் தடுத்துவிட்டாய். எப்படியும் மதிய உணவிற்குப் பிறகு இங்கிருந்து விடை பெற்றாக வேண்டும். அதற்குள் அந்த மகான் வாழ்ந்த அறை, தியானம், தவம், கடின ஆன்மிகப் பயிற்சிகள் மேற்கொண்ட இடங்கள் ஆகியவற்றை தரிசிப்பது நல்லதல்லவா?'

இவ்வெண்ணங்கள் அவன் மனதுள் ஓடிய ஐந்து நிமிடத்திற்குள், நீண்ட அங்கி அணிந்து நெற்றியில் சந்தனப் பட்டைகளுடன், உயரமான வாலிபத் துறவி ஒருவர் ராம்தாஸ் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். பரஸ்பர வணக்கத்திற்கு பின், அவர் 'சகோதரா, சில வருடங்களுக்கு முன்பு இங்கே வாழ்ந்த தட்சிணேசுவர மகானாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரைப் பற்றித் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா?' என வினவினார். ராமனின் அறிவுக்கெட்டாத செயல்களைக் கண்டு வியந்து கொண்டிருந்த ராம்தாஸ், 'ஆகா! தனது அடிமையை ராம் அந்த

காரணத்திற்காகத்தான் இங்கே அழைத்து வந்துள்ளான்' என்று விடையளித்தான். 'அப்படியானால், என்னுடன் வாருங்கள். இங்கே அவரது வாழ்க்கையுடன் இணைந்த இடங்கள் அனைத்தையும் காண்பிக்கிறேன்,' என்று அந்த வங்க சாது கூறினார். 'ஓ ராம், நினது அடிமை மீது உனக்குள்ள அன்பெனும் ஊற்றின் ஆழத்தை எந்த அறிவும் இல்லாத இவ்வேழை எவ்வாறு வார்த்தைகளால் வர்ணிப்பான்? அவன் தனது விருப்பத்தைத் தெரிவிப்பதற்கு முன்பே, அது நிறைவேற்றப்படுகிறது.'

சாதுராம் வராமையினால் வங்காளி சாது ராம்தாஸை மட்டும் அழைத்துக் கொண்டு கோயிலின் முற்றத்தைச் சுற்றி உள்ள கட்டிட வரிசைகளில் ஒரு அறைக்குச் சென்றார். அந்த அறை பூட்டப்பட்டிருந்தது. சாவியை வரவழைத்து அறைக் கதவை திறந்து ராம்தாஸை உள்ளே வரச்சொன்னார். ஆ! என்ன ஒரு ஆனந்தம்! ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் உபயோகித்த கட்டிலும், அதன் மீதொரு படுக்கையும், இரு திண்டுகளும் அவரது நினைவாக பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. ராம்தாஸ் பக்தி சிரத்தையுடன் அவற்றை அணுகி, அவை ஒவ்வொன்றின் மீதும் தன் சிரத்தை வைத்து வணங்கினான். இப்போது, அந்த அறையில் தெய்வத்தன்மைக் கொண்ட மயிர்க்கூச்செடுக்கும் வசீகரசக்தியை ராம்தாஸ் உணர ஆரம்பித்தான். ஆனந்த சிலிர்ப்புகள் அலையலையாய் அவனுள் ஊடுருவின. ராம்தாஸ் தரைமீது படுத்துச் சொல்லொணாத மகிழ்ச்சிப் பெருக்குடன் அவ்வறை முழுதும் புரண்டு விவரிக்க இயலாத பேரானந்தத்தில் மூழ்கினான். அம்மகானின் திருவடிகளின் ஸ்பர்சத்தால் ஆசீர்வதிக்கப்பட்டதன்றோ அத்தரை! அரை மணி நேரமாகியும் கரைகாணாத உவகையின் பேரொளி ஒன்று முகத்தில் மிளிர ராம்தாஸ் தரையில் புரண்டு கொண்டிருந்தான்.

## அத்தியாயம் – 17
## தாரக்நாத் கோயில்

அந்த விந்தைக் காட்சியை உற்றுப் பார்த்தவாறு அப்படியே நின்றுவிட்டார் அந்த வங்க சாது. முடிவில், ஒருவாறு தன்னிலையுற்ற அவ்வன்பர் மற்ற இடங்களுக்கும் செல்ல வேண்டியிருந்ததால் அவ்வறையை விட்டு வெளியே போகலாம் என்று கூறினார். ராம்தாஸ் சொர்க்கம் போன்ற அந்த இடத்தை விட்டு அகல விருப்பமில்லாமல் வெளியே வந்தான். அடுத்ததாக அந்த சாது, கனவு உலகில் இருந்த ராம்தாஸை அவ்வறைக்குப் பின்புறமிருந்த தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பஞ்சவடி என்று அழைக்கப்பட்ட ஐந்து மரங்களின் தொடரைச் சுட்டிக் காட்டினார். அதனைச் சுற்றிலும் மண்ணாலும், கல்லாலும் மேடை கட்டப்பட்டிருந்தது. 'இங்கேதான் அவ்வப்போது பரமஹம்சர் அமர்ந்து, தன் சீடர்களுக்கு உபதேசம் அருளினார்' என்று வங்க சாது விவரித்தார்.

அதன் பிறகு ராம்தாஸை அவர் ஓர் சிறிய குடிலுக்கு அழைத்துச் சென்றார். அங்கேதான் பரமஹம்சர் தனது பேரன்புக்குரிய, பூரண வஸ்துவான காளியை வழிபட்டு ஆழ்ந்த தியானத்தில் அல்லது சமாதியில் அமர்வது வழக்கம் என்றார். ராம்தாஸ்! உன் கண்கள் இக்காட்சிகளைக் காண உண்மையாகவே ஆசீர்வதிக்கப்பட்டவை. பேரானந்தத்தில் அவனது கண்களில் கண்ணீர் பெருகியது. இப்போது ராம்தாஸை, ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடரான இளம் துறவி ஒருவரைக்

காண்பதற்காக அழைத்துச் செல்வதாக வங்க சாது கூறினார். ஒப்புக் கொண்ட பிறகு அங்கிருந்து ஒரு மைல் தூரத்திலிருந்த சிறு கோயிலினுள் அழைத்துச் சென்றார், அங்கு, பரமஹம்சர், காளி ஆகிய இருவரது படங்களின் முன்னர் சந்நியாசிகள் இருவர் மும்முரமாக வழிபட்டுக் கொண்டிருந்தனர். ராம்தாஸும் சாதுவும் அவ்விருவரையும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினர். அவர்களை வரவேற்று தங்கள் பக்கத்தில் அமரச் செய்தனர் சந்நியாசிகள். பூஜை முடிந்ததும் வழங்கப்பட்ட பிரசாதத்தை ஏற்றுக் கொண்டு, அவர்கள் அங்கிருந்துக் கிளம்புவதற்கு அனுமதி கோரினர். காளி கோயிலுக்கு மறுபடியும் வந்து சேர்ந்ததும், வங்க சந்நியாசி, சாதுக்கள் இருவரையும் கங்கைக் கரையில் உள்ள நீராவிப்படகு நிலையத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கிருந்து மறுகரையிலுள்ள பேலூர் மடத்தைக் காண்பித்தார். அவர் இருவருக்கும் டிக்கெட்டுகள் வாங்கிக் கொடுத்து நீராவிப்படகில் ஏற்றிவிட்டார். கிளம்பும்முன், அவர்கள் மேற்கொண்டு இரயிலில் பயணம் செய்யும்போது, வழியிலே தரிசிக்கத்தக்க தலமாகிய தாரக்நாத் எனப்படும் தாரகேஷ்வரத்திற்குப் போகலாமென்று வங்க சாது ஆலோசனை கூறினார். அந்த ஆலோசனை ராமிடமிருந்து வந்ததென மனதில் தோன்றியது. ராமனின் பெரும் கருணை, அற்புதமான மறக்கவொணாத இந்த புனித யாத்திரையின் ஒவ்வோர் கட்டத்திலும் வெளிப்பட்டது.

உரிய நேரத்தில், சாதுக்கள் இருவரும் கங்கையின் மறுகரையில் இறங்கினர். இரண்டு பர்லாங்கு தூர நடைக்குப்பின் இந்தியாவின் பல பகுதிகளைச் சேர்ந்த வாலிபர்கள் ஒன்றாக வசித்து வந்த ஒரு சிறு கோயிலை அடைந்தனர்.

அங்கிருந்தவர்களில் ஒருவர், சாதுக்கள் இருவரையும் பரமஹம்சரின் வரைப்படம் ஒன்று நித்திய வழிபாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த கோயிலினுள் அழைத்துச் சென்றார்.

விசாரித்தபோது, அக்கோயில் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் புனித அஸ்தி மீது கட்டப்பட்டதென தெரிய வந்தது. பிறகு சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதாமணி (பரமஹம்சரின் மனைவி) ஆகியோரின் புனித அஸ்தி மீது கட்டப்பட்டிருந்த அழகிய சமாதிகளையும் அவர்கள் கண்டனர். ராம்தாஸ், அன்றிரவு மடத்தில் தங்க விரும்பி, அவ்விருப்பத்தை அங்கிருந்த நண்பர்களிடம் தெரிவித்தான். அங்கு தங்க இடமில்லாமையால், அவர் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. அனைத்தும் நன்மைக்காகவே, ராமனின் திருவுளமே.

பிறகு, அவர்கள் அருகாமையிலுள்ள இரயில் நிலையத்திற்கு சென்று, மேற்கே செல்லும் ஒரு இரயிலில் ஏறி, மறுநாள் காலை தாரகேஸ்வரம் இரயில் நிலையத்தை அடைந்தனர். தாரக்நாத்தின் புகழ்மிகு கோயிலுக்குச் சென்றனர். பனைமரமொன்றின் வேர்களைப் பிளந்து கொண்டு சுயம்புவாகவே தோன்றிய சிவலிங்கம் என்பதால் தாரக்நாத் என்னும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. குளித்து விட்டு தரிசனம் செய்த பிறகு சாதுக்கள் இருவரும் ஊருக்குள் சென்றனர். அங்கே தாராள மனம் படைத்த ஒரு அரசன் தினந்தோறும் 40-50 சாதுக்களுக்கு சிறப்பான விருந்தளிப்பதாகக் கேள்விப்பட்டு அங்கு சென்று காத்திருக்கும் மற்றவர்களுடன் தர்மசாலைக்கு வெளியில் காத்திருந்தனர்.

பதினோரு மணி அளவில் அந்த சத்திரத்து வயோதிக மேலாளர் சாதுக்களை ஒவ்வொருவராக எண்ணி, வேண்டிய

அளவு சாதுக்களை உள்ளே போக அனுமதித்தார். நீண்ட வராண்டாவில் சாதுக்களனைவரும் ஒருவரையொருவர் பார்த்த வண்ணம் இரு வரிசைகளாக அமர்ந்தனர். அவர்கள் முன் இலைகள் போடப்பட்டன. உணவு பரிமாறப்படும்போது நடுவயதுள்ள புதிய சாது ஒருவர் உள்ளே வந்து உணவு கேட்டார். அன்று உணவு அளிக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கை முடிந்துவிட்டபடியால் அவரைச் சேர்த்துக் கொள்ள இயலாதென்று மேலாளர் முதலில் மறுத்தார். அந்தச் சாது இரண்டு நாட்களாக உணவு உட்கொள்ளவில்லையென அறிந்ததும் அவருக்கும் இலை போடப்பட்டது. அவர் ஒரு இடத்தில் அமர்ந்தார். அந்த இடம், ராம்தாஸுக்கு நேரெதிர் வரிசை ஆகும். தலைக்கு இரண்டு வீதம் 16' விட்டமுள்ள நல்ல தடிமனான கோதுமை பூரி, சிறிதளவு 'பாஜி' அல்லது கறி, மற்றும் இனிப்புகள் முதலானவை அடங்கிய மதிய உணவு முதலில் அனைவருக்கும் வழங்கப்பட்டது. பூரிகள், ஆலையில் அரைத்த கலப்பு கோதுமை மாவினால் செய்யப்பட்டவையானதால் ரப்பரைப்போல் வளைக்கக் கூடியனவாக இருந்தது. ராம்தாஸுக்கு வாயினுள் அரை டஜனுக்கும் குறைவாகவே பற்கள் இருந்தன. பற்களனைத்தும் உள்ளவர் கூட பூரிக்களை தொண்டைக்குள் தள்ளுவதற்கு, அவற்றுடன் போராட வேண்டியிருந்தது. எனவே அன்று ராம்தாஸின் நிலைமை வித்தியாசமாக இருந்தது.

கடைசியாக வந்து, ராம்தாஸுக்கு எதிரே அமர்ந்த சாது தனது பங்கை இரண்டே நிமிடங்களில் முடித்துவிட்டார். அவருக்கு மீண்டும் 4 பூரிக்கள் பரிமாறப்பட்டன. அவையும் நொடியில் மறைந்தன. மேலும் நான்கு, அவற்றிக்கும் அதே கதி. சாது மேற்கொண்டு பூரிக்கள் வேண்டுமென்று எதிர்பார்த்துக்

கொண்டிருந்தார். இந்த சமயத்தில் வயதான மேலாளர் சமையல்காரனை, சமையலறையிலுள்ள பூரிக்கள் அனைத்தையும் எடுத்து வரச்சொன்னார். அவரே அச்சாதுவை அணுகி 'மகராஜ்! வேண்டியவற்றை ஏற்றுக் கொள்ளுங்கள்' எனக்கூறி, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு என பூரிக்களைப் பரிமாறிக் கொண்டே இருபது வரை எண்ணினார்.

இருந்தும் அந்த சாது சாப்பிடுவதை நிறுத்தவில்லை. எனவே இன்னும் நான்கு பூரிக்களைப் பரிமாறியதும், அந்த மேலாளர் அத்துடன் நிறுத்திக் கொண்டு, இலையில் உள்ளவற்றை உண்டபின் மேற்கொண்டு கிடைக்குமென்று சாதுவுக்கு உறுதி கூறினார். இச்சமயத்தில் சாதுக்கள் அனைவரின் கவனமும் பெருந்தீனிக்காரரான அந்த சாது மீது திரும்பியது. அனைவரும் அவர் எப்படி உண்கிறார் என்பதை உற்று நோக்க ஆரம்பித்தனர். ஆனால் அச்சாது, தன்மட்டில் மிக அமைதியுடனும், உறுதியுடனும் இருந்தார். பூரிக்கள் ஒவ்வொன்றாய் மாயமாய் மறைந்தன. தன்னைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை அவர் பொருட்படுத்தவேயில்லை. நாலைந்து பூரிக்களுக்கு ஒருமுறையாக பக்கத்திலிருந்த தனது பெரியப் பித்தளைப் பாத்திரத்திலிருந்து தண்ணீர் அருந்தினார். அங்கிருந்த சாதுக்களில் பெரும்பாலோரால் நான்கு பூரிக்களுக்கு மேல் உண்ண முடியவில்லை. இது போன்ற சாதனையில் முந்தும் சில தீரர்களால் கூட ஆறுக்குமேல் உண்ண முடியவில்லை. ஆனால் நமது அற்புத சாதுவோ மொத்தத்தில் முப்பத்து நான்கு பூரிக்களை உண்டுவிட்டார். அது மட்டுமல்ல; காய்கறிகளும், இனிப்புகளும் கூட அதிகமாகப் பரிமாறப்பட்டன. அனைத்தையும் ஒரு செம்பு தண்ணீருடன் அவர் உண்டு விட்டார்.

இந்நிகழ்ச்சி இங்கே கூறப்பட்டது அச்சாதுவை அவமதிப்பதற்காக அல்ல. சாப்பிட வேண்டும் என்று பெரும் தேவையுள்ள ஒரு மனிதனைப் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்வதற்கும், ராமனுடைய அற்புதமான மாயையைக் காண்பதற்கும் ஆகும். தாரகேஸ்வரத்தில் இரண்டு நாட்கள் தங்கிய பின் சாதுராமும் ராம்தாஸும் அவ்விடத்தை விட்டு அகன்று கயாவை அடைந்தனர். அங்கே அவர்கள் 'பல்குனி' என்ற புனித நதியில் குளித்துக் கோயிலில் தரிசனம் செய்து விட்டு, மறுநாள் அங்கிருந்துப் புறப்பட்டு, வட இந்தியாவின் புகழ் மிக்க யாத்திரிகர்களின் தலமான காசியை அடைந்தனர்.

## அத்தியாயம் – 18
## காசி

காசி மாநகரம் பிரமிக்கத்தக்கப் பெரிய கோயில்கள் நிறைந்த ஒரு நகரம் ஆகும். அக்கோயில்களின் கோபுரங்களையும், விமானங்களையும், கலசங்களையும் சற்றே உயரத்திலிருந்து நோக்கும்போது, அவை கங்கைக் கரையின் வனப்புக்கு மெருகு ஊட்டுவதைக் காணலாம். இந்தியாவில், காசியை இந்துஸ்தானத்தின் முக்கிய புனித ஸ்தலங்களுள் ஒன்றென கணித்திருப்பது சரியானதே. ஒவ்வொரு நாளும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் ஆயிரமாயிரம் யாத்திரிகர்கள் இங்கு குவிந்த வண்ணம் உள்ளனர். ராம் ராம்தாஸை இப்புனிதப் பயணம் மேற்கொள்ளச் செய்தது குளிர்காலமானதால் இங்கு குளிர் மிக அதிகமாக இருந்தது.

சாதுராமுக்கும் அவனுக்கும் போதுமான ஆடை இல்லாததாலும், வேறு இடமின்றி நதிக்கரையில் திறந்த வெளியில் படுத்துறங்கியதாலும், குளிர் அவர்களை அதிகமாகவே வாட்டியது. அதிலும் சாதுராம் அதை அதிகம் உணர்ந்தார். நாளுக்கு நாள் சாதுராம் பொறுமையை இழந்து கொண்டிருந்தார். காசியை தரிசித்ததும், அவரது வடநாட்டு யாத்திரையின் முக்கிய நோக்கம் நிறைவேறிவிட்டது எனலாம். இப்போது அவர் தென்னிந்தியாவுக்கு திரும்ப விரும்பினார். ராமனின் திருவுள்ளம் அவ்வாறு போலும்! அகில உலகிலும் அவனது சித்தம் இல்லாமல் எதுவுமே நடப்பதில்லை. அவனது

திருவிளையாடலை யாரே அறியவல்லவர்?

மறுநாள், இரயில் ராம்தாஸையும், சாதுராமையும் ஸ்ரீராம் வாழ்ந்ததும், ஆட்சி புரிந்ததுமான அயோத்திக்குக் கூட்டிச் சென்றது. யாத்திரிகர்கள் அவ்விடத்தை அடைந்த போது, இரவு நேரம் ஆகிவிட்டது. அவர்கள் இரயில் நிலையத்திற்கு வெளியே பயணிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த திறந்தவெளி கொட்டகையில் இரவு ஓய்வெடுத்தனர். குளிர் மிகக் கடுமையாக இருந்தது. இருவரும் முதுகோடு முதுகு ஒட்டியபடி நெருங்கி படுக்கலாமென்று சாதுராம் யோசனை கூறினார். பரஸ்பரம் உடல் சூட்டை பரிமாறிக் கொள்வதற்காக இவ்வுபாயம் கையாளப்பட்டது. உண்மையாகவே இது ஒரு புதிய யுக்திதான்! இவ்வாறு இரவு கழிந்தது.

மறுநாள் அதிகாலையில் இருவரும் நகரத்திற்கும், பின்பு சரயூ நதிக்கும் சென்றனர். குளிர் மிக அதிகமாக இருந்ததால் 'குளிக்க வேண்டாம், கைகால் முகங்களைக் கழுவிக் கொண்டால் போதும்' என்றார் சாதுராம். புனித நதியினின்று திரும்பியதும் அவர்கள் ஸ்ரீராமனுக்கும் அனுமனுக்கும் உரிய பல கோயில்களுக்கு சென்றனர். ஒரு சத்திரத்தில் உணவு பெற்று, அன்று இரவே இருவரும் மும்பை நோக்கிச் செல்லும் ஒரு இரயிலில் ஏறிக்கொண்டனர்.

இப்போது சாதுராம் வட இந்திய புனித யாத்திரையை முடித்துக் கொள்ளத் தீர்மானித்ததால், அவர்கள் பயணம் மும்பை நோக்கித் தொடர்ந்தது. ஓ ராம்! உனது சித்தம் முடிவானது. வட இந்தியாவில் இன்னும் பல புண்ணிய தலங்களை ராம்தாஸ் காண வேண்டி இருந்தும், அவனை நீ மும்பைக்கு அழைத்துச்

செல்லும் காரணத்தை அறிவது இந்த அடிமையின் புத்திக்கு அப்பாற்பட்டது. நீ நிகழ்த்தும் ஒவ்வொரு நிகழ்வும் அவனது நன்மைக்கே என்று ராம்தாஸ் கருதுகிறான்.

சாதுக்கள் இருவரும் தெற்கே நோக்கிச் செல்லும் இரயிலில் பயணம் செய்தனர். ஒன்றன் பின் ஒன்றாகப் பல இரயில் நிலையங்கள் கடந்தன. ஒரு சிறு இரயில் நிலையத்தில் சொம்பில்லாத ஒரு பயணி, இறங்கும்போது உறக்கத்தில் ஆழ்ந்திருந்த சாதுராமனின் சொம்பை எடுத்துச் சென்று விட்டார். அநேகமாக அந்தப் பயணியிடம் சொம்பு ஏதும் இருக்கவில்லை என்றே தோன்றுகிறது. இரயில் அந்த நிலையத்தை கடந்து விட்ட பிறகு கண் விழித்த சாதுராம் சொம்பு காணமல் போனதைக் கண்டார். தனது இழப்பை உணர்ந்து, மிகப் புலம்பி ஆறாத் துயரத்துடன் குழந்தையைப்போல் அழுதார்.

அடுத்து இரயில், ஜான்சி இரயில் நிலையத்தைக் குறித்த நேரத்தில் சென்றடைந்தது. இங்கே டிக்கெட் பரிசோதனை மிகவும் கண்டிப்பானதாக இருந்தது. டிக்கெட் அலுவலர் இவ்விரு சாதுக்களையும் மேலும் பலரையும் இறக்கிவிட்டு, அனைவரையும் நிலையத்தை விட்டு வெளியேறும் பாதையில் உள்ள கதவு அருகே ஒரு பக்கத்தில் வரிசையாக நிற்க வைத்தார். அந்த கதவு, பயணிகள் வெளியே போகவும் உள்ளே நுழையவும் பயன்படுத்தப்பட்டது.

மொத்தமாக சுமார் பத்து சாதுக்கள் இருந்தனர். இப்போது நிலையத்திலிருந்து வெளியே போய்க் கொண்டிருந்த பயணிகளிடமிருந்து டிக்கெட்டுகளை சேகரித்துக் கொண்டிருந்தார் அந்த அலுவலர். அவருடைய பின்புறத்தில்

கைக்கு எட்டும் தூரத்தில் சாதுக்கள் நிற்க வைக்கப்பட்டிருந்தனர்.

அவ்வரிசையில் முதலாவதாக நின்றவர் ஜடாதாரியான ஒரு இளம் துறவி. டிக்கெட் சேகரிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த அலுவலர், இடைஇடையே தனதருகே நின்ற அச்சாதுவின் ஜடையைப் பிடித்து இரக்கமின்றிப் பலமாக உலுக்கிக் கொண்டிருந்தார். பரிசோதகர், பயணிகள் கூட்டம் குறைந்து இடைவெளி கிடைக்கும்போதெல்லாம் அந்த சாதுவின் தலையைப் பிடித்து உலுக்குவதும் அல்லது கையைக் கொண்டு குத்துவதுமாக இருந்தார். இது நிகழும் போதெல்லாம், அந்த சாதுவிற்கு அடுத்தப்படியாக நின்று கொண்டிருந்த ராம்தாஸ் அந்த சாதுவின் முகத்தை நோக்கிய போது, அந்த முகத்தில் மகிழ்ச்சியுடன் கூடியப் புன்னகை இழையோடியதைக் கண்டார்.

## அத்தியாயம் – 19
## அன்பு வெறுப்பை வெல்லும்

தனக்களிக்கப்பட்ட உபசரிப்பால் ஜடாதரி சாது அகமகிழ்வுடனும், அமைதியுடனும், திருப்தியுடனும் காணப்பட்டார். அவ்வின்பம் எப்படி இருக்கிறதென்று அனுபவித்துப் பார்க்க விரும்பிய ராம்தாஸ், அந்த சாதுவிடம் பரஸ்பரம் இடமாற்றம் செய்து கொள்ளலாமென வேண்டுகோள் விடுத்தான். ஆனால் அச்சாது, மற்றவர் பார்த்து ஏங்கச் செய்யும், தனது இடத்தை விட்டுக் கொடுக்க இணங்கவில்லை. தனக்கு இசைந்து கொடுக்கும் அந்த சாதுவிற்கு அவ்வலுவலர் அவ்வப்போது உபசரிப்பைத் தொடர்ந்து அளித்துக் கொண்டிருந்தார். இது அரைமணி நேரம் தொடர்ந்தது. டிக்கெட் சேகரிக்கும் பணியும் முடிவுற்றது. இப்பொழுது அந்த அலுவலருக்கு வேறு வேலை எதுவும் இல்லாததால் சாதுக்கள் பக்கம் திரும்பி நின்று, மற்ற சாதுக்கள் மீதும் தனது முரட்டுக் கை வரிசையைக் காண்பிக்கக் கருதி, அவர்களை நோக்கி நடந்தார். தான் அவ்வரிசையில் இரண்டாவதாக நின்று கொண்டிருந்ததால் தனது முறை இறுதியாக வந்து விட்டதென்று ராம்தாஸ் மகிழ்ச்சி அடைந்தான். அலுவலர் ராம்தாஸிடம் வந்து அவர் கையை இறுகப் பற்றியவாறு ராம்தாஸின் முகத்தைப் பார்த்தார். ஒளி நிறைந்த ஆனந்தப் புன்னகையோடு அதை வரவேற்பது போன்று இருந்த அவன் முகபாவத்தைக் கண்டு, உடனே தன் பிடியிலிருந்து ராம்தாஸின் கையை விட்டுவிட்டு சில அடிகள் பின் வாங்கி, ஏதோ தனக்குள் ஆலோசித்துக்

கொண்டிருப்பது தெரிந்தது. இது நிச்சயம் ராமனின் செயல்தான். அடுத்த கணம், அவர் சாதுக்கள் அனைவரையும் இரயில் நிலையத்திலிருந்து வெளியேறச் சொன்னார். அவ்வாறே எல்லா சாதுக்களும் ஒவ்வொருவராக நிலையத்தை விட்டு வெளியேறினர்.

'ஓ ராம்! வெல்ல முடியாத நின் கரம் காக்கும் போது, உன் அடிமைக்கு என்ன பயம் இருக்க முடியும் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுவிட்டது. எதிராளி ஒருவன் ஆவேசத்துடன் நெருங்கும்போது, அவனைப் பயமோ, வெறுப்போ இன்றி புன்னகையுடன் எதிர் கொண்டால், அன்பு வெறுப்பை நிச்சயம் வெல்லும். உலகத்தின் தீமை அனைத்திற்கும் அன்பே மேலான அருமருந்து. இச்சம்பவம், கோபமூட்டுதல், அவமதிப்பு ஆகியவற்றைச் சந்திக்கும்போது சாதுக்கள் தங்கள் சுயக்கட்டுப்பாட்டை இழக்கின்றார்களாவென்றுச் சோதிக்கவே, ராம் நிகழ்த்தியிருக்கக் கூடும். ராம் செய்வதனைத்தும் நன்மைக்கே.

இப்போது நேரம் நள்ளிரவு கடந்து சுமார் மணி இரண்டு இருக்கலாம். எங்கும் கும்மிருட்டாக இருந்ததால் சாதுக்கள் இரவு ஓய்வெடுப்பதற்கு இரயில் நிலையத்திற்கு அருகிலேயே இடம் தேடினர். ஆனால் நிலைமை இதற்கு அனுகூலமாக இல்லை. பயணிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட மூலை முடுக்குகளெல்லாம் நிரம்பி வழிந்தன. பயணிகள் இங்குமங்குமாய் பரவி வினோதமான நிலையில் தூங்கிக் கொண்டிருந்தனர். அனைத்து இடங்களும் நிறைந்துவிட்டன. ஒருவழியாக தன் வழிகாட்டி ஓர் தூணருகே ஒண்டிக் கொள்வதற்கு சிறிது இடத்தைக் கண்டபின் மெதுவாக இருவரும் அங்கு நகர்ந்து சென்றனர். இவ்விருசாதுக்களும் ஒருவரோடொருவர் நெருங்கி அமர்ந்து

ஒரே உருவமாய் தோற்றமளித்தனர். ராமத்தியானம் தொடர்ந்தது. தான் உட்கார்ந்திருந்த இடத்தில் ராம்தாஸ் தன் நினைவிழந்தவனாய் உறங்கிவிட்டான். காதைத் துளைக்கின்றப் பலத்த குரலில் இரயில்வே போலீஸ், பயணிகள் அனைவரையும் எழுந்து நிலையத்தை விட்டு வெளியேறுமாறுக் கட்டளையிட்டது. அந்தக்குரல் கேட்டு ராம்தாஸ் விழிப்புற்றான்.

ராம்தாஸ் உடனே கண்களைத் திறந்தான். தன் உடல் ஒரு வேறுபட்ட நிலையில் இருப்பதைக் கண்டான். குளிரால் கால்கள் இரண்டும் மரத்துப்போய் முட்டியோடு முடங்கி ஒட்டிப்போய் இருந்தது. அதைப் பார்த்தபொழுது யானைக்கால் வியாதியால் தாக்குண்டதுபோல் முட்டியிலிருந்து பாதம்வரை வீங்கி இருந்தது. எனினும் கால்களை இரண்டு கைகளாலும் ஐந்து நிமிடம் அழுத்தி வேகமாகத் தேய்த்துக் கொண்டபின் மரத்து போயிருந்தக் கால்களை நீட்ட முடிந்தது. மெல்ல எழுந்து சிறிது தூரம் நொண்டிக்கொண்டே நடந்தான். கொஞ்சதூரம் நடந்தபின், விறைப்புத் தன்மை நீங்கியது. அப்போது நேரம் காலை 8 மணி. பிறகு இரயில் நிலையத்திலிருந்து சுமார் நாலு மைல் தொலைவிலுள்ள ஜான்சி நகரத்திற்கு போய்ச் சேர்ந்தனர்.

## அத்தியாயம் - 20

## ஜான்சி

வழியை விசாரித்துக் கொண்டே அவர்கள் நேராக ஒரு தர்மசாலைக்குச் சென்று, அங்கே சிறிது நேரம் ஓய்வெடுத்தனர். சாதுராம் ஆலோசனையின்படி இருவரும் கடைத்தெருவுக்குச் சென்றனர். தர்ம சிந்தனை உடைய ஒரு வியாபாரியிடமிருந்து மாவு முதலியவை வாங்கி, சாதுராம், ரொட்டிகளையும் பருப்புக்கறியையும் தயார் செய்தார். உணவை உண்டபின் அன்று மாலை இருவரும் தர்மசாலையிலேயே தங்கினர். சாதுராம் தூண்டுதலின்படி, இருட்டுவதற்கு முன் அவர்கள் இரயில் நிலையத்தை அடைந்தனர். முந்திய இரவு சந்தித்த அதே டிக்கெட் அலுவலர் வாசலருகே காணப்பட்டார். இரவு இரயிலில் மும்பைக்குச் செல்ல தங்களை அனுமதிக்குமாறு ராம்தாஸ் அவரை அண்டி, வேண்டினார். முதலில் அவர் சம்மதித்தாராயினும், இரவு இரண்டு மணிக்கு இரயில் வந்ததும், அவர் அவர்களை பிளாட்பாரத்தில் நுழைவதற்கு அனுமதிக்க மறுத்துவிட்டார். எல்லாம் ராமனின் இச்சை. ஆதலின் இன்னும் ஓரிரவு அவர்கள் இரயில் நிலையத்திலேயே கழிக்க நேர்ந்தது. அதுவும் அந்தக் குளிரில். இரண்டாவது முறையாக முழங்கால்கள் வீங்குவதும், மரத்துப் போவதும் நேர்ந்தது.

மறுநாள் காலை மீண்டும் அவர்கள் ஊருக்குள் சென்றனர். இம்முறை சாதுராம் மனச் சோர்வு அடைந்திருந்தார். இச்சமயம்

தர்மசாலையில் தெலுங்கு சாதுக்கள் இருவரை சந்தித்தனர். அவர்களுடன் சற்று பேசியபின், சாதுராம் ராம்தாஸை விட்டுப்பிரிந்து, அவர்களுடன் சேர்ந்து கொள்ள நிச்சயித்தார். இதுவும் ராமனின் செயலே. அவன் செயல்களை என்றும் எவரும் அறியவொணாதன. நம்மை முற்றிலும் அவனிடம் ஒப்புவித்துவிட்டால் பிறகு நமக்கு கவலை என்பது இல்லை; பயம் என்பது இல்லை; துயரம் என்பது இல்லை; மற்றும் இவைகளில் இருந்து விடுதலை என்பதற்கு முழு உத்தரவாதமும் உண்டு. அரை மணி நேரத்திற்குப் பிறகு ராம்தாஸ் தனியாக விடப்பட்டான். இறைவனுடன் ஏகாந்தத்தில் அமர்ந்து அவனது நாமத்தையே இடைவிடாது உச்சரித்துக் கொண்டிருந்தான். இதுவரை அவனது வழிகாட்டியாகவும் வளர்ப்புத்தாயாகவும் இருந்த சாதுராமும், புதிய சாதுக்களும் தர்மசாலையை விட்டுப் புறப்பட்டனர். சாதுராமனின் துணை துண்டிக்கப்பட்டபோதிலும் ராம்தாஸ் எந்த கவலையும் இன்றி ராமத் தியானத்தில் ஈடுபட்டான். ராமனின் விருப்பத்திற்கு தன்னை முற்றிலும் ஒப்புவித்துவிட்டதால் ராம்தாஸ் நிகழ்காலக் கவலையும், எதிர்காலத்தைப் பற்றியச் சிந்தனையுமின்றி இருந்தான். ராமத்தியானத்தில் காலம் இவ்வாறு சென்று கொண்டிருக்க, இரு நண்பர்கள் அவனை அணுகி அவன் கையில் இரண்டு ஒரு அணா காசுகளை போட்டு, கடைத்தெருவிலிருந்து ஏதாவது தின்பண்டங்கள் உண்டுப் பசியைத் தீர்த்துக் கொள்ள ஆலோசனை கூறினர். அவ்வாறே அவன் கடைத்தெருவை நோக்கி நடந்தான். இனிப்புக் கடையில் சில உணவு வகைகளை வாங்கிக் கொண்டிருந்த ராம்தாஸை பின்னால் இருந்து யாரோ அவன் முழங்கையைப் பிடித்து இழுப்பதை உணர்ந்தான். தின்பண்டங்களை வாங்கியதும் திரும்பிப் பார்த்தபோது கையை

இழுத்த அந்த நண்பர், அவனை நோக்கி ‘மகராஜ், ஒரு சேட் தங்களை அழைத்து வரச் சொன்னார்‘ என்று கூறியதைக் கேட்டான்.

உடனே, ராம்தாஸ் அந்த நண்பரைப் பின் தொடர்ந்தான். கோதுமை மூட்டைகள் அடுக்கியிருந்த ஒரு கடைக்கு அவர் அழைத்துச் சென்றார். ராம்தாஸ் உள்ளே நுழையும்போது உள்ளிருந்து வந்த அன்பரொருவர், எளியவனான ராம்தாஸ் கால்களில் நெடுஞ்சாணாக விழுந்து கூப்பிய கைகளுடன் எழுந்து அன்று தனது வீட்டில் பிட்சை ஏற்குமாறு கேட்டுக் கொண்டார். இவர்தான் ராம்தாஸை அழைத்து வரச்சொன்ன வியாபாரி ஆவார். சாய்வதற்கு திண்டுகள் போடப்பட்ட மெத்தை ஒன்றினைக் காட்டி அவனை உட்காரச் சொன்னார். ஆனால் ராமனின் எளிய அடிமையான ராம்தாஸ் தரையில் உட்காருவதே நலமெனக் கருதினான். இங்கு, அவன் அமர்வதற்கு கோணிப்பை ஒன்று அளிக்கப்பட்டு அதன் மேல் ராம்தாஸ் அமர்ந்தான். பகல் உணவிற்கு பிறகு, அன்புள்ளம் கொண்ட அவ்வியாபாரி ராம்தாஸின் பக்கத்தில் அமர்ந்து, அவனது யாத்திரையின் விவரங்களை விசாரித்தார். தனது ஓரே வழிகாட்டியாம் ராமனின் இச்சைப்படி ராம்தாஸ் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தான். மேலும் அவன் அவ்வியாபாரியிடம், ராமனுக்கு பக்தர்கள் மேல் உள்ள எல்லையற்ற அன்பு, பரிவு பற்றியும், அவனை நம்பினோர்க்கு எந்நிலையிலும் துன்பம் இல்லை என்றும், எந்த நிலையிலும் ஆனந்தமே என்றும் கூறினான்.

நாவில் ராமநாமம் உச்சரித்துக் கொண்டிருப்பது என்பது ஆனந்தம், தூய பேரானந்தம் தான். இவ்வார்த்தைகள் அந்த வியாபாரியின் உள்ளத்தை ஆழமாக தொட்டுவிட்டன என்பது

வெளிப்பட்டது. தன்மட்டில் அவ்வியாபாரி ஒரு சிறந்த ராம பக்தராக இருந்தார். எந்நேரமும் அவர் நாக்கு 'சீதாராம், சீதாராம்' என்ற நாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தது. சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்த பின்னர், அவர் ராம்தாஸை சில நாட்கள் தன்னுடன் தங்கச் சொல்லி வேண்டினார். ராம்தாஸின் உடல் கவனிப்பற்று, நிலைகுலைந்திருப்பதால் அதை பராமரிக்க வேண்டுமென்ற ஒரே காரணத்தால் ராம் தன்னிடம் அனுப்பியிருப்பதாக அவர் தெரிவித்தார். அச்சமயம் ராம்தாஸ் அணிந்திருந்த ஆடையும் கிழிந்து கந்தலாயிருந்தது என்பதை இங்கு குறிப்பிடவேண்டும்.

மஹாதேவ் பிராசாத் - இது தான் அந்த வியாபாரியின் பெயர். இந்த வியாபாரியின் கவனிப்பில்தான் ராம், ராம்தாஸை வைத்திருந்தான். புதிய காவி உடைகளைத் தந்து அவனை எல்லாவிதத்திலும் நன்கு கவனித்துக் கொண்டார் அந்த அன்பான உபசரிப்பாளர். அவர் ராம்தாஸ்மீது அதிபிரியமுடையவராய் இருந்தார். எவ்வளவோ தடுத்தும் இரவில் அவன் தூங்கும்போது அவன் பக்கத்தில் அமர்ந்து அவன் கால்களை பிடித்து விட்டபடி இருப்பார். எளிமையும் பணிவும் கொண்ட ராம்தாஸ்மீது அவர் பொழிந்த அன்பு எல்லையற்றது. ஓ ராம்! இவையனைத்தையும் அவ்வன்பர் மூலம் நீயே செய்கின்றாய். உனது தூய அன்பையும், பரிவையும் என்னென்பது! அழு! ராம்தாஸ் அழு! அமைதியாக, வருத்தத்தால் அல்ல. ஆனந்தத்தில் கண்ணீரைப் பெருக்கு! ஏனென்றால் ராமனின் அருள் பார்வை உன்மேல் உள்ளது.

மகாதேவ் ராம்தாஸை ஒரு மாத காலம் தன்னுடன் தங்க வைத்துக் கொண்டார். அவர் ராம்தாஸை விட்டுப் பிரியாமல் எல்லா நேரமும் கூடவே இருந்தார். அவரது வேண்டுதலின்படி

ராம்தாஸ், ராமனின் அருளால் தான் பெற்ற அறிவைக் கொண்டு பகவத் கீதையிலிருந்து சில ஸ்லோகங்களின் பொருளை அவருக்கு விவரித்தான். பதிலுக்கு மகாதேவும் ராம்தாஸுக்கு துளசிதாசரின் அழியாப் புகழ் பெற்ற ஹிந்தி இராமாயணத்தைப் படித்து பொருள் விளக்குவார். அவர் வீட்டில் உள்ள அனைவருமே ராம்தாஸிடம் அன்பும் பரிவும் கொண்டிருந்தனர். உடல் மெலிந்திருந்த ராம்தாஸை, குளிர் தாக்காதிருக்க மகாதேவ் அவனுக்கு இதமான கம்பளிச்சட்டை தைத்துக் கொடுத்தார். ஓ ராம்! எவ்வளவு அன்பு மிக்கவன் நீ, இந்த அடிமைக்கு நீ காண்பிக்கும் அன்பும், பரிவும் ராம்தாஸினது இந்த உடலை ஈன்றெடுத்த அன்னையையும் வெட்கம் அடையச் செய்யும், அளவற்ற உனது அன்பை என்னென்பது!

ராம்தாஸ் ஜான்சியில் தங்கியிருந்த போது, மகாதேவ் பிராசாத் அவனை முகம்மதிய பெரியவர்கள் இருவரை காணக் கூட்டிச் சென்றார். முதலாமவர், மிர்சாஜி என்னும் பெயர் கொண்ட வயதான சாது, அறுபது வயதுக்கு மேல் இருக்கக் கூடும், அவர் உடல் மெலிந்தும், கூன்போட்டும் இருந்தது. அவர் பேசுவதில்லை எனினும், அவர் கண்களில் பிரகாசமான ஒளி மிளிர்ந்தது. சுருங்கக் கூறின், அவர் பந்தங்களற்ற, களங்கமில்லாத எளிய சின்னஞ்சிறு குழந்தையேதான். மகாதேவ் பிராசாத் தன்னுடன் கொண்டு வந்திருந்த சில தின்பண்டங்களை கொஞ்சம், கொஞ்சமாக அவர் வாயினில் ஊட்டினார். அத்துறவியின் வாயினுள் ஒரு பல் கூட இல்லை. மிருதுவாய் இருந்த அந்தத் தின்பண்டங்களை அவர் எந்தவித பற்றுமின்றி சப்பிச் சப்பி விழுங்கினார். எவரையும் அவர் அடையாளம் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. அவர் கண்பார்வை தெளிவாக

இருந்த போதிலும், அவை இவ்வுலகில் இல்லாமல் வெற்றுப்பார்வையாக இருந்தது. அவரை ராம்தாஸ் இருமுறை தரிசித்தான். இரண்டாம் முறை, அவர் குடிலுக்கு வெளியே தரையிலமர்ந்து தன்னைச் சுற்றி அங்குமிங்குமாய் சிதறிக்கிடந்த சில காகிதத் துண்டுகளை அமைதியாய் துண்டு துண்டாகக் கிழித்துப் போட்ட வண்ணம் காணப்பட்டார்.

## அத்தியாயம் - 21

## தியானம் - ஒரே வழி

மற்றொரு சாது பிர்ஜி என்னும் பெயர் கொண்டவர், மிர்சாஜியை விட இளையவர் ஆவார். இவர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிப்பார். உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் தனக்கு இறை ஆனந்தம் கிடைக்குமா என்று மகாதேவ் பிர்ஜியைக் கேட்டார். இவ்வினாவினால், பிர்ஜி சற்று உணர்ச்சி வயப்பட்டார். அவருடைய குரல் உறுதியுடனும் தீர்மானத்துடனும் ஒலித்தது, 'நன்று சகோதரா! பல முறை கூறியபடி ஒரே வழிதான் உண்டு, அதாவது உலகின் துயர்மிகு வாழ்க்கையை விட்டொழி! ஏதேனும் ஒரு தனிமையான இடத்திற்குச் சென்று இறைவனை தியானி. நீ தேடும் ஆனந்தத்தை அவர் ஒருவரே தரவல்லவர், இது ஒன்றே வழி, வேறு எதுவும் இல்லை' என்று அவர் கூறினார்.

ஓ ராம்! நினது அடிமைக்கு உன்னிடம் உள்ள நம்பிக்கையை உறுதிப்படுத்தவே அவனை இத்தகைய சாதுக்களிடம் தொடர்பு கொள்ள அழைத்து வந்திருக்கிறாய். முதல் சாது, உன்னை அடைந்த நிலையை விளக்கினார். இரண்டாமவர் உன்னை எப்படி அடைவது என்று விளக்கினார். அன்புமிக்க மகாதேவ் அவனை பஜனைக் கூடங்கள் பலவற்றிற்கும் இரவு நேரங்களில் அழைத்துச் செல்வார். ராம்தாஸ் அவ்விடம் விட்டு புறப்படவேண்டுமென ராம் கருதுகிறான் போலுள்ளதென்று ஒரு நாள் மகாதேவிடம் தெரிவித்தான். ஆனால் அவர் ராம்தாஸை

விட்டுப் பிரிய விரும்பவில்லை. ராம்தாஸ் திடீரெனக் கிளம்புவதைத் தவிர்க்க அவரை நகரிலிருந்து ஆறு மைல் தொலைவிலிருந்த ஊர்ச்சா என்னும் கிராமத்திற்கு அழைத்துச் சென்றார். அந்த இடம் அங்குள்ள ஸ்ரீராம் கோயிலினால் புகழடைந்திருந்தது. அங்கே அவரை விட்டு விட்டு, மேலும் கோயிலருகே வசித்து வந்த ஒரு அன்னையிடம் அவரது உணவிற்கு ஏற்பாடு செய்த பிறகு, மகாதேவ் ஜான்சிக்கு திரும்பினார். விடைபெறும் போது அவர் கூறிய வார்த்தைகள்:

'இங்கே தாங்கள் விரும்பும் வரையோ அல்லது ராம் விரும்பும் வரையோ தங்கியிருக்கலாம். ராம் தங்களை இந்த இடத்தை விட்டு புறப்பட வேண்டுமென தூண்டும்போது அன்பு கூர்ந்து தாங்கள் ஜான்சிக்கு என்னிடம் திரும்பி வரவேண்டும்' என்று கூறிச் சென்றார்.

தெய்வீக வழிகாட்டியும், காப்பாளனும், தாயுமாகிய ராமனின் தியானத்தில் தனித்து ஈடுபட்டவாறு அங்குள்ள அழகிய நதிக்கரையில் ராம்தாஸ் சுற்றித் திரிந்தான். அவ்வாறு சுமார் இரண்டு மைல்கள் நடந்து சென்றதும் பல சமாதி கட்டிடங்கள் இருந்தன. அவற்றுள் சில இடிந்தும் மிகப் பழமையானதாகவும் காணப்பட்டன. அவற்றின் மேல், வானத்தை நோக்கி உயர்ந்த பல கூம்பு வடிவ கோபுரங்கள் எழுப்பப்பட்டிருந்தன. விசாரித்தபோது, அவை 'சதி' எனப்படும், அதாவது கணவன் இறந்த பின், உடன் கட்டை ஏறிய பெண்களின் நினைவுச் சின்னங்கள் என புரிந்து கொண்டார். அவ்விடம் இப்போது சுடுகாடாய் பயன்படுத்தப்படுகிறது. அங்கே மரங்களடர்ந்து அமைதி நிறைந்திருந்தது. அச்சமாதிகளில் ஒன்றினைத் தன் தவத்திற்கு இருப்பிடமாக்கி கொள்வதென

ராமனின் தூண்டுதலால் ராம்தாஸ் நிச்சயித்தான். எட்டு நாட்கள் அவன் அங்கே தங்கி இருந்தான். நடுப்பகல் மட்டும் ஒரு மணி நேரம், ராம்தாஸ் கோயிலுக்குச் சென்று அந்த அன்னையிடமிருந்து தனக்கென்று, குறிப்பிடப்பட்ட அளவு உப்பில்லா ரொட்டிகளையும், வேக வைத்த உருளைக்கிழங்கையும் பெற்றுத் திரும்புவான்.

இரவு முழுவதும் அந்த சமாதியில் ராமதியானத்தில் அமர்வான். இரவு நேரம் பேரானந்தத்தில் கழிந்தன. அவ்விடத்து தான் சுவாசிக்கும் காற்றில் ராமனின் சாந்நித்தியத்தை உணர்ந்தான். பகல் நேரங்களில் உள்ளம் கவரும் நாமமான ‘ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம், ஜெய் ஜெய் ராம்‘ என்று உரக்க உச்சரிக்கும்பொழுது சிறியனவும், பெரியனவுமான பறவைகளும், அணில்களும் மதில்சுவர் மேல் வந்தமர்ந்து ஆவலுடன், மெய்மறந்து ‘ஓம்‘ எனும் பிரணவ ஒலியைக் கூர்ந்துக் கேட்பது வழக்கம். அவ்வாறே மாலைப் பொழுதிலும், அச்சமாதியினருகே மேய்ந்து கொண்டு வரும் ஆடு மாடுகளும் கூட மந்திர ஜாலத்திற்குக் கட்டுண்டதுபோல் ‘ஓம்‘ என்ற ஒலியில் கட்டுண்டுத் தூக்கிய தலையுடனும், நிமிர்ந்த காதுகளுடனும் அசையாமல் அங்கேயே நின்று நாம ஒலியின் இனிமையைப் பருகும். இதிலிருந்து, ’ஓ ராம்! அனைத்து உயிர்களின் இதயங்களிலும் நீயே உறைகின்றாய்’ என்பது எந்தவித சந்தேகத்திற்கும் இடமின்றி நிரூபணமாகின்றது. ராமநாம ஒலியால் வானத்தில் பறக்கும் பறவைகளிலும், சமவெளியில் வாழும் விலங்குகளிலும் உறங்கிக் கிடக்கின்ற ஆன்மா, தன் புகழ்மிக்க நாமத்தை உச்சரிப்பதால் அந்தந்த ஜீவன்களில் விழிப்புணர்வு ஏற்படுகிறது.

## அத்தியாயம் - 22

## ராம் ஏழைப்பங்காளன்

கிராமத்திற்குள் செல்லும்போதெல்லாம், அந்த கிராமவாசிகள் ராம்தாஸ் தங்கி இருக்கும் இடம் அடர்ந்தக் காட்டுப் பகுதி என்றும், மேலும் அங்கு புலி போன்ற கொடிய மிருகங்கள் திரிந்து வருவதால் வசிக்கத் தகுந்த இடமில்லை என்றும் கூறி அவனை அங்கிருந்து வெளியேறும்படிக் கேட்டுக்கொண்டனர். ஆயினும் சர்வ வல்லமை படைத்த ராம் காப்பதற்கு இருக்கும்பொழுது பயமெதற்கு? யாரைக் கண்டுப் பயப்படுவது? எங்கும், அனைத்துப் பொருட்களிலும், அனைத்து உயிர்களிலும் ஊடுருவி நிறைந்துள்ளான் ராம்! அங்கே எட்டு நாட்கள் இருந்த பின்னர், அங்கிருந்து புறப்பட ராமனிடமிருந்து உத்தரவு வந்தது.

இச்சமயத்தில் அவ்விடம் நிகழ்ந்த சிறு சம்பவம் ஒன்றினை குறிப்பிட்டே ஆக வேண்டும். ஒரு நாள், அக்கிராமத்தின் சிறு கடைவீதி வழியே கையில் குவளையுடன் சென்று கொண்டிருக்கும்போது ராம்தாஸுக்குத் தாகமெடுத்தது, அப்போது சாலையின் ஒரு பக்கத்தில் அமைந்திருந்த தாழ்ந்த சிறுகுடிசைகள் சிலவற்றை கண்டான், அவற்றில் ஒன்றினை நோக்கிச் சென்றபோது வயது முதிர்ந்த மாது ஒருவர் வாசலில் நிற்கக் கண்டு, அவரிடம் தன் குவளையில் சிறிது தண்ணீர் தருமாறு வேண்டினான். அந்த மூதாட்டி கொடுக்க மறுப்பது போல் தலையை அசைத்து, ‘மகராஜ்! என் கைப்பட்ட

தண்ணீரைத் தாங்கள் எடுத்துக் கொள்ளலாகாது!' என்றாள்.

'கொடுக்க மறுப்பதற்கு என்ன காரணம் என்று ராம்தாஸ் தெரிந்து கொள்ளலாமா?' என வினவினான். 'ஏனெனில், நான் மிகத் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் நான் நாவித சாதி பெண்' என்றுரைத்தாள் அந்தத் தாய். சற்றும் வியப்புறாது, 'அதனாலென்ன? எப்படி இருந்தாலும் தாங்கள் ராம்தாஸின் அன்னை. தயவு செய்து உங்கள் மகனின் தாகத்தைத் தீர்க்கவும்' என்று வேண்டினான் ராம்தாஸ்.

இந்த விடையை கேட்டுப் பெருமகிழ்ச்சி அடைந்த அந்த அன்னை உள்ளே சென்று அவன் அமருவதற்கு ஆசனமொன்றையும், மேலும் பாத்திரத்தில் தண்ணீரும் கொண்டு வந்து ராம்தாஸின் குவளையில் சிறிது ஊற்றினார். ராம்தாஸ், அம்மாது அன்புடன் அளித்த ஆசனத்தில் அமர்ந்து தண்ணீரைப் பருகி தன் தாகத்தைத் தீர்த்துக் கொண்டான். இப்போது அந்த வயது முதிர்ந்த அன்னை, தான் மிகவும் பரிதாபகரமான நிலையில் இருப்பதாகக் கூறினார். உலகில் தனிமையில் விடப்பட்டு, எல்லா நேரமும் மிகுந்த துக்கத்திலும், வேதனையிலும், கவலையிலும், பயத்திலும் தன் வாழ்நாட்களைக் கழிப்பதாகக் கூறினார். ராம்தாஸ் அவருக்கு, 'தாயே! அனைவரையும் காக்க ராம் ஒருவன் இருக்கும் பொழுது, பயப்படுவதற்கோ, கவலைப்படுவதற்கோ அல்லது நிற்கதியாய் இருக்கிறோம் என்ற உணர்வுக்கோ இடமே இல்லை. எப்போதும் நமதருகே ராம் இருக்கின்றான்' என்று உறுதி அளித்தான்.

'ஆனால் இந்த எளிய, பலவீனமான மனம் படைத்த என்னைப் போன்ற பெண் இறைவன் மேல் எந்த விதமான

நம்பிக்கையும் கொள்ளவில்லை, ஏனென்றால் நான் பாவம் செய்தவள்' என்று கூறியவாறு அந்த அன்னை கண்ணீர் விட்டு அழுதார்.

'அன்பான அன்னையே! ராம் அருளால் நம்பிக்கை உண்டாகும், மனம் தளர வேண்டாம், ராம் என்றுமே ஏழை எளியவர்களுக்கு நண்பன்' என்று ராம்தாஸ் கூறினான்.

'அப்படியானால், எனக்கு ஒரு வழி காட்டுங்கள்' என்று கேட்டார் அந்த மூதாட்டி.

'பகலில் எப்போதும், மற்றும் இரவில் விழித்திருக்கும் போதும் 'ராம்' என்ற ஒரு நாமத்தையே இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டிருங்கள். இந்த மேன்மை மிக்க நாமத்தைக் கூறிக்கொண்டிருக்கும்வரை நிச்சயமாக நீங்கள் தனிமையையோ, துயரத்தையோ உணர மாட்டீர்கள். இந்த அற்புத நாம ஒலி எங்கு எழுப்பப்படுகிறதோ அல்லது தியானிக்கப்படுகிறதோ அங்கு எந்த விதமான துக்கமோ, கவலையோ, ஏக்கமோ, ஏன், மரணமே கூட இல்லை என்று கூறியவாறே, ராம்தாஸ் செல்வதற்கு ஆயத்தமானபோது, அவ்வன்னை அவனை மறுநாளும் வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவர் விருப்பப்படியே மறுநாளும் அதே நேரத்திற்கு ராம்தாஸ் அக்குடிலுக்குச் சென்றான். 'தாயே! எப்படி இருக்கிறீர்கள்?' என்று கேட்டான்.

அவ்வன்னை முகத்தில் உற்சாகப் புன்னகை தவழ்ந்தது. ராம்தாஸின் அறிவுரைப்படி செய்ததால் பயத்தினின்றும், கவலையினின்றும் தான் பெரிதும் விடுபட்டுள்ளதாகக் கூறினார். இனிப்புக் கடையிலிருந்து வாங்கி வைத்திருந்த சில லட்டுகளை

ராம்தாஸுக்கு அளித்தார். அதற்கு அவன் ‘அன்னையே! ராம்தாஸ் விரும்புவது இதுவன்று; தங்கள் கைகளாலேயே செய்தது ஏதாகிலும் இருந்தால் நன்று,‘ என்று சொன்னான். உடனே அவர் உள்ளே சென்று தன் கையாலேயே செய்த ரொட்டித்துண்டு ஒன்றை கொண்டு வந்து கொடுத்தார். ராம்தாஸ் அதை பெருமகிழ்ச்சியுடன் உண்டான். பின் ஒருமுறை அவ்வன்னையைப் பார்க்க நேர்ந்த போது, அவர் ராமநாம ஜபத்தில் தீவிரமாக ஈடுப்பட்டிருந்ததைக் கண்டான்.

## அத்தியாயம் - 23
## இறைவன் ஒரு போதும் தண்டிப்பதில்லை

ராமனின் கட்டளையின்படி ராம்தாஸ் மீண்டும் ஜான்சிக்குத் திரும்பினான். அங்கு மகாதேவ் பிரசாத் அவனை உற்சாகத்துடன் வரவேற்று, இன்னும் சில நாட்கள் தன்னுடன் தங்கும்படி வற்புறுத்தினார். இம்முறை, ராம் அவனை ஜான்சியில் பல புதிய நண்பர்களுடன் தொடர்பு கொள்ளச் செய்தான். அவர்கள் அனைவரும் ராம்தாஸிடம் அன்பும் உபசரிப்பும் காட்டினர். அவர்களில் ராம்கிங்கர் என்னும் இளைஞர் மிகுந்த பரிவும், நேசமும் காட்டினார். ஒரு நாள், அவர்களது உரையாடலின் இடையே இமாலயத்தில் கேதார்நாத், பத்ரிநாத் என்னும் இரண்டு பிரசித்திபெற்ற புனித ஸ்தலங்கள் உள்ளனவென்றும், அவற்றிற்கு செல்லும் வழி மிகக்கடினமானதென்றும், அங்கே குளிர் மிக மிகக் கடுமை என்றும் ராம்தாஸ் கேள்விப்பட்டான். ஓ ராம்! அனைத்தும் உன் திட்டமே.

ராம்தாஸுக்கு என்றுமே அபாயகரமான பயணங்களிலும், ஆபத்தான இடங்கள் மீதும் தனிப்பட்டதோர் மோகம் உண்டு. மகான் ஸ்வாமி ராமதீர்த்தர் கேதார்நாத்தை பற்றி மிக அற்புதமாக எழுதியிருந்ததை ராம்தாஸ் முன்னரே படித்திருந்தான். அவனது மனதில் ஒரு தீர்மானம் பிறந்தது. இத்தலங்களுக்கு செல்லும் வழி எவ்வளவு கடினமாயிருப்பினும், இப்புனிதத்தலங்களைத் தரிசிக்க வேண்டுமென ராமனால் தூண்டப்பட்ட ராம்தாஸ் மனதில் உறுதி பூண்டான். ராமனின் இந்த விருப்பத்தைத் தன் நண்பர்களுக்கு ராம்தாஸ் தெரிவித்தான். ராம்தாஸின்

மென்மையான, மெலிந்த உடல் மீது அக்கறையும், பிரியமும் மிகுந்த மகாதேவும், மற்ற நண்பர்களும் முதலில் இந்த ஆலோசனைக்கு ஒத்துக் கொள்ளவில்லை. இந்தப் பயணம் மிக பயங்கரமானதென்றும், தளர்ச்சியுற்று மெலித்திருக்கும் ராம்தாஸின் உடலுக்கு ஏற்றதல்லவென்றும் அவர்கள் கூறினர்.

‘ராம் ஆணையிட்டு விட்டான், அதனை ஏற்று அவனை முழுவதுமாக நம்பி ராம்தாஸ் அதற்கு கீழ்ப்படிந்துச் செயல்படுவான். ராம்தாஸை கவனித்துக் கொள்ளும் முழு பொறுப்பும் ராம் ஒருவனுடையதே. ராமனின் இச்சைப்படி இந்த உடலை துறக்க நேரிடினும், அதற்கும் ராம்தாஸ் புலம்ப மாட்டான். அப்போது ராம்தாஸ் முற்றிலும் ராமனில் ஒன்றிவிடுவான். எவ்வாறாயினும் யாத்திரை போயாக வேண்டும்‘ என்று ராம்தாஸ் விடையளித்தான்.

இளைஞரான ராம்கிங்கர் தானும் கேதார்நாத், பத்ரிநாத் யாத்திரைக்கு ராம்தாஸுடன் செல்வதற்கு முன்வந்தார். ஜான்சி நண்பர்களின் வேண்டுகோளின்படி இன்னும் சில நாட்கள் அங்கு தங்க நேர்ந்தது. எனவே, இந்த தாமதம் ராம்கிங்கருக்கு தன் பயணத்திற்கான ஏற்பாடுகளை செய்து கொள்வதற்குப் போதிய அவகாசம் அளித்தது.

இமாலய புனித யாத்திரையைப் பற்றி விவரிக்கும் முன்னர், ஜான்சியில் ராம்தாஸ் தங்கி இருந்தபோது நிகழ்ந்த சில சம்பவங்களை இங்கு எடுத்துரைக்க வேண்டும். யாத்திரை செய்வது குறித்து நிச்சயமானபின், ராம்கிங்கர் ராம்தாஸின் பொறுப்பை ஏற்று தன் வீட்டருகேயிருந்த ஒரு ராமர் ஆலயத்தில் அவனை தங்க வைத்து அவனது தேவைகளை மிகக் கவனத்துடன் கவனித்து, உபசரித்து வந்தார். இந்த ஆலயத்தில்

பண்டாஜி எனப்பட்ட பூசாரி ஒருவர் இருந்தார். ஓ பண்டாஜி! எவ்வளவு பரிவு கொண்டவராக இருந்தீர்கள். ஒவ்வொரு நாளும், நடுப்பகலில் எரிக்கும் வெயிலில் ராம்தாஸ் ஜான்சி தெருக்களில் பொழுதுபோக்காக இரண்டு மூன்று மணிநேரம் சுற்றி அலைவான். அக்காலத்தில் நடுப்பகல் சூரியனின் வெப்பம் கடுமையாயிருந்தும் அதை ராம்தாஸ் பொருட்படுத்தியதில்லை. இதை ஒரு நாள் கண்ணுற்ற பண்டாஜி, ராம்தாஸை குழந்தையைப்போல் பாவித்து வந்தவர், அவனை கண்டித்து 'மகராஜ், இதோ பாருங்கள், தினம்தோறும் நீங்கள் உச்சி வேளையில் வெளியே சென்றுக் கடுமையான வெயிலில் சுற்றிக் கொண்டிருக்கிறீர்கள், உங்கள் தலையோ சுத்தமாக மொட்டையடிக்கப்பட்டு எப்போதும் மூடப்படாமல் இருக்கிறது. தாங்கள் பிடிவாதம் செய்தால், நான் வெளியேறுமுன் தங்களை ஆலயத்தில் வைத்து பூட்டிச் செல்ல நேரிடும்' என்று எச்சரிக்கை விடுத்தார்.

ராம்தாஸிடம் அவருக்கிருந்த பேரன்பின் அடையாளமான இந்த எச்சரிக்கையோடு அவர் அவனை நடுப்பகலில் தூங்குமாறு வற்புறுத்தினார். மேலும் ராம்தாஸ் உறங்குவதை கண்டாலன்றி ஆலயத்தைவிட்டு பகல் உணவிற்கு அவர் செல்லமாட்டார். ஓ ராம்! உன் அன்பை என்னென்பது!

ஒரு நாள், தனது நடுப்பகல் நடையின் போது ராம்தாஸுக்குத் தாகமெடுத்தது, சென்றுக் கொண்டிருந்த பாதையில் இருந்த கிணற்றில் அன்னையர் பலர் நீர் இறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அங்கு சென்று, அவர்களுள் ஒருவரிடம் தன் தாகத்தை தணிக்க சிறிது நீர் கொடுக்குமாறு வேண்டினான். அதற்கு அந்த அன்னை 'மகராஜ், நான் ஒரு முகம்மதிய பெண்மணி, இந்து

துறவியாகிய தாங்கள் என் கையிலிருந்து தண்ணீர் பெற்றுக் கொள்வது சரியல்ல' என்றாள். அதற்கு ராம்தாஸ், 'அன்னையே, ராம்தாஸ் சாதிபேதம் அறியாதவன், அனைத்து பெண்களிடத்தும் உலக மாதாவான சீதையையே அவன் காண்கிறான், தங்களிடமும் அவ்வாறே அவன் உலகமாதாவை காண்கிறான். ஆதலின் தாங்கள் தங்கள் மகனுக்குச் சிறிது தண்ணீர் அளிக்கத் தயங்காதீர்கள்', என்று விடையளித்தார். இந்த புதுமையானப் பதிலைக் கேட்ட அந்த அன்னை ஆச்சர்யமுற்று குடத்தை நன்கு சுத்தம் செய்து புதிதாய் தண்ணீர் இறைத்து ராம்தாஸின் இரு கைகளிலும் ஊற்ற, அவன் அதைத் தன் தாகம் தீரப் பருகினான். பிறகு தனது நடையைத் தொடர்ந்தான். ராம்தாஸ் பத்து நாட்கள் ராமர் ஆலயத்தில் தங்கியிருந்தபோது, தினமும் மாலை நேரங்களில் நகரத்திலிருந்து பல நண்பர்கள் அங்கு வந்து ராமனைப்பற்றிப் பல கேள்விகள் கேட்பதும், அவன் அவற்றிற்கு ராமனால் உந்தப்படும் விடைகளை அளித்து அவர்களைத் திருப்தி செய்வதும் வழக்கமாயிருந்தது. இது போன்ற ஒரு சமயம் நண்பரொருவர் அவனுடன் இறைவன் சம்பந்தமான ஒரு கருத்தைப் பற்றி விவாதிக்க வந்தார்.

அவருடைய முதல் கேள்வி, 'தாங்கள் யார்?'

'நான் ராம்தாஸ்' என்பது அவன் எளிமையான பதில்.

'இல்லை, தாங்கள் பொய் சொல்கிறீர்கள். தாங்கள் ராம் ஆவீர். நான் ராம்தாஸ் என்று கூறும்போது, தாங்கள் என்ன சொல்கீறீர்கள் என்பதை தாங்கள் அறியவில்லை. கடவுள் எங்கும் எதிலும் நிறைந்திருக்கிறார். ஆகையால் அவர் தங்களுக்குள்ளும் இருக்கிறார், தாங்கள் ராம் ஒருவனே ஆவீர். இதை இப்பொழுதே ஒப்புக்கொள்ளுங்கள்', என்று கூறினார்.

‘உண்மைதான், நண்பரே, கடவுள் எங்குமிருக்கிறார், அதே சமயத்தில், கடவுள் ஒருவரே, தங்களுக்குள்ளும் மற்றும் எல்லா இடங்களிலும் இருக்கிறார். அப்படியிருக்க தாங்கள் யாரிடம் இந்த கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று நான் தங்களை பணிவுடன் கேட்கிறேன்‘ என்று மறுகேள்வி கேட்டான் ராம்தாஸ். சிறிது நேர ஆலோசனைக்குப் பின் அந்த அன்பர், ‘சரி! என்னையேதான் நான் கேட்டுக் கொண்டேன்‘ என்று வேறு வழியின்றி கூறினார். இந்த கேள்விக்கு அவர் ராம்தாஸிடம் வினவியதாக அவர் கூறியிருந்தால், கேட்பவன், சொல்பவன் (அதாவது ‘நான்‘ மற்றும் ‘நீ‘ என்ற வேறுபாடு) என்னும் ‘துவைதம்‘ வாதிப்பவராலேயே ஒத்துக் கொண்டது போலாகும்.

‘உண்மை யாதெனில் ராம் பேசுவதில்லை, பேசத் தொடங்கிய அந்த கணமே அவன் ராம் இல்லை. பேச்சு எப்பொழுதும் ’பேசுபவர் - அதை கேட்பவர்’ என்ற வேறுபாட்டை, இருமையை ஏற்படுத்துகிறது. ராம் என்றுமே ஒருவன்தான், மேலும் பகுக்கப்பட முடியாதவன். தான் கடவுள் என்று உணர்ந்து கடவுளுடன் ஒன்றுவதற்கு மிகப் பெரிய தடையாய் இருப்பது ’நான்’ என்னும் அறியாமையாகிய அகங்காரமே‘ எனக் கூறினான் ராம்தாஸ். தன் வாதத்தை சரி என்று நிலைநிறுத்த அந்த நண்பர் சிறிது நேரம் முயன்று பின் முடிவாகத் தன் வாதத்தைத் கைவிட்டார்.

சில நாட்கள் தனிமையில் அமைதியான ஓரிடத்தில் தங்க வேண்டுமென்ற ராம்தாஸின் விருப்பத்திற்கிணங்க ஜான்சி நண்பர்கள் அவனை ஊருக்கு வெளியே ஒரு மைல் தூரத்தில் ஒரு தோட்டத்தில் இருந்தச் சிறிய கொட்டகைக்குக் கூட்டிச் சென்றனர். அவன் சில நாட்கள் அங்கு வசித்தான். மாலை

நேரங்களில் நண்பர்கள் பலர் அங்கு வந்து சென்றனர்.

இங்கேயும் ஒரு பள்ளிக்கூட ஆசிரியர் விவாதத்திற்கு வந்தார். அவர் மேன்மை பொருந்திய துறவியான சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களால் நிறுவப்பட்ட ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர் ஆவார். ஒரு உரையாடலின்போது அந்த நண்பர் உணர்ச்சி வசப்பட்டு கோபம் கொண்டுக் கொந்தளித்துவிட்டார். பேசிக் கொண்டிருந்த விஷயம் ஸ்வாமி சிரத்தானந்தரால் துவங்கப்பட்டிருக்கும் 'ஷுத்தி இயக்கப் பாதயாத்திரை'யைப் பற்றியதாகும். ராம்தாஸ் இவ்வியக்கத்தை வெளிப்படையாகவே கண்டனம் செய்கிறான். அதிலும் மத நம்பிக்கைகளில் வேற்றுமையை உண்டாக்கும் எவருடைய முயற்சியானாலும் அதை அவன் எதிர்ப்பவன். அனைத்து மதங்களும் ஒரே இலக்கை நோக்கியே அழைத்துச் செல்கின்றன என்பது மிக அழகிய, ஒத்துக் கொள்ளக் கூடிய பேருண்மை ஆகும். இந்த நண்பர் உரையாடலின் முடிவில் மரியாதையின் வரம்பைக் கடந்துவிட்டார். ஆயினும் ராமனின் அருளால் ராம்தாஸ் தன்நிலை இழக்காமல் அமைதியாகவே இருந்தான். பிரியும் போது, அவர் எத்தனையோ தகாத கடுஞ்சொற்களைக் கையாண்டபோதிலும், தான் அவரை மிகவும் நேசிப்பதாய் ராம்தாஸ் அவரிடம் கூறினான்.

மறுநாள், அதே நேரத்திற்கு அந்த நண்பர் மிக அவசர அவசரமாக ராம்தாஸ் இருக்கும் இடம் வந்தார். அவரால் மிக மெல்லிய குரலில்தான் பேச முடிந்தது. அவரது தொண்டை அடைத்திருந்தது, அவர் நிலைமை பரிதாபத்திற்கு உரியதாயிருந்தது. ராம்தாஸின் காலில் விழுந்து, மெல்லிய குரலில், 'மகராஜ், நேற்றைய தினம் தங்கள் முன்பு தகாத

சொற்களைப் பேசியதற்காக கடவுள் தங்கள் அடிமையைத் தண்டித்துவிட்டான் பாருங்கள்; தொண்டை அடைத்துப் போயிற்று, சரிவர பேசமுடியவில்லை' என்று கூறினார். அதற்கு ராம்தாஸ் 'அன்பரே! இதைக் கேட்க ராம்தாஸுக்கு உண்மையில் வருத்தமாக இருக்கிறது. ஆனால் உறுதியாகக் கூறுகிறேன், கடவுள் ஒரு போதும் எவரையும் தண்டிப்பதில்லை. அவன் அன்பே வடிவானவன், என்றும் கருணையோடு இருப்பவன். நமது சந்தேகங்களே நமக்கு எதிரிகளாகப் பற்பல தொல்லைகளை உண்டாக்குகின்றன. தீமை என்று கூறுவது நாம் உண்டாக்கியவையே தான்' என்று சமாதானம் கூறினான்.

உடனே அந்த நண்பர், ராம்தாஸின் வலது உள்ளங்கையை தனது தொண்டையில் வைத்துத் தேய்த்துக் கொண்டார். என்னே ஆச்சாரி யம்! அவர் தொண்டை அடைப்பு நீங்கி முன்னிலும் தெளிவாய் பேசத்தொடங்கி, சில நிமிடங்களில் அவர் முற்றிலும் குணமடைந்தார். 'மகராஜ்! தாங்கள் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்', என்று பெரு மகிழ்ச்சியுடன் கூறினார்.

'அன்பார்ந்த நண்பரே! நீங்கள் தவறு செய்கிறீர்கள், ராம்தாஸ் ராமனின் எளிய அடிமை, எப்போதும் எந்த சக்தியும் அவனுக்கு இருந்ததில்லை. உமது நம்பிக்கையே உம்மை குணமாக்கியது, அன்றி வேறெதுவும் இல்லை'.

அது முதல், அந்த நண்பர் ராம்தாஸுடன் அன்பால் தன்னைப் பிணைத்துக் கொண்டவராயும், நேசம் மிகுந்தவராயும் இருந்தார். ஓ ராம்! உன் செயல்கள் கற்பனைக்கு எட்டா விந்தை மிக்கவையாய் உள்ளன, ராம்தாஸை சில சமயங்களில் பிரமிக்க வைக்கிறன.

ராம்தாஸ் ஜான்சியில் சந்திக்க நேர்ந்த நண்பர்கள் அனைவரும் தர்ம சிந்தனை உள்ளவர்களாகவும், முக்கியமாக சாதுக்களிடம் தனிப்பட்டதோர் அன்பும், ஆதரவும் கொண்டவர்களாகவும் இருந்தனர். மஹாதேவ் பிரசாத்துடன் தங்கி இருந்த போது, அந்நண்பர் இயல்பான தர்மசிந்தனை மற்றும் பணிவுக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்ததை ராம்தாஸ் கண்டான். பசியுடன் வந்தவர் எவரையும் அவர் உணவு உண்ணச் செய்யாமல் தன் வாசலிலிருந்து வெளியேற அனுமதித்ததில்லை. பசியுள்ள ஒருவரை திருப்தி அடையச் செய்வதற்காக தன்னுடைய உணவையும் விட்டுக் கொடுத்துவிடுவார். அவரது இதயம் அந்த அளவிற்கு இளகியதும், மென்மையானதும் ஆகும். அவருடைய பணிவு, உயர்வானதாகவும், முன்னோடியாகவும் இருந்தது. உண்மையான ஈகையையும், பண்பையும் நடைமுறையில் எவ்வாறு கடைபிடிப்பது என்பதை ராம்தாஸ் அறிந்து கொள்ளவே ராம் அவருடன் இணைத்து வைத்தான் என்பது உறுதி. இமயமலை யாத்திரைக்கு ராம்தாஸுடன் சென்ற இளம் நண்பராகிய ராம்கிங்கர், தனது வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை தான தர்மங்களுக்கு செலவிடுதலை ஒரு நியதியாகக் கொண்டிருந்தார். இது உண்மையில் எல்லோரும் பின்பற்றத்தக்க ஒரு அழகிய நெறி ஆகும். தருமத்தைப் பற்றிப் பேசுகையில் - எந்த வசதியும் இல்லாத ஒரு பிச்சைக்காரன் அல்லது சாது பசித்திருக்கும் போது, அவனுடன் தினந்தோறும் தனது உணவைப் பகிர்ந்து கொள்ளாத இல்லறத்தான் வாழ்வதற்கு எந்த உரிமையும் அற்றவன் என்பது பண்டைய காலத்தவரின் கொள்கை. வட இந்தியாவிலுள்ள இல்லறத்தார் பலரும் இன்றும் பின்பற்றும் இந்த ஈகைக் குணம் மிகவும் சிறந்த, மேன்மை பொருந்திய குறிக்கோளாகும். உண்மையிலேயே, இல்லறத்தை

ஒருவன் மேற்கொள்வது இந்த உயர்ந்த கொள்கையைக் கடைப்பிடிக்கும் நோக்கத்திற்காகத்தான் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. விருந்தாளி தானே வரும் வரைக் காத்திராது, தானே தெருக்களிலும், கோயில்களிலும், தரும சாலைகளிலும் வலிய தேடிச் செல்லும் இல்லறத்தார்கள் இன்றும் சிலர் காணப்படுகின்றனர். ராம்தாஸின் அனுபவத்தில் தென் இந்தியாவும், தர்மம் போன்றவற்றில் மெச்சத்தக்க பங்கு வகிக்கிறது. ஆம், இந்தியா முழுவதுமே தான, தர்மங்கள் நிறைந்த, சிறந்த நாடாகும்.

## அத்தியாயம் - 24

## இமயமலைப் பயணம் - பகுதி 1

ஜான்சி நண்பர்கள் இமயமலைப் பயணத்திற்கு இன்றியமையாதவை அனைத்தையும் ராம்தாஸுக்குச் சேகரித்துக் கொடுத்தனர். புறப்படுவதற்கான நாளும் வந்தது. ராம்தாஸையும், ராம்கிங்கரையும் வழி அனுப்பப் பலர் இரயில் நிலையம் வந்திருந்தனர். பரஸ்பர நல்வாழ்த்துக்களுடன் இரண்டு குழுவினரும் பிரிந்தனர். குறிப்பிட்ட நேரத்திற்கு ஹரித்துவார் வந்து சேர்ந்தனர். பெயருக்கேற்றவாறு ஹரித்துவார் இமயமலைகளில் அமைந்திருக்கும் புனித ஸ்தலங்களுக்கு வாயிலாக அமைந்துள்ளது. இங்கு யாத்திரிகர்கள் இரண்டு நாட்கள் தங்கினர். சந்நியாசிகள், சந்நியாசினிகள், இறைபக்தி மிக்க தாய்மார்கள் அனைவரும் கங்கையில் குளிப்பதும், சடங்குகளுடன் கூடிய நீராடுதல், சந்தியாவந்தனம், பிரார்த்தனை மற்றும் இறைவழிபாடு ஆகியவற்றில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதும் காண்பதற்கு மகிழ்ச்சிக்குரியதாகும். ஓ ராம்! இப்புனித ஸ்தலத்தில் உன்னுடைய வெளிப்பாடு மிகத் தெளிவாக விளங்குகிறது.

இமயமலை யாத்திரை இங்குதான் தொடங்குகிறது. ராம்தாஸும், ராம்கிங்கரும் மேன்மேலும் தொடர்ந்து ஏறி ரிஷிகேஷ் எனப்படும் இடத்தை அடைந்தனர். ரிஷிகேஷ் ஒரு அழகிய இடமாகும். புனித கங்கைக்கரையின் இயற்கைக்

காட்சிகள் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. தொலைவில் வெண்பனியால் சூழப்பட்டு மங்கலாய் காட்சியளித்த மலை சிகரங்களின் உச்சிகளை அதற்கு மேல் அலைகள் போல் தவழ்ந்து வரும் மேகங்கள் முத்தமிட்டன. சற்றுக் கூர்ந்து நோக்கினால் சுற்றிலும் பிரம்மாண்டமாய் உயர்ந்த பாறைகளும், பச்சை, மஞ்சள் மற்றும் சிகப்பு வண்ணங்கள் கலந்ததுபோல் இலைகளும், இளந்தளிர்கள் மற்றும் மலர்கள் நிறைந்த மரங்கள் அடர்ந்த காடுகளில் காணப்பட்டன. சற்றே அருகே சென்றால் புனித கங்கையின் பளிங்கு போன்ற தெளிந்த நீர் பெரும் அமைதியுடனும், கம்பீரத்துடனும் ஓடுகிறது. வெகு காலத்திற்கு முன் வேகமாய் பாயும் நீரின் பிரவாகத்தால் இழுத்து வரப்பட்டு உருண்டு திரண்ட வட்ட வடிவமான வழுவழுப்பான பெரிய பாறைகள் அதன் மேற்பரப்பில் தென்படுகிறது. ஓ ராம்! உன் படைப்பு கம்பீரமானது.

பெருமை மிகும் இந்நதியின் ஒரு பக்கத்தில் வரிசையாகப் புதிதாக கட்டப்பட்ட சிறிய கீற்றுக்குடில்கள் பல காணப்பட்டன. அவை சந்நியாசிகளின் ஆஸ்ரமங்கள் ஆகும். இவற்றுள் ஒன்றினுள் ராம்தாஸை ராம்கிங்கர் அழைத்துச் சென்றார். குடிலின் உட்பகுதியில், இரண்டு தூண்கள் அக்குடிலை தாங்கி நிற்க, அத்தூண்களையே கால்களாகக் கொண்ட ஒரு மூங்கில் கட்டிலும் அதன் மேல் ஒரு மான்தோலும் விரிக்கப்பட்டிருந்தது. மேலும் கட்டிலின் கால் பக்கம் மடித்து வைக்கப்பட்ட ஒரு கம்பளியும், சில எளிய பொருட்களும் இருந்தன. மான்தோலின் மீது வணங்கத்தக்க வயோதிக சந்நியாசி ஒருவர் அமர்ந்திருந்தார். அவரது கமண்டலம் கருப்புநிற சிப்பியால் செய்யப்பட்டது. ஒரு ஆப்புக் கட்டையின் மீது தொங்கிக் கொண்டிருந்தது. வெளியே வெயிலில் உலர்ந்து கொண்டிருந்த ஒரு துணியும் ஒரு

கௌபீனமும (கோவணம்) தவிர வேறு உடை ஒன்றும் அவரிடம் இல்லை. குடிசையின் மண் தரையில் மூங்கில் பாய் ஒன்றும், பாதாம் பருப்பு போன்ற கடினமான ஓடுகள் கொண்ட உணவுப் பொருட்களை உடைப்பதற்காக பெரியதும், சிறியதுமாக இரு கருங்கற்களும் இருந்தன. அந்த சந்நியாசியின் முகத்தில் சாந்தியும், அமைதியும் குடி கொண்டிருந்தன. அவர் ராம்தாஸையும், ராம்கிங்கரையும் முக மலர்ச்சியுடன் வரவேற்றார். அவர்கள் அம்மகாத்மாவின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி, பின் பாய் மேல் அமர்ந்தனர். அவர் விருந்தாளிகளுக்குச் சில ஏலக்காய்களை அளித்தார். எளிமையாக, குழந்தையைப் போன்று கபடமின்றிப் பேச ஆரம்பித்து, கங்கையின் மறுகரையில் சாதாரண மனிதர் புக முடியாத அடர்ந்த காடுகளில் பல்லாண்டுகளாக தவமியற்றிவரும் சந்நியாசிகளை குறித்து விவரித்துக் கூறினார். அவர் ராம்தாஸுக்கு அழகான ஒரு அறிவுரை அருளினார், ‘எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம், தனிமையில் இருந்து தியான சாதனை செய்ய வேண்டும். மனதை அடக்க, அதைத் தவிர வேறு வழியில்லை‘ என்று கூறினார். அவர் எளிதில் பழகுபவராகவும், அன்பானவராகவும், பிறர் நலனில் அக்கறை உள்ளவராகவும் இருந்தார். ஓ ராம்! ராம்தாஸ், உன்னையே உனது அருமை பெருமைகளுடன் அந்த எளிய குடிலில் கண்டான். மேலும் ஒரு விஷயம், இந்த சந்நியாசிக்குப் பறவைகள் மீது மிகுந்த அன்பு, அனுதினமும் தனது உணவை அவற்றுடன் பகிர்ந்து கொள்ளத் தவறமாட்டார். குடிலுக்கு வெளியே மரங்கள் மீது, தங்கள் பங்கிற்காகக் காத்திருக்கும் பறவைகளைப் பற்றி பரிவுடன் பேசினார். அங்கிருந்து வெளியேறிக் கங்கை அன்னையின் கரையில் ராம்கிங்கரும்,

ராம்தாஸும் திரிந்து கொண்டிருந்தபோது, முகத்தில் மகிழ்ச்சி தவழும் ஒளியுடன், காவி உடை அணிந்திருந்த சந்நியாசிகள் பலர் வழக்கமான காலை நீராடலுக்கு வந்து கொண்டிருந்ததைக் கண்டனர். ராம்தாஸ் ரிஷிகேஷில் தங்கியிருந்தபோது, நதிக்கரையில் இருந்த ஒரு மகாத்மாவின் குடிசை அருகே, ஆலமரத்தைச் சுற்றியிருந்த களிமண் மேடைமீது வசித்து வந்தான். இந்த சந்நியாசியும், ராம்தாஸிடம் மிக்க அன்பு கொண்டிருந்தார். இவர் தனது ஆஸ்ரமத்தைக் கூட்டமாக சுற்றிவரும் பசுக்களுக்கும், குரங்குகளுக்கும் உணவளிப்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். அவற்றிற்கு உணவளிப்பதற்காகவே கடைத் தெருவில் பிச்சை எடுத்து தேவையான உணவு பொருட்களையும், புல்லையும் சேகரிப்பார். குழந்தையைப் போல் குரங்குகளுடன் நடனமாடுவதும், வேறுபட்ட ஒலிகளை எழுப்பிய வண்ணம் அவற்றின்பின் ஓடுவதும் அவருக்கு தனிப்பட்டதோர் பிரியமான விளையாட்டு. அவரது முகத்தில் ஒளியும், தயையும் மிளிர்ந்தது. அதே மரத்தடியில் கண் பார்வையற்ற இனிய குரல் படைத்த மற்றொரு சாது, தனது திறமையை இறைவனின் மகிமையை பாடுவதற்கு பயன்படுத்திக் கொண்டிருந்தார்.

இங்கு இவ்வாறு பரிபூரண அமைதியிலும், ஆனந்தத்திலும் மூன்று நாட்கள் கழிந்தன. ராம்கிங்கர் ராம்தாஸின் உணவுத்தேவைகளை அன்புடன் கவனித்துக் கொண்டார். சந்நியாசிகள் அனைவருக்கும் தினந்தோறும் உணவளிக்கும் இரண்டு பெரிய அன்ன சத்திரங்கள் ரிஷிகேஷில் இருந்தன. அவற்றில் ஒன்று மகா சமாதியடைந்த ‘காளிகம்பளி பாபா‘ என்னும் புகழ்பெற்ற மகாத்மாவால் தொடங்கப்பட்டது. இம்மலைத் தொடரிலும், சாதுக்கள் அனைவரின் நாவிலும்,

அவரது புனிதப் பெயர் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர் மும்பையை சேர்ந்த செல்வம் படைத்த பல வியாபாரிகளிடம் தனக்குள்ள செல்வாக்கால் மலைகள் மீது 10-15 மைல்கள் இடைவெளியில், பல தர்மசாலைகள் அமைத்து ஏழை யாத்திரிகர்கள், சாதுக்கள் அனைவருக்கும் இலவசமாக உணவுப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளார். இதற்கானச் சீட்டுகள் ரிஷிகேஷில் வழங்கப்பட்டன. ராம்கிங்கர் தனக்கும் ராம்தாஸுக்கும் தேவையானச் சீட்டுகளை அங்கு பெற்றுக்கொண்டார்.

## அத்தியாயம் - 25

## இமயமலைப் பயணம் - பகுதி 2

நான்காம் நாள் பயணத்தில், அவர்கள் மலை ஏற்றத்தை தொடங்கினார்கள். மேலே ஏற, ஏற அவர்கள் கண்ட இயற்கை காட்சிகளும், நிலத்தோற்றமும் உள்ளத்தை மயக்கிப் பரவசப்படுத்தின. மேலே ஏறும் பாதையின் வலதுபுறம் புனித கங்கை வேகமாக, பெருமிதமாகக் கீழ்நோக்கி ஓடுவதும், இடதுபுறம் உயரமான மலைத்தொடர்களும், அடர்ந்த மரங்களும், செடிகொடிகளும், கண்ணையும், கருத்தையும் கவர்ந்திழுத்தன. அவ்விடத்துக் காற்றில் கூட ராமனின் தெய்வீகத்தன்மை நிறைந்திருந்தது. தொலை தூரத்தே காணப்பட்ட மலைகள், பள்ளத்தாக்குகள், பல்வேறு நிறங்களுடன் கூடிய வானம், அவ்வானத்தில் பல விந்தை வடிவங்களில் மிதக்கும் வெண்மேகங்கள், நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால், கதிரவனின் கதிர்ஒளிப்பட்டு வெள்ளித் தகடுகள் போல் மின்னி கண்களைக் கூசச் செய்யும் வெண்பனி படர்ந்திருந்த மலைகள் - இவையனைத்தும் உண்மையாகவே மனதைக் கொள்ளைக் கொள்ளும் கம்பீரமான காட்சிகள். ஓ காட்சிகளின் வசீகரமே! ஓ ராம்! அவன் கண்கள் சந்தித்த ஆச்சார்யமான, கம்பீரமான, புகழ் நிறைந்த காட்சிகளின் அற்புத அழகை வருணிப்பதற்கு ஏழை ராம்தாஸிடம் போதுமான வார்த்தைகள் இல்லை.

ராம்தாஸ் மேன்மேலும் நடக்க, ராமனின் முடிவற்றத் தன்மையையும், உயர்வான சிறப்புகளையும் ஆழ்ந்துப் பருகித் தன்னிலை முழுதும் இழந்து மயக்கத்தில் மூழ்கினான். ஓ ராம்! உன் அடிமையிடம் உனக்குள்ள அன்பு எல்லையற்றது. நாளுக்கு நாள் ராம்தாஸ், ராம்கிங்கர் இருவரும் மிக வேகமாக நடக்கலாயினர். ராம்தாஸ் களைப்பு, உடல் நலக் குறைவு எதுவும் உணரவில்லை. அவன் என்றும்போல் புத்துணர்ச்சியுடன் இருந்தான். அவன் இவ்வாறு இருப்பதற்கு காரணம், எவன் நாமத்தை அவன் இடைவிடாமல் உச்சரித்துக் கொண்டிருக்கின்றானோ அந்த ராமனின் கருணைதான்.

ஒன்றின் பின் ஒன்றாக பல மலைகளைக் கடந்து முன்னேறும் போது புதிய, புதிய பல அற்புத இயற்கை காட்சிகள் அவர்கள் கண்முன் தோன்றி அவர்களை வியப்பில் ஆழ்த்தின. வசீகரமான இம்மண்ணில் இது ஒரு இனிய பயணமாக அமைந்தது. இவை அனைத்தும் ராமனின் மகிமை மற்றும் சிறப்பு. இவை முழுவதும் நிறைந்த, மனத்தை மயக்கவைக்கும் அழகான கனவு போன்ற நிலையாகும். இங்கு ராம் தன் அற்புத சக்தியை வெளிப்படுத்தியிருந்தான். அவனே அனைத்தையும் ஆட்டிவைக்கும் ஜாலவித்தைக்காரன். திறமைமிக்க மந்திரவாதியான ராமனின் நுட்பமான வசீகர ஆற்றலினால் நம் கண் முன்னே, காட்சிக்குப் பின் காட்சியாக விரியும் அற்புதத்தில் நாம் மெய்மறந்து ஈர்க்கப்பட்டு விடுகிறோம். நாம் யார், எங்கு இருக்கிறோம் என்பதையும் மறந்து விடுகிறோம். சூறாவளி காற்றில் மறைந்து போகும் சிறு புகையைப்போல, நாமும் சுற்றுப்புற சூழலில் நம்மை இழந்து மறந்து விடுகிறோம்.

ராம்தாஸ் வெகு வேகமாக நடந்து கொண்டிருந்தான் - உண்மையில் அவன் பறந்து கொண்டிருந்தான் என்று கூறலாம். மிகக் கடினமான மலை ஏற்றங்களையும் வெகு விரைவில் கடந்து விடுவான். பெரும்பாலான நேரம் அவன் உடல் உணர்வற்று இருந்தான். மயக்க வைக்கும் இயற்கை காட்சிகள் அனைத்திலும் வியாபித்திருந்த ராமிடம் அவனது மனம் முழுவதுமாக ஒன்றியிருந்தது. சோர்வு என்பதையே அறியாத அந்த இரு யாத்திரிகர்களும் உயர, உயர ஏறிக்கொண்டிருந்தனர். பெருஞ்சுமையைச் சுமந்துக்கொண்டு ராம்கிங்கர் ஏற வேண்டி இருந்ததினால், ராம்தாஸின் வேகமான ஓட்டத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் அது குறித்துக் குறைப்பட்டுக் கொண்டார். ராம்தாஸ் தன் கட்டுப்பாட்டுக்குள் இல்லை. ராம் ஒருவனே ராம்தாஸுக்கு எஜமான். ஓரிடத்தில் அவர்கள் ஒருவரை ஒருவர் தவறவிட்டுப் பிரிந்ததால் கவலையுற்றனர். எனினும் ராம் அவர்களை 'ருத்ரபிரயாக்' என்னுமிடத்தில் மீண்டும் சேர்த்து வைத்தான்.

ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இக்குன்றுகள் மீது ஏறுகின்றனர். முக்கியமாக, மார்ச் முதல் ஜுன் மாதம் வரை உள்ள இப்பருவகாலத்தில் சாரை சாரையாக மக்கள் மேலே ஏறுவதும் கீழே இறங்குவதுமாக இருக்கின்றனர். வழியில் செல்லும்போது ராம்தாஸ் சந்திக்க நேர்ந்த யாத்திரிகர்களும், சாதுக்களும் மற்றும் பிறரும் அவனிடம் அன்பும் அக்கறையும் காட்டினர். மும்பை முதலான நகரங்களிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் சிலரும் அவ்வாறே அவனிடம் அக்கறை காட்டினர். ராம் அன்பின் வடிவமாய் இருப்பதினால், அனைவரும் அன்பாயிருக்கின்றனர். மேலும் அனைவருக்குள்ளும் ராம் அன்றோ உறைகின்றான்!

இம்மலைகளின்மீது சிவந்த மேனியும் திடகாத்திரமும் கொண்ட மலைசாதியினர் வசிக்கின்றனர். அவர்கள் பயிர்த்தொழில் செய்தும், ஆடு மற்றும் கால்நடைகள் வளர்த்தும் வாழ்கின்றனர். எனவே அவர்களின் வாழ்க்கையும் வழிமுறைகளும் எளிமையானதாக இருந்தன, அவர்களின் தெய்வ நம்பிக்கை மிக உயர்ந்தது. 'ராம், ராம்' என்று அவர்கள் எப்போதும் உச்சரித்துக் கொண்டிருந்தனர். அவர்களுடன் பேசினால், தாங்கள் அக்குன்றுகளில் வாழ்ந்த ரிஷிகளின் சந்ததியினர் என்று பெருமை பொங்கக் கூறுகின்றனர். அவர்கள் அணியும் ஆடை கம்பளியால் தயாரிக்கப்பட்டவை. ஆடவர் நீண்ட கம்பளி அங்கியும், அரைக்கால் சட்டையும், கருப்புக்குல்லாயும், பெண்கள் சேலைக்குப் பதிலாக கம்பளிப் போர்வையும் அணிகின்றனர். இவை அவர்கள் வளர்க்கும் செம்மறி ஆடுகளின் உரோமத்திலிருந்து தயாரிக்கப்பட்டவை. இவ்வாறு வாழ்க்கைக்கு இன்றியமையாத இரு தேவைகளான உணவுப் பொருட்களையும் உடைகளையும் அவர்கள் தங்கள் உழைப்பாலேயே உருவாக்கிக் கொள்கின்றனர். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நடந்து செல்லும்போது கூட, ஆண்களும் பெண்களும், செம்மறி ஆட்டின் உரோமத்தை தங்களுடன் எடுத்துச் சென்று, வழிநெடுக கம்பளி நூல் திரிக்கின்றனர். இந்நூலைக் கொண்டு குழிதறிகளில் ஆடைகளை நெய்கின்றனர். அவர்களின் வாழ்க்கை, கேடு விளைவிக்கும் தற்கால நவநாகரீகத்தின் தொடர்பின்றி இருப்பதால், அவர்கள் எளிய, தூய்மையான, நேர்மையான, இறை பக்தியுடன் கூடிய வாழ்க்கையை வாழ்கின்றனர்.

குன்றுகளின் மேல், பயணத்தின்போது பல இடங்களில் மரங்களின் அடியிலோ அல்லது சிறு குடிசைகளிலோ அல்லது

குகைகளிலோ சாதுக்கள் தம் ஆன்மிகப் பயிற்சிகளில் ஈடுபட்டிருந்ததைக் காண நேர்ந்தது. சிறிது நேரம் அவர்களுடன் பழகுவதும் அல்லது அங்கிருப்பதும் ஒரு பெரும் பாக்கியம் ஆகும். சாதுக்களுடன் தொடர்பு என்பது மன அழுக்கைப் போக்கும் மனக் குளியலுக்கு மிக அவசியமான ஒன்றாகும். அவர்கள் தங்கள் தியானத்தினாலும், தவத்தினாலும் தங்களைச் சுற்றி பரிசுத்த சூழலை உருவாக்குகின்றனர். அவர்களுடன் தொடர்பு கொள்வோரின் மனம் அந்த பரிசுத்த சூழலெனும் நதியில் நீராடித் தீய நினைவுகளிலிருந்தும், எண்ணங்களிலிருந்தும் விடுபடுகின்றது. இப்புனிதக் குன்றுகளின் மேல் நாரதர், அகத்தியர் போன்ற புகழ்மிகு ரிஷிகளின் ஆஸ்ரமங்கள் அமைந்திருக்கின்றன. பாண்டவர்கள் கைலாயம் செல்லும் வழியில் சிறிது காலம் தங்கியதாகக் கூறப்படும் 'பாண்டுகேஷ்வர்' என்னும் இடமும் இங்கேதான் உள்ளது. இங்கே ஒரு கோயிலும் அதனுள் பண்டைய காலத்து எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட சில செப்பு தகடுகளும் உள்ளன. மலை உச்சியில் அவர்கள் முதலில் தரிசித்த இடம் 'திரியுக நாராயண்' என்பதாகும். இந்த குறிப்பிட்ட இடத்திற்குச் செல்லும் மலை ஏற்றம் மிகுந்த செங்குத்தான, குறுகலான, வெண்பனியால் மூடப்பட்ட மலைகள் சூழ்ந்த பீடபூமியாகும். ஆகையால் இங்கு குளிர் மிகவும் கடுமையாக இருந்தது. யாத்திரிகர்கள் இங்கு ஒரு நாள் தங்கினர்.

இங்கிருந்து சிறிது தூரம் கீழே இறங்கியதும், அவர்கள் மற்றுமோர் மலைத்தொடர்மீது ஏறினர். இங்கே பாதை குறுகலாகவும், கரடுமுரடாகவும், அபாயமானதாகவும் இருந்தது. வழியில் அவர்கள் பலவீனமான, உறுதியற்ற பாலங்களைக்

கடக்க வேண்டியிருந்தது. மூன்று இடங்களில், அடர்ந்து படர்ந்திருந்த வெண்பனிப் பாதைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. ஒவ்வொரு வருடமும் பல யாத்திரிகர்கள் செங்குத்தானப் பாறைகளிலிருந்து தவறி விழுந்து பல நூறு அடிகளுக்கு கீழே அதிவேகமாக ஓடும் நதியின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இங்கு மயிரிழையில் உயிர் தப்பிய ஒரு சம்பவத்தை குறிப்பிட வேண்டும்.

மலை ஏற்றத்தின்போது ஒரு குறிப்பிட்ட இடத்தில், ராம்தாஸ் ராம்கிங்கருக்காக பாதையில் காத்துக் கொண்டிருந்தான். அவ்விடம் செங்குத்தான மலை உச்சியின் விளிம்பாகும். அதற்கு மிக, மிகக் கீழே நதி பெருக்கெடுத்தோடிக் கொண்டிருந்தது. பாதையோ மிகவும் குறுகலானது. துடிப்பும், சுறுசுறுப்பும் மிகுந்த சுமார் பதினாறு வயது சிறுமி தனது திரும்பும் பயணத்தில் கீழே இறங்கிக் கொண்டிருந்தாள். அது மிக, மிகச் சரிவான இறக்கம். இயல்பாகவே வேகமாய் இறங்கிக் கொண்டிருந்த அவள் வேகத்தை அச்சரிவு மேலும் அதிகப்படுத்தியது. அவள் தன் வேகத்தைக் கட்டுப்படுத்த முயன்றும் தன்னையும் மீறி வெகு வேகமாக கீழ் நோக்கி வந்து கொண்டிருந்தாள். அவள் தான் கீழ் நோக்கி இழுக்கப்படுவதை உணர்ந்தாள். அவள் முகம் அச்சம் மேலிட சிவந்துவிட்டது. ஓட்டத்தின் வேகத்தால் அவள் குன்றின் பக்கம் செல்லாமல், மாறாக பாதையின் செங்குத்தான சரிவின் விளிம்பை நோக்கி தட்டுத் தடுமாறிச் சென்று கொண்டிருந்தாள்.

மூச்சு விடுவதைக் கூட மறந்து அடுத்து என்ன நடக்கும் என்று அறியாமல் ராம்தாஸ் அக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தான். மௌனமாக அந்த பெண்ணை காக்கும்படி மனதில் ராமனிடம்

பிரார்த்தித்துக் கொண்டிருந்தான். ராமனை அன்றி அவளை எவரால் காக்கமுடியும்? அவள் இப்போது பாதையின் ஓரத்திற்கே வந்துவிட்டாள். மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட ஒரு முயற்சியுடன் அவள் தன்னைக் கட்டுப்படுத்தி நின்று விட்டாள். அவளது இடது காலின் ஒரு பகுதி பாதையின் விளிம்பிற்கு வெளியே வந்து நின்றுவிட்டது. ராம்! எத்தகைய பயங்கரமான நிலை! உன் திருநாமம் போற்றப்படட்டும். 'ராம், ராம்' என்று கூறிக் கொண்டு பாதையின் குறுக்கே அவள் விழுவதை ராம்தாஸ் கண்டான். காப்பாற்றப்பட்டாள்! காப்பாற்றப்பட்டாள்! ராம் அவளை காப்பாற்றி விட்டான்! அவள் ஒரு நொடியும் காத்திராது, உடனே எழுந்து, மீண்டும் தன் பயணத்தை தொடர்ந்தாள். அச்சமற்ற பெண்ணே! ராமனின் மேல் நீ கொண்டுள்ளத் தளராத நம்பிக்கையை என்னவென்பது!

மற்றுமொரு சம்பவம், யாத்திரையின்பொழுது ஒரு மூதாட்டி தன் உடலை விட்டது. நடந்து செல்ல இயலாத யாத்திரிகர்களைக் கூலிக்கு கூடையில் சுமந்து கொண்டு மலை ஏறுவதற்காக இங்கு ஏற்பாடு உண்டு. மூதாட்டி ஒருவரை வலிமையான தேகக்கட்டு கொண்ட மலை ஏறும் கூலி ஒருவர் கூடையில் சுமந்து கொண்டு மலை ஏறிக் கொண்டிருந்தார். வழிப்பாதையில் களைப்பாறுவதற்காக அவ்வப்போது அவர் தன் கூடையை கீழே இறக்கி வைத்து இளைப்பாறுவார். கடைசியாக ஒரு இடத்தில் அப்படி செய்தபோது, அந்த இடம் சாலையின் ஒரு பக்கத்தில் ராம்தாஸும், ராம்கிங்கரும் அமர்ந்திருந்த இடமாகும். வழக்கம் போல் ஒரு பாறைமேல் கூடையை இறக்கி, மூதாட்டியை சிறிது நேரம் கூடையை விட்டு வெளியே வரச்சொன்னார். அவளிடமிருந்து விடையேதும் வராததைக் கண்டு, அக்கூலி கூடைக்குள்ளே எட்டிப் பார்த்து 'ஐயோ!

மூதாட்டி போய்விட்டாளே‘ என்று ஆச்சார்யத்துடனும் வருத்தத்துடனும் கூக்குரலிட்டார்.

ஓ ராம்! உனது விருப்பம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ராம்தாஸும் அவனது அன்பான வழிகாட்டியும் தொடர்ந்து மலை ஏறி கேதார்நாத்தை அடைந்தனர். இவ்விடம் மிக அற்புதமான இடம். இது வானளாவி உயர்ந்து பனியால் மூடப்பட்ட மலைகளின் நடுவே பரந்து விரிந்த சமநிலமாகும். இங்கு குளிர் மிகவும் கடுமையாக இருந்தது. ஓ ராம்! உன் அடிமையின்பால் நீ கொண்டிருக்கும் அன்பு மிகச் சிறந்தது. அவன் உடல் குளிரால் பாதிக்கப்படாதவாறுச் செய்துவிட்டாய்.

# அத்தியாயம் - 26
# இமயமலைப் பயணம் - பகுதி 3

கேதார்நாத்தில் ராம்தாஸ் ராம் அருளால் மிகவும் கடினமான ஒரு வீரச் செயலைப் புரிந்தான். சுற்றிலுமிருந்த வெண்பனி மூடிய உயரமான பாறைகளில் ஒரு பாறையின் மீது ராம்தாஸ் ஏறினான். ராம்கிங்கரும் அவனைப் பின் தொடர்ந்தார். பாறைமீது நன்கு வளர்ந்திருந்த பிடிப்பதற்கு உறுதியான புல்லைப் பற்றிக் கொண்டு ஏற வேண்டியிருந்தது. அது செங்குத்தான ஏற்றமாகும். ஏறக்குறைய, பாதிவழி வரை ராம்கிங்கர் உடன் சென்றார். அதன்பின் குளிரினாலும் மேலும் வழுக்கி விழக்கூடிய அபாயமிருந்ததாலும் மேற்கொண்டு ராம்தாஸை தொடர மறுத்துவிட்டார். அதே சமயத்தில், தன்னை ராம் கையில் ஒப்புவித்துவிட்ட ராம்தாஸ் மேன்மேலும் ஏறி, குன்றின் உச்சியை அடைந்து, அதன் குறுகலான கூம்பு வடிவ சிகரத்தை தொட்டுவிட்டான். அப்படி உச்சியை தொட்டதும் ராமனின் திவ்ய நாமத்தின் பெயரால் வெற்றி முழக்கம் செய்தான். தனது உச்சக்குரலில் 'ஓம் ஸ்ரீராம், ஜெய் ராம், ஜெய் ஜெய் ராம்' என்று முழங்கினான். ஓ ராம்! நீ எத்தகைய புகழ் வாய்ந்தவன்!

இப்போது, கீழே இறங்குவது அபாயகரமானதாக இருந்தது. கவனக்குறைவாக ஒரு அடி வைத்தாலோ அல்லது சற்று சறுக்கி விட்டாலோ தலைகீழாக விழுந்து, உடல் சிதைந்து அழிந்து போக நேரிடும். ஆயினும், ராம் வழிகாட்டும்போது எந்த ஆபத்தைத்தான் துணிவுடன் எதிர்கொள்ள முடியாது? ராம்தாஸ்

மெதுவாக ஊர்ந்து சென்றான். இல்லை, இல்லை சறுக்கிக் கொண்டே குன்றில் இறங்கினான். இதற்கிடையில் பனிக்கட்டி மழை பொழியத் துவங்கியது. அவன் கம்பளி உடை ஏதுமின்றி குன்றின் மேல் ஏறியிருந்தான், ஆனால், ராம் அருளால் குளிரையோ, அச்சத்தையோ உணரவில்லை. முடிவில் ராம் அவனை குன்றின் அடிவாரத்திற்கு பாதுகாப்பாகக் கொண்டு சேர்த்தான். சுமார் ஒரு மைலுக்கும் அதிகமான உயரமுள்ள குன்றின் மீது ஏற ஐந்து மணி நேரத்திற்கும் மேல் ஆனது. பனி உருகி, கீழ் நோக்கிப் பாய்ந்தோடும் மந்தாகினி நதி உற்பத்தியாகும் தலத்தை அடைந்த ராம்தாஸ் அங்கு நீராடினான். அங்கு தண்ணீர் மிக மிகக் குளிர்ந்திருந்தது. ராமனின் பாதுகாப்பிருக்கும்போது எந்த குளிர்தான் அவனை பாதிக்கும்!

கேதார்நாத்தில் ஒரு கோயிலும், சில கடைகளும், குடியிருப்புகளும் மட்டுமே இருந்தன. ராம்கிங்கரின் அறிவுரைப்படி அங்கு ஒரு நாள் தங்கியபின் மேற்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர். சில மைல்கள் தூரம் இறங்கிய பின்பு, யாத்திரிகர்கள் மற்றொரு மலைத் தொடர்மீது ஏறத் தொடங்கினர். மீண்டும் அழகிய மனம்கவர் இயற்கை காட்சிகளும், பரந்த வெளிகளும் அவர்களின் கண்களைச் சந்தித்தன. இருவரும் ஒரு மலை அடிவாரத்தில் இருந்த யாத்திரிகர்கள் தங்கும் விடுதிக்கு வந்தனர். அங்கு ‘கௌரிகுண்ட்‘ என்றழைக்கப்பட்ட வெந்நீர் ஊற்றிலிருந்து தேக்கி வைக்கப்பட்டிருந்த நீர் தேக்கம் இருந்தது. மற்றொரு நீர் தேக்கமும் அங்கு இருந்தது, அந்த தேக்கத்தின் தண்ணீர் மஞ்சள் நிறமாக இருந்தது. இங்கிருந்து ராம்தாஸும், ராம்கிங்கரும் மேல் நோக்கிச் செல்லும் பயணத்தைத் தொடர்ந்தனர். பல மைல்கள்

ஏறிக் கடந்தனர். அப்பாதை கேதார்நாத்திற்கு செல்லும் பாதையைப் போன்று அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. பல நாட்கள் தொடர்ந்து நடந்தபின், முடிவில் அவர்கள் 'பத்ரிநாத்' அல்லது 'பத்ரிநாராயண்' என்றழைக்கப்படும் இடத்தை நெருங்கினர். பத்ரிநாத்திற்கு அரை மைலுக்கு முன்னால் ஓரிடத்தில் அமர்ந்து பத்ரிநாத் மலைகளைப் பார்த்தனர். அந்தக் காட்சிகள் மிகவும் அற்புதமானதாகவும், மனதை வசீகரிக்கக் கூடியதாகவும் இருந்தன.

இதை வர்ணிப்பதற்கு ராம்தாஸின் எழுதுகோல் திறனற்றதும், தகுதியற்றதும் ஆகும். அக்காட்சியை அவன் வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்கையில், சிறிது நேரம் தன் உடல் உணர்விழந்து, தன்னைச் சுற்றியுள்ள உயர்ந்த மலைகளோடு ஒன்றிப் போனான். 'அலகநந்தா' என்னும் நதி பிறக்குமிடம் பத்ரிநாத் ஆகும். இம்மலை உயரங்களில் ஏறிக்கொண்டிருக்கும்போது மூன்று, நான்கு இடங்களில் வெண்பனி படர்ந்த அகன்ற நிலப்பரப்பை கடக்க வேண்டியிருந்தது. ராம்தாஸ் பனி படர்ந்த இந்த நிலத்தின் மேல் வெற்றுக் கால்களுடன் நடந்து சென்றான். இவற்றினுள்ளே, இந்த இடம் மெதுவாக நகரும் உறைந்த வெண்பனிக் கட்டிகள் நிறைந்த நிலமாகும். இக் கடினமான உறைந்த பனிகட்டிகளின் மேற்பரப்பிற்கு அடியில் தண்ணீர் வெகு வேகமாக கீழ் நோக்கி மலையின் அடிவாரத்தில் நதியில் சங்கமமாவதற்கு பாய்ந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இந்த பனிகட்டிகளின் மேற்பரப்பில் நடந்து செல்லும் பயணிகள் பலர், சில மெல்லிய பனிப் பாளங்கள் மீது கால் வைக்க, அவை பிளந்து, அடியில் ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டத்தின் வேகத்தில் உறிஞ்சப்பட்டு மூழ்கி விட்டதாகச் சொன்னார்கள். அண்மையில் நடந்த ஒரு

நிகழ்ச்சி, மும்பையைச் சேர்ந்த செல்வந்தர் ஒருவரை நான்கு பேர் கொண்ட சுமைதூக்கிகள் 'டோலி' எனப்படும் இருக்கையில் அமர்த்தி சுமந்து சென்றபோது, இது போன்ற விரிசலில் சிக்கி, வேகமாகப் பாய்ந்து செல்லும் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

யாத்திரிகர்கள் பத்ரிநாத் சென்றடைந்தனர். இதுவும் கேதார்நாத் போன்றே உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட ஒரு சமவெளிப் பள்ளத்தாக்கு ஆகும். இங்கேதான் வெள்ளை சலவைக் கற்களால் ஆன பத்ரிநாராயண் கோயில் உள்ளது. இங்கும், குன்றின் சரிவில் ஓடும் வெந்நீர் ஊற்றிலிருந்து பெறப்பட்ட வெந்நீர் தேக்கம் ஒன்று உள்ளது. யாத்திரிகர்கள் அனைவரும் இந்த நீர்த் தேக்கத்தில் குளிக்கின்றனர். குளிர் மிகக் கடுமையாக இருந்தது. அதே சமயத்தில் ராம் பரிவும், கருணையும் கொண்டவனாக இருந்தான். எனவே ராம்தாஸ் குளிரின் கடுமையை உணரவில்லை.

கோயிலின் நுழைவாயிலில் யாத்திரிகர்கள் கூட்டம் மிக அதிகமாக இருந்ததால் ராம்தாஸ் உள்ளே சென்று பத்ரிநாரயணனை தரிசிப்பது கடினமாயிற்று. ஆனால் நோயுற்ற யாத்ரிகர்கள் மட்டும் பக்கத்தில் இருந்த ஒரு குறுகிய வாயில் வழியாக உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அங்கு, இரண்டு பண்டாக்கள் அல்லது பிராம்மணர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர். ராம்தாஸ் இங்கு உள்ளே செல்ல அனுமதி கேட்டான். அந்த காவலர்களில் ஒருவர் இவ்வாறு கூறினார்:

'நீங்கள் உடல் நலம் இல்லாதவராக இருந்தால், உள்ளே வரலாம்' என்றார், அதற்கு ராம்தாஸ், 'இல்லை, ராம்தாஸுக்கு நோய் ஏதுமில்லை' என விடையளித்தான்.

‘பரவாயில்லை இல்லாவிடினும், நோயுற்றிருப்பதுபோல் நடிக்கலாம்‘, என்று பண்டாஜி ஆலோசனை கூறினார்.

‘அது ஒருபோதும் முடியாது, பொய் சொல்லியாவது பத்ரிநாதனைத் தரிசனம் செய்ய அவன் விரும்பவில்லை. அது ராமனின் கட்டளைக்கு முரணானது.‘

இப்படி கூறிக்கொண்டே ராம்தாஸ் அவ்விடத்தை விட்டு அகன்றுவிட திரும்பினான். ஆனால் பரிவு மிகுந்த பண்டாஜி, ராம்தாஸின் கையைப் பற்றி உள்ளே அழைத்து சென்று, பத்ரிநாதனைத் தரிசனம் செய்வித்து, சிறிது பிரசாதமும் அவனுக்களித்தார். ஓ ராம்! எவ்வாறெல்லாம் நீ உன் அடிமையைச் சோதிக்கிறாய்? பத்ரிநாத்தில் ஒரு நாள் தங்கியபின் சாதுக்கள் தம் திரும்பும் பயணத்தை மேற்கொண்டனர். பல நாட்கள் தொடர்ந்து நடந்து, தெற்கே செல்லும் இரயில் பாதை தொடங்கும் ராம்நகர் என்னுமிடத்தை அவர்கள் அடைந்தனர். மொத்தத்தில் இமயமலைமீது அவர்கள் பயணம் செய்த தூரம் நானூறு மைல்கள். ஹரித்துவாரிலிருந்து ராம்நகர் வந்து சேர நாற்பது நாட்கள் ஆயின.

பெயருக்கேற்ப ராம்நகர் இறைவனருள் நிறைந்த ஒரு இடம். ஈகை இங்குள்ளோரின் இயல்பாகும். நோயுற்ற யாத்திரிகர்களுக்கு சேவை செய்ய காங்கிரஸ் தன்னார்வ தொண்டர்களால் நடத்தப்படும் மருத்துவமனை ஒன்று இரயில் நிலையத்தருகே இயங்கி வருகிறது. ஒவ்வொரு நாளும் மருத்துவமனையின் சேவையை யாத்திரிகர்கள் பலரும் பெறுகின்றனர். செல்வம் படைத்த அந்நகர மக்கள் சிலர், சாதுக்களும், ஏழை யாத்திரிகர்களும் உணவு அருந்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கின்றனர். அவ்விடத்து மக்கள்

கருணையும், விருந்தோம்பல் குணமும் படைத்தவர்கள். ராம்தாஸ் இந்தியாவில் பயணம் மேற்கொண்ட அனைத்து இடங்களிலும் மக்கள் இவ்வாறே இருந்தனரென்று உறுதியாகக் கூற முடியும். ராமனின் ஆணைக்குட்பட்டு ராம்தாஸ் தன் பயணங்களை மேற்கொண்டதால், ராம் அவனது அனைத்து பயணங்களிலும் ஒரே சீரானப் பரிவைக் காட்டியருளினான்.

ராம்தாஸும், ராம்கிங்கரும் ராம்நகரில் மதுராவை நோக்கிச் செல்லும் இரயிலில் ஏறிக்கொண்டனர். குறித்த நேரத்தில் மதுராவை அடைந்தனர். இங்கு ராம்கிங்கர் உடல் நலக் குறைவால் ஜான்சிக்குத் திரும்ப முடிவு செய்தார். பயணம் முழுதும் அவர் ராம்தாஸிடம் அன்னையைவிட மேலாக அனைத்து நிலைகளிலும் அக்கறை காட்டினார். இப்போது ராம்தாஸை விட்டுப் பிரிய வேண்டுமென்பதும் ராமனின் விருப்பம். அதன் விளைவாக ராம்கிங்கர் மதுராவிலிருந்து ஜான்சிக்குச் சென்றார். ராம்தாஸ் இப்போது சில நிமிட நேரமே தனித்திருந்தான், ஏனென்றால், அவன் தங்கியிருந்த அதே தர்மசாலையில் அவனை கவனித்து கொள்வதற்கு ராம் ஒரு சாதுவை ஆயத்தமாய் வைத்திருந்தான்.

## அத்தியாயம் - 27

## மதுரா, கோகுலம் மற்றும் பிருந்தாவனம்

மதுரா, இறைவனின் பத்து அவதாரங்களில் சிறந்த அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த ஸ்தலமாகும். ஸ்ரீ கிருஷ்ணன் அன்பின் மறு உருவம். அழிவற்ற அவன் நாமம் தொன்மைப் புகழுடன் இன்றும் இந்திய மக்களின் மனத்தில் பசுமையாய் நிலைத்து நிற்கின்றது. ஆழ்ந்த வேதாந்த தத்துவங்களுக்கு ஈடு இணையற்ற நூலாகத் திகழ்கிறது ஸ்ரீ கிருஷ்ணன் அருளிய பகவத் கீதை! அது எல்லா உயிர்களும், ஜீவராசிகளும் அடைய வேண்டிய அறுதி இலட்சியத்தை எடுத்துக் காட்டுகிறது. ஒவ்வொருவரும் தன்னால் இயன்ற எல்லா முயற்சிகளாலும் அந்த இலட்சியத்தை அடைய வேண்டும்.

குழந்தை கிருஷ்ணனையும், அவனது மனங்கவரும் லீலைகளையும் மறவாத மதுரா மக்களின் மனோபாவம், இன்றும் சிறு சிறு கோயில்களில் அவனது உருவச் சிலைகளை ஆடம்பரமான ஆடை அணிகலன்கள் சாற்றி வழிபடுவதிலிருந்து நன்கு தெளிவாகிறது. ராம்தாஸ் மதுரா வந்து சேர்ந்த நாளன்று ராம்கிங்கர் காய்ச்சலில் படுத்திருக்க - புதிய சாதுராமுடன் தொடர்பு ஏற்படாத நிலையில் - புனித யமுனையைத் தேடி ஊரினுள் சென்றான். எப்பொழுதும் அவனுக்கு உதவி செய்யக் காத்துக் கொண்டிருக்கும் ராம், நதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த அந்தணர் ஒருவருடன் அவனை தொடர்பு கொள்ள

வைத்தான். அவர் ராம்தாஸிடம் தானே வலிய வந்து அவனை நதிக்கு அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

புண்ணிய நதியான யமுனையை அடைந்த ராம்தாஸ் முதலில் தன் துணிகளை துவைத்து, பின்னர் குளிப்பதற்காக நதியில் இறங்கினான். அவ்வாறு இறங்குவதற்குமுன் அவன் தன் மூக்குக் கண்ணாடியையும், செம்பையும் நதியின் கற்படி ஒன்றின் மேல் வைத்தான். குளித்ததும் தன் செம்பு வைத்திருந்த இடத்திற்கு வந்து கொண்டிருந்தான். அந்த இடத்திற்கு வருவதற்கு ஒரு கணம்தான் தாமதித்திருப்பான், அதற்குள் ஒரு குரங்கு மூக்குக் கண்ணாடியைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டது. கண்ணாடி இன்றி ராம்தாஸ் தொலைவிலுள்ளப் பொருட்களைத் தெளிவாய்க் காணமுடியாது. வழிகாட்டியான அந்த அந்தணர் நடந்ததைக் கண்டுச் சினமடைந்தார். ஆனால் ராம்தாஸ் சிறிதும் கவலையின்றி இவ்வாறு கூறினான்:

இவை எல்லாம் ராமனின் இச்சையே! ஒரு வேளை இழந்த என் பார்வையை ராம் மீட்டுக் கொடுப்பான் போலும் என்றுத் தனக்குள் எண்ணினான்.

ஆனால், அந்த அந்தணர் திருப்தி அடையவில்லை, அங்கு தன் அருகில் நின்ற இரு சிறுவர்களை அழைத்து அந்த குரங்குகளின் பின் சென்றுக் கண்ணாடியை மீட்டு வரச் சொன்னார். அந்த குரங்கோ ஒரு கோபுரத்திலிருந்து மற்றொரு கோபுரத்திற்குத் எனத் தாவிக்கொண்டே இருக்க, மற்ற குரங்குகள் முதல் குரங்கிற்கு ஏதோ தின்பண்டம் கிடைத்திருப்பதாக எண்ணி அதைப் பின் தொடர்ந்தன. எனினும் பதினைந்து நிமிடத்திற்குள் அச்சிறுவர்கள் மூக்குக் கண்ணாடியை நல்ல நிலையில் மீட்டு வந்தனர். இவை அனைத்தும் தன் எளிய அடிமைக்கு ராம்

கொடுக்கும் சோதனையேயன்றி வேறொன்றுமில்லை. வழிகாட்டியான அந்த அன்பான அந்தணரின் உதவியால் ஸ்ரீ கிருஷ்ணனின் கோயில்கள் சிலவற்றை தரிசித்தப்பின், மறுநாள் அவன் புதிய சாதுராமுடன் கோவர்த்தனகிரிக்கு புறப்பட்டான்.

கோவர்த்தனகிரி மதுராவிலிருந்து பதினான்கு மைல்கள் தொலைவில் இருந்தது. நண்பகல் அவர்கள் அவ்விடத்தை அடைந்தனர். இங்குதான் ஸ்ரீ கிருஷ்ணன், தன் நண்பர்களான இடையர்களையும், பசுக்களையும் இந்திரனின் கோபத்தால் உண்டாகியப் பெருமழையிலிருந்துக் காப்பாற்றுவதன் பொருட்டு, தன் சுண்டு விரல்முனையில், தூக்கிய, புகழ்பெற்ற கோவர்த்தனக் குன்று உள்ளது. ஆனால், இந்தக் குன்று சிதைந்து சிதைந்து, சுற்றியுள்ள நிலப்பரப்புடன் சமமாகி விட்டது. இக்குன்றிலிருந்து உடைத்து எடுக்கப்பட்ட கற்கள் பெரும்பாலும் அவ்விடத்தில் வீடு கட்டப் பயன்படுத்தப்பட்டுவிட்டன. ஆயினும், குன்றின் நினைவாக அதன் பாறைத்துண்டு ஒன்று சுற்றிலும் இரும்புவேலி போடப்பட்டு, மேலே கூரையும் போடப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இக்கற்பாறை மீது யாத்திரி கர்கள் நெய், பால், தயிர் அபிஷேகம் செய்து வழிபட்டு வருகின்றனர். இந்தப் பாறையிலிருந்தும் யாத்திரிகர்கள் சிறு துண்டுகளை உடைத்து நினைவுச் சின்னமாக எடுத்துச் செல்கின்றனர். அங்கு ஒரு தர்மசாலையில் ராம்தாஸும், சாதுராமும் உணவைப் பெற்றபின், பிற்பகல் சிறிது நேரம் இளைப்பாறினர்.

அன்று மாலை அவரும், சாதுராமும் ஊருக்குள் செல்லும் சாலையில் செல்லும்போது தூரத்திலிருந்து பஜனை ஒலியைக் கேட்டனர். ராம் அவர்களை அங்கு அழைத்துச் சென்றான். சிறிது

நேரத்தில், அவர்கள் ஒரு சிறிய ராமர் கோயிலை அடைந்தனர். அங்கு விக்ரகங்களுக்கு முன் சுமார் ஆறு சாதுக்கள் உட்கார்ந்து கஞ்சீரா, மிருதங்கம் போன்ற பக்க வாத்தியங்களுடன் புகழ்மிக்க ராமனின் நாமத்தை பாடிக்கொண்டிருந்தனர். 'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே; ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே' எனும் நாம சங்கீர்த்தனம் செய்தனர்.

இந்த பஜனை மீண்டும், மீண்டும் பற்பல ராகங்களில் பாடப்பட்டபோது, சுற்றுச் சூழல் முழுவதிலும் தெய்வத்தன்மை கொண்ட வசீகர சக்தியால் நிரம்பி சாந்தி நிலவியது. அமைதியும், மகிழ்ச்சியும் நிறைந்த அந்த ராமநாம ஒலியில் முற்றிலும் மூழ்கிய ராம்தாஸ் அங்கு நான்கு மணி நேரம் இருந்தான். அடுத்த நாள் அவனும், சாதுராமும் மதுராவிற்குத் திரும்பி வந்தனர். இங்கு சிறிது நேரம் தங்கியபின், சாதுராமை தவறவிட்ட ராம்தாஸ் ஐந்து மைல்களுக்கு அப்பால் உள்ள கோகுலத்திற்கு தனியே சென்றான். ஆஹா! ஸ்ரீ கிருஷ்ணன் குழந்தைப் பருவத்தில் வளர்ந்ததும், விளையாடியதும், தன் அற்புதச் சக்திகளை வெளிப்படுத்தியதும் இந்த கோகுலத்திலன்றோ! இங்கும் புனித யமுனை ஓடுகிறது. ஸ்ரீ கிருஷ்ணன் 'காளிங்கன்' என்னும் விஷப்பாம்பின் சிரசின் மேல் நடனமாடியது அநேகமாக இந்த இடத்தில், இந்த நதியில் இருக்கலாம். இங்கு ஒரு நாள் தங்கிய பின் அவன் மதுராவிற்குத் திரும்பி, அங்கிருந்து ஆறு மைல் தொலைவிலுள்ள பிருந்தாவனத்திற்குப் புறப்பட்டான்.

பிருந்தாவன் மகிழ்ச்சி ததும்பும் இடம். இங்கும் அதே யமுனை முழு அமைதியுடனும், தூய்மையுடனும் ஓடுகிறது.

நதிக்கரையில் வேப்ப மரங்கள் மற்றும் பல மரங்கள் அடங்கிய இயற்கை தோட்டங்கள் அமைந்திருந்தன. அன்னை யமுனையின் மடியிலிருந்து இளந்தென்றல் இவ்விடத்தில் வீசும் சமயத்தில், மரங்களின் நிழலடியில் உட்கார்ந்திருப்பது சுவர்க்கத்தையே அனுபவிப்பது போன்று உள்ளது. அவன் இந்த இடத்தின் அழகில் வசீகரிக்கப்பட்டவனாய் நதிக்கரையில் இரண்டு வாரங்கள் தங்கினான். இரவில், நதிக்கரையில் உலர்ந்த மணலை படுக்கையாகவும், இருக்கையாகவும் பயன்படுத்தினான்; மரங்களின் நிழலை பகலில் ஓய்விடமாகவும் அமைத்துக் கொண்டான். நிலவொளி கூடிய இரவுகள் மனத்தைச் சுண்டி இழுத்தன. அங்கு வீசும் காற்றில் கூட அன்பின் அவதாரமான ஸ்ரீ கிருஷ்ணன் நிறைந்திருப்பது போல் தோன்றியது. ஸ்ரீ கிருஷ்ணனின் இனிய மதிமயக்கத்தைத் தரக்கூடிய புல்லாங்குழலின் இசையையும், நர்த்தனமாடும் அவன் புகழ்மிக்கப் பாதங்களில் அணிந்திருந்த சலங்கைகளில் உள்ள சிறு வெள்ளி மணிகளின் கிண்கிணி ஓசையையும், அங்கு வீசிய மெல்லிய பூங்காற்று ராம்தாஸின் காதுகளுக்குக் கொண்டு சேர்த்தது. அவ்வப்போது 'ராதே சியாம், ராதே சியாம்' என்ற ஆழ்ந்த, மென்மையான குரல் காற்றில் வந்தது. ராம்தாஸ் அங்கே முழுமையான பேரானந்தத்திலும், மெய்மறந்த தெய்விகப் பெருநிலையிலும் இருந்தான். அவன் அறியாமலே நாட்கள் உருண்டோடின. அங்கு தங்கிய நாட்களனைத்தும் நீண்ட, இனிய, மனதுக்கு உவகை தரும் கனவுபோல் தோன்றியன.

பிருந்தாவனத்தில் ராம்தாஸ் பல கிருஷ்ணன் கோயில்களைத் தரிசித்தான். அவற்றுள் 'ரங்கநாத் கோயில்' மிகவும் பெரியதாகக் கண்ணைக்கவரும் வண்ணம் அமைந்திருந்தது. அக்கோயில்,

சுற்றிலும் உயரமான மதில் சுவர்களால் சூழப்பட்ட கோட்டையை ஒத்திருந்தது. நுழை வாயில், உட்கட்டிடங்கள் மற்றும் கூரைகள் அனைத்தும் கலை நயத்துடன் செதுக்கப்பட்டக் கற்களால் கட்டப்பட்டிருந்தன. முடிவாக, அவ்விடத்தை விட்டு அகல ராமனிடமிருந்து ஆணை வந்தது. ராம்தாஸ் மதுராவிற்குத் திரும்பி வந்து அங்குள்ள நண்பர்களால் சுட்டிக் காட்டப்பட்ட ஒரு இரயிலில் ஏறிக் கொண்டான்.

## அத்தியாயம் - 28
## ராய்ப்பூர்

இரயில் அவனை ராய்ப்பூருக்குக் கொண்டு சென்றது. ராமனுடைய செயல்களெல்லாம் விசித்திரமானவை. எனவே, தரிசிக்கத்தக்க எந்த புண்ணிய ஸ்தலமும் இல்லாத ராய்ப்பூருக்கு அவன் ஏன் அழைத்து வரப்பட்டானென்றுத் தெரியவில்லை. சாதுராமுடன் இணைந்து ராம் கருணையுடன் அளித்த மதிய உணவிற்குப் பிறகு, சாதுராமனின் ஆலோசனைப்படி இருவரும் அவ்விடத்து அழகிய தோட்டம் ஒன்றிற்குச் சென்றனர். இங்கு ஒரு கால்வாயில் குளித்த பிறகு, ராம்தாஸ் தன்னுடன் கொண்டு வந்திருந்த ஒரு சிறிய மான் தோலை (ஜான்சியில் ராம் ஒரு நண்பர் மூலமாக அன்பளிப்பாகக் கொடுத்தது) ஒரு மர நிழலில் விரித்து அதன்மீது படுத்து கண்களை மூடியபோது, யாரோ அவன் தோள்களை மெல்ல உலுக்குவதை உணர்ந்தான். கண்ணைத் திறந்ததும் தன் பக்கத்தில் ஒரு முகம்மதிய இளைஞனைக் கண்டான்.

'தொந்தரவிற்கு மன்னிக்க வேண்டும், ஐயா' என்று அந்த இளைஞன் இந்துஸ்தானியில் கூறினான்.

ராம்தாஸ் எழுந்து அமர்ந்து அந்த இளைஞனுக்கு என்ன வேண்டுமென விசாரித்தான்.

'நான் தங்களுடன் சற்று உரையாட வந்திருக்கிறேன். தங்களுக்கு முகம்மது நபியிடம் நம்பிக்கை உள்ளதா என அறிய

வந்துள்ளேன்' என்று கூறினான் அந்த இளைஞன்.

'ஏன் இல்லை? இறைவனின் சிறந்த தூதர்களில் அவரும் ஒருவர்' என்று விடையளித்தான் ராம்தாஸ்.

'தூதர்களில் அவரும் ஒருவர் என்று ஏன் சொல்ல வேண்டும்? அவர் ஒருவரே என ஏன் சொல்லக்கூடாது?' என்று கேள்வியை எழுப்பினான் அந்த முகம்மதிய இளைஞன்.

'சகோதரா! முகம்மது நபி ஒரு அவதார புருஷர். ஆனாலும் அவரைப் போன்றே இன்னும் பல அவதார புருஷர்கள் உள்ளனர். உதாரணத்திற்கு, புத்தர், ஏசு, கிருஷ்ணன் ஆகியோரும், மேலும் சமீபகாலத்தில், மகாத்மா காந்தியும் ஆவர். அவர்கள் உலகிற்கு அளித்த செய்தியை நீ புரிந்து கொள்ள முயன்றால், முக்கியமான கருத்துக்கள் அனைத்தும் ஒத்தவையாக இருப்பதை நீ அறிவாய், மேலும் அவர்கள் ஒரே குறிக்கோளையே மனித இனத்திற்கு சுட்டிக் காட்டுகின்றனர் என்பதையும் கண்டு கொள்வாய்.'

இந்த வார்த்தைகள் அந்த முஸ்லீம் நண்பனின் மனதில் ஆழப் பதிந்தன. ராம்தாஸின் அனுபவங்கள் பற்றிய உரையாடல்கள் மேலும் சிறிது நேரத்திற்குத் தொடர்ந்தது. அந்த இளைஞன், ராம்தாஸ் செல்லும் இடங்களுக்கெல்லாம் அவனைப் பின் தொடர்வதென்றுத் தன் மனதில் முடிவெடுக்கும் அளவிற்கு ராம்தாஸின்மேல் நேசம் கொண்டுவிட்டான். இந்த முடிவு தீடீரென்று ஏற்பட்ட ஒரு உணர்ச்சியின் தாக்கமென்றும், எனவே தன்னை அவ்வாறு தொடரலாகாது என்றும், மேலும் அவனைத் தன்னுடன் அழைத்துச் செல்ல ராமனின் உத்தரவு எதுவுமில்லை என்றும் ராம்தாஸ் தெரிவித்தான். அவனுடன்

சிறிது நயமாக பேசியப் பின்னர் அந்த இளைஞன் தன் எண்ணத்தைக் கைவிட்டான். ஆனால், ராம்தாஸிடமிருந்து நினைவுச் சின்னமாக ஏதாகிலும் தனக்கு வேண்டுமென்று அவன் கேட்டான். தன்னிடமுள்ள எதனையும் அவனுக்கு கொடுக்கத் தனக்குச் சம்மதமென்றும், அவனுக்கு வேண்டியதை தானே கேட்கலாம் என்றும் கூறினான் ராம்தாஸ். அந்த அன்பான நண்பன் மான் தோல் வேண்டுமென்றான், உடனே அது அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதை பெற்றுக் கொள்ளும் போது அவன் சொன்னான்:

'இதை பெற்றுக் கொண்டதின் நோக்கம், என்னுடைய 'நமாஸ்' செய்வதற்குத்தான். அதாவது, இதன் மேல் அமர்ந்து அல்லாவை தொழுவதற்கு ஆகும். அத்துடன் ஒவ்வொரு முறையும் பிரார்த்தனை செய்யும்போதும் இந்த மான்தோல் தங்களை என் நினைவுக்குக் கொண்டு வரும். பிரியும்போது அந்த நண்பன், அடுத்தாற்போல் எங்கே போவதாக உத்தேசம் என்று ராம்தாஸிடம் கேட்டான். ராம் தன்னை அடுத்ததாக ஆஜ்மீருக்கு அழைத்துச் செல்லக் கருதியிருப்பதாக ராம்தாஸ் விடையளித்தான்.

'சரி , அது நல்லது, அவ்விடத்தில் 'காஜாபிர்' என்னும் புகழ்மிக்க முஸ்லீம்களின் புனித ஸ்தலத்தை காணத்தவறாதீர்கள். அதற்குச் செல்லும் வழியை எந்த முகம்மதியரும் தங்களுக்குக் காண்பிப்பார் என்று அந்த நண்பன் கூறினான்.

ராம்தாஸ் அந்த அறிவுரையை, நடக்கவேண்டியதைக் குறித்து முன்கூட்டியே கூறப்பட்ட வார்த்தைகளாகக் கொண்டான். உரிய நேரத்தில் ராம்தாஸ் ஆஜ்மீர் அடைந்தான். அது இரவு நேரம்.

அவன் இரயில் நிலையத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் போது, ஒரு காவலர் குறுக்கிட்டு அவனை அவ்விடத்தை விட்டு விரட்டினார். அதே இரயிலில் வந்திறங்கிய மற்ற சாதுக்கள் அனைவரையும் இரயில்வே காவலர் இரயில் நிலையத்தில் ஓய்வெடுக்கூடாதாதென்று ஆட்சேபித்து, அங்கிருந்து வெளியேறுமாறு ஏவினார். இரயில் நிலையத்தின் சுற்றுச் சுவர்களுக்குள் இருந்த ஒரு மரத்தடியை நாடினான் ராம்தாஸ். ஆனால், அந்த காவலர் அங்கிருந்தும் அவனை விரட்டினார். சற்று அலைந்தபின் சுற்றுச் சுவர்களுக்குள், தொலைவில் ஒரு மூலையில் இருந்த மற்றொரு மரத்தின் கீழ் ஒரு இடத்தை கண்டான். கீழே தரையில் விரிப்பதற்கு ஏதுமில்லாததால், அவன் கட்டாந்தரையில் படுத்துக் கொண்டான். அவனது மூக்கு தரையினருகே வந்ததும் சிறுநீர் துர்நாற்றம் மூக்கைத் துளைத்தது. ஓ ராம்! எவ்வளவு பரிவு காட்டுகிறாய்! உனது எளிய அடிமையை அவனது நன்மைக்காகவே எல்லாவிதமான அனுபவங்களையும் பெறச் செய்கின்றாய்.

இந்த அனுபவம், அழியக்கூடிய இவ்வுடலை பேணி காத்தல் எவ்வளவு அறிவீனம் என்று அவனுக்குக் கற்பித்தது. மேலும் இந்த அனுபவத்தால் தன் உண்மை நிலையை, அதாவது மிக மிகத் தாழ்ந்த நிலையை, உணரச் செய்துள்ளது. ஓ ராம்! இவனுக்கு இந்த அனுபவத்தை அளிப்பதற்காக நீ தான் அந்த காவலராய்த் தோன்றி இச்சூழ்நிலையை உருவாக்கினாய். இங்கு ராமனின் குழந்தையான ராம்தாஸ், சர்வசக்தி உடைய ராமனின் அன்பு அரவணைப்பில் காலை வரை நன்கு உறங்கினான்.

## அத்தியாயம் - 29
## அஜ்மீர்

பொழுது புலர்ந்ததும் ஊரை நோக்கி நடந்தான் ராம்தாஸ். தான் எங்கு செல்வதற்கு வழிகாட்டப்படுகிறோம் என்பதையும் அறியாதவனாய், ராமனைத் தியானித்தவாறு மக்கள் கூட்டம் நிறைந்த அஜ்மீர் தெருக்களில் சென்று கொண்டிருந்தபோது, உயரமாய்த் தடித்த முகம்மதியர் ஒருவர் அவனை நிறுத்தி, தன்னைப் பின்தொடருமாறு சைகை செய்தார். தனக்கு வரும் அழைப்புகளெல்லாம் ராமனிடமிருந்தே என்று நினைக்கும் ராம்தாஸுக்கு, இதுபோன்ற நிலைகளில் செய்வதற்கு ஒன்றுமில்லை. ஆதலின் எந்தவித தயக்கமும் இன்றி, அந்த முகம்மதியர் தன்னை எங்கு அழைத்துச் செல்கிறார் என்பதைப்பற்றி அறியாதவனாய், அறிய அக்கறை இல்லாதவனாய் அவருக்கு கீழ்ப்படிந்தான். சுமார் ஒரு மைல் தொலைவு தெருக்களின் வழியே நடந்த பின்னர், முடிவில் வளைவான ஒரு வாசலின்முன் நின்றனர். ராம்தாஸ் கூடவே பின் தொடர, நண்பர் உள்ளே நுழைந்தார். முற்றத்தைக் கடந்துச் சில படிகள் கீழே இறங்கி, ஒரு கதவின் வழியே உள்ளே சென்றதும், அழகிய மசூதி ஒன்று காட்சி அளித்தது. அதனுள் சென்றதும், குவிந்த கூரையுடன் கண்ணைக்கவரும் வண்ணம் செதுக்கப்பட்ட மிகப் பெரிய வெள்ளி 'தாபூத்' அல்லது மண்டபம் முன்பு தான் நிற்பதை அவன் கண்டான்.

'இது தான் காஜாபிர், மண்டி இட்டு வணங்கி, முகம்மது

நபியின் சீடராய்ச் சேருங்கள்' என்று உரக்கக் கூறினார் முகம்மதிய நண்பர்.

உடனே ராம்தாஸ் அவர் சொற்படி, மிக சிரத்தையுடன் மண்டியிட்டான். பிறகு அந்த அன்பான நண்பரைப் பார்த்து அவன் கூறினான், 'சகோதரரே! நான் முகம்மதுவின் சீடனாக சேருவதற்கு அவசியமில்லை, ஏனென்றால் அவன் ஏற்கனவே முகம்மதின் சீடன்.'

ஓ ராம்! ஓ முகம்மதுவே! தாங்கள் செயல்படும் வழிகள் எவ்வளவு வியப்புக்குரியது, அந்த ராய்ப்பூர் முஸ்லீம் இளைஞனின் ஆர்வம் மிகுந்த விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு ராம்தாஸை முகம்மதியர்களின் புனித ஆலயத்திற்கு அழைத்து வந்து தரிசனம் செய்வித்துள்ளீர்கள். ஓ ராம், போற்றி! போற்றி! ஓ முகம்மதுவே போற்றி! போற்றி!

அங்கிருந்து வழிகாட்டியபடி அந்த முஸ்லீம் நண்பர் ராம்தாஸை பிரதான சாலையில் கொண்டுவிட்டார். இதன் பிறகு விரைவிலேயே, உள்ளத் தூய்மையும், இளகிய இதயமும் கொண்ட சுவாமி ராமச்சந்திரா என்ற சந்நியாசி, ராம்தாஸைக் கவனித்துக் கொள்ள ஆரம்பித்தார். அவர் ராம்தாஸிடம் மிகுந்தப் பாசமும் பரிவும் கொண்டு எல்லாவிதத்திலும் அவனை நன்கு கவனித்து வந்தார். ஓ ராம்! ஒன்றும் அறியாத தங்கள் அடிமை எவ்வாறு தங்களின் செயல்களை புரிந்துக் கொள்வான்? இவனுக்கு தெரிந்ததெல்லாம் இதுதான் - நீ பரிவு மிக்கவன், அன்பே உருவானவன். முதலில் அந்த சுவாமி கடைத் தெருவில் அன்ன க்ஷேத்திரத்தைப் (தர்மசாலை) பற்றி விசாரித்தார். தகவல் கிடைத்ததும், இரண்டு உணவுச் சீட்டுகள் பெற்று, அவனை அங்கு அழைத்துச் சென்று, உணவருந்தியபின் ஒரு

ஓய்விடத்திற்கு வழிகாட்டி, தான் கொண்டு வந்திருந்த படுக்கையை ராம்தாஸ் எவ்வளவோ தடுத்தும் அவனுடன் பகிர்ந்துக் கொண்டார். ராமனின் எளிய அடிமையிடம் அவர் காட்டிய அன்பு உண்மையில், எல்லையில்லாதது. ஓ ராமா! நீயேதான் இந்த வழிகாட்டிகள் உருவில் தோன்றி உன்னுடைய அடிமையை வழிநடத்தியும், உணவளித்தும், அனைத்து விதங்களிலும் அக்கறை காட்டுகிறாய். உண்மையில், ராம்தாஸ் எந்த ராமனை இரவும், பகலும் தியானித்து வருகின்றானோ, அந்த இறைவனின் வெளிப்பாடுகளாகவே ராம்தாஸ், அனைத்து மனிதர்களையும், ஜீவராசிகளையும், பொருள்களையும் காண்கிறான். சுவாமியும், ராம்தாஸும் அஜ்மீரில் மூன்று நாட்கள் தங்கிய பின்பு 'புஷ்கரம்' என்ற ஸ்தலத்திற்குச் சென்றனர். மலை வழியே ஐந்து மைல்கள் பயணம் செய்தப் பின்னர், ஒரு பெரிய இயற்கை நீர் தேக்கத்தை அடைந்தனர். அதன் ஒரு பக்கத்தில் கோயில்களும், தர்மசாலைகளும் கட்டப்பட்டிருந்தன. அந்த ஸ்வாமியும், ராம்தாஸும் ஒரு தர்மசாலையில் தங்கினர். இங்கு ராம்தாஸ் ராமத் தியானத்தில் ஐந்து நாட்கள் கழித்தான், சுவாமி ராமச்சந்திரா இன்னும் சில நாட்கள் புஷ்கரத்தில் தங்க நேரிட்டது.

ராம்தாஸ் ராம் ஆணையின்படி அவ்விடத்தை விட்டு அகன்று அஜ்மீருக்கு தனியாகப் புறப்பட்டான். அங்கே அவனுக்கு ஒரு சாதுவின் துணை கிடைத்தது. இரயிலில் பயணம் செய்வதை ராம் தடுத்ததால், அவர்கள் சுமார் பதினாறு மைல்கள் நடந்து அதன் பின்னர் ஒரு இரயிலில் ஏறினர். தனக்கு அஜீரணக் கோளாறு என்று முறையிட்ட சாதுராம், வழியில் சிறிதளவே உணவு உட்கொண்டு, பதினாறு மைல்கள் நடந்ததன் விளைவாக முழுமையாக உடல் நலம் பெற்றார். ராம் அனைத்தும்

நன்மைக்காகவே செய்கிறான். 'மெஹ்சானா' என்ற இரயில் சந்திப்பில் சாதுக்கள் இருவரும் மற்றொரு சந்நியாசியை சந்தித்தனர். அவருடைய ஆலோசனையின்படி அவர்கள் அவருடன் சேர்ந்து தர்மபுரி என்றழைக்கப்படும் இரயில் நிலையத்திற்குச் சென்றனர். அங்கே இறங்கியதும் சிவன் கோயிலுக்கருகில் வசிக்கும் ஒரு சாதுவின் ஆஸ்ரமத்தை நோக்கி நடந்தனர். அந்த சாது அவர்களுக்கு இதயபூர்வமான வரவேற்பளித்து, அவர்கள் தங்குவதற்கு இடம், உண்ண உணவு முதலானவற்றைக் கொடுத்தார்.

ராம்தாஸ் சில நாட்கள் அந்த ஆஸ்ரமத்தில் தங்குமாறு வற்புறுத்தப்பட்டான். சாதுராம் அவ்வாறு தங்க இயலாததால், இரண்டு நாட்கள் அங்கு தங்கிய பிறகு தனது பயணத்தைத் தொடர்ந்தார். ராம்தாஸ் அந்த ஆஸ்ரமத்தில் ஒரு வாரம் தங்கியபின், பக்கத்து கிராமத்திலிருந்து வந்த இரு சந்நியாசிகள், ராம்தாஸை வனத்திற்குள் இருக்கும் தங்கள் ஆஸ்ரமத்திற்கு அழைத்துச் சென்றனர். ராமத் தியானம் செய்வதற்குப் பொருத்தமான இடமாகத் தோன்றியதால், அவன் அந்த வனத்தில் தங்கினான். சந்நியாசிகள் அவனிடம் மிக்க பரிவைக் காட்டினர். இந்த வனத்தில் நரஹரிக்காக ஒரு சிறிய கோயில் இருந்தது. இந்த கோயிலின் உட்பகுதி முழுமையான சதுர வடிவில் அமைந்து, நான்கு பக்கங்களும் ராம்தாஸின் உயர அளவில் இருந்தது. இரவில் ஒன்றிரண்டு மணி நேர உறக்கத்தைத் தவிர மற்ற நேரம் முழுவதும் மேன்மை பொருந்திய ராம நாமத்தையே ஜெபித்துக்கொண்டு இருந்தான்; இங்கே, தன்னையே முழுமையாக நம்பி, முற்றிலும் சார்ந்திருக்கும் தன் பக்தர்களை ராம் மிகுந்த அக்கறையுடன் காத்து வருகிறான் என்பதை எந்தவித ஐயப்பாடுமின்றி நிரூபித்து காட்டினான்.

அந்தக் காட்டில், காட்டுப்பன்றிகள், பாம்புகள், தேள் மற்றும்

கொடிய விஷ ஜந்துக்கள் மலிந்திருந்தன. ஒவ்வொரு இரவும் 20, 30 காட்டுப்பன்றிகள் அடங்கிய மந்தை, எந்நேரமும் வாயில் கதவு திறந்திருக்கும் கோயிலைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ளும். கோயிலைச் சுற்றியுள்ள சதுப்பு நிலத்திலிருந்த வேர்களை, உணவிற்காகத் தங்களின் நீண்ட மூக்கினால் தோண்டி எடுக்க இங்கு வருகின்றன. அவைகள் அங்கு உலாவ வரும்போது, ராம்தாஸ் சர்வ சுதந்திரமாகத் தடையின்றி வெளியே உலாவிக் கொண்டிருப்பான். ஆனால், ராமனின் அருளால் அவை அவனுக்கு எந்தவிதத் தீங்கும் இழைக்கவில்லை. பகலில் அங்கே வரும் கிராமவாசிகள் இந்தக் காட்டு மிருகங்களின் துஷ்டத்தன்மையைப் பற்றி எச்சரிக்கை செய்தனர். ஆனால், ராமனிடம் முழுமையான நம்பிக்கை என்பது, முழுபாதுகாப்பும், அச்சமின்மையும் ஆகும். மேலும் இரவும், பகலும் எந்நேரமும் கோயிலில் நீண்ட கருநாகங்கள் சுதந்திரமாக உலவி வந்தன. ஆனால், அவை ராம்தாஸுக்கு எவ்விதத் தொல்லையும் தந்ததில்லை. பரிவு மிக்க அந்த சந்நியாசிகளால் அளிக்கப்பட்டு, பகலில் விரித்து உட்காரவும், இரவில் படுக்கையாகவும் உபயோகப்படுத்தப்பட்ட கோணியை ஒவ்வொரு நாள் காலையிலும் எடுக்கும்போது அதனடியில் சிவப்பு, மஞ்சள் நிறத்தேள்கள் பல காண்பான். ஆனால் அவைகளில் ஒன்றுகூட அவனை தீண்டியதில்லை.

ஓ ராம்! உன் அன்புக் கரங்கள் என்றும் உன் எளிய அடிமையைக் காப்பதற்குத் தயாராக இருக்கும்போது அவனுக்கு யார்தான் தீங்கிழைக்க முடியும்? ஓ ராம்! நீ எங்கும் இருக்கின்றாய், அகில உலகத்திலும், அனைத்து உயிரினங்களிலும் இருக்கின்றாய், உலகத்தில் இருக்கும் அனைத்தும் உன் வெளிப்பாடே ஆகும். ஓ ராம்! புகழனைத்தும்

உனக்கே! ராமனின் ஆணையின்படி ராம்தாஸ் அந்தக் காட்டில் ஒன்றரை மாதம் தங்கியிருந்தான். பிற்பகல் பெரும்பாலும் பசுக்களை மேய்க்க அந்த காட்டிற்கு வரும் இடைய சிறுவர்களுடன் கழிப்பான். அவர்கள் புல்லாங்குழலில் இசையை எழுப்பி, அந்த இனிய இசையைக் கேட்கும் மகிழ்ச்சியை ராம்தாஸுக்கு அளித்தனர். அச்சிறுவர்கள், ராம்தாஸுக்கு மகிழ்ச்சி ததும்பும், சுறுசுறுப்பான குட்டி கிருஷ்ணர்களாகக் காட்சி தந்தனர். ராம் அருளால் அங்கு தங்கிய நாட்கள் முழுதும், ஒரு உல்லாசமான வாசமாகக் கழிந்தது.

ஒரு சமயம் பரிவு மிக்க அந்த சந்நியாசி நண்பர் தர்மபுரியிலிருந்து பல இரயில் நிலையங்களுக்கு அப்பால் உள்ள யாதவபூர் என்னும் கிராமத்திற்கு, ராம்தாஸை அழைத்து சென்றார். இங்கு சாதுக்களின் பெரும் கூட்டம் ஒன்று குழுமியிருந்தது. ஏறக்குறைய 200 சாதுக்கள் அங்கு இருந்தனர். அது ஒரு சத்சங்க பெருவிருந்து. இதில் ஒரு அழகு என்னவெனில், அந்த கிராமவாசிகளின் ஈடு இணையற்ற அன்பான விருந்தோம்பல்தான். அவர்கள் தங்களிடமிருந்த அனைத்து வசதிகளையும் சாதுக்களுக்கு அளித்தனர். ஒரு நாள், அவ்விடம் விட்டு அகல, ராம்தாஸுக்கு ராமிடமிருந்து ஆணை வந்தது. அவ்வாறே - தங்களுடன் இன்னும் சில மாதங்கள் ராம்தாஸ் தங்க வேண்டுமென்ற சந்நியாசிகளின் விருப்பத்திற்கு மாறாக - அவன் காட்டைவிட்டுப் புறப்பட்டான். இரயில் நிலையத்தில் அவனை ஒரு வியாபாரியிடம் ராம் ஒப்புவித்தான். அவ்வியாபாரி தான் எவ்வளவு தொலைவு பயணம் செய்கிறாரோ அதுவரை அவனை அழைத்துப் செல்வதாக உறுதி அளித்தார். இங்கே நடந்த சம்பவம் ஒன்றினை விவரித்தே ஆக வேண்டும்.

## அத்தியாயம் - 30

## பணம் தீமையின் ஆணிவேர்

வியாபாரியும், ராம்தாஸும் இரயிலுக்குள் ஏற முயன்றபோது, அங்கு பயணிகளின் கூட்டம் மிகுந்திருந்தது, எனவே, வியாபாரி இரயில் பெட்டிக்குள் நுழைவதற்கு கூட்டத்தை முட்டித் தள்ளி வழிசெய்துக் கொண்டே உள்ளே செல்ல வேண்டி இருந்தது, ராம்தாஸும் அவரைப் பின் தொடர்ந்தான். ராம்தாஸ் சிறிது இடம் கிடைத்து உட்கார்ந்தபோது, அந்த வியாபாரி அவனிடம் வந்து, 'மகராஜ்! பதினைந்து ரூபாய்களும், இரயில் டிக்கெட்டும் உள்ள என்னுடைய தோல் பணப்பையை எவரோ திருடிக் கொண்டுப் போய்விட்டார்' என்று தெரிவித்தார். அவர் கையில்லாதத் தன் அரைச்சட்டைப்பையின் உள் பக்கம், பணப்பையை எடுப்பதற்கு ஏற்றது போல் வெட்டப்பட்டிருந்ததைக் காண்பித்தார். இவையனைத்தும் சில வினாடிகளில் நடந்தேறிய செயலாகும்.

'இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? என்னிடம் பயணச்சீட்டும் இல்லை, பணமும் இல்லை. நான் இதை இரயில்வே காவலரிடம் புகார் செய்யலாமா?' என்று மேலும் தொடர்ந்தார். இந்நிலையில் இரயில் புறப்படத் தயாராக இருந்தது.

'இந்த எளியவனிடம் நீங்கள் அறிவுரை கேட்டதினால் சொல்கிறேன்' என்று தொடந்தான் ராம்தாஸ், 'இவன் தங்களை இவ்விஷயத்தில் மௌனமாக இருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறான். இந்த விஷயத்தில் எரிச்சலடைவதாலோ, அல்லது

குழப்பமடைவதாலோ எந்தவித நன்மையும் ஏற்படப் போவதில்லை. டிக்கெட்டை பொறுத்தவரை, டிக்கெட் இன்றி செல்ல வேண்டிய இடம் வரைப் பயணம் செய்யலாம். பயணத்தின் இடையிலோ அல்லது இறங்க வேண்டிய இரயில் நிலையத்திலோ இரயில்வே அதிகாரிகள், உங்களிடம் டிக்கெட் கேட்டால், நீங்கள் பணப்பையையும், டிக்கெட்டையும் இழந்த அந்த விவரத்தை விளக்கிக் கூறலாம், மேலும் அதற்குச் சான்றாக உங்கள் கிழிக்கப்பட்ட அரைக்கை சட்டைப்பையை அவர்களுக்கு காண்பிக்கலாம்'.

எளிய ராம்தாஸின் அறிவுரை அந்த வியாபாரியைத் திருப்திப் படுத்தவில்லை, மேலும், இரயில்வே காவலர்களிடம் இவ்விஷயத்தைக் குறித்துப் புகார் செய்யும்வரை அவர் மனமும் அமைதி அடையவில்லை. இப்போது, ஒரு காவலர் இரயில் பெட்டிக்குள் வந்து ஏழ்மையான உடையணிந்த பணிவான சாதுக்களிடம், தங்கள் பைகளையும், மூட்டைகளையும் சோதனை இடுவதற்கு ஒப்படைக்கும்படி நிர்ப்பந்தித்தார். அவர்களிடம் ஒன்றும் கிடைக்காததால், அக் காவலரின் கவனம் எளிய உடையுடன் இருந்த கிராமவாசிகள் குழுவின் பக்கம் திரும்பியது, அவர்களுடைய பெரிய டர்பன் எனப்படும் தலைப்பாகையை இழுத்து கீழே போட்டும், அவர்கள் மேற்சட்டை மற்றும் அணிந்திருந்த ஆடைகள் அனைத்தையும் துருவித் துருவியும் சோதனை செய்தார். மிக நீண்ட சோதனைக்குப்பின் அவர்களில் ஒருவரிடம் ரூ.20 மொத்தமாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர் எவ்வாறு அவ்வளவு தொகை வைத்திருந்தார் என்பதை அறிவதற்காக பல கடுமையான கேள்விகள் சந்தேகக் கண்ணோட்டத்துடன் கேட்கப்பட்டன. அந்தத் தொகை அந்த கூட்டத்தைச் சேர்ந்த

அனைவருக்கும் சொந்தமானதென்றும், அவர்கள் சார்பாக தான் வைத்திருப்பதாகவும், அவர் விளக்கமளித்தார். இவை அனைத்தையும் கண்ணுற்ற அந்த வியாபாரி தன்னால் உருவாக்கப்பட்ட இந்த குழப்பத்தை கண்டு வெறுப்படைந்து, தன் செயலால் பல அப்பாவி மக்கள் துன்புறுத்தப்படுவதையும், கேவலமாக நடத்தப்படுவதையும் கண்டு வருத்தமுற்றார். அந்த கிராமவாசியிடமிருந்து கண்டெடுக்கப்பட்ட பணத்தையும், அவர்களின் டிக்கெட்டுகளையும் பிடுங்கி, தன்னிடம் வைத்திருந்த காவலர், பல இரயில் நிலையங்களைக் கடந்த பின்னரே அவற்றை உரிமையாளர்களிடம் திரும்பக் கொடுத்தார். இதற்கிடையில் இந்தச் சம்பவம் பயணிகளுக்கு மிகுந்த கோபத்தையும், கவலையையும் கொடுத்தது. இப்போது அந்த வியாபாரி ராம்தாஸிடம் வந்து வணங்கி, ‘இந்த விஷயத்தில் நான் எப்பேர்ப்பட்டக் குழப்பத்தை உருவாக்கிவிட்டேன், ஒன்றும் அறியாத அப்பாவி மக்களுக்கு எவ்வளவு மன வேதனையைத் தந்துவிட்டேன். மகராஜ், தங்களின் பொன்னான அறிவுரை கேட்காத நான் ஒரு மூடன். இந்த அடிமையை மன்னித்தருள வேண்டும்‘, என்றார்.

‘நண்பரே, மன்னிப்புக்காக ராமனிடம் பிரார்த்தனைச் செய்யுங்கள்‘ என்பதே ராம்தாஸின் ஒரே பதில். இந்த நிகழ்ச்சியின் மூலம், ராம் ராம்தாஸுக்கு ஒரு நல்ல படிப்பினையைக் கற்பித்தான் - **“என்றும்தொல்லைகள் அளிக்கக்கூடிய, தீங்கினை விளைவிக்கக் கூடியதான பணத்தைச் உடன் கொண்டு செல்வதோ, அல்லது பணத்தை சொந்தமாக வைத்திருக்கும் பெரும் தவற்றைச் செய்யவோ கூடாது. பணம்தான் அனைத்து தீமைகளுக்கும் ஆணிவேர்”.**

## அத்தியாயம் – 31
## ஜுனகாட்

இப்போது இரயில் ராம்தாஸை ஜுனகாட் இரயில் நிலையத்திற்குக் கொண்டு சென்றது. அப்போது நடுப்பகல். அவனை வழிநடத்திச் செல்ல ஒருவரும் இல்லை. அந்த இடத்தில் ராமன் கோயில் ஏதாவது உள்ளதாவென்று ஊரின் நுழைவாயிலில் ஒரு காவலரிடம் விசாரித்தான். இரண்டு மைல்களுக்கப்பால் ஒரு ராமன் கோயில் இருப்பதாகக் கூறி அக்கோயிலுக்கு செல்லும் வழியை சுட்டிக் காட்டினார் அந்தக் காவலர். தான் சென்று கொண்டிருந்த வழிநெடுக அடிக்கடி விசாரித்துக் கொண்டே நடந்தான் ராம்தாஸ். முடிவில், ராமன் கோயிலின் உயரமான நுழைவாயிலை அவன் அடைந்தான். உள்ளே நுழைந்ததும், அந்த ஆஸ்ரமத்தின் மஹந்த் என்னும் பொறுப்பாளரால் ராம்தாஸ் வரவேற்கப்பட்டு, அவருடன் ஒரு வாரம் தங்கி இருந்தான். அதனால் அன்புள்ளம் கொண்ட மஹந்தின் விருந்தினர்களாகத் தங்கி இருந்த ஆறு சாதுக்கள் கொண்ட குழுவுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ராம்தாஸுக்குக் கிட்டியது. அவர்கள் அனைவரும் ராம்தாஸிடம் மிகுந்த அன்பு பாராட்டினர்.

இங்கு ராம் இரண்டு அற்புதங்களை நிகழ்த்தினான். ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த சாதுக்களில் ஒருவர் இரண்டு வாரங்களாகக் காய்ச்சலால் தாக்கப்பட்டு, பல மருத்துவ சிகிச்சைகள் அளித்தும் முன்னேற்றமின்றி நாளுக்கு நாள்

மோசமாகிக் கொண்டிருந்தார். அவர் உடல் மெலிந்து, வெளுத்துப்போய் படுத்த படுக்கையானார். இத்துடன் அவர் நம்பிக்கை இழந்து, நோயைக் குறித்து எரிச்சலடைந்து அமைதியின்றி இருந்தார். அவருடைய நிலையைக் கண்ட ராம்தாஸால் அவர் படுக்கையருகே செல்லாமல் இருக்க முடியவில்லை. அவர் பக்கத்தில் அமர்ந்து, அவர் கால்களை மெல்ல பிடித்து விட்டபடியே தன் சேவையை துவங்கினான். இதை அறிந்த உடல் நலமற்ற சாது எழுந்து உட்கார்ந்து, தான் இப்படிப்பட்ட சேவையை ஏற்றுக்கொள்ளத் தகுதியற்றவன் என்று கூறி ராம்தாஸைத் தடுத்தார். மறுநாளே தான் குணமடைய, தன்னை ஆசீர்வதிக்கும்படி ராம்தாஸிடம் அந்த சாது வேண்டினார். இதற்கு, ராம்தாஸ் தான் ராமனின் எளிய அடிமை என்றும், தனக்கு எவரையும் ஆசீர்வதிக்க எந்த உரிமையும் இல்லையென்றும் கூறினான்.

‘ராமனின் பெயரால் என்னை ஆசீர்வதியுங்கள்‘ என்று வேண்டினார் அந்த சாது.

‘நன்று, சகோதரா! அனைவரையும் காத்தருளும் ஸ்ரீராம், நாளைக் காலைக்குள் நீங்கள் உடல் நலம் அடைய அருள் புரிவாராக‘ என்று ராம்தாஸ் பிரார்த்தனை செய்தான்.

அன்றிரவு, ராம் அந்த சாதுவை குணப்படுத்துவதில் மும்முரமாக ஈடுபட்டிருந்திருக்க வேண்டும். ஏனெனில், அடுத்த நாள் காலை அவர் முற்றிலும் காய்ச்சலிலிருந்து விடுபட்டு உடல் நலத்துடனும், மகிழ்ச்சியோடும் இங்கும் அங்கும் நடந்து கொண்டிருந்தார். எல்லோரும் அதிசயிக்கும்வகையில் ராம்தாஸைக் கருவியாகப் பயன்படுத்திய ராம், அந்த சாதுவைக் குணப்படுத்தியது அந்த ஆஸ்ரமத்தில் ஒரு வியப்பையும்,

பரபரப்பையும் ஏற்படுத்தியது. இதனால் ஆஸ்ரமத்திலுள்ள அனைவரின் அதிகமான கவனிப்புக்கும், அன்புக்கும் உரியவனாக ராம்தாஸ் ஆனான். சுமார் மூன்று அல்லது நான்கு நாட்களுக்குப் பிறகு மற்றொரு சாது நோய்வாய்ப்பட்டார். அவரும் மற்ற சாதுவை ராம்தாஸ் ஆசீர்வதித்தது போன்று, தன்னையும் ஆசீர்வதிக்கும்படி வேண்டினார். ராம்தாஸ் அவர் வேண்டுகோளுக்கு இணங்கி ராமனிடம் மீண்டும் பிரார்த்தனை செய்தான். ஓ ராம்! நீ எவ்வளவு சக்தி வாய்ந்தவன்! இரண்டாவது சாதுவும் ராமனின் அருளால் அடுத்த நாள் காலைக்குள் முற்றிலும் குணமடைந்தார், புகழனைத்தும் ராம் ஒருவனுக்கே!

ராம்தாஸ் அதிக நாட்கள் இந்த ஆஸ்ரமத்தில் தங்க வில்லை. ஒரு நாள், தர்மபுரிக்கு வழிகாட்டிய அதே சந்நியாசியை ராம்தாஸ் சந்தித்தான். ராம்தாஸின்மேல் அவர் அதிகமானப் பற்றுதல் வைத்திருந்தார். ஜுனகாட்டில் பிரசித்தி பெற்ற சந்நியாசியான காசிகிரிஜி என்பவரின் ஆஸ்ரமத்திற்கு ராம்தாஸை அழைத்து வந்து சேர்த்தார். 'அகாடா' எனப்படும் இந்த ஆஸ்ரமத்தில் உள்ள அனைத்து சந்நியாசிகளும் ராம்தாஸிடம் அன்பு செலுத்தினர். இங்கு சுமார் பதினைந்து சாதுக்கள் இருந்தனர். ராம், ராம்தாஸை ஜுனகாட்டிற்கு அழைத்து வந்ததின் நோக்கமே புகழ் பெற்ற 'கிர்நார்' குன்றின் உச்சியில் அமைந்துள்ள **குரு தத்தாத்ரேயர் மற்றும் அன்னை அம்பாஜியின்** இருப்பிடங்களை அவன் காணவேண்டும் என்பதற்காகவே. அவன் தன் விருப்பத்தை காசிகிரிஜியிடம் தெரிவித்தான். அவர் தானும், ராம்தாஸுடன் மலை ஏறும் விருப்பத்தைத் தெரிவித்தார். உண்மையாகவே ராமனின் கருணை மிகப் பெரியது. கிர்நார் குன்றில் ஏறுவதற்கு நாள் குறிக்கப்பட்டு, காசிகிரிஜி மற்றும் ஆறு சந்நியாசிகள்

கொண்ட குழுவுடன், ஒரு நாள் இரவு படிகளில் ஏற ஆரம்பித்தனர். அந்த மலையின் உச்சியை அடைய மொத்தம் 9000 படிகள் ஏற வேண்டும். 6000 படிகள் ஏறிய பின், நள்ளிரவுக்குப் பிறகு, சுமார் மூன்று மணி அளவில், சங்கர்கிரி என்று அழைக்கப்பட்ட ஒரு சந்நியாசியின் ஆஸ்ரமத்தை அடைந்தனர்.

அன்று இரவு அங்கு தங்கினர். மலை மேல் குளிர் மிகக் கடுமையாக இருந்தது. ராம் மிகவும் பரிவுடன் இருந்தான். அவன் தியானமும் மிகவும் இனிமையாக இருந்தது. அடுத்த நாள் காலை இந்த குழு இன்னும் மேலே ஏறி முதலில் அன்னை அம்பாஜியின் கோயிலை அடைந்தனர். அங்கிருந்து மேலே பல படிகள் ஏறி, அக்குன்றுகளில் மிக உயர்ந்த ஒரு குன்றின் உச்சியை அடைந்தனர். இதன் உச்சியை நெருங்கும்போது, படிகள் ஒழுங்கற்றும், வழுக்கும்படியும் இருந்தன. ஆனால், ராம் அவர்களைப் பாதுகாப்பாக வழி நடத்திச் சென்றான். இங்கு, மலைச்சிகரத்தில் குரு தத்தாத்ரேயரின் பாதச் சுவடுகள் இருக்கின்றன. இந்த பாதச் சுவடுகளைக் காண்பதற்கு நூற்றுக் கணக்கான யாத்திரிகர்கள் தினமும் இந்த குன்றுகளின் மேல் ஏறுகின்றனர். இந்தச் சிகரத்தின் விளிம்பில் அமர்ந்து, சுற்றிலும் அகன்ற பார்வையைச் செலுத்துவது கண்களைக் கவர்ச்சிகரமாக ஈர்த்து வசப்படுத்தும் காட்சிகள் கொண்டதோர் அரிய விருந்தாகும். அனைத்துப் பக்கங்களிலும் இருக்கும் சுந்தரமான இயற்கைக் காட்சிகள் - பச்சை, மஞ்சள் நிறங்களால் அலங்கரிக்கப்பட்ட தொலை தூரத்து குன்றுகள் - மேலே பரந்து விரிந்திருக்கும் நீல வானம் - வழுவழுப்பான, பளிங்குபோன்ற பாறைகளின் இடையில் கீழ் நோக்கி பாய்ந்தோடுகின்ற;

வெகுதூரத்தில் மெல்லிய வெள்ளிக் கீற்றுகள் போலக் காணப்படுகின்ற தெளிந்த நீரோடைகள் - முதலாய அழகிய தோற்றங்கள் அனைத்தும் அறியவொண்ணாத முடியாத தெய்விகப் பேரானந்த அனுபவ நிலைக்குப் பார்வையாளரை உயர்த்திச் செல்கின்றன.

குன்றிலிருந்து கீழே இறங்கும்போது, பாதி வழியில் அந்தக் குழுவினர் மகாத்மாக்கள் வசிக்கும் சில குகைகளுக்குச் சென்றுத் தரிசித்ததால் பெரு மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் குன்றுகளின் சரிவுகளில் இருந்த பல்வேறு நீர்த்தேக்கங்களையும் கண்டு, இறுதியில் விருந்தோம்பல் மிக்க சங்கர்ஜியின் ஆஸ்ரமத்திற்கு நண்பகல் திரும்பி வந்தனர். நண்பகல் உணவிற்குப் பிறகு கீழே இறங்கும் பயணத்தைத் தொடர்ந்த அக்குழு, மாலை ஜுனகாட் அடைந்தது. அடுத்த நாள், குழுவிலிருந்த அனைத்து சந்நியாசிகளும் கால், கை, உடல் முழுவதும் விறைப்பும், வலியும் இருப்பதாகக் கூறினர். அவர்களில் சிலர் இரண்டு மூன்று நாட்கள் கஷ்டப்பட்டு, தள்ளாடி நடந்தனர். ஆனால், ராமனின் கருணையால் ராம்தாஸ் எவ்வித வலியையோ அல்லது விறைப்பையோ உணரவில்லை. இப்போது ராம், மகன்லால், காந்திலால் என்கிற இரண்டு வாலிப நண்பர்களுடன் ராம்தாஸைத் தொடர்பு கொள்ளச் செய்தான். இருவரும் மிகுந்த அன்பைப் பொழிந்தனர். இவர்கள் சத்சங்கத்தில் சில நாட்கள் இன்பமாகக் கழிந்தன. ஒவ்வொரு நாள் மாலையும் அவர்கள் அவரைப் பொதுத் தோட்டங்களுக்கும், மரத்தோப்புகளுக்கும் நடப்பதற்கு அழைத்துச் சென்றனர்.

ஒரு சமயம் அவர்களுடன் ராம்தாஸ் லட்சுமண் டெக்ரி என்றழைக்கப்பட்ட ஒரு சிறிய குன்றின் மீது ஏறினான். அவர்கள்,

அவனை அவ்விடத்து முஸ்லீம் நண்பர்கள் சிலருக்கு அறிமுகம் செய்து வைத்தனர். அவர்கள் அனைவருமே அவனிடம் மிகவும் அன்பு காட்டினர். தாதர் குன்றுகளின் அடிவாரத்தில் உள்ள தாதர் மசூதிக்கு அழைத்துச் சென்றனர். மகன்லால் அவனை ஜுனகாட் நண்பர்கள் பலருக்கு அறிமுகம் செய்தார். அவர்கள் அனைவருமே அவனிடம் சமமாகப் பரிவு காட்டினர். அனைவரும் அறிந்த, சரித்திரப் புகழ் வாய்ந்த புனித ஸ்தலமாகிய சோமநாத்துக்கு ராம்தாஸ் பயணம் செல்ல மகன்லால் ஏற்பாடு செய்தார். ராமனின் அருளால், இரயில் நிலையத்தில், ராம்தாஸ் சந்தித்த ஒரு குஜராத்தி நண்பருடன் சோமநாத்திற்குப் புனித பயணம் மேற்கொண்டார்.

இரயில், வெராவல் இரயில் நிலையத்தை அடைந்ததும், அந்த நண்பர், மகன்லால் ஏற்பாடு செய்திருந்த பணக்கார வியாபாரியின் வீட்டிற்கு அழைத்து சென்றார். இவர் மகன்லாலின் உறவினர் ஆவார். ஆனால் ராம்தாஸ் அவரைப் பார்க்கச் சென்ற போது, அவர் தீவிர காய்ச்சலில் படுத்திருந்தார், அந்த வீட்டில் உள்ள அனைவரும் அவர் நோயைக் குறித்து மிகுந்த கவலையில் இருந்தனர். ராம்தாஸ் நோயுற்ற நண்பரின் அருகில் சென்று, அவர் கையைத் தொட்டுப் பார்த்து, காய்ச்சலின் தீவிரத்தை உணர்ந்தான். அவன் அந்த அறையை விட்டு வெளியேறும்போது, அங்கு குழுமியிருந்த நோயாளியின் உறவினர்களும், ராம்தாஸை அழைத்து வந்த நண்பர்களும், நோயாளி குணம் பெற ஆசீர்வதிக்கும்படிக் கேட்டுக் கொண்டனர். அதற்கு ராம்தாஸ், சர்வ வல்லமை படைத்த ராமனின் அருளால் அவர் மறுநாள் காலைக்குள் பூரண நலமடைவார் என்று கூறினான்.

ராம் இங்கும் தன் ஆற்றலை நன்கு வெளிப்படுத்தினான். அந்த நோயாளி மறுநாள் காலை பூரண குணமடைந்தார். கடந்த ஐந்து நாட்களாக தொடர்ந்து காய்ச்சலினால் தாக்கப்பட்டிருந்த அவர், இப்போது ராமனின் அருளால் நலம் பெற்றார். அவரால் தானாகவே வியாபாரம் செய்யும் இடத்திற்கு நடந்து செல்ல முடிந்தது. மிகப் பெரிய கட்டிடமான அந்த வியாபாரியின் கடையின் மேல் தளத்தில், ராம்தாஸ் தங்கியிருந்தான். இங்கும், அனைவரும் அவனிடம் அன்பாக இருந்தனர். அவன் சோமநாத் கோயிலையும், பாழடைந்த கட்டிடங்களையும் பார்வையிட்டான். பாதாள குகை ஒன்றில் வைக்கப்படிருந்த மிகப் பெரிய சோமநாதர் விக்கிரகத்தின்முன் நின்றான். இங்கும் சோமநாதர் முன்பு மெய்மறந்து ஒரு ஆனந்த சிலிர்ப்பை உணர்ந்தான். கோயிலிலிருந்து சற்று தொலைவில் இருந்த நதியில் குளித்தான். வெராவல் திரும்பிய பின், ராமனால் தூண்டப்பட்ட ராம்தாஸ் ப்ராச்சி மற்றும் முட்டிகோரக்நாத் ஆகிய இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்ற தன் விருப்பத்தை வியாபாரியிடம் தெரிவித்தான், மேலும், மறுநாள் காலை தான் கால்நடையாகவே செல்லப் போவதாகவும் தெரிவித்தான்.

‘இல்லை ஸ்வாமிஜி, நீங்கள் நடந்து செல்லக் கூடாது. இந்த இடங்களுக்குச் செல்லும் பாதை கரடு, முரடானது. குதிரை வண்டிகூட அங்கு செல்ல முடியாது. மேலும், தங்களைப் போன்ற பலவீனமான ஒருவர், 16 மைல் தூரத்தை நடந்தே கடப்பதென்பதும் முடியாத செயலாகும். எனவே, ஒரு மாட்டு வண்டியை உங்களுக்கு அமர்த்திக் கொடுக்கிறேன்,‘ என்றார் அந்த அன்பு உள்ளம் கொண்ட அந்த வியாபாரி.

ராம்தாஸ், இந்த ஆலோசனைக்கு உடன்பாடு

அற்றவனாயினும், அந்த வியாபாரி வற்புறுத்தி பிராச்சிக்கு செல்லும் வேறு சில நண்பர்களுடன் அவரை மாட்டு வண்டி ஒன்றில் உட்கார வைத்தார். பிராச்சி சென்றுவர வண்டி வாடகைக்காக ரூபாய் இரண்டை ஒரு கைக் குட்டையில் முடித்து, அவன் சட்டைப்பையில் திணித்தார். விடியும்முன் வண்டி புறப்பட்டது. பயணம் அரை மைல் கூட செய்திருக்க மாட்டார்கள், அதற்குள் அந்த வண்டி ஓட்டி எருதுகளை கனமானக் குச்சியால் அடிப்பதை ராம்தாஸ் கண்டான். அந்த காட்சியை அவனால் பொறுக்க முடியவில்லை. அந்த அடிகள் தன் முதுகில் விழுவதைப் போன்று உணர்ந்தான். எருதுகளை அடிக்க வேண்டாமென அந்த வண்டி ஓட்டியிடம் வேண்டினான். அவைகளை அப்படி அடிக்காவிட்டால் அவை மேற்கொண்டு செல்லாது என வண்டி ஓட்டி பதிலளித்தார். ராம், ராம்தாஸை உடனே வண்டியைத் தவிர்க்க ஆணையிட்டான். வண்டி வாடகை ரூபாய் ஒன்றை கொடுத்துவிட்டு, வண்டியிலிருந்து இறங்கி, தான் செல்ல வேண்டிய தூரத்தை நடந்தே கடந்து, நடுப்பகல் அளவில் பிராச்சியை அடைந்தான்.

அவன் சென்றுகொண்டிருக்கும்போது முதுகில் ஒரு மூட்டையுடன் அவல நிலையில் ஆடை அணிந்திருந்த ஒருவனை மிக அருகில் கடக்க நேரிட்டது. ராம்தாஸை கண்டதும் அந்த மனிதன் வேகமாக பாதையை விட்டு விலகி, சாலையின் மறு பக்கத்தில் நடக்கத் தொடங்கினான். மேற்கொண்டு சிறிது தூரம் சென்றபோது, எதிர் திசையில் வந்து கொண்டிருந்த மற்றொருவரை சந்தித்தான். இருவரும் ஒருவருக்கொருவர் ‘ராம், ராம்‘ என்று கூறி வந்தனம் செய்து கொண்டனர். இன்னும் சிறிது தூரம் சென்ற பிறகு, ராம்தாஸ் அம்மனிதரிடம் அவர் ஏன் தன்னிடமிருந்து விலகி சென்றார் என்றுக் கேட்டான். அதற்கு

அவர் தான் ஒரு தீண்டத்தகாதவன் என்றுக் கூறினார்.

'ஓ, ஆனால் நீங்கள் ராம்தாஸின் சகோதரர், எல்லாம் ஒன்றே' என கூறிக்கொண்டே ராம்தாஸ் நெருங்கிச் சென்று, அவர் கையைப் பிடித்து கொண்டான். அவர் குழப்பத்துடன் ராம்தாஸை உற்று நோக்கினார்.

நான் 'தாழ்ந்த சாதி' என்று மறுபடியும் கூறினார்.

'ராம்தாஸ் உங்களுடைய சகோதரன். எந்த ஒருவரின் உதட்டில் ராம நாமம் உச்சரிக்கப்படுகிறதோ, அவர் அந்தணரைவிட உயர்ந்தவர் - ராமனின் கண்களின்முன் அனைவரும் சமமே', என்று ராம்தாஸ் திரும்பச் சொன்னான்.

அவர் பிரியும்வரை, ராம்தாஸ் அவரிடம் தொடர்ந்து ராமனின் புகழை குறித்துப் பேசிக் கொண்டே இருந்தான். இப்போது அவர் ராம்தாஸிடமிருந்து பிரிந்து வேறு ஒரு குறுக்குப்பாதையில் திரும்பிவிட்டார். அதன்பின், குதிரையின் மீது வியாபாரப் பொருட்களை வைத்து சவரி செய்து கொண்டு வந்த ஒரு முகம்மதிய நண்பருடன் ராம்தாஸுக்குப் பரிச்சயம் ஏற்பட்டது. எளிய குழந்தை போன்ற குணம் படைத்த இவர் தொடர்பு, பிராச்சியை அடையும்வரை ராம்தாஸுக்கு மகிழ்ச்சியை அளித்தது. பாய்ந்து வரும் நதிநீர் தேக்கிவைக்கப்பட்ட ஒரு நீர்த்தேக்கத்தில் குளித்துவிட்டு, பல சிறிய கோயில்களுக்கு அவன் சென்றான். அந்த இடத்தில் இரு சாதுக்களைச் சந்தித்தப் பின், தான் திரும்பும் பயணத்தை தொடங்கி முட்டி கோரக்நாத் என்று அழைக்கப்பட்டப் புனித ஸ்தலத்தை மாலை அடைந்தான். இங்கு, அக்கோயிலின் சாதுக்களுடன் அன்றைய இரவு தங்கினான், அது ஒரு குகை;

பல கற்படிகள் இறங்கிதான் அதன் நுழைவாயிலை அடையும்படி இருந்தது.

மறுநாள் அதிகாலையில் அங்கிருந்து கிளம்பி முற்பகல் வெராவல் அடைந்தான். வந்ததும் முதல் காரியமாக அவன் மீதமிருந்த ஒரு ரூபாய் பணத்தை வியாபாரியிடம் திருப்பிக் கொடுத்தான். ராம்தாஸ் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும், தனக்குப் பழக்கமான ராமநாமத்தை வழி நெடுக உச்சரித்த வண்ணம் நடந்தே வந்தான். அடுத்த நாள் இரயிலில் ஜுனகாட் திரும்பினான். மகன்லாலும், காந்திலாலும் அவனை இதய பூர்வமாக வரவேற்றனர். அவர்கள் இருவரும் அவனை இன்னும் சில நாட்கள் ஜுனகாட்டில் தங்கும்படி வற்புறுத்தினர். ராமனின் விருப்பத்திற்கு இணங்க, அதாவது, தான் சில நாட்கள் தனிமையில் தங்கி ராமனிடம் பக்தி செலுத்தவும், ராமத் தியானம் செய்து கொண்டு நாட்களைக் கழிக்கவும் அனுமதிக்க வேண்டுமென்ற நிபந்தனையின்பேரில் அவன் தங்குவதற்கு ஒத்துக் கொண்டான். அதற்கேற்ப, ராம் ஒருவனே முசுகுந்த ரிஷி ஆஸ்ரமம் என்றழைக்கப்பட்ட இடத்தைத் தேர்வு செய்தான். இந்த இடம் ஜுனகாட்டிலிருந்து நான்கு மைல்களுக்கு அப்பால் கிர்நார் செல்லும் வழியில், ஒரு குன்றின் மேல் உள்ள அடர்ந்த வனப்பகுதியின் நடுவில் அமைந்ததாகும். அங்கே ஒரு பாழடைந்த கோயிலும், அதனருகில் கவனிப்பாரற்ற நிலையில் பல சமாதிகளும் இருந்தன. இதன் விளைவாக அந்த இடம் பார்ப்பதற்கு அச்சமூட்டும் தோற்றத்துடன் காணப்பட்டது.

## அத்தியாயம் - 32

## முசுகுந்த ரிஷி ஆஸ்ரமும் துவாரகையும்

அச்சமூட்டும் தோற்றத்துடன் காணப்பட்ட இந்த ஆஸ்ரமத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்டு ராம்தாஸ் பத்து நாட்கள் தங்கி இருந்தான். இரவு முழுவதும் நெருப்பு மூட்டி அதன்முன் அமர்ந்து ராம பஜனையில் ஈடுபட்டான். அந்த இடம் முழுவதும் வௌவால்களும், புறாக்களும் வாசம் செய்தன. அது ஒரு மனித சஞ்சாரமற்று எல்லோராலும் கைவிடப்பட்டு அச்சமூட்டும்வகையில் இருந்ததால், அவ்வூர் மக்களும், சாதுக்களும் அங்கு வசிக்கும் சந்நியாசியைக் கண்டு வருவதைப் பெரும் பேறாகக் கருதினர். நல்லெண்ணம் கொண்ட நண்பர்கள் சிலர் ராம்தாஸிடம், அந்த இடம் ஆபத்து மிகுந்தது என்று எடுத்துரைத்தனர். எல்லாம் வல்ல ராம் துணை இருக்கும்போது எதற்கும் பயப்படுவதற்கு அவசியமில்லை என்று அனைவருக்கும் ராம்தாஸ் கூறினான். மகன்லால், காந்திலால் இருவரும் தினமும் இங்கு வந்து ராம்தாஸைப் பார்த்துச் சென்றனர். லாகூரில் பிரசித்தி பெற்ற மௌல்வி ஒருவரால் திறம்பட ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட குரான் புத்தகம் ஒன்றினை சில முஸ்லிம் நண்பர்களிடமிருந்துப் பெற்றுத் தந்தனர். குரான் ஒரு சிறந்த படைப்பாகும். நல்லிதயம் படைத்த நபிகள் நாயகத்தின் இவ்வுபதேசங்களைப் படித்து ராம்தாஸ் பெரும் பயனுற்றான்.

இவ்விடத்தை விட்டுச் செல்ல ராமனிடமிருந்து ஆணை

வந்தது. அவ்வாறே ராம்தாஸ் நள்ளிரவு இரயிலைப் பிடித்து ஜுனகாட்டிலிருந்து புறப்பட்டு இடையில் ஒரு இரயில் சந்திப்பில் வண்டி மாறி, போர்பந்தர் சென்றடைந்தான். அந்த இரயில் நிலையத்திலிருந்து சுதாமாபுரி என்னும் நகரத்திற்கு சென்றான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணனின் சிறந்த பக்தரான சுதாமா இங்கு வாழ்ந்ததால் இந்த நகரத்திற்கு அப்பெயர் வந்தது. எளியவரான சுதாமா ஸ்ரீ கிருஷ்ணனுக்கு அவலை அளித்ததும், அவர் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டதும், ஸ்ரீ கிருஷ்ணன் சுதாமாவின் பாதங்களை கழுவியதும் அவ்வப்போது அவன் நினைவில் வந்து கொண்டிருந்தது. அப்போது ராம்தாஸுக்கு ஸ்வாமி ராமதீர்த்தரின் பிரசித்தி பெற்ற மேற்கோள்: 'ஒரு அடிமை, என்றும் அடிமையாய் இருக்கிறார், ஏனென்றால் அவர் சுதந்திரமானவர்' என்பது நினைவுக்கு வந்தது.

இரண்டு சாதுக்களின் துணையோடு, சுதாமா வாழ்ந்ததாகக் கூறப்படும் குடிசை இருந்த இடத்தில் கட்டப்பட்ட ஸ்ரீ கிருஷ்ணன் கோயிலை சென்று தரி சித்தான். அன்று மாலையே ராம்தாஸ், அந்த இரண்டு சாதுக்களுடன், மேலும் இரண்டு சாதுக்கள் சேர ஐந்து பேர் கொண்ட குழுவாக நடந்தே துவாராகையை நோக்கி புறப்பட்டனர். இது ஒரு உல்லாசமான குழு. தலைமீது பெரிய தலைப்பாகையும், தோள்மீது கனத்த கம்பளியும், ஒரு கையில் ஒரு ஜோடி மரப் பாதுகைகளும், மறு கையில் உடைந்த பித்தளைச் செம்பும், தோள் பட்டையில் யோக தண்டமும் தொங்க, உடல்மீது பஞ்சடைத்தச் சட்டையும், இடுப்பைச் சுற்றி ஒரு கௌபீனத்துடன் வயது முதிர்ந்த, தாடியுடன் இருந்த ஒரு சாது அக்குழுவின் தலைவராய் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் ஒரு எளிய, நல்ல குணமுள்ள, தீங்கு எண்ணாத வயோதிகத் துறவி. சாதுக்கள் ஒருவருக்கொருவர் தங்கள் அனுபவங்களைக்

கூறிக்கொண்டே ஒவ்வொரு மைல்கல்லையும் கடந்தனர். ராம்தாஸ் அவர்களின் கதைகளைக் கேட்டுக் கொண்டும் அல்லது இனிய ராமநாமத்தை உச்சரித்துக் கொண்டும் அவர்களுடன் சென்றான். வழியில் ஒரு கிராமத்தில் அன்று இரவு தங்கினர். அந்த கிராமத்து மக்கள், சாதுக்களை நன்கு உபசரித்தனர்.

மறுநாள் அதிகாலையில், தலைவரான அந்த வயோதிக சாது அனைவரையும் புறப்படும்படி குரல் கொடுத்தார். சாதுக்கள் உறக்கத்தை உதறித் தள்ளித் தங்கள் உடைமைகளை சுமந்து கொண்டுப் பயணத்திற்குத் தயாரானார்கள். அவர்கள் நடுப்பகலிலும், இரவிலும் பயணத்தை தவிர்த்து வழியில் தென்படும் கிராமங்களில் தங்கியவாறே மூலத்துவாரகை என்று அழைக்கப்பட்ட புனித ஸ்தலத்தை அடையும்வரை தங்கள் பயணத்தைத் தொடர்ந்தனர், மொத்தத்தில் சுதாமாபுரியிலிருந்து 20 மைல் தொலைவைக் கடந்தனர். இங்கு ஒரு சாதுவின் ஆஸ்ரமம் உள்ளது. அங்கு எப்போதும், யாத்திரை செய்யும் 20-30 சாதுக்கள் கொண்ட குழு இருந்து கொண்டே இருக்கும். இங்கு புதிதாகப் போய்ச் சேர்ந்த சாதுக்கள் அங்கிருந்த சாதுக்களுடன் மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர். பிறகு, அங்கிருந்த பழமையான கோயிலைத் தரிசித்தனர். ஸ்ரீ கிருஷ்ணன் தன் தலைநகரை துவாரகைக்கு மாற்றுவதற்குமுன் இங்குதான் முதலில் தங்கியிருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த இடம் பேட்துவாரகை என்று இப்போது அழைக்கப்படுகிறது. அந்தக் குழு இன்னும் சிறிது தூரம் பயணம் செய்து கோமதி துவாரகையை அடைந்தது. ஒரு காலத்தில் புனித கோமதி நதி இங்கு பாய்ந்து கொண்டிருந்தது, இன்று அது வற்றிப்போய்விட்டது. புனித கோமதி நதி பாய்ந்த இடமாகையால் இதுவும், புனிதப் பயணம் செய்யும் யாத்திரிகர்களுக்கு ஒரு முக்கிய புனித ஸ்தலமாகக்

கருதப்படுகிறது. இந்த நதி இருந்த இடத்தில் இன்று ஒரு குளம்தான் மிஞ்சியுள்ளது, இதில் நீராடுவதை யாத்திரிகர்கள் புனிதமாக கருதுகின்றனர். பெரிய கோயிலை தரிசித்துவிட்டு, தொடர்ந்து பயணம் செய்து, இங்கு தரிசனம் செய்ய வரும் நூற்று கணக்கான சாதுக்களுடன் ஒரு நாள் தங்கியபின் மதிப்பிற்குரிய சாதுராமனின் ஆணைப்படி அவ்விடத்தை விட்டு இரயில் நிலையத்தை அடைந்தனர். ஏற்கனவே சாதுக்களால் நிரம்பி வழிந்த இரயிலில் ஏறினர். 'சீதாராம்' என்று அழைக்கப்படுகிற இந்த இரயில் பெட்டியில் கட்டணம் ஏதுமின்றி சாதுக்கள் இலவசமாகப் பயணம் மேற்கொள்ள இரயில்வே நிர்வாகம் அனுமதித்திருந்தது. இரயில்வே நிர்வாகத்தின் பெருந்தன்மை பாராட்டத்தக்கது.

நாற்பது சாதுக்களின் துணை கொண்ட குழுவை ராம்தாஸுக்குப் பெற்றுத் தந்தது ராமனின் பேரருளாகும். அவர்கள் அனைவரும் ஒருவரோடு ஒருவர் நட்புடன் கள்ளங்கபடமற்ற விளையாட்டுப் பிள்ளைகள்போல் சேர்ந்து கொண்டனர். ஒவ்வொரு சாதுவும் தன் மூட்டையை அவிழ்த்து தான் இந்தியா முழுதும் புனித பயணம் மேற்கொண்டபோது திரட்டிய, சிறு சிறு தெய்வங்களின் திருவுருவப் படங்கள், சங்குகள், கிளிஞ்சல்கள், உருத்திராட்சம் போன்ற ஆர்வத்தைத் தூண்ட கூடியப் பொருட்களைத் தன் அருகில் இருக்கும் மற்ற சாதுக்களுக்குக் காண்பிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இரயில் இறுதியாகச் சேருமிடமான ஒரு சிறிய இரயில் நிலையத்திற்கு அவர்களை கொண்டு போய்ச் சேர்த்தது. அங்கு இறங்கி சாதுக்கள் கடற்கரையை நோக்கிச் சென்றதும், அங்கு ஒரு முகம்மதியருக்குச் சொந்தமான இரண்டு நீராவி படகுகளில் அனுமதிக்கப்பட்டனர். அப்படகின் உரிமையாளர் அனுமதி வழங்கியதும், சாதுக்கள் அனைவரும் ஒரே குரலில் 'முகம்மதுக்கு

ஜெய்' என்று ஒரே குரலில் கோஷமிட்டனர். அவர்கள் வளைக்குடாவைக் கடந்து துவாரகா தீவினை அன்றிரவு சென்றடைந்தனர். இரவு ஒரு தர்மசாலையில் ஓய்வெடுத்து, மறுநாள் காலை புகழ் பெற்ற துவரகாநாதன் கோயிலுக்கு அக்குழுவினர் சென்றனர். ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகத்தின் முன் நின்ற போது, ராம்தாஸ் வருணிக்க இயலாததோர் உணர்ச்சியும், மகிழ்ச்சியும் அனுபவித்தான். சுமார் இரண்டு மணி நேரம் கோயிலினுள் தன்னை முழுவதும் மறந்தவனாய் ஒரு பேரின்ப நிலையில் மூழ்கியிருந்தான். பிறகு, கடற்கரையில் ராமத் தியானத்தில் மூழ்கியவாறு ஒரு பாறையிலிருந்து மற்றொரு பாறைக்குத் தாவியவண்ணம் சுற்றி அலைந்தான். இந்த சாதுக்கள் குழு இங்கு இரண்டு நாட்கள் தங்கியது. மூன்றாம் நாள் சாதுராமனின் கட்டளைப்படித் திரும்பி போகும் பயணத்தைத் தொடங்கினர்.

இப்பொழுது, இங்கு நடந்த ஒரு சம்பவத்தைக் குறிப்பிட வேண்டியுள்ளது. எப்பொழுதும்போல் அந்தக் குழு ஒரு கிராமத்தில் அன்று இரவு தங்கிவிட்டு, மறுநாள் விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே, தலைவரது உத்தரவின்படிப் புறப்பட்டனர். சாதுராம் விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே எழுந்து விட்டார் போலும், இன்னும் இருளாகவே இருந்தது. சாதுக்கள் வழி சரியாகப் புலப்படவில்லை என்று முணுமுணுத்தனர். இக்குழுவுடன் இன்னும் இரண்டு சாதுக்கள் கிராமத்தில் சேர்ந்து கொண்டனர். இவர்கள் இளைஞர்கள், அதில் ஒருவர் இரண்டு கண்களும் பார்வை இழந்தவர். இவரை வழிநடத்துகிற மற்றவர் ஒரு கண் பார்வை இழந்தவர். சூரியன் விரைவில் உதிப்பான் என்று சாதுராம் குழுவிற்கு உறுதியளித்தார். சுமார் இரண்டு மணி நேரம் இருட்டில் தட்டுத்தடுமாறி முனகிக் கொண்டே, அவ்வப்போது பாதையைத்

தவற விட்டவாறே அவர்கள் நடந்தனர், இருந்தும், விடிவதற்கு இன்னும் வெகு நேரமிருந்தது. அனைவரும் தலைமை வகிக்கும் சாதுவைக் கடுமையாகக் கண்டித்தனர். ஆனால் வயோதிக சாதுராம் அமைதியாக, நண்பர்களின் குற்றச் சாட்டுகளுக்குப் பதிலேதும் அளிக்காமல் மௌனமாய்க் கவனத்துடன் பாதையில் நடந்து கொண்டிருந்தார். அவர் இருட்டிலே தனக்குத் தானே மிகக் கஷ்டப்பட்டு, வழியைத் தேடிக் கொண்டு, ஒவ்வொரு அடி நடக்கும் போதும் தான் பாதையைத் தவற விட்டோமென்பதையும், மேலும் அனைவரையும் தவறான திசையில் வழிநடத்துகிறோம் என்பதையும் உணர்ந்தார்.

அந்தக் குழு மேலும் மேலும் சென்றது. இப்போது அவர்கள் ஈரமான நிலப்பகுதியிலும், பிறகு சேற்றிலும், மேலும் மேலும் நடந்து கடைசியில் முழங்கால் அளவு ஆழமான சேற்றில் இறங்கி விட்டனர். இன்னும் காரிருளாகவே இருந்தது. பார்வையற்ற சாதுவை தவிர மற்றவரெல்லாம் கண்களை வருத்தி சூரியன் உதிக்கும் திசையான கீழ்வானத்தில் சூரிய உதயத்தை எதிர்பார்த்து உற்று நோக்கியவாறு இருந்தனர். ஆனால் சூரிய உதயத்திற்கு வெகு நேரமிருந்தது. மீண்டும் சாதுக்கள் முனகிக் கொண்டே அடுத்து தாங்கள் என்ன செய்ய வேண்டுமென சாதுராமைக் கேட்டனர். சாதுராம் பதிலேதும் கூறவில்லை. சிறிது நேரம் பயனற்ற விவாதத்திற்கு பின், சாதுக்கள் ஒரு முடிவிற்கு வந்தனர். மேற்கொண்டு நடப்பது மோசமான நிலைக்கு இட்டுச்செல்லும், சேற்றில் மேலும் ஆழத்தில் சிக்கிக் கொள்ளவோ அல்லது பள்ளத்தில் விழவோ நேரிடும். எனவே விடியும் வரை அங்கேயே காத்திருப்பதென்று முடிவெடுத்தனர்.

## அத்தியாயம் - 33

## மும்பை

ஒரு மணி நேரம் கடும் குளிரில் சதுப்பு நிலத்தில் நின்று கொண்டு காலம் கழித்தனர். சூரிய பகவானின் தேர், பிரகாசமாகச் சுடர் வீசிக்கொண்டு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் அறிவித்தவாறு கீழ்வானத்தில் விரைந்து தோன்றியது. அக்குழுவில் பெரும்பாலானோர் சாதுராமனின் தலைமையை தவிர்த்து விடுவதென தீர்மானித்தனர், அவ்வாறே இரண்டு, இரண்டு பேராக பிரிந்து அவ்விடத்தை விட்டு விலகினர். இதுவரை அமைதியாய் ராமநாம ஜெபத்தில் ஈடுபட்டிருந்த ராம்தாஸ் விரைந்து சென்று சாதுராமிடமிருந்து அவருடைய பாதுகைகள், லோட்டா ஆகியவற்றை எடுத்துக் கொண்டு, அவருக்கு உதவியாய் அவரை பின்தொடர்ந்தார். சற்று நேரத்திற்குப் பிறகு சாதுக்கள் அனைவரும் மீண்டும் அருகிலிருந்த இரயில் நிலையத்தில் சந்தித்தனர். இங்கு அனைவரும் வடக்கே செல்லும் இரயிலில் ஏறினர். 'விராம்காம்' என்னும் இடத்தில் இரயில் மாற வேண்டியதாயிற்று. பயணிகளின் கூட்ட நெரிசலில் ராம்தாஸும், சாதுராமும் ஒருவரையொருவர் தவறவிட்டனர், மீண்டும் சந்திக்கவில்லை. மதுராவிற்கு செல்ல நினைத்த சாதுராம், தொடர்ந்து வடக்கே செல்லும் இரயிலில் ஒரு வேளை ஏறி இருக்கலாம். ராம்தாஸ் இன்னும் சில சாதுக்களுடன் மும்பை நோக்கிச் செல்லும் இரயிலில் ஏறினான். ராமனின் பெருங்கருணையால் அவன் ஏறிய இரயில் இடையில் எங்கும் மாற வேண்டிய அவசியமின்றி நேராக மும்பைக்குச் சென்றது.

இரயில் ஏறக்குறைய அகமதாபாதை நெருங்கிக் கொண்டிருந்த போது ஒரு இரயில் நிலையத்தில், டிக்கெட் பரிசோதகர் ஒருவர் டிக்கெட்டுகளைச் சோதனை செய்ய வந்தார். சுமார் ஆறு சாதுக்கள் டிக்கெட் இல்லாமல் இருப்பதைக் கண்டார், அவர்களுள் ராம்தாஸும் ஒருவன். அனைத்து சாதுக்களும் கீழே இறங்க வேண்டுமென அவர் உத்தரவிட்டார். அவ்வாறே ஒவ்வொரு சாதுவாக இரயில் பெட்டியிலிருந்து இறங்கினர். இப்போது ராம்தாஸும் எழுந்து கொண்டான், ஆனால் ராம்தாஸுக்கு அருகில் நின்றிருந்த டிக்கெட் பரிசோதகர் அவன் தோளின் மீது கை வைத்து அமரும்படி சொன்னார்:

'மகராஜ், தாங்கள் இறங்க வேண்டாம், நான் கூறியது உங்களுக்கு அல்ல' என்றார்.

ஓ ராம்! ராம்தாஸுக்கு மட்டும் ஏன் இந்த சலுகை? இல்லை, உன்னிடம் கேள்வி கேட்பதற்கு அவனுக்கு அதிகாரமில்லை. உன் அடிமை எப்பொழுதும் உன் திருவடிகளில் கட்டுண்டவன் - ஓ ராம் - அவ்வளவுதான்! அகமதாபாத் கடந்ததும், அந்த பெட்டிக்குள் இருந்த சில நண்பர்கள், அவனுக்கு பழங்கள் முதலியவற்றை அளித்தனர். அவன் ராமநாமத்தை இடைவிடாமல் அமைதியாக தியானித்துக் கொண்டு இருந்தான். அவனைச் சுற்றியிருந்த பயணிகள் அனைவரும் அவனிடம் அன்பு கொண்டிருந்ததை கண்டான்.

இரவு எட்டு மணிக்கு இரயில் கிரான்ட் ரோட் இரயில் நிலையத்தை அடைந்தது. இங்கு, ராம்தாஸ் இரயில் நிலையத்திலிருந்து வெளிவந்ததும் ராமனால் தூண்டப்பட்டு நேராக புலேஷ்வர் நோக்கிப் புறப்பட்டான். புலேஷ்வர் செல்வதற்கான வழியை ஆங்காங்கே விசாரித்தவாறு செல்ல

வேண்டியிருந்தது. ஒருவாறு அக்கோயிலை சென்றடைந்ததும், அன்று இரவு கோயிலின் உட்பிராகாரத்தில் இருந்த கற்படி ஒன்றில் ஓய்வெடுத்தான். கோயிலின் அருகே தரும சிந்தனை மிக்க ஜானகிபாய் என்ற மாதுவால் நிறுவப்பட்ட, மாடிகள் கொண்ட பிரமாண்டமான தர்மசாலை ஒன்று இருந்தது.

தர்மசாலை எப்போதுமே நிறைந்திருந்தது. இங்கு 200-300 சாதுக்கள் தங்கப் போதுமான இடவசதி இருந்தது. சுமார் காலை 4 மணி அளவில், தர்மசாலையிலிருந்து ஒலித்துக் கொண்டிருந்த இனிமையான, மனதை மயக்கும் இசையைக் கேட்டு, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த ராம்தாஸ் விழித்தான். பாட்டின் பொருள் ராதாகிருஷ்ணன்; பக்தியுடன் அன்னையர் இருவர் பாடிய இந்த பாட்டு மனத்தை உருக்குவதாய் இருந்தது. கண்ணனின் அன்பு அவர்களின் குரலில் கலந்து காற்றில் இனிமையையும், வசீகரத்தையும் நிறைத்தது. இந்த இசை முடியும் வரை ராம்தாஸ் உணர்ச்சிப் பெருக்கால் தன்னை இழந்தவனாய் இருந்தான்.

பொழுது விடிந்தது அங்கிருந்த ஒரு குழாயடியில் குளித்துவிட்டு தன் இடத்திற்குத் திரும்பி வந்து அமர்ந்த பொழுது, ஒரு நண்பர் சீட்டு ஒன்றினை அவனிடம் கொடுத்து, அதே போன்று சீட்டு வைத்திருக்கும் மற்ற ஆறு சாதுக்களுடன் சேர்ந்து கொள்ளச் சொன்னார். 'ஒரு வியாபாரி தன் வீட்டில் அளிக்கும் விருந்திற்கு, அனைவரையும் சாப்பிட வரவேண்டுமென்று அழைப்பு விடுத்துள்ளார்,' என அவர் கூறினார்.

எனவே அந்த எழுவரும் அவரைப் பின் தொடர்ந்து, பல தெருக்களின் வழியாக அழைத்துச் செல்லப்பட்டு,

விருந்தளிப்பவரின் வீட்டு வாயிலுக்கு வந்தனர். விருந்தளிப்பதற்கு இன்னும் சிறிது நேரம் இருந்ததால், அந்த வீட்டைச் சுற்றியுள்ள மதில் சுவர்கள் ஓரம் இருந்த மரங்களின் நிழலில் அமர்ந்தனர். ராம்தாஸ் ஒரு மரத்துண்டு மீது அமர்ந்தபோது, ஒரு சாது அவனை அணுகி இவ்வாறு கூறினார்:

'ஸ்வாமிஜி, எனக்கு வழங்கிய சீட்டு வழியில் தொலைந்துவிட்டது. நான் இரண்டு நாட்களாக உணவின்றி இருக்கிறேன், சீட்டு இல்லாமல் நான் உணவு பெற முடியுமா?' என்று கேட்டார். இதற்கு ராமனிடம் ஆணைக்கு இணங்க, ராம்தாஸ் தனது சீட்டை அந்த சாதுவிடம் கொடுத்துவிட்டு, அமைதியாக, மகிழ்வுடன் அந்த இடத்தை விட்டு வெளியேறினான். இப்போது ராம்தாஸ் வெயிலில் பித்து பிடித்தவன்போல் சுற்றிக் கொண்டிருந்தான். ஏன், பித்து பிடித்தவன்போல் என்று கூறவேண்டும்? ஆம், அவன் உண்மையிலேயே ராமனிடம் பித்து கொண்டவனே. அவன் மேன்மேலும் நடந்து கொண்டே இருந்தான். சுய உணர்வின்றி, அங்கிருந்த கோட்டையை நோக்கிச் சென்று தெருத் தெருவாக சுற்றிவந்தான். நடைபாதையில், ஒரு திருப்புமுனையில் துயரத்தால் பாதிக்கப்பட்ட நடு வயது மனிதர் ஒருவர் ராம்தாஸை வணங்கி அவனிடம் ஒரு காலணா கொடுத்தார். அவன் அந்த மனிதருக்கு திரும்ப வணக்கம் செலுத்தி தான் பணத்தை பெற்றுக் கொள்வதில்லை என்றும், ஆனால் பழங்கள் ஏற்று கொள்வதாகவும் கூறினான். வெகு அருகாமையில் ஒரு மாது பழங்களை விற்றுக் கொண்டிருந்தாள். அந்த மனிதர், காலணாவிற்கு ஒரு பழம் வாங்கி அதை ராம்தாஸிடம் கொடுத்தார்.

அந்த மனிதர், ராம்தாஸை நடைபாதையில் அமர வைத்து, தன் சோகக் கதையை விவரித்தார். தனக்கு மாணிக்கம் போன்ற ஒரு மகன் இருந்ததாகவும், புத்தி கூர்மை, அடக்கம், நல்ல குணம், வாக்குத்தவறாமை, அன்பு, அழகிய தோற்றம் ஆகியவை நிறைந்த, அந்த மகன் ஒரு மாதத்திற்கு முன் கொடிய பிளேக் நோயால் இறந்தான் என்றும் கூறினார். இந்த பேரிழப்பால் ஏற்பட்ட துயரத்தால் தாக்கப்பட்டு அந்த வருத்தத்தால் தான் பைத்தியம் பிடித்தவன்போல் ஆனதாகக் கூறினார். இந்த பேரிழப்பைத் தாங்கிக் கொள்ள தனக்கு ஒரு வழி காண்பிக்க வேண்டுமென கெஞ்சினார். அதற்கு ராம்தாஸ் :

'சகோதரா, உன் மகனின் இழப்பால் வருத்தத்தில் மூழ்குவது என்பது மாயையைத் தழுவிக் கொள்வதைப் போன்றதாகும். இந்த வருத்தத்திலிருந்து நீ விடுபட வேண்டுமாயின் உண்மையை உணரவேண்டும். இதற்கு ஒரே வழி, இறைவனை தியானம் செய்ய வேண்டும்' என்று கூறினான்.

'என் மனத்தை கட்டுப்படுத்த முடியவில்லை, எவ்வாறு நான் இதை செய்வேன்?' என்றார்.

'நல்லது, ராமனின் கட்டளைப்படி, ராம்தாஸ் தங்களுக்கு இங்கே இப்பொழுதே ராம மந்திரத்தை அளிப்பான். தாங்கள் அதை இங்கே இப்பொழுதே இடையறாது ஜெபித்தால், அதன் உடனடி பலனைக் காணலாம்' என்றான் ராம்தாஸ். இப்படிக் கூறிக்கொண்டே ராம மந்திரத்தை அவருக்கு உபதேசித்து, அதை அவர் இடைவிடாமல் 15 நிமிடம் ஜெபிக்கச் செய்தான். அவர் அவ்வாறு செய்தபோது அவரது மனம் அமைதியை அடைந்தது. பிறகு அவர் ராம்தாஸை வணங்கி தான் அமைதியின் வாசலைத்

திறக்க சரியான திறவுகோலைப் பெற்று விட்டதாகத் தெரிவித்தார். மேலும் அந்த மந்திரத்தை இடையறாது உச்சரித்தபோது தன்னுள் அமைதி நிலவுவதை உணர்ந்ததாகவும், அதனை ஜெபிக்கத் தவறமாட்டேன் என்றும் கூறினார். அதன் பிறகு அந்த இடத்தை விட்டு அகன்ற ராம்தாஸ் தன் உன்மத்த நடையை தொடர்ந்தான்.

இப்போது அவன் துறைமுகக் கட்டிடங்கள், கப்பல்கள் நிறுத்தும் இடத்தை ஒட்டியிருந்த அகன்ற சாலைகள் வழியாகச் சென்றான். அவன் மேன்மேலும் குழப்பமூட்டும் பல வீதிகள், சந்துகள் வழியாகச் சென்று, மேம்பாலங்களைக் கடந்து, இரயில் பாதை - சாலை சந்திப்புகளைக் கடந்து முடிவாக மாலை மூன்று மணி அளவில் தனக்கு அறிமுகமான கட்டிடத்தின் முன் தான் நிற்பதைக் கண்டான். மேலே பார்த்த பொழுது, தன் பூர்வாஸ்ரம சகோதரனின் வீட்டைக் குறிக்கும் 'ராமகிருஷ்ணராவ், ஓவியர்', என்னும் பெயர் பலகையைக் கண்டான். ராமனால் தூண்டப்பட்டவனாய் மாடிப்படிகளில் ஏறி சில நிமிடங்களில் சகோதரன் இருக்கும் முன்அறையை அடைந்தான். அந்த சகோதரனால் இதய பூர்வமாக வரவேற்கப்பட்டான். அங்கு நான்கு நாட்கள் தங்கியிருந்தான். அவருடைய குடும்பத்தினர் அவனிடம் பரிவுடன் இருந்தனர்.

இங்கு தங்கியிருந்தபோது, ராம்தாஸ் காலை நேரத்தை மும்பையில் இருக்கும் பல்வேறு கோயில்களையும், அவற்றிற்கு அருகில் வசித்து வந்த சாதுக்களையும் சென்றுப் பார்த்து வரப் பயன்படுத்திக் கொண்டான். வாகேஸ்வர் கோயிலின் பெரிய குளத்தின் படிகளில் ஓர் இரவு முழுவதும் ராமத் தியானத்தில் கழித்தான். ராமனின் உத்தரவின்படி அங்கிருந்து புறப்படுவதற்கு

ஆயத்தமானான். பரிவுமிகு சகோதரன் ராமகிருஷ்ணராவ், அவனுடன் இரயில் நிலையம் வரை துணைக்கு வந்து, நாசிக் செல்வதற்கான டிக்கெட்டையும் பெற்றுத் தந்து அவனை இருக்கையில் அமருமாறுச் செய்தார். ராம்தாஸின் தேவைகளைக் குறித்து மிகவும் கவலை கொண்டவரான ராமகிருஷ்ணராவ் வாழைப்பழங்கள், ஆரஞ்சு மற்றும் சில இனிப்புத் தின்பண்டங்கள் அடங்கிய ஒரு பையை பெற்றுக் கொள்ள அவனை வற்புறுத்தினார். இரயில் புறப்பட்டது. ராம் ராம்தாஸுக்காக அவனருகே அமர்ந்திருந்த ஒருவரைத் துணைக்கு ஏற்பாடு செய்தார். அந்த அன்பர், நாசிக் நிலையத்திற்கு இரண்டு நிலையங்கள்முன்வரை ராம்தாஸுடன் பயணம் செய்தார். பயண நேரம் முழுவதும் அவர் ராம்தாஸுடன் இறைவனைக் குறித்தே பேசிக் கொண்டிருந்தார். அவ்வப்போது எவ்வித முன் முயற்சியும் இன்றி இறைவனைக் குறித்து பாடல்களை இயற்றி, பாடவும் செய்தார். உண்மையில், இவர் ராம்தாஸைவிட ராம் மேல் அதிக மோகம் கொண்டிருந்தார். இங்கு ராம், ராம்தாஸுக்கு உண்மையில் தன் மேல் (ராம் மேல்) உன்மத்தமான பக்தி எவ்வாறு கொள்வதெனக் கற்பித்தான். அந்த நண்பருடைய பேச்சையும், பாடல்களையும் கேட்டது ஒரு ஆனந்தமான அனுபவமாகும். இவை அனைத்தும் ராமனின் முன்னேற்பாடுகள்; ராம் என்றுமே கருணை மிகுந்தவன். அந்த நண்பர் இறங்குவதற்குமுன், அவரருகில் இருந்த நாசிக் செல்லும் மற்றொரு பயணியிடம் ராம்தாஸுக்கு வழிகாட்டி அவரை கவனித்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

சரியான நேரத்திற்கு இரயில் நாசிக் சென்றடைந்தது. அந்த புதிய நண்பர், அவனை இரயில் நிலையத்திலிருந்து வெளியே அழைத்துச் சென்றார். இங்கு ஒரு டிராம் வண்டி காத்திருப்பதைக்

கண்ட அந்த நண்பர் ராம்தாஸுக்கு சமிக்ஞை செய்தவாறு அதில் ஏறிக் கொண்டார். அவனும் அவரை தொடர்ந்து அதில் ஏறிக் கொண்டான். விரைவில் அந்த டிராம், பயணிகளால் நிரம்பி மணி அடிக்கப்பட்டு, புறப்பட்டது. டிராம் நடத்துனர் மற்ற பயணிகளுக்கு டிக்கெட் கிழித்துக் கொடுத்துவிட்டு ராம்தாஸிடம் வந்து டிக்கெட்டுக்கான கட்டணத்தை கேட்டார். உண்மையில் ராம்தாஸிடம் பணம் ஏதுமில்லை, எனவே பதிலேதும் கூறாமல் இருந்தான். அருகில் அமர்ந்திருந்த பயணிகள் அனைவரும் ஒரே குரலுடன் சாதுவை தொந்தரவு செய்ய வேண்டாமென்றும், ஒரு சாது பணம் வைத்திருக்கக் கூடாதென்றும், அவனை டிராமனில் உட்கார அனுமதிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டனர். அவர்களின் வேண்டுதலுக்கு நடத்துனர் இசைந்தார்.

மூன்று மைல்கள் கடந்ததும் டிக்கெட் பரிசோதகர் ஒருவர் வண்டியில் ஏறினார். அவர் மீசை வைத்த முதிர்ந்த வயதுடைய மனிதர். ராம்தாஸிடம் வந்து டிக்கெட்டைக் கேட்டார், ராம்தாஸிடம் டிக்கெட் இல்லாமையைக் கண்டு எரிச்சலும், கோபமும் கொண்டு, இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி இல்லை என்றார். அவர் இப்படி கூறுகையில் ராம்தாஸுக்காக நடத்துனரிடம் விண்ணபித்த அதே நண்பர்கள் மீண்டும் அவனுக்காக வேண்டினர். ஆனால், அந்த பரிசோதகரிடம் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. எனவே ராம்தாஸுக்கு இருக்கும் ஒரே வழி கீழே இறங்குவதுதான். ராம்தாஸ் எழுந்து கீழே இறங்குவதற்கு வண்டியை நிறுத்தும்படி பரிசோதகரிடம் கேட்டுக் கொண்டான். இங்கு மீண்டும் ராமனின் சக்தி வெளிப்பட்டது. பரிசோதகரின் மனநிலை திடீரென மாறியது. அவர் அவனை வருத்திக் கொள்ள வேண்டாமென்றும்

தொடர்ந்து வண்டியில் பயணம் செய்யலாமென்றும் தெரிவித்தார். ராமுடையச் சோதனைகள் எதிர்பாராமல் வருகின்றன. ஒருவர் வாழ்க்கையில் எதிர்ப்படும் இன்ப துன்பங்களை அமைதியாகவும், நிதானமாகவும் எதிர்கொண்டு, அவன் விருப்பத்திற்கு இணங்கி, அவனிடம் தன்னை ஒப்புவித்து விட்டால் துன்பமில்லை; ஏமாற்றமில்லை; எவ்வித பயமும் இல்லை!

## அத்தியாயம் - 34

## பஞ்சவடியும், தபோவனமும்

ராம்தாஸ் பஞ்சவடியை அடைந்தான். அழகிய கோதாவரி நதிக்கரையில் சாதுக்களுக்கும், அந்தணர்களுக்கும், ஏழை யாத்திரிகர்களுக்கும் உணவளிக்கப் பல அன்னதான சத்திரங்கள் இருந்தன. இதில் ஒன்றை நோக்கித் தன் நடையைச் செலுத்தினான். அந்த அன்னசத்திரத்தின் தாழ்வாரத்தில் பல பைராகிகளையும், யாசித்து வாழ்கின்ற தாய்மார்களையும், மற்றும் குழந்தைகளையும் அவன் கண்டான். இங்கு ராமனால் தூண்டப்பட்டவனாய், சகோதரர் ராமகிருஷ்ணராவால் தனக்களிக்கப்பட்ட பழங்கள், இனிப்பு வகைகள் அடங்கிய மூட்டையைப் பிரித்து, அதில் உள்ளவற்றையெல்லாம் அங்கிருந்த குழந்தைகளுக்கு வழங்கினான். இது அவனை பெரிய சுமையிலிருந்து விடுவித்தது. உணவைப் பற்றியோ அல்லது உடையைப் பற்றியோ கவலைக் கொள்ளக் கூடாது என்பது ராமனின் ஆணை. பிறகு ராம்தாஸ் புனித நதிக்குச் சென்றுக் குளித்து தன் உடைகளைத் துவைத்துக் கொண்டு நதிக்கரையில் அமர்ந்து ராமத் தியானத்தில் ஆழ்ந்தான். நேரம் இனிதே கழிந்தது. நடுப்பகல் கடந்து விட்டபின் அவன் எழுந்து ஒரு தர்ம சத்திரத்தை நோக்கி நடந்தான். அவன் நுழையும் சமயம், பல சாதுக்கள் உணவருந்திவிட்டு முன் வாசல் வழியாக கை கழுவ வெளியே வருவதைக் கண்டான். அவன் வெளியே அமைதியாக அமர்ந்து ராம நாமத்தை மும்முரமாக உச்சரிப்பதில் ஈடுபட்டிருந்தான். இப்போது முரட்டுத் தோற்றமுள்ள ஒரு

மனிதர் அவனை அணுகி பக்கத்தில் அமர்ந்து ராம்தாஸ் உணவு உட்கொண்டாகிவிட்டதாவெனக் கேட்டார். அதற்கு அவன் இல்லை என்று பதிலளித்தான்.

அவர் உற்சாகத்துடன், 'வாருங்கள், நான் உங்களை உணவு கிடைக்கும் ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன்' என்று கூறினார்.

பிறகு ராம்தாஸின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு, அதே சாலையில் சற்று தொலைவில் இருந்த ஒரு பெரிய கட்டிடத்திற்குள் நுழைந்து, 'ஒரு சாதுவுக்கு உணவளிக்க இயலுமா' என விசாரித்தார். இந்த கேள்வி தாழ்வாரத்தில் எந்த நண்பரிடம் கேட்கப் பட்டதோ, அவர் இது குறித்து நிச்சயித்துவர உள்ளே சென்றார்.

இதற்கிடையில் ராம்தாஸை இங்கு அழைத்து வந்த வழிகாட்டி, 'மகராஜ், பாருங்கள், உணவு குறித்து நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். இங்கு இல்லை எனில், உங்களுக்கு உணவு கட்டாயமாகக் கிடைக்கும்படி நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றார்.

'ராமநாம பஜனை ராம்தாஸின் உதட்டில் இருக்கும்போது அவனிடம் என்றும் இது போன்ற கவலைகளுக்கு எல்லாம் இடமே இல்லை' என்று ராம்தாஸ் பதிலளித்தான்.

பின்னர் அந்த அன்னசத்திரத்தில் உணவளிக்கப்பட்டது. ராம் அவனை நன்கு கவனித்து வருகிறான். ராம் தன் பக்தர்களிடம் கொண்டுள்ள அன்பு, பிறந்த குழந்தையிடம் ஒரு தாய் காட்டும் அன்பைவிட பல ஆயிரம் மடங்கு அதிகம் உயிர் துடிப்புடன் கூடிய அக்கறையாகும். இப்போது ராம், ராம்தாஸைத்

தர்மசாலையில் தங்கியிருக்கும், வியாபாரத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒருவரிடம் ஒப்புவித்தார். அவர் ராம்தாஸிடம் மிகவும் நெருக்கமாகிவிட்டார். அந்த வியாபாரி ராம்தாஸுக்கு ஒரு கம்பளியைக் கொடுத்தார். அதனை ஏற்க ராம்தாஸ் மறுத்ததால், நள்ளிரவில் ராம்தாஸ் உறங்கும்போது, அந்த பரிவு மிக்க அன்பர், ராம்தாஸ் அறியாமல் அப்போர்வையால் அவனைப் போர்த்திவிடுவார். இந்த கால கட்டத்தில் கோதாவரி நதிக்கரையில் குளிர் மிகக் கடுமையாக இருந்தது. அந்த வியாபாரி வற்புறுத்தியதால் அவருடன் ராம்தாஸ் இரண்டு நாட்கள் தங்கி இருந்தான். இரண்டாம் நாள் இரவு அந்த நண்பர், ‘கனவுகளைத் தூண்டும் சக்தியைப் பயின்றிருக்கிறீர்களா?‘ என்று ராம்தாஸை வினவினார். அதற்கு ராம்தாஸ் தான் அது போன்ற சாதனைகள் எதுவும் அறியாதவனென்றும், தனக்கு ராமநாமம் எப்படி உச்சரிப்பது என்பது மட்டுமே தெரியும் என்றும் பதிலளித்தார்.

‘குருஜி, நீங்களும் அதைச் செய்யலாம், ஆனால் நீங்கள் விரும்பினால் மட்டுமே அது சாத்தியம்‘ என்றார் அந்த நண்பர். ‘எடுத்துக் காட்டாக, அடுத்த ‘டெர்பி ஸ்வீப்பில்‘ எந்த எண்கள் ஜெயிக்கும் என்று ராமனிடமிருந்து அறிய தீவிரமாக இச்சை கொள்ளுங்கள், அந்த எண்களை நீங்கள் கனவில் அறிவீர்கள்‘ என்றார்.

‘ராம்தாஸுக்கு ராம் ஒருவனைத்தவிர வேறெதுவும் தேவை இல்லை‘ என்றான் ராம்தாஸ்.

‘வெற்றி பெற்றால் கிடைக்கக் கூடிய பணம் சுய நலத்திற்காகப் பயன்படுத்த அல்ல; சாதுக்களுக்கு உணவளிக்கப் பயன்படும்‘ என்று கருத்தைத் தெரிவித்தார் அந்த நண்பர்.

‘சாதுக்களுக்கு உணவளிப்பதைக் குறித்து ராம் பார்த்துக் கொள்வான்,‘ என்று பதில் கூறினான் ராம்தாஸ்.

இதன்பின் அந்த நண்பர் மௌனமானார். இதுவும், ராம்தாஸ் செல்வத்தின் மேல் இச்சை கொள்கிறானா என்று அறிவதற்கு, ராம் வைத்த சோதனை ஆகும்.

மற்றொரு நிகழ்ச்சி - தர்மசாலையில் நான்கு மாதங்களாக, காய்ச்சலால் உடல் நலம் குன்றிய ஒரு சிறுமி இருந்தாள். அந்தச் சிறுமி நலமடைய ராமிடம் பிரார்த்திக்கும்படி அவள் தாயார் ராம்தாஸைக் கேட்டுக் கொண்டாள். அவ்வாறே, அவள் படுக்கை அருகே சென்று அவள் தீவிர காய்ச்சலால் தாக்குண்டிருப்பதைக் கண்டு, ராமனிடம் அவளுக்கு நல்ல உடல் நலத்தை தந்து ஆசீர்வதிக்கும்படி விண்ணப்பித்தான் ராம்தாஸ். ராமனின் செயல்கள் நம் அறிவுக்கெட்டாதவை. அப்பெண் இரண்டு நாட்கள் குணமடைந்தாற்போல் காணப்பட்டாலும் மீண்டும் நோய்வாய்ப்பட்டாள். ஏன்? எதற்கு? என்பதையெல்லாம் ராம் ஒருவனே அறிவான்.

மறுநாள் நடுப்பகல் ராம்தாஸ் சுமார் மூன்று மைல்கள் நடந்து தபோவனம் என்றழைக்கப்பட்ட இடத்தை அடைந்தான். இங்குதான், பகவான் ஸ்ரீராமச்சந்திரனின் சகோதரன், லட்சுமணன் அரக்கியான சூர்ப்பணகையின் மூக்கை அறுத்ததாகக் கூறப்படுகிறது. தபோவனம் ஒரு அழகிய மனம் கவரும் இடமாகும். இங்கு தாழ்ந்த குன்றுகளின் அடிவாரத்தில் கோதாவரியின் தெளிந்த நீர் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. இந்த குன்றுகளில் ஒன்றின் மேல் அமர்ந்து சுற்றிலுமுள்ள இயற்கைக் காட்சிகளைக் காண்பது என்பது கண்களுக்கும்,

மனதிற்கும் நல்ல விருந்து ஆகும். இங்கு ஒரு பாறையின் மீது செவ்வக வடிவத்தில் பல குகைகள் அடுத்தடுத்து குடையப்பட்டுள்ளன. இப்பாறையின் அடித்தளத்திலிருந்து பத்து அடிகள் ஆழத்தில், நதி வேகமாகப் பாய்ந்து கொண்டிருக்கிறது. ராம்தாஸ் இந்த குகைகளில் ஒன்றினைத் தன் இரவு நாம00 ஜபத்திற்காகத் தேர்ந்தெடுத்து, பிறகு நதியில் குளித்து விட்டுப் பாறையின் மீதேறி அந்த குகையில் அமர்ந்தான். இரவில் குளிர் மிகக் கடுமையாக இருந்தது. அதனால் கண் இமைக்கும் நேரம் கூட அவன் உறங்கவில்லை. இரவும் முழுவதும் புனித ராமநாமத்தை உச்சரித்தவாறு இருந்தான். தபோவனத்தில் பல சாதுக்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்தது. அடுத்த நாள் காலை அவன் பஞ்சவடிக்கு திரும்பி அங்கு ஒரு நாள் தங்கினான்.

# அத்தியாயம் - 35

## த்ரயம்பகேஸ்வர்

மறுநாள் அதிகாலை ராம்தாஸ் பஞ்சவடியிலிருந்து பதினாறு மைல்கள் தொலைவிலுள்ள த்ரயம்பகேஸ்வருக்குப் புறப்பட்டான். அந்த இடத்தை மாலை சுமார் மூன்று மணிக்குச் சென்றடைந்தான். முதலில் த்ரயம்பகேஸ்வர் கோயிலைத் தரிசித்தான், அந்த இடம் அவனுக்கு கேதார்நாத்தையும்,பத்ரி நாத்தையும் நினைவூட்டியது. இந்த நகரமும், கோயிலும் அமைந்திருந்த பீடபூமி மூன்று பக்கங்களிலும் உயரமான மலைகளால் சூழப்பட்டுள்ளது. இந்த மலைகளில், ஒன்றின் பின் ஒன்றாக அவன் ஏறினான். முதலில் அவன் ஏறியது அம்பாஜி என்ற சிறு குன்று, அடுத்து கங்காதுவார் என்னும் குன்றிலும், பிறகு இவைகளில் இன்னும் உயரமான பிரம்மகிரி குன்றிலும் ஏறினான். பிரம்மகிரி குன்றில் ஏறியது நினைவில் நிற்கக் கூடிய ஒரு இனிய அனுபவமாகும். ராம்தாஸ் தன்னந்தனியாக ராமநாமத்தை உச்சரித்தவாறு பிரம்மகிரியில் ஏறினான். குன்றின் உச்சியை அடைந்தபின், அவன் மறுபக்கத்தின் சரிவில் கீழே இறங்கினான்.

மறுபக்கத்தில் ஒரு சாது தங்கியிருந்த, சிறு குளத்துடன் கூடிய சிவன் கோயிலை வந்தடைந்தான். அந்த சாது ராம்தாஸை வரவேற்று உபசரித்தார். அவர் ராம்தாஸுக்கு, பண்டைய காலத்தில் இந்த குன்றுகளின் மேல் தவம் செய்து கொண்டிருந்த கௌதமரின் கதையினை விவரித்தார். கோயிலின் கூரைமீது

அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தக் குரங்குகளின் தோழமையுடன் தனிமையில் வாழ்ந்து வருகிறார் அவர். ராம்தாஸுடன் தன்னிடமிருந்த உணவை சிக்கனமாகப் பகிர்ந்து கொண்டார். பிறகு ஒரு ஒற்றையடி பாதையைக் காட்டி அந்த பாதை 'ஜடாசங்கர்' என்றழைக்கப்படும் இடத்திற்குக் கொண்டுச் செல்லும் என்று கூறினார்.

அவ்வாறே ராம்தாஸ் ஒரு அந்தண யாத்திரிகருடன் புறப்பட்டான். ஆனால், அந்த அந்தணர் சிறிது தூரம்வரைதான் உடனிருந்தார்; அவர்கள் முட்புதர்கள், உயரமாக வளர்ந்திருந்தப் புற்கள், நாணல் வழியாக நடக்கும்போது வழி தவறி, ஒருவரையொருவர் தவறவிட்டனர். இப்போது ராம்தாஸ் குன்றுகளில் செல்ல, வரிசையாக நீண்ட படிகள் பாறைமீது செதுக்கப்பட்டிருப்பதைக் கண்டு அதன் வழியே இறங்கி, சிறிய இடைவெளி ஒன்று இருப்பதைக் கண்டு, அதனுள் ஊர்ந்து சென்று வெளிவந்தபோது, தான் மற்றொரு குன்றின் மேல் இருப்பதை உணர்ந்தான். மீண்டும் சிறிது தூரம் நடந்தபோது அங்கும் முன் போன்றே பாதை ஒன்று இருப்பதைக் கண்டு அங்கும் கீழே இறங்கி மறுபக்கம் வந்த போது அவன் மற்றொரு குன்றில் இருந்தான். மீண்டும் இங்கு முட்புதர்கள், அடர்ந்த நாணல் வழியாகத் தொடர்ந்து நடந்தான். முடிவாக குன்றின் உச்சியை அடைந்தான். இங்கு சரிவின் விளிம்பில் ஒற்றையடிப்பாதைபோல் ஒன்று காணப்பட்டது.

இப்போது ராம்தாஸ் பயங்கரமான செங்குத்தானப் பாறை ஒன்றின் விளிம்பில் நின்று கொண்டிருந்தான். இந்த இடத்திலிருந்து செங்குத்தாக கீழே நேராக பார்த்தால், பல நூறு அடிகளுக்குக் கீழ் இருக்கும் குன்றின் அடிவாரத்தைக் காணலாம். இந்த சரிவில் நடக்க முயற்சிப்பது மிக ஆபத்தான செயல் ஆகும். ஆனால், ஒரு வினோதமான மோகம் ராம்தாஸை பற்றிக்

கொண்டது போலும். அவன் அந்த சரிவில் மெல்ல ஊர்ந்துச் சென்றான். அக்குன்றின் மேல் வளர்ந்து நன்கு காய்ந்துபோன மெல்லிய புல்தான் அவன் பிடிக்கு ஆதாரமாகும். அவனது இரண்டு கைகளும் அப்பணியில் ஈடுபட்டிருந்தன. இப்போது அவன் சரிவின் மேல் இருந்தான். இந்த நிலையில், எந்த நேரத்திலும் எதுவும் நிகழலாம். ஆனால் அவனோ எவ்வித கவலையும், பயமுமின்றி இருந்தான். திடீரெனப் புல்லைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் இடது கை நழுவியது, இடது பாதமும் சறுக்கியது. இந்த சூழ்நிலையிலும், அவன் அமைதியாகவும், பதட்டமின்றியும் இருந்தான் - அவன் உதடுகள் உரக்க ராமநாமத்தை உச்சரித்துக் கொண்டிருந்தன.

இது ராமனுடைய பாதுகாக்கும் சக்தியைச் சோதிக்கக்கூடியக் கடுமையானக் கட்டமாகும். ஆனால் எல்லாம் வல்ல ராமனால் செய்ய முடியாதது ஒன்றுமில்லை. ராம்தாஸின் மற்றொரு கை ஒரு கல்லை பற்றிக் கொண்டிருந்தது. அந்தோ! அந்தக் கல்லும் ஆடிக்கொண்டிருந்தது. தன் சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டி, மனதை ஒருமுகப்படுத்தி நழுவிய காலை உயர இழுத்துக் கொண்டு நிதானம் தவறிய நிலையிலிருந்து மீண்டும் சம நிலையை அடைந்தான். இவையனைத்தும் ராமனின் அருள் ஒன்றினால் மட்டுமே சாத்தியம். ராம் தான் அவனை மேலே இழுத்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு, மீண்டும் அவன் செங்குத்தான சரிவிற்குச் செல்லும் அதே பாதையை அடைந்தான். அவன் திரும்பி வருகையில் தூய நீரூற்றினால் நிறைந்த குளம் ஒன்றினைக் கண்டான். இங்கு, தான் முன்பு தவறவிட்ட அந்தண யாத்திரிகரை மீண்டும் சந்தித்தான். ஜடாசங்கர் என்னும் இடத்தைக் கண்டுபிடிக்க இயலவில்லை. எனவே, இருவரும் வந்த வழியே தங்கள் நடையைக் கோயிலை நோக்கித் திருப்பினர். மாலைக்குள் குன்றிலிருந்து இறங்கும்

வழியைக் கண்டுபிடித்து திரியம்பகேஸ்வர் ஆலயத்தை அடைந்தனர். அன்று இரவு, தான் கீழே விழும் நிலையில் இருந்தபோது மிக அற்புதமான முறையில் ராம் தன்னைக் காப்பாற்றியதை மீண்டும், மீண்டும் நினைவு கூர்ந்தான். ராம்தாஸ் அன்று மாலையே ஒரு சிறிய குன்றின் மேலேறி அங்கிருந்த மராட்டிய சந்நியாசியின் ஆஸ்ரமத்தில் சிறிது நேரம் செலவழித்தான். அவன் தர்மசாலையில் தங்கியிருந்தபோது அங்கு நிரந்தரமாக தங்கியிருந்த சான்றோரான ஒரு முதிய சந்நியாசியைத் தரிசித்தான். அது அவனுக்குக் கிடைத்த பெரும் பேறாகும். ராம்தாஸுடன் அவர் உரையாடிக் கொண்டிருந்த போது, அந்தணர்கள் பட்டு நூலால் நெய்யப்பட்ட ஆடைகளை புனிதமானதாகக் கருதி உபயோகப்படுத்துவதைக் கடுமையாகக் கண்டனம் செய்தார், அந்த வணக்கத்துக்குரிய சந்நியாசி. அவருடைய கருத்து, தாவரங்களின் பூக்களிலிருந்து பெறும் பருத்தியைக் கொண்டு நெய்யப்பட்டப் பருத்தி ஆடைகள் மிக சிறந்ததும் தூய்மையானதுமாகும் என்பதுதான். ஆனால், பட்டுத்துணி ஆயிரக்கணக்கான பட்டுப் புழுக்களைக் கொன்றுத் தயாரிக்கப்படுகிறது. ஆதலால், பட்டுத்துணிகளைப் புனிதமானதாகப் போற்றுவதைத் தவிர்த்து, அவற்றை அணிவதை ஒரு பாவச் செயலெனக் கருதி முற்றிலும் தவிர்க்க வேண்டும் என்று அவர் கருதினார். மேலும், ஒவ்வொரு வருடமும் சீனா, ஜப்பான் மற்றும் இதர வெளிநாடுகளிலிருந்து இந்தியாவுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டு இறக்குமதி செய்வது இந்திய நாட்டின் செல்வங்களும், வளங்களும் சுரண்டப்பட்டு, அவற்றைக் குன்றச் செய்யும் என்றும் கருதினார்.

அந்த சந்நியாசி, பெரும் உள்ளார்வத்துடன் பேசியபின், ராம்தாஸ் தன் கருத்துகளுடன் ஒத்துப்போகிறானா என்று கேட்டார். ராம்தாஸ் உடனே தன் தாழ்மையான நிபந்தனையற்ற

ஒப்புதலை அளித்தான். இந்த விஷயத்தில் ஆர்வம் மிகுந்தவரான அந்தத் துறவி சுற்றறிக்கைகள் வினியோகிப்பதில் மும்முரமாக ஈடுப்பட்டிருந்தார். மேலும் சுற்றறிக்கைகளைக் கோயில் மற்றும் தர்மசாலையின் சுவர்களில் ஒட்டச் செய்தார். அவர் செய்தித் தாள்களில், ஆர்வமும் பக்தியும் மிகுந்த அனைத்து மக்களையும் பட்டுத்துணிகளை பயன்படுத்துவதை தவிர்க்கும்படியும், அதை உபயோகிப்பது பாவச் செயல் என்றும் கூறி பட்டு நூல் கொண்டு நெய்த ஆடைகளை முழுமையாக நிராகரிக்கும்படி கோரிக்கை விடுத்தார். நம் முன்னோர்கள் பட்டாடை அணிவதை அறியாதவர்கள் என்றும், வேதங்களில் இதைப் பற்றி எவ்விதக் குறிப்புகளும் இல்லை; எந்த சமய அமைப்பும் இதை அணிய வேண்டும் என்று வற்புறுத்தவும் இல்லை; மேலும் அதற்கான அதிகார பூர்வமான மத சான்றுகளும் எதுவும் இல்லை என்று அவர் விளக்கிக் கூறினார்.

அந்த சந்நியாசி ராம்தாஸிடம் அன்பும், பரிவும் கொண்டவராய் அவன் திரியம்பகேஸ்வரில் இன்னும் சில நாட்கள் தங்க வேண்டுமென விரும்பினார். ஆனால் ராமனின் ஆணை ஏற்கனவே வந்துவிட்டது. எனவே, மறுநாள் காலை, ராம்தாஸ் அவ்விடத்தை விட்டு பிற்பகல் பஞ்சவடியை அடைந்தான். அங்கிருந்த ஸ்ரீ ராமச்சந்திரனின் கோயிலையும், கோதாவரி நதிக் கரையில் இருந்த பல சாதுக்களையும் தரி சித்தான். அடுத்த நாள் இரயில் நிலையத்திற்குச் சென்று, இரவு இரயிலில் புறப்பட்டு, மன்மாடு, குருதுவாடி வழியாகப் பயணம் செய்து பண்டரிபுரம் வந்தடைந்தான்.

## அத்தியாயம் - 36

## பண்டரிபுரம் - பீஜப்பூர்

இந்தியாவின் அனைத்து பகுதிகளிலிருந்தும் ஒவ்வொரு நாளும் நூற்றுக் கணக்கான யாத்திரிகர்கள் வந்து தரிசிக்கும் பண்டரிபுர விட்டோபா மிகவும் புகழ் பெற்ற தெய்வம் ஆகும். முக்கியமான விழாக் காலங்களில் ஆயிரமாயிரம் மக்கள் இங்கு குவிந்த வண்ணம் உள்ளனர். அழகிய சந்திரபாகா நதி இங்கு பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறது. நதிக்கரையிலிருந்துச் சற்று தொலைவில் விட்டோபா கோயில் அமைந்துள்ளது. இந்த கோயிலுக்குள் நுழையும் ஒருவர் ஆன்மிகச் சூழலில் முழுவதும் மூழ்கிவிடுவார். ஒரு பக்கம் ஜாலராவுடன் குழு ஒன்று மும்முரமாக பஜனை செய்து கொண்டிருந்தது. மற்றொரு பக்கம் மகாத்மா ஒருவர் பக்தியின் உயர்வினைக் குறித்துச் சமய சொற்பொழிவு ஆற்றிக் கொண்டுடிருந்தார். இடைஇடையே, அவர் இனிய பாடல்களையும் அல்லது உதாரணங்களையும் மேற்கோள் காட்டி வியாக்கியானத்திற்குச் சுவையூட்டினார். மீண்டும் இன்னொரு இடத்தில் சில மகாத்மாக்கள் கையில் தம்பூராவுடன் துக்காராமரின் அபங்கங்கள் என்னும் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தனர். கோயிலின் மாபெரும் தூண்களருகே சிலர் அமர்ந்து ஆழ்ந்த தியானத்தில் மூழ்கி இருந்தனர். இன்னும் சிலர் கோயிலின் தாழ்வாரங்களில் சமய நூல்களைப் படித்த வண்ணமிருந்தனர். மேலும் சிலர் ‘விட்டல், விட்டல்‘ என்று மீண்டும், மீண்டும் சொல்லிக் கொண்டு நடனமாடிக் கொண்டிருந்தனர். ராம்தாஸ் ஒவ்வொரு முறையும்

கோயிலினுள் செல்லும்போதும் ஓ! இது போன்ற காட்சிகளில் தன்னை இழந்து விடுவான். எப்போதும் யாத்திரிகர்களின் பெரும் கூட்டம் விடோபா தரிசனத்திற்காக அங்கு இருந்து கொண்டே இருக்கும்.

புனித நதிக்கரையில் இருந்த சிறிய சிவன் கோயிலைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டு, இரண்டு சாதுக்களுடன் சேர்ந்து ராம்தாஸ் பண்டரிபுரத்தில் ஐந்து நாட்கள் தங்கி இருந்தான். ராம் மிகவும் பரிவு மிக்கவன். பண்டரிபுரத்திலிருந்து பன்னிரண்டு மைல்களுக்கு அப்பால் மங்கள்வேதா என்ற சிற்றூர் இருப்பதாக ராம்தாஸ் கேள்விபட்டான். ஒரு நாள் காலை கால் நடையாக புறப்பட்டு அவன் நடுப்பகல் மங்கள்வேதா சென்றடைந்தான். இந்த சிறு நகரத்தில் அன்பு உள்ளம் கொண்ட வியாபாரி ஒருவர் ராம்தாஸுக்கு உணவளித்து உபசரித்தார். அந்த வியாபாரி ராம்தாஸின் வரவிற்காகவே காத்திருந்ததுபோல் தோன்றியது. எவ்வித தயக்கமும் இன்றி அனைத்தையும் ராமனிடம் ஒப்புவிக்கும்போது ராமனின் திட்டங்கள் அனைத்தும் அவ்வாறே அமையும். மங்கள்வேதா ஒரு சிறிய ஊர். இங்குதான் நானூறு ஆண்டுகளுக்கு முன் மகான் தாமாஜி பந்த் செழிப்புடன் வாழ்ந்தார். பீஜப்பூர் பாதுஷா அரசாட்சியில் தாமாஜி பொது விவகாரங்களை நிர்வகித்த அலுவலகமிருந்த இடமான பழமையான கோட்டை இன்றும் அங்கு உள்ளது.

தாமாஜி பண்டாரிபுரம் விட்டோபாவின் தீவிர பக்தர். பல்லாயிரக்கணக்கான மக்கள் பஞ்சத்தால் தாக்குண்டுப் பசி, பட்டினியில் வாடிய போது, அவர்கள் துயர் துடைக்க தாமாஜி அச்சமின்றி அன்போடு அறச்செயல்கள் எங்ஙனம் ஆற்றினார் என்பதும், தன் பக்தனான தாமாஜியை எவ்வாறு இறைவன்

விடோபா, தீண்டத்தகாதவன் உருவில் வந்து காத்தான் என்பதும், தாமாஜியின் வாழ்க்கை வரலாற்றில் அனைவரும் நன்கு அறிந்த ஒரு முக்கிய அங்கமாகும். இந்த புண்ணிய நகரில் வாழும் ஒவ்வொருவரும் மகான் தாமாஜியை நினைவு கூர்வதை ஒரு புனிதமான, பிரியமான செயலாக இன்றும் கருதுகின்றனர். இந்த மகானின் சமாதியின்மேல் எழுப்பப்பட்டுள்ளக் கோயிலில் விட்டோபா, ருக்குமாபாய் மற்றும் தாமாஜி ஆகிய மூவரின் விக்கிரகங்கள் உள்ளன. பகல் முழுவதும், மற்றும் இரவின் பெரும் பகுதியிலும் தொடர்ந்து பூஜை, பஜனை, சமய நூல்கள் படிப்பது ஆகியவை இக்கோயிலில் நடைபெற்று வருகிறது. இங்கு ஒரு சாதுவும் வசித்து வருகிறார். அந்த சாதுவின் சத்சங்கத்தில் ராம்தாஸ் ஐந்து நாட்கள் தங்கியிருந்தான். ராமனின் அருளால் அந்த நாட்கள் வெகு மகிழ்ச்சிகரமாகக் கழிந்தன.

அந்த சாது ஒரு எளிமையான, குழந்தை உள்ளம் கொண்டவர். மேலும், தாமாஜியின் உண்மையான சீடனாவார். அவர் ஒரு வெள்ளைப் பசுவை வளர்த்து வந்தார். அதன் மேல் மிகவும் நேசம் கொண்டு, அதை கிருஷ்ணாபாய் என்றழைத்து வந்தார். அந்த கோமாதா மேல் மராத்தியில் அழகான பாடல்களை இயற்றியுள்ளார். பசு, உலகில் அன்னையின் பிரதிநிதியாகத் திகழ்கிறது. மென்மை, புனிதம், தியாகம் மற்றும் களங்கமின்மை ஆகிய அனைத்தின் உன்னத இலட்சிய உருவாகத் திகழ்கின்றது. கோமாதா அளிக்கும் பாலிலிருந்துதான் மனிதனின் உபயோகத்திற்குத் தேவையான தயிர், வெண்ணெய், நெய் முதலியவை கிடைக்கின்றன. மேலும் உணவு தானியங்களான மக்காசோளம் பயிரிடுவதற்கான நிலங்களை உழுவதற்கு பயன்படும் காளைகளின் தாயும் பசுதான். பசுவின் சாணம் கூட,

உரமாகவும், எரி பொருளாகவும் உபயோகப்படுகிறது. காடுகளும், மரங்களும் அருகாமையில் இல்லாத 'கத்தியவார்' என்னும் இடத்தில் வரட்டிதான் (சாணத்தால் தயாரி க்கப்பட்டது) பொதுவான எரி பொருளாகும். பசு இறந்தபின் அதன் தோலிலிருந்தும், எலும்புகளிலிருந்தும் பற்பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. கோமாதா! உண்மையாகவே நீ ஒரு காமதேனு தான்.

இப்போது, ராம்தாஸ் ராமனின் ஆணையால் மங்கள்வேதாவிலிருந்து நாற்பது மைல் தூரத்திலிருக்கும் பீஜப்பூருக்கு கால்நடையாகப் புறப்பட்டான். பயணத்தின்போது பல கிராமங்களின் வழியாகச் செல்லுகையில் ஆங்காங்கு வசிக்கும் சாதுக்களும் அவனை வரவேற்றனர். சில இடங்களில் கிராமவாசிகள் அவனைத் தங்களுடன் இரண்டு மூன்று நாட்கள் தங்கும்படி வற்புறுத்தினர். ஆதலால் ராமனின் அருளால் அந்த பயணம் மகிழ்ச்சிகரமானதாக இருந்தது. இறுதியில் ஒருநாள் மாலை பீஜப்பூர் அடைந்தான். அவன் நேராக ஒரு ராமர் கோயிலுக்குச் சென்று, அங்கு வழிபாட்டிற்குபின் சிறிது பிரசாதம் பெற்று, கோயிலில் இருந்த ஒரு கொட்டகையில் இரவு ஓய்வெடுத்துக்கொண்டான்.

மறுநாள் காலை, ராமனால் தூண்டப்பட்டவனாய், சாதுக்களின் உணவுக்குக் தேவையான பொருட்களை வழங்கும் ஈகை மனம் கொண்ட வியாபாரிகளைக் குறித்து விசாரித்தான். ஒவ்வொரு நகரத்திலும், பட்டணத்திலும் அத்தகைய உதார மனம் படைத்த பக்தர்கள் இருக்கவே செய்தனர். ராம்தாஸ் சமைப்பதில்லை, உணவு வழங்கப்பட்டால் உண்பான், இல்லையெனில் உண்பதில்லை. எனவே, உணவுப்

பொருட்களின் அவசியம் அவனுக்கில்லை. ஆகையால் ராம்தாஸ் உணவுப் பொருட்களை சேகரிப்பதை விட்டுவிட்டான். ஆனால் இங்கு குறிப்பிட்ட இந்த சேகரிக்கும் முயற்சி, ராமனின் தூண்டுதலாகும். இரண்டு அல்லது மூன்று மணி நேரம் ஒரு கடைத் தெருவிலிருந்து மற்றொன்றிற்கும், ஒரு சந்திலிருந்து மற்றொன்றிற்கும், ஒரு கடையிலிருந்து மற்றொன்றிற்குமாகத் தேடி அலைந்து, ஒரு இடத்திற்கு வழி காட்டப்பட்டு, அங்கு சிறிது கோதுமை மாவும், பருப்பும், மற்ற பொருட்கள் வாங்க ஒரு அணா காசும் கிடைக்கப் பெற்றான். இவை அனைத்தையும் ஒரு துணியில் மூட்டை கட்டிக்கொண்டு, மக்கள் கூட்டம் நிறைந்த தெருக்கள் வழியாக எங்கு போவதென்று அறியாமல் சென்று கொண்டிருந்தான்.

அவன் ஒரு தெருவின் பாதி வழியில் சென்று கொண்டிருக்கும் போது, ஒரு இளைஞாரின் அழைப்பு குரல் கேட்டு நின்றான். பல மாடிக்கட்டிடம் ஒன்றிலிருந்து வெளிவந்த அந்த இளைஞன் அவனை அணுகினான்.

‘மகராஜ், இன்று என்னுடைய வீட்டில் பிட்சை ஏற்று எங்களுக்கு அருள் புரிவீர்களா? அப்படி ஏற்றுக் கொள்வீர்களென்றால், நீங்கள் இந்த வீட்டிற்குப் பன்னிரண்டு மணிக்கு வாருங்கள்‘ என்று கேட்டுக் கொண்டார்.

அப்போது, நேரம் காலை பத்து மணி. ராம்தாஸ் அவர் அழைப்பை ஏற்றுக் கொண்டு மேலும் தன் நடையை தொடர்ந்து முடிவில் மூடியிருந்த ஒரு கடையின் வெளி தாழ்வாரத்தில் உட்கார்ந்தான். பத்து நிமிடங்கள் கூட கழிந்திருக்காது, சற்றுத் தொலைவில், பெரிய உருத்திராட்ச ஜெபமாலை கழுத்தில்

அணிந்த ஒரு முதியவர் கடும் வெயிலில் ஒரு வீட்டின் முன் யாசகம் கேட்டு நிற்பதை கண்டான். ராம்தாஸ் கைகளைத் தட்டி அந்த முதியவரை தான் அமர்ந்திருக்கும் இடத்திற்கு வருமாறு சைகை செய்தான். அவரும் வந்தார். பரஸ்பர வணக்கத்திற்குப் பிறகு, அவர் ராம்தாஸின் பக்கத்தில் அமர்ந்தார். ராமனின் தூண்டுதலின்படி, கோதுமை மாவு முதலான பொருட்கள் அடங்கிய மூட்டையையும், ஒரு அணா காசையும் ராம்தாஸ் அவரிடம் ஒப்படைத்தான். இவ்வாறு அளித்ததும், அவர் பயபக்தியுடன், ஒன்றும் புரியாத, வெற்றுப் பார்வையுடன் ராம்தாஸை உற்று நோக்கினார். பிறகு, ராம்தாஸின் கால்களில் நெடுஞ்ஞாண்கிடையாக விழுந்து, பாதங்களைப் பிடித்துக் கொண்டு மேலே பார்த்த வண்ணம் அவரிடம் கூறினார்: 'கடைசியாக, கடவுள் எனக்கு காட்சியளித்து விட்டார்! நான் இத்தனை வருடங்களாக எந்த தெய்வத்திடம் தொடர்ந்து பிரார்த்தனை செய்து வந்தேனோ, அந்த தெய்வம் வேறு யாருமல்ல; சாட்சாத் நீங்களேதான்!' என்று கூறினார். 'இது கனவா? அல்லது நிஜமா?' என்று கதறினார்.

அவரின் விநோதமானச் செயலைக் கண்டு ராம்தாஸ் காரணம் விளங்காமல் முற்றிலும் திகைத்துப் போயிருந்தான்.

'ஓ சகோதரனே, உங்களுக்கு என்ன மன வேதனை?' என்று ராம்தாஸ் கேட்டான்.

'மகராஜ், உண்மை என்னவென்றால், காலை முதல் யாசகத்திற்காக நான் அலைந்து திரிந்து கொண்டிருக்கிறேன், இதுவரை அரை அணாதான் எனக்கு கிடைத்துள்ளது, (இங்கு தன்னிடமிருந்த இரண்டு கால் அணாக்களை அவர்

காண்பித்தார்). வீட்டில் உணவிற்காக, வயதான நோய்வாய்ப்பட்ட என் மனைவியும் மற்றும் இரண்டு குழந்தைகளும் இருக்கின்றனர். வெறும் கைகளோடுச் செல்வது, ஒன்றும் அறியா அக்குழந்தைகளை பட்டினி போடுவதாகும். நான் இறைவனிடம் தாழ்மையுடன் இறைஞ்சிக் கொண்டிருந்தேன். நான் நம்பிக்கை இழந்து கொண்டிருந்த நிலையில்தான், நீங்கள் என்னைக் கூப்பிட்டு பொருட்களை அளித்தீர்கள். உங்களை நான் பிரத்தியட்ச தெய்வமாகவே காண்கிறேன்' என்று பதிலளித்தார்.

ஓ ராம், எத்தகைய மனதைப் பிழியும் சோகக் கதை! ஓ ராம், உலகில் எத்தனை பேர் இது போன்றுக் கடும் பசி பட்டினியால் வாடுகின்றனரோ! இந்த சம்பவம் இங்கு ஏன் விளக்கமாக விவரிக்கப்படுகிறதென்றால், ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், தாழ்ந்த சமுதாயத்தினர் மத்தியில் நிலவும் பசி, பட்டினி என்கிற அவல நிலையைச் சுட்டிக் காட்டுவதற்காகவே. ஓ செல்வந்தர்களே, தாய்மார்களே, ஓ ராம்!

பிறகு அந்த முதியவரிடமிருந்து விடைப்பெற்றுக் கொண்டுத் தன்னை அழைத்திருந்த அந்த வியாபாரியின் வீட்டுக்கு வந்தான் ராம்தாஸ். அந்த வியாபாரியும் அவர் மனைவியும் அன்புடன் அவனை நன்கு உபசரித்தனர். அவர்கள் அவனைத் தங்கள் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கும்படி வற்புறுத்தினர். அங்கு இருந்த நாட்களில் அவன் மாபெரும் கட்டிடமான ஜும்மா மஸ்ஜித்தைச் சென்றுப் பார்த்தான். அதன் சிறிய கோபுரங்களின் மீதேறினான், பிரம்மாண்டமான கோல்குமட்டாவின் காட்சிகளை காண அமரும் பெரிய படிகட்டுகளில் ஏறினான். இந்த கட்டிடத்தின் நுணுக்கமான கட்டிடக் கலை மிக

அற்புதமானது. இக் கட்டிடத்தின் குவிந்தக் கூரை லேசான ஒலியையும் ஏழுமடங்கு மிகைப்படுத்தி எதிரொலிக்கச் செய்கிறது. பெரும் பூதாகாரமான இந்த கட்டிடத்தின் முன் ஒரு மனிதன் நிற்பதை ஒப்பிட்டால், ஒரு எறும்பு போல் தோற்றமளிப்பான். ராம்தாஸுக்கு ராம் இந்த அதிசயங்கள் அனைத்தையும் காண்பித்தான்.

# அத்தியாயம் - 37

## ஸ்ரீ சித்தாரூட சுவாமி

ராம்தாஸ் தெற்கு நோக்கிச் செல்லும் இரயிலைப் பிடித்து இறுதியாக ஹுப்ளியைச் சென்றடைந்தான். ஹுப்ளிக்குச் செல்ல வேண்டுமென்ற எண்ணத்தை அவன் மனதில் தோற்றுவித்தவர் ஹுப்ளியில் பிரசித்திப் பெற்ற மகான் ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமியின் சிறந்த பக்தரான மும்பையை சேர்ந்த சகோதரர் ராமகிருஷ்ணராவ் ஆகும். சிறந்த ஞானியான இந்த மகானை ராம்தாஸ் தரிசிக்க வேண்டுமென்பதற்காகவே ராம் அவனை இங்கு அழைத்து வந்தான். இரயில் நிலையத்திலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமி மடத்தை அவன் நண்பகல் சென்று அடைந்தான். இந்த மடம் மூன்று பிரிவுகள் கொண்ட கட்டிடங்களாகும். முதலாவது, பாறையின் மீது எழுப்பப்பட்ட கூம்பு வடிவ கோபுரமாகும். இந்தக் கோயில், சுவாமிகள் மகாசமாதி அடைந்த பின்னர் அவரின் அஸ்தியைப் (உடலை எரித்த பின்னர் எஞ்சியவை) பாதுகாக்கும் கருவூலமாகப் பயன்படுத்துவதற்கு ஆகும். மற்ற இரு கட்டிடங்களும் மிக விசாலமானவை. இவற்றின் உட்பகுதியில் பெரிய சதுர முற்றம் அமையுமாறு கட்டப்பட்டிருந்தன. இதில் இரண்டாவது, சந்நியாசிகள், பக்தர்கள் மேலும் யாத்திரிகர்கள் தங்குவதற்கான தர்மசாலையாகும். மடத்துக்கெதிரே இரு அழகிய குளங்கள் இருந்தன. குளங்களின் மறுபக்கத்தில் குளிர்ச்சியான நிழல் தரும்

மரத்தோப்பு இருந்தது. இந்த மடம் மனம் கவரும், ஆரோக்கியமான சுற்றுசூழலில் அமைந்திருந்தது.

மடத்தினுள் நுழைந்ததும் ராம்தாஸ் அங்கிருந்த நண்பர்களின் கருணையால் ஸ்ரீ சித்தாரூட ஸ்வாமிக்கு அறிமுகப்படுத்தப் பட்டவுடன், அவன் பக்தியுடன் மகானின் பாதங்களில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான். இங்கு அவன் வெகு ஆனந்தத்துடன் 10 நாட்களைக் கழித்தான். மடத்தில் காலையிலும், மாலையிலும் சமய நூல்களின் மூல உரை படிக்கப்பட்டு, அதன் விளக்கம் விவரமாக விரித்துரைக்கப் பட்டது. கற்றறிந்த ஞானியான அந்த முனிவரின் வாயிலிருந்து உதிர்ந்த பொருள் நிறைந்த வார்த்தைகளை ராம்தாஸ் செவிமடுத்தான், அல்ல! அந்த அமுதத்தைப் பருகினான் என்றே சொல்லலாம். இங்கு தங்கியிருந்த நாட்களில் சுவாமிகள் அளித்த உபதேச மொழிகள் அவனுக்கு ஆன்மிகப் பாதையில் மேற்கொண்டு முன்னேறுவதற்கு அனுகூலமாய் இருந்தது, ராம்தாஸுக்காக ராம் அப்படியோர் அமைப்பினை அமைத்திருந்தான். காலை, மாலை நேரங்களைத் தவிர்த்து மற்ற நேரங்களில் மடத்தின் பின்னால் இருந்த வயல்களில் சுற்றித் திரிவான். அந்த இடத்தில் புகழ் வாய்ந்த, காலம் சென்ற முகம்மதிய மகானான கபீர்தாசரின் சமாதியில் அதிகமான நேரம் இருப்பான். மடம் மற்றும் தர்மசாலையில், முக்கியமாக சுவாமிகள் முன்னிலையில், சுற்று சூழலில் அமைதியும், சாந்தமும் நிறைந்த ஆன்மிக சூழ்நிலையை ராம்தாஸ் தெளிவாக அனுபவிக்க முடிந்தது. ஸ்ரீ சித்தாரூட சுவாமி வயது முதிர்ந்த ஒரு பெரியயோகி ஆவார். அவர் இளகிய மனமும், சாந்தமும், விருந்தோம்பல் பண்பும், முழு அமைதியும் நிறைந்தவராக இருந்தார்.

இப்போது, ராம்தாஸ் ஹூப்ளி மடத்தில் தங்கியிருக்கின்றான் என்ற செய்தி மங்களூருக்கு எட்டியது. அவனின் முன்னாள் வாழ்க்கை துணைவியும் தற்போதையத் தாயும் (பெண்கள் அனைவரும் ராம்தாஸுக்கு அன்னையாவார்கள்) மற்றும் சிறுமியாகிய அவன் மகள் ஆகியோரும் அவனை அழைத்துச் செல்ல மடத்திற்கு வந்தனர். அவர்கள் ஸ்ரீ சித்தாரூட சுவாமியிடம் தங்கள் குறையை முறையீடு செய்தனர். கருணையும் நல்ல உள்ளமும் கொண்ட அந்த மகான், ராம்தாஸை அவர்களுடன் மங்களூர் செல்லும்படி அறிவுரை கூறினார். அதை ராமனிடமிருந்து வந்த ஆணை என பாவித்து ராம்தாஸ் அவருடைய அறிவுரைக்கு கீழ்ப்படிந்தான். ராம் எப்பொழுதும் நல்லதையே செய்கிறான், நன்மைக்காகவே செய்கிறான். அந்த அன்னை (பூர்வாசிரமத்தில் ராம்தாஸின் மனைவி) அவனை இல்லற வாழ்க்கைக்கு மீண்டும் திரும்பும்படிக் கேட்டுக் கொண்டார். அதற்கு ராம்தாஸ் இவ்வாறு பதிலளித்தான்:

‘அன்னையே, இவை அனைத்தும் ராமனின் செயல்களே; ராம்தான் எளிய ராம்தாஸை இல்லற வாழ்க்கை என்னும் பந்தத்திலிருந்து விடுவித்தான். இப்போது ராம்தாஸ் ராமனின் புனித திருவடிகளில் வாழ்கிறான். அவன் இப்போது ராமனின் அடிமை, இனி எப்போதும் அவ்வாறே வைத்திருக்க ராமனிடம் பிரார்த்திக்கின்றான். அவனை நம்பி அவனுடைய சர்வ வல்லமையையும், அனைவரையும் காக்கும் சக்தியையும் ஏற்றுக்கொண்டு, அனைத்து செயல்களையும் அவன்தான் செய்கிறான் என்றும், அனைத்துப் பொருட்களுக்கும் அவன்தான் உரிமையாளன் என்றும் நம்புவது ஒன்றே வாழ்க்கையின் சஞ்சலங்களையும், துன்பங்களையும் தொலைத்துவிடுவதற்கான

ஒரே வழி. ஓ அன்னையே, உங்களுடைய கவலை, கலக்கம், தவிப்பு ஆகிய அனைத்து சுமைகளையும் தூக்கி எறிந்து, ராமனின் தெய்விக திருவடிகளில் சரணடைந்து என்றும் எப்போதும் அங்கு அமைதியுடனும், ஆனந்தத்துடனும் வாழ்ந்திருங்கள். இந்த ஏழை ராம்தாஸ் கேட்டுக் கொள்வது எல்லாம் இவ்வளவுதான்.'

இப்போது அந்த அன்னையின் பரிவான துணையுடன் அவன் இரயிலில் புறப்பட்டு மர்மகோவாவை அடைந்தான். பின், அங்கிருந்து நீராவிப் படகில் ஏறி மங்களூரை அடைந்தான். அவர்கள் பந்தரை (மங்களூர் கடல் துறைமுகத்தை) வந்தடைந்ததும், ராம்தாஸ் ராமனின் கட்டளைப்படிப், சற்று முன்னேறி வேகமாக நடந்து, கதிரி குன்றுகளை நோக்கிச் சென்று இரவு அங்கு தங்கிருந்தான். மறுநாள் காலை ராமனின் கட்டளைப்படி பூர்வாசிரமத்தில் ராம்தாஸின் சகோதரரான சீதாராமராவ் அவர்களின் வீட்டிற்கு சென்றான். அவர் ஒரு சிறந்த ராம பக்தர். சில நாட்களுக்குப் பின்னர் தெய்வீக ராம மந்திரத்தை தனக்கு உபதேசித்த (தன் தந்தை) குருதேவரை தரிசிக்கும் பேறு பெற்றான். இப்போது (இது நடந்தது 1923-ல்) ராம்தாஸ் கதிரி குன்றுகளின் மேல் உள்ள பஞ்ச பாண்டவர் குகை என்றழைக்கப்பட்ட குகையில் தங்கி, தன் முழு நேரத்தையும் ராமனைப் பற்றி பேசுவதிலும், அவனைப் பற்றி எழுதுவதிலும், அன்பே உருவான, ஒளியும், மேன்மையும் பொருந்திய ராமனைத் தியானிப்பதிலும், அமைதியான, மாசற்ற, வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்!!

# *அனுபந்தம் - 1*

## குகையில்

*(ராம்தாஸ் குகையில் இருந்தபொழுது இதயப் பூர்வமாக உவகைப் பெருக்கில் எழுதியவை)*

*1. ஓ ராம்! எனக்கு தாய், தந்தை, குரு, சகோதரன், நண்பன், அறிவு, புகழ், செல்வம் அனைத்தும் நீ தான். நீயே எனக்கு புகலிடம் அளிப்பவன். உன் அடிமையை எப்பொழுதும் உன்னுடன் ஒன்றாய் இணைத்திடுவாய்.*

*2. ஓ ராம்! உன் அடிமை எதை செய்யலாம், எதை செய்யகூடாது என்பது உன்னால் மட்டுமே தீர்மானிக்கப்பட வேண்டும். அவன் குழப்பத்தில் திகைத்திருக்கிறான், நிர்கதியாய் இருக்கிறான்; அனைத்தையும் உன்னிடம் ஒப்புவித்திடச் செய்வாய். அவன் உயிர் வாழ்வது, செயல்படுவது, வாழ விழைவது அனைத்தையும் உன்னில் இருக்கச் செய். உண்ணுவது, பருகுவது, தூங்குவது, நடப்பது, உட்காருவது, நிற்பது, பேசுவது, சிந்திப்பது, காண்பது, கேட்பது, நுகர்வது, தொடுவது மற்றுமுள்ள அனைத்தையும் அவன் உன் பெயராலும், உனக்காக மட்டுமே செய்யட்டும். ஓ ராம்! ஓ தெய்வத்தாயே, ராம்தாஸ் உன்னுடையவன். அவன் உடல், உள்ளம், இதயம், ஆன்மா அனைத்தும் உன்னுடையவை.*

*3. ஓ ராம்! உன் அடிமைக்கு உன் எல்லையில்லா அன்பை எப்படி உணர்வது என்று தெரியவில்லை. அவன் இதைக் குறித்துப் புலம்பட்டுமா? புன்முறுவல் பூக்கட்டுமா? இதை நினைத்து அழட்டுமா? இதை நினைத்துச் சிரிக்கட்டுமா? உன்*

அன்பு சில நேரங்களில் மிக கம்பீரமாக, ஆடம்பரமாக, கடலில் ஆரவாரமாகப் பொங்கும்; பேரிரைச்சல் கொண்ட அலைகள் போன்றும், சில நேரங்களில் மிக மிருதுவான, மேன்மையான, அமைதியான, சிறிய நீரோடையின் சாந்தமான நீரோட்டத்தின் சிற்றலைகளால் உண்டாகும் மெல்லிய இசை போன்றும் திகழும்.

4. ஓ ராம்! உன் அடிமையை என்றும் உன்னில் ஆழ்ந்திருக்கும்படிச் செய், அவன் ஒரே சமயத்தில் உன் குழந்தையும், உன் அடிமையும் ஆவான். நீ அளித்த அறிவைக் கொண்டு அனைத்து வழிகளிலும் சேவை செய்ய விரும்புகிறான். அவன் உன்னுடைய வழிகாட்டுதலையும், பாதுகாப்பையும் என்றும் எதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கும் ஒன்றும் அறியாக் குழந்தை. அவனை உன் புனித பாதங்களை விட்டு விலக அனுமதிக்க வேண்டாம். ஓ ராம்! உன்னை மறக்கும்படியான ஒரு சூழ்நிலையில் அவனை வைத்துவிடாதே!

5. ஓ ராம்! உன் அறிவில்லாக் குழந்தையை, உன் எளிய அடிமையை, ஓ தாயே காப்பாற்று, காப்பாற்று, காப்பாற்று!

6. ஓ எல்லையில்லா அன்பே, உன் குழந்தையின் வறண்ட இதயத்தில் சிறிதேனும் அன்பை உட்புகுத்து!

7. ஓ ராம்தாஸ்! ராமனின் இனிய அன்பெனும் அமுதத்தை என்றும் பருகிக் கொண்டே இரு!

8 . ஓ ராம்! ராம்தாஸை உன் மேல் பித்தனாக்கு - பைத்தியம், பைத்தியம், முழு பைத்தியமாக்கு. அவனுக்கு இதைத் தவிர வேறு எதுவும் தேவையில்லை. அவன் உன்னைப்பற்றி ஒரு மூடன் போன்று பேசட்டும். ஓ ராம்! உலகம் அவனை பித்தன்

என்று பேசட்டும், ஆம், அவன் உன் மீது பித்து கொண்டவன், ராம்!

9. ராம்தாஸுக்கு மற்றவர்களின் கருத்துகளைப் பற்றிக் கவலையில்லை. அவன் உலகத் தளைகளில் சிக்கிக்கொள்ளக் கூடாது. ஓ ராம், அவன் உலகத்தளைகளில் சிக்கிக்கொள்ளாமல் பார்த்துக்கொள். அவன் உனக்கு மட்டுமே கட்டுப்படவேண்டும், உன் அன்பெனும் பிடியில் மட்டுமே கட்டுப்பட வேண்டும், ஆனால் உனது அன்போ சுதந்திரமானது. எனவே தளைகள் எங்கே? இது அழகிய சுதந்திரம் எனும் சங்கிலியால் பிணைக்கப்பட்டது. ஓ ராம், உன் மேல் தீவிர அன்பினால் ஏற்படும் பைத்தியம் எவ்வளவு இனிமை, எவ்வளவு போதை, எவ்வளவு ஈர்ப்புடையது!

10. ஓ ராம், உன்னுடைய அடிமையின் மனத்தை தூய்மைப்படுத்து. அவன் எங்கும் தீமையைக் காணக்கூடாது. அவன் மற்றவர்களிடம் குற்றத்தைத் தவிர்த்து, நல்லதை மட்டுமே காணவேண்டும். ஓ ராம்! அவன் மேல் கருணை கொள். அவன் மனதை உன் அருளால் நிரப்பிவிடு. இந்த அடிமைக்கு நீதான் அடைக்கலம். ஓ காப்பாற்றுபவனே! பிரபஞ்சத்தின் தாயும், தந்தையும் நீ! உன்னுடைய இந்த அடிமையை, அழியக்கூடிய இவ்வுடலையே தானெனக் கருதும், குறுகிய உலக வாழ்க்கையிலிருந்து மேலே தூக்கிவிடு. உன் முடிவில்லா அன்பினை அவன் உணரும்படிச் செய். ஓ ராம்தாஸ், நீயாகவே உண்டாக்கிக் கொண்ட குறுகிய எல்லைகளிலிருந்து வெளியே வந்துவிடு. ராம் அன்புடனும், கருணையுடனும்: ‘விரைவாக வந்துவிடு என் குழந்தாய், இதோ என் கையை பற்றிக்கொள்; இதை தாவிப் பிடித்துக்கொண்டு உன் தளைகளிலிருந்து மேலே

எழுந்து வா' என்று அழைக்கின்றான். ஓ அன்பே, பிரபஞ்சத்தின் உயிரே, ஓ அன்னையே, ஓ ராம், புகழ்மிக்க சூரிய ஒளி போன்ற உன் அன்பில் திளைத்திருப்பது எவ்வளவு பெருமைக்குரி யது!

11. ஓ ராம்தாஸ்! நீ ராமனுக்கு உள்ளும் புறமுமாய் இருக்கிறாய், நீ எங்கும் அவனுடன் இருக்கிறாய்; அவன் உன்னுடன்கூட எங்கும் இருக்கிறான். அவனால் உன்னை விட இயலாது, உன்னால் அவனை விட இயலாது. அவன் உன்னுடன் பிணைக்கப்பட்டுள்ளான், நீ அவனுடன் பிணைக்கப்பட்டுள்ளாய். நீ அவன் பாதுகாப்பில் இருக்கிறாய், அவன் உன் பாதுகாப்பில் இருக்கிறான். அவனின்றி உன்னால் எதுவும் இயலாது, நீ இன்றி அவனால் எதுவும் இயலாது. நீ அவனில் வாழ்கிறாய், அவன் உன்னில் வாழ்கிறான்; ஆயினும் நீ அவன் அடிமை, அவன் உன் காவலன். ஓ ராம்! நீ இருவரேயானாலும், நீ ஒருவன் என்பதே உண்மை. நேசிப்பவனும், நேசிக்கப்படுபவனும் ஒன்றுபட்டு, இருவர் ஒருவராகி, அந்த 'ஒன்று' என்றும் நிலைத்திருக்கும் முடிவற்ற, அழிவில்லா அன்பாகும். ஓ அன்பே, ஓ ராம்! மனமே, ராமனின் அன்பால் நிரப்பப்பட்டு பைத்தியம்போல் பிதற்றிக் கொண்டிரு.

12. ஓ ராம்! ராம்தாஸின் ஆசைகள் அனைத்தையும் அழித்துவிடு. அவற்றை கசக்கிப் பிழிந்து வெளியேற்றிவிடு, அவனை உயர்த்தி, உன்னில் அவன் அழிவில்லா இருப்பிடத்தைக் காணட்டும். ஓ! ராமனின் மேல் உன்மத்தம் கொண்டவனே. ஓ அன்பே! அவனுள் இருக்கும் வன்மம், வெறுப்பு, ஆசைகள் அனைத்தையும் முழுமையாக நீக்கி விடு. உன் அருளால் அவன் உள்ளம் தூய்மை அடையட்டும். ராம் அவனைக் காப்பாற்று, அவனைக் காப்பாற்று. அன்புருவாய்

எங்கும் நிறைந்திருக்கிறாய். ராம், ராம். எல்லாம் ராம், உள்ளும் புறமும், அனைத்து திசைகளிலும், மேலும், கீழும், காற்றில், மரங்களில், பூமியில், நீரில், வானத்தில், வெட்டவெளியில் எங்கும் ராம், எதிலும் ராம், அன்பே ராம். ஓ ராம்! உன் அன்பினால் ஆனந்த உணர்வலைகள் ஊற்றெடுத்து ராம்தாஸின் உயிரினுள் ஊடுருவட்டும். ஓ ராம்! ஆனந்தமே, அன்பே, பேரின்பமே, உன்மத்தமே, ஓ நன்மையே, எனக்கு தூய அன்பும், தெய்வீக ஒளியும் தவிர வேறு ஓய்வு, தூக்கம், உணவு, களிப்பு போன்ற எதுவும் வேண்டாம். ஓ! ஆனந்தமே, ராம்தாஸ் அளவிற்கு மிஞ்சிய அதிகமான, அமுதமாகிய ராமனின் எல்லை இல்லா அன்பில் திளைக்கின்றான். ஓ! தெய்வீக ஒளியே! பிரகாசிப்பாயாக. ஓ! திடீரென எழும் மின்னல் ஒளியே, பிரகாசிப்பாயாக, பிரகாசிப்பாயாக! ஓ! பேரானந்தமே!, ஓ! பெரு மகிழ்ச்சியே! வா. ஓ ராம்! ராம்தாஸ் உன்னில் கரைந்துவிட்டான், கரைந்துவிட்டான் ஆனந்தத்தில் - இதுவரை விளக்கப்படாத ஆனந்தத்தில், விவரிக்கமுடியாத பேரானந்தத்தில், உன் ஒளி வெள்ளத்தில் கரைந்துவிட்டான். உன் தெய்வீக ஒளியில், எங்கும் பிரகாசம், எல்லாம் பிரகாசம். அன்பு, அன்பு, அன்பு. எங்கும் அன்பு!

13. புகழ், பெயர், செல்வம், உறவுகள், நண்பர்கள் அனைத்தும் ஒரு மாயை. எதுவும் உண்மையல்ல, எதிலும் சத்தியம் இல்லை, ராமனில் நிலைத்த மனம் பேரமைதி, பேரானந்தம் கொள்கிறது, காரணம் ராம் அன்பு, ராம் கருணை, ராம் பேரானந்தம்!

14. உடல் அழியட்டும், மனம் அழியட்டும், அனைத்து உணர்வுகளும் மறையட்டும், உலகங்கள் அனைத்தும்

அழியட்டும், தோன்றியதெல்லாம் தம் தோற்றங்களை இழக்கட்டும். ராமன் - அழிவற்ற அன்பு, அழிவற்ற ஆனந்தம் இவை மட்டுமே எப்பொழுதும் நிலைத்து இருப்பவை. இவைகளே தூய்மை, மாசு அடையாதவை, புனிதத் தன்மை கொண்டவை, அமைதி நிறைந்தவை. ராமனுக்கு நல்வரவு! ராமனுக்கு நல்வரவு!

15. ராம் மேல் உள்ள பித்து, ராமனின் அன்பினால் உண்டான பித்து, ராம், வருக, ராம்தாஸை உன் உடைமை ஆக்கிக்கொண்டு அவனை ஆழம் காணமுடியாத உன் அன்பெனும் கடலில் நீந்தச் செய்.

16. ராமனின் மேல் ஏற்படும் பித்து இனிமையானது; குளிர்ச்சியானது இதமானது; அமைதியானது. ஏனெனில் அனைத்தும் அவனது அன்பெனும் அமுதத்தில் பதப்படுத்தப்பட்டவை.

17. நிலையற்ற இவ்வுலக சுகங்களே, என்னை விட்டு விலகுங்கள். ராமனின் பேரானந்தம் என்னும் கதிரவன் உதித்து எல்லாப் புகழுடன் விரைந்துத் தோன்றி, சுற்றிலும் அமைதி, அன்பு என்னும் தன் கிரணங்களை வீசிக்கொண்டு, துன்பங்கள் என்னும் இருளை அகற்றி விடுகிறது. அல்ல, இரவில் ஒளி வீசி சஞ்சாரம் செய்யும் சந்திரன், நட்சத்திரங்கள் அனைத்தும் எவ்வாறு சூரிய ஒளியில் மங்கிவிடுகின்றனவோ அவ்வாறு 'ராம்' எனும் கதிரவன் முன் அழியும் தன்மை கொண்ட உலக இன்பங்கள் அனைத்தும் பறந்தோடிவிட்டன.

18. பறவை, தான் அடைப்பட்டிருந்தக் கூட்டிலிருந்து விடுபட்டு வானளாவப் பறந்து விண்வெளியில் மறைவது போல்,

சிறு துளி ஒன்று கடலில் விழுந்து மறைவது போல், ராம்தாஸ் தன்னை ராமனில் இழந்து விட்டான்!

19. ஓ! மனமே, எப்பொழுதும் ராமனில் திடமாக நிலைத்திரு, மற்ற எந்த தொழிலும் பயனற்றவை. ராமனைத் தேடும் உன் பணியில் உலக மக்களின் கருத்துகளால் நீ பாதிக்கப்படாமல் இரு. எப்பொழுது ராம் உன்னுடையவனே! உனக்கு வேறு எதுவும் தேவையில்லை. எப்பொழுதும் ராமனுடன் இரு. உன் எண்ணம், சொல், செயல் அனைத்தும் அவனையே பற்றியதாய் நிற்கட்டும். ராம்தாஸ், விழித்தெழு, அனைத்தையும் உதறித் தள்ளி எழுவாய். உன் முன்னேற்றப் பாதையில் தளர்வு கொள்ளாதே. தாவித் தாவி வேகமாகச் சென்று அந்த மேன்மையான பழத்தைப் பறித்து அழிவில்லா ஆனந்தத்தை சுவைப்பாயாக. ஆஹா! என்ன இனிமை இந்த பழம், இதன் சுவை! ராமனின் மிருதுவான அன்பெனும் மயக்கத்தை ஊட்டுகிறது.

20. ஓ ராம்தாஸ், நீ ஒன்றும் இல்லாதவன். மதிக்கத் தக்கவாறு உன்னிடம் ஒன்றும் இல்லை. உன்னால் ஏதாவது நல்லது நடக்குமென்றால் அவையனைத்தும் ராமனுடையது. நீ மதிப்பற்ற சிறு களிமண்தான், அற்பமான உன் தற்பெருமை கொள்ளும் குணத்தை விட்டொழி.

21. ராம்தாஸ் நீ ஒரு பித்தன், முழுப் பித்தன், இனிமையான பித்தன், பித்தன் பித்தன். ஓ அன்பே! அன்பே! ராம்தாஸ், நீ உண்மையில் பித்தன். உன் பித்திற்குக் காரணப்பொருள் ராம். ராம்தாஸ், நீ ஒரு முழுமையான பித்தன். ராமனின் அன்பை, ராமனின் அமுதத்தைப் பருகு, பருகு. ராமனின் ஒளி வெள்ளம்

எங்கும் பிரகாசிக்கிறது!

22. ராம்தாஸ் நீ சுதந்திரமானவன், எதுவும் உன்னைக் கட்டுப்படுத்தாது. நீ காற்றைப் போல் சுதந்திரமானவன், உயரப் பற, வானளாவப் பற, நீ எங்கும் பரவும்வரை உயரச் செல், பிரபஞ்சம் முழுவதும் வியாபித்துவிடு. ராமனுடன் ஒன்றிவிடு. அனைத்தும் ராம்! அனைத்தும் ராம்! எங்கும் நிறைந்திருக்கும் உன் ஒளி காண்பதற்கு எவ்வளவு கம்பீரமானது! இந்த காட்சி எவ்வளவு அற்புதமானது. 'பளிச்', 'பளிச்' என எழும்பும் ஒளி! மின்னல் போன்ற ஒளி! ஓ பேரொளி! ஓ இறைவா! ஓ அன்பே! ஓ ராம்! ராம்தாஸ் இந்த உலகில் இருக்கும் எதுவுமே இதற்கு ஈடாகாது. உன் பித்து ஒப்புயர்வற்றது.. புத்தி கூர்மையை வீசி எறிந்துவிடு, அது யாருக்கு வேண்டும்? புத்தி கூர்மை விஷம் போன்றது - பித்து அமுதம் போன்றது. ராம்மீது கொண்டப் பித்து, எப்பொழுதும் நினைவில் இருக்கட்டும் ராம்தாஸ். ராம்தாஸ் உனக்கு தனி இருப்பு கிடையாது. ராம்தாஸ் நீ யார்? நீயாகவே உன் கற்பனையில் தோற்றுவித்த உருவெளித்தோற்றமே. அனைத்தையும் தகர்த்து எறிந்து விட்டு ராமனிடம் கட்டுண்டு இரு. கடல் போன்றுப் பரந்து விரிந்த அன்பில், அருளில், அவன் ஒளியில். பனித்துளி (தனிப்பட்ட ஜீவன்) பிரகாசித்துக் கொண்டிருக்கும் கடலில் நழுவுகிறது.

23. குழந்தைத்தன்மை, ராம் மேல் பித்து, பேரறிவு அனைத்தும் ஒன்றுதான்.

24. ஓ ராம், உன்னுடைய எளிய அடிமை முழுமையாக உன்னுடையவன் தான். அவன் வாழ்க்கையே உன் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டது. உன்னுடைய அழிவில்லா இனிய அன்பு

ராம்தாஸின் இதயத்தில் நுழையட்டும்; உண்மையற்ற இவ்வுலகில் தகாத செயலில் ஈடுபடச் செய்யும் தூண்டுதல்களால் பாதிக்கப்படாமல் எதிர்த்து நிற்கக் கூடிய சக்தியையும், வலிமையையும் உன் அடிமைக்குக் கொடு. அவன் எப்பொழுதும் உன்னுள் வாழட்டும்.

25. ஓ ராம், உன்மேல் பித்து ஏற்படச் செய்யுமாறு உன் அடிமை மீண்டும் மீண்டும் புலம்புகிறான். ஆனால் அவனுடைய இதய பூர்வமானப் பிரார்த்தனைகளுக்கு நீ செவி சாய்க்கவில்லை. நீ குறுகிய காலத்திற்கு மட்டுமே அவனை பைத்தியம் கொள்ளச் செய்கிறாய், எப்பொழுதும் பித்தனாக இருக்கும்படி ஏன் வைப்பதில்லை? அவன் மனதில் உன்னையன்றி வேறு எந்த நினைவும் இல்லாமல் இருக்கட்டும். உன்னை, உன்னை மட்டுமே நினைக்கட்டும் - அத்தகைய பித்துபிடித்த நிலையைத்தான் ராம்தாஸ் தாழ்மையுடன் உன்னிடம் யாசிப்பது. இவன் மேல் இரக்கம் கொள்.

26. கனவிலும், நனவிலும், உறக்கத்திலும் எப்பொழுதும் ராம்தாஸின் மனம் உன் நினைவில் நிலைத்திருக்கட்டும், ஓ! ராம்! ஓ! அன்னையே! ஓ! காப்பவனே! இக்குழந்தையின் மேல் கருணை காட்டு, உன் அடிமையின் மேல் இரக்கம் கொள்.

27. ராம்தாஸ், உன் குறிக்கோளை நோக்கிப் புறப்படு - ஓ ராம், அவன் இனிமேல் உனக்காக பாடுபடட்டும், துன்பப்படட்டும், மரிக்கட்டும். உன் அருளுக்காக, அன்புக்காக, அனுபூதிக்காக, அவன் அவமானம், இகழ்ச்சி, நிந்தனை, இல்லை மரணமே வந்தாலும் எதிர் கொள்ளட்டும். இந்தத் துன்பம் அளிக்கும் சோதனையில், சோம்பலாக இருக்கும் ராம்தாஸின் உள்ளம் தூய்மை அடையட்டும். துன்பத்தின்

உச்சியே இன்பத்தின் சிகரமும். இரண்டையும் கடந்து செல்வதே உண்மையான பேரானந்தம் - உண்மையான அமைதி. ஓ ராம், குரல் கொடு, உன்னுடைய கண்டிப்பான கட்டளை வரட்டும், அல்லது இந்த உடலே, ஒரு உபயோகமற்ற வஸ்து, மலிந்து அழிந்து போகட்டும். இந்த உடல் இருக்கும் வரை ஒவ்வொரு நொடியும் உன் சேவைக்காகப் பயன்படட்டும். ஓ ராம்!

28. அமைதி அடங்கிவிட்டது. சூறாவளி முன்னால் காத்திருக்கிறது. அலை மேல் அலை எழுவதை, கொதித்து பொங்கும் கடலின் பேரிரைச்சல் கொண்ட பேரலைகள் அவன் உள்ளத்தில் அலை மோதுவதை ராம்தாஸ் உணர்கின்றான். ஓ ராம் உன் அடிமையை காப்பாற்று, அவனுக்கு சக்தி, வலிமை, உன்னுடைய பேரறிவு, அனைத்தையும் அளித்து உண்மையின் சன்னிதியில் - அன்பெனும் கோயிலில் - ஞானத்தீயில் அவனை தியாகம் செய்விப்பாய். எல்லாம் ராம், ராம், ராம், ராம்! ஓ காத்தருள், காத்தருள், காத்தருள்! ராம்தாஸ் உன்னுடையவன், உடல், உள்ளம், எல்லாம் எல்லாம் உன்னுடையது.

29. ராம்தாஸை உன் மேல் பித்து பிடிக்க செய். விரைவில்! கால தாமதமின்றி! விரைவில்! விரைவில்! அவன்மேல் கருணைகொள். ஓம் ஸ்ரீ ராம்.

30. ஓ நம்பிக்கையின் நம்பிக்கையின்மையே! எழுவாய் எழுவாய், ஓ மகிழ்ச்சியின் துன்பமே! எழுவாய் எழுவாய், ஓ! இருட்டின் ஒளியே! எழுவாய் எழுவாய், ஓ! அழிவற்ற வாழ்வெனும் இனிமையான கனவே! எழுவாய் எழுவாய், ஓ! பேரானந்தம், பேரொளி - சொல்லில் விவரிக்க இயலாத பெருமகிழ்ச்சி - இறை அனுபூதிக்காக அழுவது, புலம்புவது, புன்முறுவல் செய்வது, சிரிப்பது, வாழ்வது, இறப்பது

என்பனவெல்லாம் ராமனின் அன்புக்காகவே, அருளிற்காகவே. ஓம் ஸ்ரீ ராம். அமைதி, அமைதி, அமைதி! ராம், ராம், ராம்!

31. ராம்தாஸ், நீ நலிந்தவன் அல்ல, சர்வ வல்லமை உடையவன். ராம் தன் தெய்விக பிரகாசத்தை உன்னுள் புகுத்தியுள்ளான். நீ ஒரு அழிவற்ற விதை. தன் பேரொளியை உன்னுள் பாய்ச்சியிருக்கிறான். விழித்தெழு! நீ வல்லமை மிகுந்தவன். ராமனுடைய அன்பின் வசீகர சக்தியால் நீ அனைத்தையும் வெற்றி கொள்ளலாம். உன்னை சக்தியற்றவன் என்று நினைத்து தாழ்வு அடையாதே. மலை உச்சியிலிருந்து, வீட்டுக் கூறை மேலிருந்து அவன் அன்பு, புகழ் எனும் முரசைக் கொட்டு. தைரியமாக இரு! முன்னேறிச் செல். தீரத்துடன் புயலை எதிர் கொள். விதி உன் அடிமை, உனக்குக் கட்டுப்பட்டது, அதை உன் காலடியில் அழுத்தி வைத்துக்கொள். ராம் உன்னுடைவனாக இருக்க பயம் ஏன்? குறுகிய நோக்குடைய எல்லா தடைகளையும் நீக்கு. மேலே, மிக உயரத்திற்குச் சென்று அன்பால் இந்த உலகம் முழுவதையும் கட்டித் தழுவிக்கொள். இந்த பிரபஞ்சம் முழுவதும் நீ வாழும் இடமாகும் அதுவே உன் உடலாகும். அதில் நீ வாழ்கிறாய் அன்பு எனும் நிலையில். அங்கு அன்பைத் தவிர வேறு எதுவும் இல்லை, அன்பு ஒப்புயர்வற்றது. ஒவ்வொரு இலையும், ஒவ்வொரு புல்லும், ஒவ்வொரு தூசியும், நுண்ணிய கண்ணிற்குப் புலப்படாத ஜீவிகள், ஒவ்வொன்றும் உன் அன்பெனும் கீதத்தை உரத்த ஒலியில் இசைக்கின்றன. ஓ! ராம்! நிலாக்கதிர்கள் ஒவ்வொன்றும், சூரியனின் ஒவ்வொரு கிரணமும், நட்சத்திரத்தின் மின்மினி ஒளியும் உன் அன்பைப் பிரதிபலிக்கிறன. ஓ ராம்! ஒவ்வொரு கண்ணீர்த்துளியும், ஒவ்வொரு புன்சிரிப்பும், ஒவ்வொரு நீர்க்குமிழியும், ஆனந்தத்தில் எழும் ஒவ்வொரு இனிய மினிமினிப்பும் உன் அன்பினால் நிறைத்துள்ளது. ஓ ராம்.

*32.* ஓ ராம்தாஸ், துறவின் உச்சிக்கு உன்னை உயர்த்திக் கொண்டு, அங்கே அதன் சிகரத்தில் அமர்ந்துக்கொண்டு உன்னைச் சுற்றிலும் இருக்கும் அனைத்து காட்சிகளின் நிலையற்றத் தன்மையைக் கவனி. எங்கும் பிறப்பு, வளர்ச்சி, இறப்பு என்பதை காண்கின்றாய். எல்லாம், எல்லாம் முடிவில் அழிவு எனும் ஒரே பாதையை நோக்கி வேகமாக ஓடுகிறன. தொடர்ந்து அழிவை நினைவூட்டும் இத்தகைய இடுகாட்டில் - அனைத்துப் பொருள்களும் முடிவில் நலிவடைந்து அழிந்து மண்ணாகவோ, சாம்பலாகவோ மாற்றம் பெறுகிறன - இறை அமுதாகிய அன்பு மட்டும் இல்லையெனில், அன்பின் இனிமையான அழியாத ஈர்ப்பு சக்தி மட்டும் இல்லையெனில், எத்தகைய பயங்கர மனச் சோர்வை, துன்பத்தை மனிதன் சந்திக்க வேண்டி இருக்கும்? அன்புதான் நம்பிக்கை அளிக்கும் திடமான சத்தியம் - அந்த அன்புதான் கம்பீரமான, பல்வேறு தோற்றங்களில் திகழும் மறையக் கூடிய இப்பிரபஞ்சத்தில் அனைத்து பொருள்களையும் ஊடுருவிப் பிணைத்து உயிரூட்டுகிறது. அன்புதான் கடவுள், அன்புதான் ஆனந்தம், அன்புதான் ராம்.

*33.* ஓ ராம், ராம்தாஸை உன் அமுதம் போன்ற அன்பால் நிரப்பு. அவன் உள்ளத்தில் தீய எண்ணங்களோ, வேற்றுமை உணர்வோ எழாத வண்ணம் பாதுகாப்பாய். அவன் அனைத்தையும் அன்பு பூண்ட இதயத்தோடு காணட்டும்.

*34.* ஓ ராம்! உலகின் துக்கத்தில் கண்ணீராக இருப்பதும் நீ தான், உலகின் மகிழ்ச்சியில் சிரிப்பாக இருப்பதும் நீ தான். ஆயினும், நீ துக்கத்திற்கு அப்பாற்பட்டவன், மகிழ்ச்சிக்கு அப்பாற்பட்டவன்!

35. ராம், நீ ஒரு அழிவில்லா அன்பு குழந்தை. ராம்தாஸ் எப்பொழுதும் உன் மேன்மையான புன்னகையை அள்ளிப் பிடிக்க தாழ்ந்து நிற்கின்றான். ஆனால் அவை அவன் பிடியிலிருந்து நழுவி விடுகிறது.

36. அன்பு தன் குளிர்ந்த ஒளியைப் பொழிகிறது, ராம்தாஸ் அதைப் பருக தன் உதடுகளைத் திறக்கும்போது அது நழுவி விடுகிறது.

37. ராம்தாஸ் இறுதியில் அந்த புன்னகையைப் பிடித்துவிடுகிறான். அது விவரிக்க முடியாத ஒன்று. அதன் விளைவாக அவன் முகத்தில் பேருவகை மலர்கிறது.

38. ராம்தாஸ் கடைசியாக ஆழ்ந்த அன்பெனும் அமுதத்தைப் பருகி அமைதிக் கடலில் சுதந்தரமாக மிதக்கின்றான்.

39. ஓ அன்பே, ஓ ராம், அனைத்தையும் மிருதுவான உன் ஒளியுள் அணைத்துக்கொள், அனைத்து அதிர்வுகளும் சீராக, உண்மையானதாக அமையட்டும். விவரிக்க இயலாத ஆனந்தத்தின் வசீகர சக்தி எங்கும் ஆட்சி செய்யட்டும்.

40. ஓ ராம், ராம்தாஸை உன் பித்தனாக்கு. அவன் உன்னை தவிர வேறு எதைப் பற்றியும் பேசுமாறு வைக்காதே. உன்னைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்கச் செய்யாதே. நீ மிகவும் இரக்கமுள்ளவன். நீ மிகவும் அன்பு கொண்டவன். ஓ அன்பே, ஓ கருணையே, ராம்தாஸை உன்னுடையவனாக ஆக்கிக் கொள்.

41. நீ எதை செய்தாலும் அது நன்மைக்கே: ராம்தாஸ் முழுமையாக உன்னுடையவன். நீ தான் அவனை நடக்க, பேச,

சிந்திக்க, செயல்பட, அனைத்தையும் உன் விருப்பப்படிச் செய்விக்கிறாய். அவன் எதற்கும் வருத்தப்படவோ, பச்சாதாபப்படவோ கூடாது, அவன் எப்பொழுதும் உன் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கிறான், ராம் அவன் உன்னை எல்லா இடங்களிலும் காண்கிறான். நீதான் இந்த பிரபஞ்சமாக காட்சி அளிக்கின்றாய் - மாபெரும் விண்வெளியாகவும், அழகான, பல்வேறு வகைப்பட்ட உலகங்களின் தொகுதியாகவும் இருக்கின்றாய். ஓ, எவ்வளவு கம்பீரமான காட்சி உன்னுடையது. ஓ உன் வெளிப்பாடு எவ்வளவு உயர்வானது! மாபெரும் நீர் நிலைகள் - சூரிய கிரணங்கள் பட்டு உருகிய வெள்ளிக் குழம்பு போல் பளபளப்பாக பிரகாசிக்கும் பரந்த கடலில் எழும் அலைகள், அதன் நீர்ப்பரப்பில் வாழும் எண்ணிலடங்கா உயிரினங்கள் - அனைத்தும் நீயே. ஓ பரந்து விரிந்த வானம், உன்னுடைய இந்த அமைப்பு எவ்வளவு சிறப்பு வாய்ந்தது! எல்லையில்லாத, பரந்து விரிந்த நீலவண்ண மண்டபத்தில் ஆங்காங்கு மிதக்கும் விசித்திரமான பல உருவங்கள் கொண்ட வெண்மையான மேகங்கள், அளவில்லாதப் படைப்புகளை உன் அரவணைப்பில் வைத்திருப்பது எல்லாம் உன் கைவண்ணம்தான். ஓ பூமியே! உன்னைத் தழுவியிருப்பது போல் தோற்றமளிக்கும் வானத்தின் காணமுடியாதச் சுற்றளவை அளக்க நீ வீணாக முயற்சிக்கிறாய். ஆச்சரியமாக உன்னை பார்த்துக் கொண்டிருக்கும் சூரிய, சந்திர, நக்ஷத்திரங்களுக்கு, எப்படிப்பட்ட விவரிக்க முடியாத காட்சிகளை, நீ அளிக்கின்றாய்! எப்பொழுதும் உன்னையே கண்டுகொண்டிருக்கும் சூரிய, சந்திர, நக்ஷத்திரங்கள் ஒருபொழுதும் சோர்வடையாமல் உன் (பூமியின்) சுழற்சியால் தொடர்ந்து மாறிக் கொண்டிருக்கும்

எண்ணிலடங்காத அழகுக் காட்சிகளை, நீ அளிக்கின்றாய். பசுமை நிறைந்த உன் பள்ளத்தாக்குகள், அதனிடையே ஓடும் தெளிந்த நீரோட்டம். வானத்தை நோக்கி உயர்ந்து நிற்கும் மலைகள் - இவை என்றும் உன் அமைதியை காத்து வரும் பெரும் பாதுகாவலர்களாகும். பச்சை, மஞ்சள் நிறங்களால் நிறைந்த, பரந்து விரிந்த காடுகள் உன் அழகிய ஆடைகளாகும். அதன் அன்பு அரவணைப்பில் வாழும் பலவகையான உயிரினங்கள், இவையனைத்தும் அற்புதக் காட்சிகளே!

42.ஆடம்பரமாகவும், பகட்டாகவும், அழகாகவும் உள்ள இந்த உலகமெனும் கண்காட்சியை எவர் செய்தது? எல்லாம் ராமனின் செயல்பாடாகும். அன்பின் செயல்பாடாகும், ராம் தானாகவே தன் முழுப் பொலிவுடன் அன்பு கொண்டு வெளிப்பட்டுள்ளான்.

43. ஓ ராம்தாஸ், உன்னுடையது என்று சொல்லிக் கொள்ள, உனக்கு சொந்தமானது இவ்வுலகில் எதுவும் இல்லை. நீ உள்பட அனைத்தும் ராமனுடையதே. ராம் அனைத்தையும் நன்மைக்காவே செய்கிறான். ராம் தான் செய்பவன். ராம்தாஸ், அதற்கேற்றபடி அவனுக்கு இசைந்தவண்ணம் வாழ்வாயாக. ஓ ராம், இந்த என் பிரார்த்தனையை நிறைவேற்று. உன்னுடைய அடிமைக்கு எல்லாம் நீ தான். அவனுக்கு உன்னைத் தவிர வேறெதுவும் வேண்டாம். ஓ ராம், அவன் மனத்தை தூய்மையாக்கு. தீய எண்ணங்கள் அவனுள் நுழையாதபடிப் பார்த்துக்கொள்.

44. ஓ ராம், எல்லா இடத்திலும் நீ தான்,

ஓ ராம்தாஸ், நீ ஒரு இடத்திலும் இல்லை,

ஓ ராம், உன் இச்சைதான் முடிவானது,

ஓ ராம்தாஸ், உனக்கென்று எந்த இச்சையும் இல்லை,

ஓ ராம், இருக்கும் ஒரே உண்மை நீ தான்,

ஓ ராம்தாஸ், உனக்கு இருப்பு ஏதுமில்லை,

ஓ ராம், எல்லையில்லா அன்பே,

ராம்தாஸை உனக்குள் இழக்கும்படி செய்.

45. ஓ ராம், உன் அன்பு எல்லா இடங்களிலும் ஊடுருவி நிற்கிறது. உன் ஒளி எல்லா இடங்களிலும் பிரகாசிக்கிறது. உன் பேரானந்தம், அனைத்தையும் உட்கொள்கிறது. ராம் ஒளி, அன்பு, பேரானந்தம் அனைத்தும் நீதான். ராம்தாஸ், நீ அந்த ஒளியில், அந்த அன்பில், அந்த பேரானந்தத்தில்தான் வாழ்கிறாய். ராம்தாஸுக்கு என்று தனி இருப்பு இல்லை. ராம்தாஸ் நீ சுதந்திரமானவன் - அன்பைப் போன்று சுதந்திரமானவன், ஒளியைப் போன்று சுதந்திரமானவன், பேரானந்தம் போன்று சுதந்திரமானவன். அனைவரையும் அன்பு செய், அனைத்தின் மீதும் உன் ஒளியை வீசு, பேரானந்தத்தை அனைவருடன் பகிர்ந்து கொள். நீயே எல்லாமும் எல்லாம் நீயே, அனைத்தும் சேர்ந்ததுதான் ராம், அந்த புகழ் வாய்ந்த ராம். ராம் ஒருவனே ஆவான். ராம் பலவாக இருப்பது வெறும் தோற்றமே. ஒன்று தான் மெய், பல என்பது மாயை அல்லது பொய். ஒன்று - அந்த ஒன்று தான் எங்கும் நிறைந்துள்ளது, அதுவே ராம். ராமனின் சித்தமே ராம்தாஸ் உன் சித்தம். ராமனுக்காக மட்டுமே நீ வாழவேண்டும். ராம் தான் உன்னைத் தன் பித்தனாக்கிக் கொண்டான். ராம்தாஸ், நீ ஆசீர்வதிக்கப்பட்டவன். ராமனின்மேல் பைத்தியம் என்பது உனக்கு அனைத்துமாகும், அது என்னவெனில் -அனைத்தும், அனைவருக்காகவும்! இது

போன்ற உன்மத்த நிலையில் எவ்வித வேதனையும் இல்லை, மனக்குழப்பமும் இல்லை, அறியாமையில்லை; பலவீனம் இல்லை; துன்பம் இல்லை; வெறுப்பு இல்லை; எந்தவித தீமையும் இல்லை; இது அன்பினால், ஒளியினால், பேரானந்தத்தினால், வலிமையால், சக்தியால், பேரறிவால் மற்றும் அனைத்துவிதமான நன்மைகளால் மட்டுமே ஒருங்கிணைந்து உருவானது.

46. ராம்தாஸ், அனைத்து போற்றுதல்களும், அனைத்து புகழும், மரியாதையும் ராமனுக்கே. ஏனெனில் உன் பேச்சு, உன் செயல், உன் எண்ணம் அனைத்தும் ராமனைப் பற்றியதே, ராமனுக்காகவே - ராமனால் தூண்டப்பட்டு - ராமனால் இயக்கப்பட்டு - ராமனால் நினைக்கப்பட்டு - ராமனால் கேட்கப்பட்டே செய்கிறாய். அனைத்தும் ராமனால், ராமன் மூலமே, ராமன் மேல், ராமனைப்பற்றி, ராமனுக்காக அன்றி வேறில்லை. எல்லாம் ராம் ஒருவனே!

ராம் ஒருவன் அன்றி வேறு எதுவும் இல்லை. ஓம் ஸ்ரீ ராம்! ஓம், ஓம், ஓம்! ராம், ராம், ராம்! இது ராமனின் மேல் உன்மத்தம். இது - பேரானந்தம் மிகுந்த, ஒளி மிகுந்த, அன்பு நிறைந்த ராம். நிறைந்த கம்பீரமான உன்மத்தமாகும் ராமனைத் தவிர வேறேந்த எண்ணமும் இல்லை. ராமனைத் தவிர வேறு எந்த வேலையும் இல்லை. ராமனைத் தவிர வேறு பேச்சு இல்லை, ராமனைத் தவிர வேறு செயல் இங்கில்லை. ராமனில் பேச்சு. ராமனில் இயக்கம், ராமனில் எண்ணம், ராமனில் அமைதி, ராமனில் தூக்கம், ராமனில் கனவு. அனைத்திலும் ராம், அனைத்தும் ராமனில். ராமனே அனைத்துமாய் உள்ளான். அனைத்தும் ராமனாய் உள்ளது. ஓம் ஸ்ரீ ராம், ராம்!

47. ராம் ஒரு உருவம், ராம் ஒரு உருவத்தை பாவனை செய்துள்ளான். ராம் உருவத்துடன் உள்ளவன், ராம் உருவமில்லாமலும் உள்ளான். இருப்பும் ராம், இருப்பற்ற தன்மையும் அவனே. ராம் தோன்றுகிறான், ராம் மறைகிறான். ராம் அறிவான் - அறியாதிருப்பதும் அவனே. அன்பும் - வெறுப்பும் ராமனுக்குள், ஒளியும் - இருட்டும் ராமனுக்குள். பேரானந்தம் - துன்பம் ராமனுக்குள். பேரறிவும் - அறியாமையும் ராமனுக்குள். வலிமையும் - பலவீனமும் ராமனுக்குள், எனினும் ராம் அனைத்துக்கும் அப்பாற்பட்டவன். அன்பு - வெறுப்பு, ஒளி - இருள், பேரானந்தம் - துன்பம், பேரறிவு - அறியாமை, வலிமை - பலவீனம், இவை அனைத்திலிருந்தும் அவன் சுதந்திரமானவன். ஓம், ஓம், ஓம். ராம், ராம், ராம், அமைதி, அமைதி, அமைதி! ஓ ராம், அன்பும், வெறுப்பும் சந்திக்கும் இடம் நீ, ஒளியும் இருட்டும் சந்திக்கும் இடம் நீ, பேரானந்தமும் துயரமும் சந்திக்கும் இடம் நீ, பேரறிவும் அறியாமையும் சந்திக்கும் இடம் நீ, வலிமையும் பலவீனமும் சந்திக்கும் இடம் நீ. ஓம் ஸ்ரீ ராம் - நீ தான் அமைதி, சலனமற்ற நிலை, மாற்றங்களற்ற, அசைக்க முடியாத, ஆதி அந்தம் இல்லாத, முடிவற்ற, எல்லாம் வல்ல, புரிந்து கொள்ள முடியாத, கற்பனைக்கெட்டாத பொருள். ஓம் ஓம் ஓம்.

48. உன்னுள்ளிருந்து வெளித்தோன்றும் இரண்டு ஏணிகள் உண்டு - ஒன்று அன்பு மற்றொன்று வெறுப்பு, ஓ ராம், உன்னை அடைய அதாவது மேலே ஏற அன்பெனும் ஏணியைப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது, உன்னை விட்டு அகல, அதாவது கீழே இறங்க வெறுப்பெனும் ஏணியை பயன்படுத்த வேண்டியிருக்கிறது. அன்பு ஒன்றுபட வழிகாட்டுகிறது. வெறுப்பு பிரிவுபடச் செய்கிறது. ஒன்றுபட்டால் இன்பம்,

பிரிவுபட்டால் துன்பம். எனவே ராம்தாஸ், உன்னை மேலேற்றி செல்லும் அன்பு எனும் வழியை தேர்ந்தெடு, அது உன்னை இறுதியான என்றும் நிலைத்த, அழிவற்ற, அமைதிக்கு அழைத்துச் செல்கிறது. அது தான் ராம். ராமனை விட்டு நீ விலகினால், வெறுப்பு உன்னை படு குழியில் தள்ளித் துன்பத்திற்கு, பயத்திற்கு, மரணத்திற்கு அழைத்து செல்லும். ஓம் ஸ்ரீ ராம்.

49. ராம்தாஸ், கர்வம் கொள்ளாதே. உலகில் எவரும் தாழ்ந்தவர் இல்லை. அனைவரும் அன்பும், மரியாதையும் அளிக்கத் தகுதியுள்ளவர்களே.

50. ராம்தாஸ் உன் மனதை எப்பொழுதும் ராமநாம ஸ்மரணை என்னும் ராட்டையில் சுற்றவிடு. நாளடைவில் அது மனத்தூய்மை என்னும் வெண்ணிற கதர் ஆடையை உனக்கு அணிவிக்கும்.

51. ஓ ராம், ராம்தாஸ் உன் அடிமை. அவன் முழுமையாய் உன் அடிமை. ராம்தாஸ் உன்னிடம் மன்றாடி வேண்டுகிறான்: அவன் செய்யும் ஒவ்வொரு செயலையும், அவன் உதட்டிலிருந்து உதிக்கும் ஒவ்வொரு வார்த்தையையும், அவன் மனதில் தோன்றும் ஒவ்வொரு எண்ணத்தையும் மிக உறுதியுடன் நீதான் கண்காணிக்க வேண்டும். ஓ ராம் உபயோகமற்ற எதையும், உன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத எதையும் உன் அடிமை செய்யவோ, பேசவோ அல்லது நினைக்கவோ இயலாமல் பார்த்துக்கொள். எப்பொழுதும் அவனுடைய செயல்கள் நேர்மையானதாகவும், நல்லனவாகவும் இருக்கட்டும். அவன் பேச்சு எப்பொழுதும் மேன்மையானதாகவும், அறிவு

பூர்வமானதாகவும் இருக்கட்டும். அவன் எண்ணங்கள் அனைத்தும் எப்பொழுதும் புனிதமானதாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்கட்டும். சுருங்கக் கூறின், அவன் செயல்கள், வார்த்தைகள், எண்ணங்கள் அனைத்தும் உன்னுடைய தியானத்தின் வெளிப்பாடாகவே அமையட்டும். ஓம் ஸ்ரீ ராம்.

52. ஓ ராம், நீ எவ்வளவு அற்புதமானவன். ராம்தாஸ் தன் தலையை உன் புனித திருவடிகளில் இருத்துகிறான். உன் அருள் அனைத்தையும் உன் அடிமைமேல் பொழிந்து விடு. அவனை முழுமையாக உன்னுடையவனாக ஆக்கிக்கொள். ராம்தாஸுக்கு நீயின்றி வேறு புகலிடம் இல்லை; அவனுக்கு உன்னைத் தவிர வேறு பெற்றோர் இல்லை, வழிகாட்டி இல்லை. உன்னை தவிர வேறு உரிமையாளன் இல்லை, குறிக்கோள் இல்லை. அவன் மேல் கருணை காட்டு, இரக்கம் காட்டு, அனைத்திற்கும் மேலாக அவன் உன்னை மறந்துவிடாமல் பார்த்துக்கொள், உன்னை மறப்பது தன்னை முழுமையாக அழித்துக் கொள்வதாகும். இதை ராம்தாஸ் நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஓ ராம், ராம்தாஸுக்கு உன்மேல் முழுமையான நம்பிக்கையுள்ளது, அவன் உன்னிடம் எதை யாசிக்கின்றானோ அதை அவனுக்கு உடனடியாக நீ அளித்துவிடுவாய் என்று அவனுக்குத் தெரியும். அவன் எப்பொழுதும் உன்னில் வாழட்டும், உன்னில் மட்டுமே வாழட்டும். ஓம் ஸ்ரீ ராம்!

53. ஓ ராம், உன் குழந்தையை காப்பாற்று. உன் அடிமையின் நாடி நரம்புகள் அனைத்தும் உன்மேல் கொண்ட பித்தினால் களிப்பு கொள்ளட்டும். அவன் உன் மேல் கொண்ட வெறியால் உந்தப்பட்டு இரத்த குழாயில் பாயும் இரத்தம் ஓடட்டும்.

உன்மேல் கொண்ட போதையால் திரும்பத்திரும்ப கிடைக்கும் அடியால் அவன் எலும்புகள் நொறுங்கித் தூள்தூளாகட்டும். வெள்ளப்பெருக்கு போன்று மிகுதியான பித்தினால் அவனை மூழ்கவைத்து அவன் முழு உடலும் குலுங்கி, நடுங்கட்டும், ஓம் ஸ்ரீ ராம்!

54. ஓ ராம்தாஸ்! வானத்தில் மேலே மேலே உயரச் சென்று அனைத்திற்கும் மேலே பறந்து, விண்வெளியில் பறந்து ஒளிமயமாம் சூரியன் பொழியும் ஒளி வெள்ளத்தில் ஒன்றாய் கலந்துவிடு. நயமிகு தூய காற்று உன்னைச் சுற்றிச் சூழட்டும். அகண்ட விண்வெளி உன்னை விழுங்கட்டும். ராம்தாஸ், அச்சமயம் நீ எங்கே உள்ளாய்? ராம்தாஸ் எங்குமே இல்லை. ராம்தாஸ் வெறும் பித்தனே. அவன் காற்றில் கலந்து அருவமானவன். உண்மை, உயர்ந்த உண்மை, ராம் உன்னை விழுங்கிவிட்டது. இனி நீ இல்லை, இனி நீ இல்லை - ஓம் ஸ்ரீ ராம்!

55. ஓ ராம்தாஸ், இலைகளின் பசுமையில் ஒன்றுபட்டுவிடு, ஒளியின் பிரகாசத்தில் தோய்ந்து விடு, மலைகளைத் தழுவும் பனி மூட்டத்தில் கலந்துவிடு, காற்றின் மூச்சாகிவிடு, வானத்தின் நீல நிறம் ஆகிவிடு, விடியலின் பொன்வண்ண கிரணங்களாகிவிடு, இரவின் அமைதியாகிவிடு. ஓம் ஸ்ரீ ராம்!

56. ஓ ராம்! நீயே கருணை, நீயே அன்பு. நீதான் மாபெரும் உண்மை. ராம்தாஸ் உன்னை உறுதியாக பற்றிக் கொள்ளட்டும். அவன் உன்னைப் பற்றிய பிடியைத் தளர்த்தவிடாதே. அவன் எப்பொழுதும் உன்னை உறுதியாகப் பற்றட்டும். அவன் எப்பொழுதும் உன்னுடன் வாழட்டும், உன்னில் வாழட்டும். உன்னைவிட்டு விலகாதிருக்கட்டும். அவன் எப்பொழுதும் உன்

அரவணைப்பில் இருக்கட்டும். ஓ ராம், உன் அடிமையை எப்பொழுதும் உன் கரங்களால் தழுவிக்கொண்டு எக்காரணத்தாலும் நழுவவிடாதே. அவனை பயமற்ற, துணிவுள்ள, உறுதியுள்ளவனாக்கு. தான் மேற்கொண்ட சபதங்களில் உறுதியுள்ளவனாக்கு. அவனுக்கு உன்னிடம் உள்ள நம்பிக்கையில் உறுதி செய். அவனின் உலகத் தொடர்புகள் அவனைப் பாதிக்காமல் இருக்கட்டும். ராம்தாஸ் நினைவில் கொள், எப்பொழுதும் இந்த உலகில் ராமனின் துணையுடன் மட்டும்தான் நீ இருக்கிறாய்.

57. ராம்தாஸ், ராமனின் எல்லையில்லா அருளால் சூழப்பட்டிருந்தாலும், நீ இன்னமும் வலிமையற்று இருக்கிறாய். ராம்தாஸ், நீ இன்னமும் குறுகிய மனப்பான்மை உடையவனாகவும், அற்பனாகவும் இருக்கிறாய். எல்லாவித குறைகளுடனும், குற்றங்களுடனும் இருக்கிறாய். அழு, அழு; புலம்பு, புலம்பு. ஓ ராம்தாஸ் அழுது புலம்பு. ஓ ராம், அவனுடைய அகந்தையை முழுவதுமாக அகற்றிவிடு.

58. ஓ ராம், பெருந்தீ மூட்டு - ஊழித்தீ - கொழுந்து விட்டரியும் அந்த தீயில் ராம்தாஸின் தீமைகளனைத்தையும் எரித்துவிடு. தீ மூட்டப்பட்டுவிட்டது. ஜ்வாலை எழுகின்றது. சிவந்த தீ ஜ்வாலையின் நாக்குகள் 'உஸ்' என்று சீறும் சப்தத்துடன் ஓங்குகிறது. அதில் ராமனின் ஆணைப்படி இப்பொழுது முதல் உன் அகங்காரத்தை, பின் உன் காமம், குரோதம், லோபம்,மோகம், செருக்கு, பொறாமை அனைத்தையும் உடனே ஒன்றன்பின் ஒன்றாக வீசிவிடு. அனைத்தும் இப்பொழுது அதனுள் வீசப்பட்டுள்ளது, விசிறி, தீயை நன்றாக கொழுந்து விட்டெரியச் செய். அனைத்து கேடுகளும் எரிகிறது, எரிகிறது

உயர்ந்து எரிகிறது. அனைத்தும் இப்பொழுது புகையாக எழுகிறது, சாம்பலாகிக் கீழே விழுகிறது. புகழனைத்தும் உனக்கே ஓ ராம்! இப்பொழுது தீ அணைந்துவிட்டது, பின் அமைதி நிலவுகிறது. அந்த அற்புதமான அமைதியில் இளைப்பாறு. அந்த அமைதி, அன்பால் நிரப்பப்பட்டு வசீகரிக்கும் தன்மை கொண்டது, ராமனின் இனிமையால் நிரப்பப்பட்டது. சுதந்திரம், சுதந்திரம், ஓ சுதந்திரம். முக்தியே உனது நாமம் - ஓம் ஸ்ரீ ராம்!

59. ஓ ராம்! உனது அடிமை, முழுதும் உனது பாதுகாப்பிலே உள்ளான். நீயே அவனின் முழுப்புகலிடம். அனைத்திற்கும் அவன் உன்னைதான் சார்ந்திருக்கிறான். உனது இனிய நாமம் எல்லா நேரங்களிலும் அவனது உள்ளத்தில் நிலவட்டும். ஓ ராம், ராம்தாஸின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்து - அதிலிருந்துப் பயனற்ற மற்றும் தீய எண்ணங்களை நீக்கிவிடு. ஓ ராம்! ராம்தாஸ் உன்னுடையவன். ராம்தாஸ், உன் வாழ்வு ராமனுக்காகவே என்பதை நினைவில் கொள். உன் வாழ்வு மற்று எதற்காகவும், எவருக்காகவும் அல்ல, உன் குறிக்கோள் ராம் ஒருவனே, முடிவும் ராமனே. உன் வாழ்வு ராமனுடன் பிணைக்கப்பட்டுள்ளது. ஓ ராம்! ராம்தாஸுக்கு உன்னிடமுள்ள நம்பிக்கையை எப்பொழுதும் உறுதியாக, நிலையாக, அசைக்க முடியாதவாறு ஒட்டி நிலைக்கச் செய். ராம்தாஸின் எண்ணம், சொல், செயல் அனைத்தும் - உனது ஆணைப்படி - உன் பெயரால் - உன் பொருட்டு, நேராக உன்னிலிருந்து செயல்படட்டும். ராம்தாஸின் தனித்தன்மை உன் பூரணத்தில் கரைந்து மறையட்டும். அவனை உனது உறைவிடமாக்கு. அன்றேல், நீயே அவனது உறைவிடமாய் திகழ். ஒருவரில்

ஒருவராய் ஒன்றிவிடட்டும். ஒரு கணமேனும் பிரிவின்றி என்றென்றும் ஒன்றாயிருத்தல் வேண்டும். சர்வவல்லமை பொருந்திய அன்பாம் உன்னை, ஒளியாம் உன்னை, இன்பமாம் உன்னை, ஒன்றேயாம் உன்னை, பேருண்மையாம் உன்னை உனது அடிமை வேண்டுகிறான், கதறி அழுது கெஞ்சுகிறான், ஓ ராம்! இந்த அடிமைமீது கருணைகொண்டு அருள் கூர்ந்து அவனை முழுமையாக உன்னுடையவன் ஆக்கிக்கொள். ராம், ஆசிகள் அளிப்பாய், உன் அடிமையைப் பெரும் பேறு பெற்றவனாக்கு . ராம் இந்த அடிமையை ஆசீர்வதிப்பது என்பது இவ்வுலகை ஆசீர்வதிப்பதாகும். அடிமையிடம் அன்பு காட்டு. அவனுக்கு அன்பு காட்டுவது என்பது உலகிடம் அன்பு காட்டுவதாகும். எல்லை இல்லா அன்பாம் ஓ ராம்! ராம்தாஸினுள் புகுந்து அங்கே இருந்து கொண்டு அன்பையும், ஒளியையும், ஆனந்தத்தையும் பரப்பு, ஓம் ஸ்ரீராம்!

60. ஓ ராம், விடியற்காலை ஆரம்பம் - ராம்தாஸ் இதயத்தில் பேரொளி மிக்க ஓர் விடியல் ஏற்பட்டு விட்டது, அதில் ஒரு ஒளி வெள்ளம் - அதில் அவ்வப்பொழுது பளிச்சிடும் அன்பு - வேகமாகப் பாய்ந்தோடும் பேரானந்தம். ராம் எங்கிருக்கிறானோ அங்கு தூய்மை குடிகொள்ளும். ராம் உட்புகுந்துவிட்டால் அனைத்து தீமைகளும் பறந்துவிடும். சூரியன் உதித்ததும் இருள் மறைந்துவிடும். ஓ ராம், எவ்வளவு புகழ் வாய்ந்தவன் நீ! உன்னிடம் முறையிட்ட அதே வினாடியில் நீ அதற்குச் செவி சாய்த்து அருள் பாலிக்கின்றாய். ஓ அன்னையே, எவ்வளவு கருணை உனக்கு. உன் அன்பு எவ்வளவு அழகானது, எவ்வளவு மென்மையானது, எவ்வளவு மிருதுவானது, எவ்வளவு வசீகரமானது, எவ்வளவு உண்மையானது, எவ்வளவு

திடமானது, எவ்வளவு குளுமையானது, எவ்வளவு நன்மை பயப்பது, ஓ எவ்வளவு நித்யமானது! ஓ ராம், உன்னுடைய அடிமை இவன் - உன்னுடைய குழந்தை இவன் எப்பொழுதும், எப்பொழுதும், எப்பொழுதும்! ஓம், ஓம், ஓம்!

61. எண்ணங்கள் மேலே வெகுதூரம் உயர்ந்து சென்று, புரிந்து கொள்ள முடியாத ஒன்றில் தன்னை இழந்து விடட்டும். எண்ணங்கள் கீழே ஆழ்ந்து வெகுதூரம் சென்று, ஆழம் காணமுடியாத ஒன்றில் தன்னை இழந்து விடட்டும். எண்ணங்கள் பரந்து அகலமாகி வெகுதூரம் விரிந்து, நினைக்க முடியாத ஒன்றில் தன்னை இழந்து விடட்டும். எண்ணங்கள் குறுகிக் குறுகி, சுருங்கி அதற்கு மேல் சிந்திக்க முடியாத ஒன்றில் தன்னை இழந்து விடட்டும். ஓம் ஸ்ரீ ராம்!

62. அன்பு இதயத்தை விரிவடையச் செய்கிறது, வெறுப்பு மனதை சுருங்கச் செய்கிறது, அன்பைவிட இனிமையானது எதுவும் இல்லை, வெறுப்பைவிட கசப்பானது எதுவுமில்லை. அன்பு இயற்கையானது, வெறுப்பு செயற்கையானது, அன்பு உருவாக்கும், வெறுப்பு அழிக்கும். அன்பு மகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும் அளிக்கும் இயற்கை காட்சி போன்றது. வெறுப்பு உலர்ந்து, சோர்வடையச் செய்யும் பாலைவனம் போன்றது. அன்பு இணக்கமானது, வெறுப்பு குழப்பமானது. அன்பு ஒளியாகும், வெறுப்பு இருளாகும். அன்பு பேரானந்தம், வெறுப்பு துன்பம். அன்புதான் உயிர், வெறுப்பே மரணம், அன்பு பரிசுத்தமானது, வெறுப்பு அசுத்தமானது, அன்பு ஒன்றாக இணைக்கும், வெறுப்பு பலவாக உடைக்கும், அன்பு அழகானது, வெறுப்பு கோரமானது, அன்பு ஆரோக்கியமானது, வெறுப்பு ஆரோக்கிய்ம் குன்றியது, அன்பு இனிய இசை போன்றது, வெறுப்பு சகிக்கமுடியாத இரைச்சல் போன்றது, அன்பு பேரறிவு, வெறுப்பு அறியாமை,

அன்பு செயல்பாடுகள் நிறைந்தது, வெறுப்பு சோம்பல் மிக்கது, அன்பு சொர்க்கம் என்றால், வெறுப்பு நரகம் ஆகும், அன்பு கடவுள், வெறுப்பு மாயை.

63. ஓ மனிதா, இனிமை எங்கே - அது உன்னில் உள்ளது.
கசப்பு எங்கே - அது உன்னில் உள்ளது.
இன்பம் எங்கே - அது உன்னில் உள்ளது.
துன்பம் எங்கே - அது உன்னில் உள்ளது.
ஒளி எங்கே - அது உன்னில் உள்ளது.
இருள் எங்கே - அது உன்னில் உள்ளது.
அன்பு எங்கே - அது உன்னில் உள்ளது.
வெறுப்பு எங்கே - அது உன்னில் உள்ளது.
வெப்பம் எங்கே - அது உன்னில் உள்ளது.
குளிர் எங்கே - அது உன்னில் உள்ளது.
நன்மை எங்கே - அது உன்னில் உள்ளது.
தீமை எங்கே - அது உன்னில் உள்ளது.
மெய் எங்கே - அது உன்னில் உள்ளது.
பொய் எங்கே - அது உன்னில் உள்ளது.
பேரறிவு எங்கே - அது உன்னில் உள்ளது.
அறியாமை எங்கே - அது உன்னில் உள்ளது.
சொர்க்கம் எங்கே - அது உன்னில் உள்ளது.
நரகம் எங்கே - அது உன்னில் உள்ளது.
கடவுள் எங்கே - அது உன்னில் உள்ளது.
மாயை எங்கே - அது உன்னில் உள்ளது. ஓம் ஸ்ரீராம்!

64. ராம், நீ ஒளி, அன்பு மற்றும் ஆனந்தம் ஆகியவற்றின் தொகுப்பால் உருவான அமுதம் என்னும் தடாகம். ஓ ராம்தாஸ், இந்த அமுதம் நிறைந்த தடாகத்தில் குதித்து, மூழ்கி, நீச்சல்

அடித்து, நடனமாடி, இல்லை உன்னை மூழ்கடித்து விடு. ஓம் ஸ்ரீ ராம்!

65. ராம், நீ ஒளி, அன்பு மற்றும் ஆனந்தம் ஆகியவற்றால் உருவான நறுமணத் திரட்டு; ஓ ராம்தாஸ், அந்த நறுமண அலையில் ஆழ்ந்து விடு; மூழ்கு, விளையாடு, குதித்து கும்மாளமிடு. இல்லை உன்னை இழந்துவிடு. ஓம் ஸ்ரீராம்!

66. ராம், நீ ஒளி, அன்பு மற்றும் ஆனந்தம் என்ற நிறங்களால் தோன்றிய ஒரு வானவில். ஓ ராம்தாஸ் இந்த நிறங்களை உற்று கவனி, வியந்து நோக்கு, தொடர்பு கொள், கலந்து விடு, மூழ்கி விடு அல்லது அதனுடன் ஒன்றுபட்டு சேர்ந்து விடு, ஓம் ஸ்ரீ ராம்!

67. ராம் நீ ஒளி, அன்பு மற்றும் ஆனந்தம் ஆகிய ராகங்களால் உருவான இன்னிசை. ஓ ராம்தாஸ், பெரு மகிழ்ச்சியின் ஊற்றாகிய இதைப் பருகிச் சுற்று, நடனமாடு, குலுங்கிக் குலுங்கி ஆடு, விழித்தெழு - இல்லை அந்த போதையில் உன்னை இழந்துவிடு. ஓம் ஸ்ரீராம்!

ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

# அனுபந்தம் - 2

## தனிப்பாக்கள்

## ஓம் ஸ்ரீ ராம்

1. அன்பு மிருதுவாய் யகத்தே யமர்ந்து,
   ஆங்கே ஒளியுந் துள்ளிக் குதித்தது;
   இன்பின் இனிய குரலு மெழுந்தது,
   எல்லாம் நிறைய அமைதியு முற்றது.

2. அன்பு மெதுவாய் கண்ணை திறந்தது,
   ஆங்கே ஒளியின் இளங்காற் றெழுந்தது;
   இன்பம் துள்ளிக் குதித்தாடியது ஓடியது
   எங்கும் அமைதியின் முறுவல் நிறைந்தது.

3. அன்பின் இனிய கீதம் ஆர்த்தது,
   வசீகர கதிர்களை அவ்வொளி இசைந்தது;
   இன்பம் புன்னகை பூத்தாடியது,
   எங்கும் அமைதியின் முறுவல் நிறைந்தது.

4. குதூகலமாம் நிறையன்பே ராம்,
   சுடர் நிறையழகிய வொளியே ராம்;
   வானை யளாவும் இன்பமே ராம்,
   அனைத்தையும் விழுங்கும் அமைதியே ராம்.

## எனதோர் அடைக்கலம்

ஓ ராம்! உன்னை சரணடைகின்றேன். எனதன்பும் உயிரும் கதியும் நீயே. உன்னுள்ளே நான்; என்னுளே நீ. நீயே எனது தந்தையும் தாயும் ஆவாய்.

அனைத்திலும் பரவிய உயிர் நீ ஆவாய். அனைத்துப் பொருட்களுக்கும் உயிர்களுக்கும் இருப்பிடம் நீயே. அணுவிலும் அகத்திலும் உறையும் உயிர் நீயே. என் நண்பனும், சகோதரனும் உன்னில்தான் வாழ்கிறார்கள்.

நின்பதகமலமே என் மாறாத நினைவாம்.
உனதருள் ஒளியே எனதோர் கனவாம்.
இனிதாம் நின்பணி என் பெரும் பாக்கியம்,
நீயே என் சீரும், பெயரும் புகழும்.
ஓ ராம், உன் நாமத்தின் நாதம் ஈர்ப்பின் எல்லை,
ஓ உதடுகளே, ஒலிப்பாய் ராம், ராம் என;
ஓ மனமே, தியானிப்பாய் ராம், ராம் என;
அவனில், அவனில் உன்னை மறந்துவிடு.

## ராம்

ஓ ராம், எங்கும் உனது வடிவையே காண்கிறேன்.
உலகெங்கும் உன் ஒளி, உன் புகழ் பரவக் கண்டேன்.
ஓ ராம், நீயே உயர் வானத்தொளிரும் பரிதியும்;
நீயே வானத்தை வனப்பு செய் மதியும் விண்மீன் கூட்டமும்.
ஓ ராம், விண்ணக முழுதும் நிறைந்துள உயிரே நீயே
சுழலும் பிரபஞ்சத்தின் சுழற்சியும் நீயே,
ஓ ராம், மலைகளில் கண்டேன் உன் தெய்வீக உருவை,
விரிநீர்ப்பரப்பின் ஓட்டத்திலும், அலையிலும், ஒளி கீற்றினிலும்
உன் வடிவையே காண்கிறேன்.
ஓ ராம், அடர் வனங்களிலும் மரஞ் செடிகளிலும்,
பசும் புல்தரையிலும் படர்ந்தது உன்னொளியே.
ஓ ராம், எல்லா உயிரிலும் ஒளிர்வது உன்னருளொளியே
அனைத்திலும் நீயே. அன்பு, பேரானந்தம், வல்லமை
அனைத்தும் நீயே.

## அனுபந்தம் -3

அன்பார்ந்த சகோதரியே!!

இனி வருங்காலத்தில் நீ எனது சகோதரியே ஆவாய். ஸ்ரீராமனின் திருவடிகளில் முற்றிலும் என்னை ஒப்புவித்துவிட்டேன். அவன் என்னை என் பழைய வாழ்க்கைத் தளைகளிலிருந்து மீட்டுவிட்டான். இனிமேல் இந்த விசாலமான உலகில் ஸ்ரீராமனின் இனிய நாமத்தை உச்சரித்தவாறு ஒரு பிச்சைகாரனைப்போல் திரியப் போகிறேன். ஸ்ரீராமனின் திருவருளையும், அன்பையும் அடைவதற்கு முயற்சிப்பதைத் தவிர வேறொரு வேட்கையும் இவ்வாழ்வில் எனக்கில்லை என்பது உனக்கு தெரியும். அந்த உயர் நோக்கத்திற்காகவே எனது வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றேன். அதன்பொருட்டு அனைத்துத் துன்பங்களையும் பொறுத்துக்கொள்வேன். நாமிருவரும் கணவனும் மனைவியுமாக இனி மீண்டும் சந்திக்கப் போவதில்லை. உண்மை மற்றும் கடவுள் என்ற பாதையில் எப்பொழுதும் நட; ரமேவையும் அவ்வாறே நடத்திச் செல்.

கைராட்டினத்தை விட்டுவிடாதே; அது உனக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் அளிக்கும். ரமேயும் அதில் ஈடுபடட்டும்.

உன்னையும் ரமேயையும் ஸ்ரீராம் அருள்கூர்ந்து காப்பான்.

உனது அன்புள்ள

ப. விட்டல் ராவ்

27-12-22

ஸ்ரீமதி ருக்மாபாய், மங்களூர்

# அனுபந்தம் - 4

## கடோசன் 1923

## குருதேவருக்கு

ஓம் ஸ்ரீ ராம் ஜெய் ராம் ஜெய் ஜெய் ராம்

குரு மகராஜ்,

தங்கள் திருவடிகளுக்கு ஆயிரமாயிரம் வந்தனங்கள். என் மீது ஸ்ரீராம் வைத்துள்ள அன்பு மிக அற்புதம். என்னை உலகின் பிடியிலிருந்து விடுவித்து அவன் தன் முழுப் பொறுப்பிலும், ஆதரவிலும் வைத்திருக்கிறான். ஓ ராம்! நீயே என் அடைக்கலம். நீ என்னை உன் ஆதரவற்ற குழந்தையாக ஏற்றுக் கொண்டு எப்பொழுதும் பரிவுடன் பாதுகாத்து வருகிறாய். ஓ ராம், புகழ் அனைத்தும் உனக்கே. உன் பரிவும் அன்பும் எல்லையற்றது. அமுதத்தைக்காட்டிலும் இனிய உன் நாமத்தை ஜபிப்பதில் நான் களைத்துப் போகாமல் இருக்கச் செய். ஸ்ரீராம் அளிக்கும் பேருவகையில் என் உள்ளம் ஆனந்தமாய் இருக்கிறது, அதை யாரிடம் எடுத்துச் சொல்ல? யாரிடம்? என் தந்தையும், சத்குருவுமாகிய உங்களிடம்தான் சொல்ல வேண்டும். ஸ்ரீராம் அவனுடைய மாயையின் அதிசய சக்திகள் அனைத்தையும் எனக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறான்.

ஸ்ரீராம் எல்லா புனித ஸ்தலங்களுக்கும் என்னை அழைத்துச் சென்றான் - தென் இந்தியாவில் இருந்து வட கோடி வரை. இந்த ஏழை அடிமையினை புனித இமயமலைப் பயணத்திற்கும் அழைத்துச் சென்றான். இங்குள்ள காற்றிலும் இறைவனுடைய

வெளிப்பாடு மிகத் தெளிவாக விளங்குகிறது. அடர்ந்த காடுகளால் மூடப்பட்ட முடிவில்லா மலைத்தொடர்கள் இறைவனின் மாபெரும் அழியா சக்திக்குச் சாட்சி ஆகும். இந்த மலைகளிலிருந்து ஓடி வரும் புனித நதியான கங்கை பல லட்சக்கணக்கான மனிதர்களின் வாழ்க்கைக்கு வழி வகுப்பதாகவும், இறைவன் புகழ் எப்பொழுதும் பாடிக்கொண்டும் இருக்கிறது. உண்மையிலேயே, என்னுடைய கண்கள் இந்த அற்புத காட்சியால் ஆசீர்வதிக்கப் பட்டது. இந்த வருணிக்க இயலாத இயற்கை காட்சியில் மெய்மறந்தேன். ஓ ராம்! நீ மகோன்னதம்! அந்த மலைகள்மீது மொத்தம் 400 மைல்கள் நடந்தும், ஸ்ரீராமனின் கருணையால் சற்றும் களைப்பு தோன்ற வில்லை. அவன் எனக்கு வேண்டிய பலத்தையும், அமைதியையும் அளித்தான். சில இடங்களில் ஏறும் பாதை மிகக் குறுகலாகவும், கடினமாகவும், செங்குத் தாகவும், கரடு முரடாகவும் இருந்தது - கொஞ்சம் தவறினாலும் பல நூறு அடிகள் கீழே ஓடிக்கொண்டிருக்கும் கங்கை நதியில் விழுவதைத் தவிர வேறு வழி இல்லை. ஸ்ரீராம் என்னுடைய வழிகாட்டியாக இருக்கும் பொழுது ஏது பயம்?

ராம் என்னை மேன்மேலும் அழைத்துச் சென்றான். நானும் பயம் இன்றி அவன் இனிய நாமத்தைக் கூறியவாறே பேரானந்தத்தில் நடந்து சென்றேன். ஸ்ரீராம் முதலில் கேதார்நாத் என்ற இடத்தை தரிசனம் செய்ய வைத்தான். இந்த இடம் ஹரித்துவாரில் இருந்து சுமார் 160 மைல்கள் தூரத்தில் உள்ளது. கேதார்நாத் செல்லும் பாதை மிகவும் அபாயகரமானது. பல யாத்திரிகர்கள் செங்குத்தான இப்பாறைகளிலிருந்து சறுக்கி விழுந்து பல நூறு அடிகளுக்கு கீழே அதிவேகமாக ஓடும் நதியின் நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்படுகின்றனர். கங்கையின் உப

நதியான மந்தாகினி கேதார்நாத்தில் உற்பத்தியாகிறது. இந்த இடம் பனியால் மூடப்பட்டிருப்பதால் குளிர் மிகவும் கடுமையானதாக இருக்கிறது. கேதார்நாத்திற்கு ஏறும் வழியில் சில இடங்களில் பனியால் மூடப்பட்டப் பாதைகளைத் தாண்ட வேண்டி உள்ளது. என்னைக் கடுமையான குளிரிலிருந்து யார் பாதுகாத்தது? ஓ! நீயே. கேதார்நாத்தில் ஒரு கோயில் இருக்கிறது, இந்த இடத்தை சுற்றிலும் முழுவதும் பனியால் மூடப்பட்ட உயர்ந்த மலைகள் இருக்கின்றன. அத்தகைய பனி மூடிய உயரமான பாறைகளில் ஏற ஒருவரும் துணிவதில்லை, அவ்வாறிருக்க, ஒரு பாறையின் மீது நான் ஏறினேன். ஆரம்பத்தில் உயரமாகத் தோன்றாத அந்தக் குன்றின் மீது சுமார் இரண்டு மணி நேரம் ஊர்ந்து சென்றும் உச்சியை அடைய முடியவில்லை. பாறை மீது அங்குமிங்குமாக வளர்ந்து, பனிக்கட்டிகளுக்கு வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் முரட்டுப்புல்லை பற்றிக் கொண்டு ஏற வேண்டியிருந்தது. மேலும் சுமார் மூன்று மணி நேரம் ஏறியபின் உச்சியை அடைந்தேன். ஏறிய தூரம் ஒரு மைல் இருக்கலாம். ஏறும்பொழுது கடினமாக இருந்தது என்பது உண்மை, ஆனால் இறங்கும் பொழுது அபாயம் நிறைந்ததாகவும் இருந்தது. நான் ஒவ்வொரு முறையும் வேறு வழியின்றி 2 அல்லது 3 முகஜம் சறுக்கி கீழே வந்த பின்பு எப்படியாவது அங்குள்ள புல்லைப் பிடித்துக் கொள்வேன். இதற்கிடையில் மழை பொழியத் துவங்கியது, நீர்த்துளிகள் அல்ல; பெரிய வெண்மையான பனிக்கட்டிகள். ஓ ராம்! இங்கும் என்னை யார் பாதுகாத்தது - நீயே, நீ மட்டுமே. சுமார் ஐந்து மணி நேரத்திற்குப் பின் குன்றின் அடிவாரத்தை அடைந்தேன். மந்தாகினி எனும் நதி உற்பத்தியாகிற இடத்தில் பனிக்கட்டிகள் உருகி கீழ்நோக்கி

ஓடுகிறது. இந்த இடத்திற்குச் சென்று அக்குளிர்ந்த நதியில் நீராடினேன். ஓ ராம்! உன் கருணையால் இவை அனைத்தையும் நான் செய்ய முடிந்தது. அனைத்து புகழும் உனக்கே!

கேதார்நாத்தில் ஒரு நாள் தங்கினேன். பிறகு சுமார் 40 மைல்கள் கீழே இறங்கி மீண்டும் மற்றொரு மலைத்தொடர் மீது ஏறத் தொடங்கினேன். இப்பாதை கேதார்நாத்திற்கு செல்லும் பாதையைப் போன்று அவ்வளவு மோசமாக இருக்கவில்லை. ஆனாலும் பல இடங்களில் பனியால் மூடப்பட்ட பாறைகளின் மேல் நடக்கவேண்டி இருந்தது. அவ்வாறு 81 மைல்கள் (வழியில் மைல்கற்கள் இருக்கின்றன) நடந்த பின் கங்கையின் மற்றொரு உப நதியான அலகநந்தா என்னும் நதி பிறக்குமிடத்தை அடைந்தேன். இந்த இடம் பத்ரிநாத் அல்லது பத்ரிநாராயண் என்றழைக்கப்படுகிறது. இங்கும் குளிர் மிகக் கடுமையாக இருந்தது. இங்கு ஓர் அதிசயம் என்னவென்றால், பத்ரிநாராயண் கோயிலை சுற்றியுள்ள ஒரு பாறையின் அடியிலிருந்து சுடுநீர் கீழ்நோக்கி ஓடிவந்து ஒரு தொட்டியில் சேமிக்கப்பட்டு அதில் யாத்திரிகர்கள் நீராடுகின்றனர். நான் இங்கும் ஒருநாள் தங்கிய பின் கீழே இறங்கி வந்தேன். கேதார்நாத், பத்ரிநாத் ஆகிய இடங்களை தரிசனம் செய்ய ஆண்டு தோறும் பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இம்மலைகள் மீது ஏறி வருகின்றனர். இவ்விடங்களுக்கு செல்லுவதில் உள்ள அதிக சிரமத்தால் வயது முதிர்ந்த ஆண், பெண் யாத்திரிகர்கள் பலர் வழியிலேயே தங்கள் உடலை விட்டுவிடுகின்றனர். இந்த யாத்திரை முழுவதும் என் மீது ராம் மிகவும் பரிவும், கருணையும் காட்டினான். எனவே ராம்தாஸுக்குப் பசியை பற்றிய எண்ணம் இல்லாமல் இருந்தது. வழியில் சந்தித்த யாத்திரிகர்கள்

அனைவருமே என்னிடம் மிகவும் அன்பாக இருந்தனர். என்னை உபசரிப்பதில் அவர்களுக்குள் ஒருவருக்கொருவர் போட்டியிட்டுக்கொண்டு எனது தேவைகளான உப்பு இல்லாத 2 அல்லது 3 ரொட்டிகளும், வேகவைத்த உருளைக்கிழங்கும் அளிக்க முன்வருவார்கள். ஒரு சிலர், ராமனின் இந்த தாசனைப் பூஜித்து வழிபட்டனர்.

ஹரித்துவார் என்ற இடத்திலிருந்து இமயமலை யாத்திரை தொடங்குகிறது. மேன்மேலும் தொடர்ந்து சுமார் 15 மைல் ஏறி ரிஷிகேஷ் எனப்படும் இடத்தை அடையலாம். இங்கு புனித கங்கைக்கரையில் நூற்றுக்கும் மேலான மகான்களின் ஆஸ்ரமங்கள் கூரை வேய்ந்த குடில்கள் அமைந்துள்ளன. ரிஷிகேஷ் ஒரு உள்ளதைக் கவரும் இடமாகும். புனித கங்கைக் கரையின் இயற்கைக் காட்சிகள் உள்ளத்தை மிகவும் கவருகின்றன. இதற்கு மேல் எங்கும் செல்லாமல் இங்கேயே நிரந்தரமாக இருந்துவிடலாம் என்று கூட ஒரு எண்ணம் எனக்கு தோன்றியது. இப்பொழுதுகூட ஸ்ரீராம் என்னை அந்த இடத்திற்கு மீண்டும் அழைத்து சென்று மீதமுள்ள வாழ்நாட்களை அங்கு உள்ள மகான்களின் சங்கத்தில் கழிக்க உதவவேண்டுமென்பது எனது ஆவல். ஆனால் இறைவன் இச்சை என்ன என்று தெரியவில்லை. நான் ரிஷிகேஷில் 3 நாட்கள் தங்கி இருந்தேன்.

இம்மலைகளில் நான் சுற்றித் திரியும்பொழுது அகஸ்திய முனி, நாரதர், பாண்டவர்கள் வாழ்ந்த ஆஸ்ரமங்களைக் கண்டு வந்தேன். மொத்தத்தில் இமயமலைமீது செய்த இந்த யாத்திரை நிறைவு பெற 40 நாட்கள் ஆயின. இம்மலைகளின் மீது மலைசாதியினர் வசிக்கின்றனர். அவர்கள் பயிர்த்தொழில் செய்தும், ஆடு மற்றும் கால்நடைகள் வளர்த்தும் வாழ்கின்றனர்.

தற்கால நாகரிகத்தின் தொடர்பின்றி இருப்பதால், அவர்கள் எளிய, தூய்மையான வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்கள் உதடுகள் ராமநாமத்தை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டிருக்கிறன. அவர்கள் சிவந்த மேனியும், திடகாத்திரமும் கொண்ட மக்கள். அவர்கள் அணியும் ஆடை கம்பளியால் தயாரிக்கப்பட்டவை. பெண்கள் சேலைக்குப் பதிலாக கம்பளி போர்வையை அணிகின்றனர். அவர்கள் வளர்க்கும் செம்மறி ஆடுகளின் உரோமத்திலிருந்து நூல் நூற்று, கம்பளி நெய்துத் தங்கள் ஆடைகளைத் தயாரிக்கின்றனர். ஓ ராம்! உன் செயல்கள் அனைத்தும் அற்புதம்.

இமயமலை யாத்திரையிலிருந்து திரும்பும் வழியில் ராம் என்னை மதுராவை நோக்கி வழி நடத்தினான். மதுரா - இறைவனின் அவதாரங்களில் அன்பின் வடிவமான ஸ்ரீ கிருஷ்ணன் பிறந்த பூமி ஆகும். அங்கிருந்து கோகுலம், கோவர்தனகிரி, பிருந்தாவன் ஆகிய இடங்களுக்குச் சென்று தரிசனம் செய்தேன். பிருந்தாவனத்தில் புண்ணிய நதியான யமுனையின் கரையில் 10 நாட்கள் தங்கினேன். பிருந்தாவன் மகிழ்ச்சி ததும்பும் இடம். மதுராவிலிருந்து ராம் என்னை ராய்ப்பூர், ஆஜ்மீர் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்ய வைத்தான். ஆஜ்மீரில் காஜாபிர் என்ற புகழ்பெற்ற முகம்மதியர்களின் ஸ்தலத்தை தரிசனம் செய்துவிட்டு புஷ்கரம் என்னும் இடத்தில் உள்ள மலை ஏறி அங்கு 5 நாட்கள் தங்கியிருந்தேன். பிறகு கீழே இறங்கி ராமனின் விருப்பப்படி துவாரகா, கிர்நார் ஆகிய இடங்களை தரிசனம் செய்தேன். கிர்நார் குன்றின் மேல் குரு தத்தாத்ரேயரின் பாதச் சுவடுகள் இருக்கின்றன. பிறகு, ராம் பண்டரிபுரம் அழைத்துச் சென்று, தரிசனம் செய்வித்து இவ்வித (ஒவ்வொரு ஸ்தலமாக யாத்திரை

செய்யும்) வாழ்க்கைக்கு ஒரு முடிவு கொண்டு வரத் தீர்மானித்தான். தற்பொழுது குஜராத்தில் உள்ள ஒரு மகானின் ஆஸ்ரமத்தில் தங்கியுள்ளேன். இந்த ஆஸ்ரமம் ஒரு வனத்தில் மனித சஞ்சாரமற்றத் தனிமையான இடத்தில் இருப்பதால் நான் இங்கு மிகுந்த ஆனந்தத்துடன் ராம பஜனையில் ஈடுபட முடிகிறது. மீதமுள்ள என் வாழ்க்கையை இறைத்தியானத்திலும், இனிமையான ராமநாம ஜபத்திலும் கழிக்க வேண்டி ஓர் இடத்தை காட்டி அங்கு அழைத்துச் செல்லுமாறு ராமிடம் பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறேன். ராமநாமத்தின் வசீகர சக்தியாலும், இனிய ஓசையாலும் நான் இதுவரை பாதுகாக்கப்பட்டேன். அதுவே நிச்சயமாக என்னை அவனருளால் இறுதிவரைப் பாதுகாக்கும். ஆனால், இறைவன் என்னை அடுத்து என்ன செய்ய திட்டமிட்டுள்ளான் என்று இதுவரை தெரியவில்லை.

என்னுடைய தந்தையும், தெய்வீக ராமநாமத்தை உபதேசித்த குருவுமான தங்கள் புனிதமான பாதங்களை நமஸ்கரித்து ஆசிகளை வேண்டுகின்றேன். ஸ்ரீராம் தன் கிருபையால் தங்களை ஆசீர்வதிக்கட்டும் என்பதே இந்த எளிய தாசனின் பிரார்த்தனை. நான் ஸ்ரீராமனின் இச்சைப்படி துவாரகை செல்லும் முன் 10 நாட்கள் இங்கு இருப்பேன்.

அன்பும், வந்தனங்களும்.

**ராம்தாஸ்**